Registered as a News Paper

பக்கம் - 26

# ஈழநாதம்

விலை: 16.00

வெள்ளிநாதம் Weekly

நாதம் - 15 | வெள்ளி - 29 | 17 - 23 செப்ரெம்பர் 2004

## சேது சமுத்திரக்கால்வாய்த்திட்டம் பயனடையப்போகும் பணமுதலைகள்

## எப்படிச்சொல்வது...?

## திலீபன் பசியிருந்த பன்னிரு நாட்கள்



# திருமுக அறிமுகம்

'அரிச்சந்திர மயானகாண்டம்' என்ற மரபுவழி இசைநாடகத்தின் பெயரைக்கேட்டாலே காங்கேசன்துறை வசந்தகான சபாவின் அரங்கமும்,

தாடி, தலையில்கட்டிய துண்டு, இடைத்துணி, கைத்தடிசகிதம் சுடலைக்காவற்காரனாக 'யாரடீ கள்ளி நீ' என்று கம்பீரமான இசைக்குரல் ஒலிக்க - மெய்சிலிர்க்கவைக்கும் தோற்றத்துடன் மனஅரங்கில் நடமாடும் நடிகமணி வி.வி வைரமுத்து என்ற நம் மண்ணின் மாகலைஞனும் தான் நினைவில்தோன்றும். 11.02.1924 இல் காங்கேயன்துறையில் இந்தப் பிரவிக் கலைஞனின் ஜனனம் நடந்தேறியது. தந்தையார் வேலப்பாவும் தாயார் ஆச்சிக்குட்டியும் தங்களுக்கு பிறந்துள்ள மக்கள் ஒரு ஒப்பரிய கலைஞன் என அப்போது உணர்ந்திருக்க நியாயமில்லை. கலைக்குடும்பப்பரம்பரை தான் எனினும், நாடகப் புலமைமிக்கவர்களின் வாரிசுதான் எனினும், வைரமுத்துவுக்குள் விஸ்வரூபம் எடுக்கப்போகும் ஒரு வீரியம்மிக்க கலைஞன் முகிழ்ப்புக் கொண்டிருக்கிறான் என்பதை அவர்களால் எப்படி உணரமுடியும்.

பெரும் கலைஞர்களைக் கூடக் கூத்தாடிகள் என்ற அடைமொழி சேர்த்து கூறப்பட்ட காலம் அது.

தங்கள் பிள்ளைக்கு அந்தப்பாரப்பரியப்பட்டம் இருக்கக்கூடாது என நினைத்த பெற்றோர், அவனை கல்விமானாக்கவே விரும்பினர். சாதிப் பிரச்சினை தமிழ் சமூகத்தை பேயாய் பீடித்திருந்த காலம். பெரிய கல்லூரிகளில் நிலவிய சாதிப்பாகுபாடு பார்க்கும்நிலை வைரமுத்துவை அனுமதிக்க மறுத்துவிட்டது.

சொந்த ஊரைவிட்டு வேறு இடத்தில் அவனை படிக்கவைக்க அவர்கள் முயன்றனர். அல்வாயை சேர்ந்த காந்தீயவாதியும் தமிழ் புலமை யாளருமான வேலப்பாவின் குடும்ப நண்பர் ஆசிரியர் முருகேசு என்ப வரிடம் கல்விக்காக வைரமுத்துவை பொறுப் பளித்தனர் பெற்றோர்.



அந்த ஞானத்தந்தை வைரமுத்துவின் வளர்ப்புத்தந்தை யாக மட்டுமல்லாது, கலைக்குரு வாகவும் அமையப்போகிறார் என எவரும் அப்போது கருதவும் இல்லை.

வைரமுத்து தேவரையாளி இந்துக் கல்லூரியில் சேர்க்கப்பட்டார். அங்கு தான் அவரின் இயல்பான ஆற்றல் வெளிப்படத்தொடங்கியது. 'அப்பூதிய டிகள்' பாத்திரத்தில், பாடசாலை மேடையில் அவரது அரங்க வாழ் விற்கு முதற்சுழிபோடப் பட்டது. அதுதொடர்ந்து அவரது மரணபரியந்தம் வரை நிலைத்தது. அழ கான சரீரம், இனிய வள

## நடிகமணி வி.வி.வைரமுத்து

மான சாரீரம் இரண்டும் வைரமுத்துவுக்கு கிடைத்த வரப்பிரசாதமாயிற்று.

முருகேசரின் நெறிப்படுத்தலில் முறைப்படி இசைக்கலை யைப்பயின்றார். ஆர்மோனியம் வாசிக்க கற்றுக்கொண்டார். பாடசாலையில் இவரது கலையாற்றல் ஒளிர ஆரம்பித்தது. பாரம்பரிய கலைஞானம் அவருள் ஊற்றெடுத்து பிரவகிக்கத் தொடங்கியது.

பிள்ளை பரம்பரைக் கூத்தாடியாக உருவாவது தந்தைக்கு கவ லையூட்ட முருகேசரிடம் தனது பிள்ளை அரச உத்தியோகத்தராக வரவேண்டும் என்ற விருப்பத்தை அவர் வெளியிட்டார். முருகேசர் வைரமுத்துவின் உயர்வுக்கு உத்தரவாதம் கொடுத்தார். கல்வியிலும் கலையிலும் வைரமுத்துவின் ஆற்றல் நன்கு வெளிப்பட்டபோதும் கலை வெளிப்பாடு கங்குகரையின்றி பிரவகிக்க ஆரம்பித்தது உண்மையே. வைரமுத்துவின் தந்தையின் விருப்பத்தை நிறைவேற்ற இந்தியாசென்றுபடிக்குமாறு முருகேசர் கோர இந்தியாபயணமானார்.

அங்கும் அவர் இசைக்கலையை மேதைகளிடம் பயின்றார். அத்துடன் பண்டித வகுப்பிலும் கற்றுத்தேறி பாலபண்டிதரானார்.

நாடு திரும்பி சிறிதுகாலம் இரத்தினபுரியில் ஆசிரியத்தொழில் புரிந்தார். நாடகம் மீதான நாட்டம் ஊரைநோக்கி திருப்ப வேலையை விடவேண்டியதாயிற்று.அதன்பின் காதல் திருமணம். இரத்தினம் அம்மையாரை மணந்துகொண்டார். இதன் பின்னர் 1950களில் இவரது கலை உலக வாழ்வு தீவிரம்கொண்டது. ஆர்மோனிய வித்துவான் - பக்கப்பாட்டு கலைஞன் - ஸ்திரீ பார்ட் (பெண்பாத்திர) நடிகர், ராஜபார்ட் நடிகர் எனப்பலபரிணாமங்களை அதுகண்டது. 1953இன் பின்னர் 'மயானகாண்டம்' புகழ் அரிச்சந்திரன் நாடக மேதையாக நடிகமணியாக பல்துறைவித் கனாக அது விஸ்வரூபம் எடுத்தது. அரிச்சந்திரன் பாத்திரம் அவரை நடிப்புலக மேதையாக இனம்காண வைத்தது பட்டிதொட்டியெல்லாம் வைரமுத்துவின் புகழ்பேசப்பட்டது. அவரது நாடகங்களுக்கு ரசிகர்வெள்ளம் திரண்டு அலைமோதியது.

'கண்கவரும் காவடிகளாடும் - இசை
காதினிக்க வைரமுத்துபாடும்
காந்த மெனவே யிழுக்க பக்தகோடி
வந்து மிகக்கூடும் - புகழ் - சூடும்'

என்பார் கவிஞர் காரை சுந்தரம்பிள்ளை.

"வைரமுத்து பெண்வேடமிட்டு நடித்தபோது அவரை உண்மையில் பெண் என்றே நினைத்து ஏமாந்தவர் பலருண்டு"

என்கிறார் பிரபல எழுத்தாளர் குறமகள்

"நடிகன் பிறக்கிறான். அவன் ஆக்கப்படுவதில்லை, வைரமுத்து பிறவி நடிகன் - இப்படி ஒரு நடிகன் அபூர்வமாகத்தான் தோன்றுவான்' - என்று குறிப்பிடுகின்றார் முன்னாள் யாழ் அரச அதிபரும் கலாரசிகருமான வேணன் அபயசேகரா புகழ் பெற்ற நாடக கலைஞரும் சினிமா நடிகருமான டி.கே சண்முகம் 'உங்களால் ஈழம் பெருமையடையப்போகிறது' என வைரமுத்து வுக்கு வாழ்த்துக் கூறியுள்ளார்.

வைரமுத்து ஒரு மக்கள் கலைஞர்

பேராதனை பல்கலைக்கழகத்தில் இவரது மயானகாண்டம் 1958 இல் அரங்கேற்றப்பட்டது. அதனைப்பார்த்த புகழ் பெற்ற சிங்கள நாடக மேதையும் கலைஞருமான சரத் சந்திரர் பின்வருமாறு குறிப்பிட்டார்.

"வைரமுத்து போன்ற ஒரு கலைஞரை நான் இதுவரை பார்த்ததே இல்லை. இவர்பாடி நடிக்கும் போது இப்படித்தான் நடிக்கிறார் என என்னால் கூற முடியவில்லை... உணரமுடிகிறது அந்த உணர்வு அற்புதமான அனுபவம். இலங்கை வானொலியில் இவரது நாடகங்கள் பல ஒலிபரப்பாகி பாராட்டுப் பெற்றன. இலங்கையில் தயாரான 'நிர்மலா' தமிழ்படத்தின் மயானகாண்டத்தின் ஒரு பகுதி சேர்க்கப்பட்டுள்ளது. 'வைரமுத்து முழுநிறைவான ஒரு கலைஞர் தோற்றப் பொலிவும் நடிப்பாற்றலும் பேச்சுவன்மை ஒருங்கே பொருந்திய அபூர்வமான கலைஞன்' என்கிறார் மறைந்த பேராசிரியர் கைலாசபதி. 1959இல் மயானகாண்டம் நாடகத்தை லண்டன் தொலைக்காட்சி நிறுவனம் பதிவு செய்தது. அதனைப்பார்த்த அந்த நிறுவனத்தை சேர்ந்த லெவி (LEVI) தம்பதிகள் மயானக்காட்சியின் போது தாம் மெய்சிலிர்த்து அழுதே விட்டதாகக் குறிப்பிட்டுள்ளனர். "திறமான புலமையெனில் வெளிநாட்டார் அதை வணக்கம் செய்தல் வேண்டும்" என்ற பாடல் வரிகளுக்கு வைரமுத்துவின் கலைஆளுமை மிகச்சிறந்த உதாரணமாகும்.

அட்சயன்

# காரசாரம்

## தமிழ் ஊடகங்கள் மதில் மேல் பூனையாக இருக்கலாமா...?

இன்றைய சூழலில் அறிந்துகொண்டுள்ள தமிழ் ஊட கங்கள் பல; அச்சு ஊடகங்கள், மின்னியல் ஊடகங்கள் என அவை பல கிளைகளைப் பரப்பி விரிந்துள்ளன. ஆயினும் தமிழ் ஊடகங்கள் எனும்போது அவை தமிழரின் அனுபவ பாத்தியதைக் குரியவையாக இருத்தல்வேண்டும். எனவே தமிழ் மக்களின் ஏகோ பித்த உரிமைகளை அவை வழங் கியாகவேண்டும். தமிழ் ஊட கவியலாளர்களே அவற்றைச் செய்தாகவேண்டும்.

தமிழ் மக்கள் இன்று உலகம் முழுவதும் பரந்து ஏதிலி களாய், தொழிலாளர்களாய் வாழ்ந்துவருகின்றனர். பலகோடி மக்கள் சொந்தமாக வாழ்வதற்கு ஒரு கோடியில்லை. ஆம், குந்த ஒரு கோடியில்லாது போயினும் செல்வம், கல்வி, வீரம் என்பவை அவர்களின் உடமையாக அவர் களுடன் தங்கிவிட்டன. ஆகை யால் ஊடகங்களின் துணையில் உறவுகளை நெருங்கி ஒரு சில நிமிட மனச்சுமையை கூட்டவோ குறைக்கவோ செய்கிறார்கள்.

தமிழ் ஊடகங்கள் அல்லது தமிழையும் கொண்ட ஊடகங்கள் உண்மையான தமிழர் தாயகத்தின் உணர்வு களை பிரதிபலிக்க முடிய வில்லை. காரணம்? இவ்வூட கங்கள் வசதிகருதியோ, வாய்ப் புக்கள் கருதியோ தமது தளங் களைத் தாயகத்துக்கு அப்பால் கொண்டுள்ளன. போர், இராணுவ வன்முறை, போக்குவரத்துச் சிக்கலென இன்னோரன்ன பிரச்சினைகள் தமிழ் ஊடக வியலின் உண்மைத் தன்மைக்கு சவாலாக நின்றுகொண்டிருக்க தமிழ் ஊடகவியலாளர்கள் ஏதோ வகையில் செய்திகளை ஊதிக் கொண்டிருக்கின்றனர். இராணுவ வலயத்துள் கூட பல பத்திரிகை கள் புற்றீசல்கள் போலப் பெருகி யுள்ளன. இவைகள் இன்றைய சூழலில் தமிழர்களுக்கும் ஏனை யோருக்கும் ஆற்றும் பங்கென்ன? இவை போன்ற பல கேள்விகளை எழுப்பி விடை காணவேண்டியது அவசியமாகிறது. ஏனெனில் இன் றைய சூழல் தமிழ் மக்களின் வரலாற்றுக்காலமாக மலர்ந் துள்ளது.

வர்த்தக நோக்கிலோ அல்லது இனவாத அரசியலின் பங்கு நோக்கிலோ ஊடகவியலா ளரின் செயற்பாடுகள் அமைகின் றமை கண்கூடு. மக்களின் பத்தி ரிகைச் சுதந்திரம், கேட்கும் சுதந் திரம் என்பன தந்திரமாகப் பறிக்கப்பட்டு உள்ள நிலையை மறைத்து, உல்லாசப் போக்கை வளர்த்து மக்களின் மனங்களை கேளிக்கைகளுக்குள் மூழ்க வைக்க இவ்வூடகவியல் துணை போகிறது. தமிழினம் இருட்டில் தள்ளப்படுகிறது. உலகத்தின் மூலை முடுக்கெங்கும் விளம்பரங்க ளாலும் சினிமாவினாலும் வழிநடத் தப்படும் காலம் இது. இந்த கால கட்டத்தில் எங்கள் இனத்தின் மீது கட்டவிழ்த்துவிடப்பட்ட அடக்கு முறைகள் பற்றி அறியாமலே, அடி மைகளாக வாழ்ந்து பலியாட்களாக மாறிப்புதைந்துகொண்டு வாழ்க் கையே ஒரு நரகமாக இருந்த போதும் அதுவே சொர்க்கமாக நம்பி வாழப்பழக்கப்படுத்தும் ஊட கங்களின் காலடியில் மெய்மறந்து மக்கள் வாழ்கின்றார்கள்.

கடந்த காலங்களில் மிகுந்த நெருக்குதல்களுக்கு மத்தியிலும் நடுநிலை தவறாது அதிகார வர்க்கத்தின் அடாவடித்தனங்களை பட்டவர்த்தனமாக வெளிப்படுத்திய செய்தியாளர்கள் இருந்துள்ளனர். உதாரணமாகப் பல பத்திரிகைகள் தேசிய விடுதலைஉணர்வை மக்க ளிடையே பரப்பி ஆக்கிரமிப் புகளுக்கெதிராகக் குரல் கொடுத் துள்ளமையை குறிப்பிடலாம். இந்த வகையில்

இந்திய சுதந்திரப் போராட்ட காலத்தில் பாரதியார் நடாத்திய "இந்தியா" பத்திரிகை, நேதாஜி சுபாஸ் சந்திரபோஸ் அவர்களின் "போவார்ட்" இதழ் தி .வி.க நடத்திய "தேசபக்தன்" போன்றவையைக்கூறலாம். இவற்றில் 1907இல் ஆரம்பிக்கப்பட்டு 1910இல் பிரித்தானியாவின் பத்திரி கைச்சட்டத்தால் அடக்கப்பட்ட "ஸ்வராஜ்யா" பத்திரிகைதயாரிப்பு மிக பிரபலமான வழக்குகளையும் வாதங்களையும் சந்தித்துள்ளது. இந்தப்பத்திரிகையின் ஆசிரியர் விளம்பரம் இப்படி அமைந்தது.

தேவை ஒரு ஆசிரியர் - நான் கைதானதும் "ஸ்வராஜ்யா" பத்திரிகையை நடத்த ஒரு ஆசி ரியர் தேவை.ஊதியம்; வெண்ணை தடவாத 02 சப்பாத்தி, ஒரு டம்ளர் தண்ணீர், ஒவ்வொரு தலையங்கத் துக்கும் 10 ஆண்டுகள் சிறைத் தண்டனை. ஆனால், இந்த விளம் பரத்துக்கு விண்ணப்பங்கள் நிறை யவே வந்தன. இப்பத்திரிகையின் ஆசிரியர்கள் கைதுசெய்யப் பட்டனர். சிறையிலிடப்பட்டனர். நாடு கடத்தப்பட்டனர். மூன்று ஆண்டுக ளுள் 08 ஆசிரியர்களைக் கண்டது. இவர்களுடன் 'ராம்சேவக்' என்ற ஆசிரியர் கைதுசெய்யப்பட்டு நீதி மன்றுக்குக் கொண்டு செல்லப் பட்டபோது அங்கே அவர், "கனம், நீதிபதி அவர்களே, இந்தியத்தாய தேசபக்தியுள்ள மக்களை ஏராள மாகப் பெற்றுள்ளாள். ஒருவரைக் கைது செய்தால் ஓராயிரம் பேர் அந்தப் பணியைத் தொடர்ந்து செய்யக்காத்திருக்கிறார்கள்" என்று வீர முழக்கம் செய்தார். இன்றைய விடுதலைப் போராட்ட காலம் அநாகரிமான அரச பயங் கரவாதங்களினாலும் அவர்தம் அடிவருடிகளாலும் செய்தியாளர் கள் இரகசியமாகப் படுகொலை செய்யப்படுகின்ற காலம். என்ற போதிலும், மரணம் நேரும் என்ற அச்சம் வெளிப்படையாகத் தெரி கின்றபோதும் துணிந்து செய லாற்றிய நிமலராஜன், ஜி.நடேசன் போன்ற நேர்மையாளர்களால் தமிழ் உடகவியலாளர்கள் பெருமை கொள்ளலாம்.

மக்களின் மனச் சாட்சியைத் தட்டியெழுப்பவும் சமூகப்பொறுப்புணர்வுகளைச் சிரமேற்கொண்டு செய்யவும் ஊடகவியலாளர்கள் தம்மை அர்ப் பணித்து உழைக்க வேண்டும். சிறு துளிகளாக கிளர்ந்தெழும் நீரே பெருமழையாகப் பொழி கின்றது. பத்திரிகைத்தாளில் பொறிக்கப்படும் வாசகங்களை ஊடகவியலாளர் உருவாக்க வேண்டும். அவற்றின் உண்மை ஆணியறைந்தாற்போல் வாசகரை அல்லது கேட்போரை சென்று பதிதல் வேண்டும். படிப்பறிவற்ற மக்களையும் சென்றடையும் வானொலி மிக இலகு தமிழில் தன்னை ஆக்கிக்கொள்ள வேண் டும். ஊடகவியலாளர் செய்தி களைக்கவனித்து சார்புச் செய்தி யாக்கி வெளியிடுவதுண்டு. இது மக்களைச் சென்றடையும் போது உண்மையாகி விடுகிறது.

ஊடகவியல் தனி யாரிடமோ அரசிடமோ இருக்கும் பொழுது உடகவியலாளன் ஊதியத்தின் பக்கம் இருந்து விடு கிறான். ஆனால் தற்கால மக்கள் பலதரப்பட்ட செய்திகளைப் பகுத் தாய்வு செய்யப்பழகிவிட்டனர். ஊடகங்களின் செல்வாக்கிற்கு, ஊடகவியலாளனின் செல்வாக்கு முக்கியமானது. சுமுகமான ஒரு சமுதாயத்தைக் கட்டியெழுப்ப ஊடகங்களின் பங்கு மிக அவசி யமானது. அதேநேரத்தில் இன்று ஊடகவியல் ஒரு இலாபம் தரும் தொழிலாகவும் மாறிவருகின்றது. தமிழ் ஊடகவியலாளர்கள் மதில் மேல் பூனைகளாய் இருப்பது தவிர்க்கப்பட்டு ஒவ்வொருவரும் தத்தமக்குரிய தேசியக் கடமை யினை ஒழுங்குற ஆற்றவேண்டும். இந்தவகையில் தமிழ் ஊடகத் துறையினை தேசியப்பற்றும் விடுதலையுணர்வும் கொண்டதாக வளர்த்தெடுக்கவேண்டும். இதுவே இன்றைய நிலையில் ஒவ்வொரு தமிழ் ஊடகவியலாளரினதும் தேசியக் கடமையாகும்.

மாயா

# சமாதானத்தின் உண்மையான எதிரிகள் யார்?

நிலாந்தன்

கொழும்பில் ஓர் வித்தியாசமான குழு இருக்கிறதாம் இதற்குப் பெயர் எக்ஸ் குறூப் எனப்படுகிறது. நிறுவனங்களையும் கட்சிகளையும் சாராத அல்லது நிறுவனங்களிற்குள் இருந்தாலும் சுயாதீனமான சிந்தனை கொண்ட புத்திஜீவிகள் கலைஞர்கள் மற்றும் செயற்பாட்டுக்காரர்கள் அடங்கிய இக்குழு, அமெரிக்க கறுப்பினப் போராளியான மல்கம் எக்ஸ் என்பவருடைய நினைவாக தமது குழுவை எக்ஸ்குறூப் என்று அழைத்துக் கொள்வதாகக் கூறப்படுகிறது.



தற்சமயம் நாட்டில் நிலவும் நெருக்கடிகளை முடிவிற்குக் கொண்டு வருவதற்கு இவர்கள் கூறும் ஆலோசனை எதுவெனில் - புலிகளும் ஜே.வி.பியும் சந்திக்கவேண்டும் என்பதே. இப்படி ஒரு சந்திப்பும் பேச்சுவார்த்தையும் இடம்பெறுமாயிருந்தால் சமாதானத்தை யதார்த்த பூர்வமாக அடுத்தகட்டத்திற்கு நகர்த்தமுடியும் என்று இக்குழுவினர் நம்புகிறார்களாம்.

அண்மையில் மலையக முன்னணித்தலைவர் சந்திரசேகரன் ஜே.வி.பியையும், புலிகளையும் சந்திக்கவைக்கும் முயற்சிகளில்ஈடுபட்டது தெரிந்ததே.

இதுவரையிலும் குறிப்பிடத்தக்க விளைவுகளைத்தராத இம் முயற்சிகளைப்பற்றி மேற்படி எக்ஸ் குழுவைப் பற்றி எனக்குக் கூறிய வரும், சிங்களச் சமூகத்துடன் நெருக்கமான உறவுகளை வைத்திருப்பவருமான நண்பரிடம் கேட்டேன். அதற்கு அவர் சொன்னார்... அப்படியொரு சந்திப்பிற்கு ஜே.வி.பி தயங்குவது போலத் தோன்றுகிறது என்று. ஏனென்று கேட்டேன். அவர் சொன்னார்.... அப்படியொரு சந்திப்பு நிகழ்ந்தால் பிரச்சினை தீர்ந்துவிடுமே. அதற்கு ஜே.வி.பி தயாரில்லை ஏனெனில் பிரச்சினைகள் தீர்க்கப்படுவதை அவர்கள் விரும்பவில்லை என்று.

ஆனால் இந்த விசயத்தை இதைவிட மேலும் ஆழமாகப் பார்க்கலாம் என்றே தோன்றுகிறது. அநேகமானவர்கள் ஜே.வி.பியைத்தான் பிரச்சினை என்று சொல்கிறார்கள். ஆனால் இதில் ஜே.வி.பி ஒரு கூர் முனை மட்டுமே.

இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபைக்கு எதிராயிருப்பது ஜே.வி.பி. மட்டும் அல்ல. பிரதான கட்சிகளான எஸ்.எல்.எவ்.பி, யு.என்.பி இரண்டுமே இதற்கு எதிர்தான். இது தவிரதெற்கில் உள்ள பெரும்பாலான சிங்கள, ஆங்கில மீடியாக்களும் இதற்கு எதிர்தான்.

பெரும்பாலானவர்கள் எதிர்க்கிறார்கள். ஆனால் பழி ஜே.வி.பி மீதும், ஹெலஉறுமயவின் மீதுமே அதிகம் விழுகிறது. ஏனெனில் இந்த இரண்டு அமைப்புக்களும் பொறுப்புமிக்ககட்சிகள் அல்ல என்பதாலும், சர்வதேச உறவுகள் மிகக் குறைந்தவை என்பதாலும் சர்வதேச சமூகத்திற்குப் பொறுப்புச் சொல்லவேண்டிய கட்டாயம் இவற்றிற்கில்லை. பதிலாக உள்நாட்டு இனச் சாய்வு அரசியலின் உணர்ச்சிப் புள்ளிகளைத் தூண்டுவதே இவர்களுடைய வேலையாயிருக்கிறது. எனவே சர்வதேச சமூகத்திற்கோ அல்லது உதவி வழங்கும் பன்நாட்டு நிறுவனங்களிற்கோ பதில்கூறத்தேவையில்லாத, உள்நாட்டு எல்லைகளிற்குள்ளேயே சுருங்கி நிற்கும் இந்தக் கட்சிகள் எதையும் கதைக்கலாம், எதையும் செய்யலாம் எந்த ஒரு அரசியல் நாகரிகத்தையும் மீறி சமாதானத்துடன் விளையாடலாம்.



கடந்த திங்கட்கிழமை சர்வதேசநாணய நிதியத்தின் பிரதிநிதிகள் கொழும்பில் ஜே.வி.பியை சந்தித்துப் பேசியது என்பது சர்வதேச சமூகத்திற்கு பதில்கூறும் ஒரு அமைப்பாக ஜே.வி.பி யை மாற்றும் ஒரு முயற்சியே என்பதை இங்கு சுட்டிக்காட்ட வேண்டும். ஆனால் ஜே.வி.பி. எழுச்சி பெற்றுவந்த வழியை வைத்துக்கூறு மிடத்து அதை சர்வதேச சமூகத்திற்கு பதில்கூறவல்ல ஒரு அமைப்பாக மாற்ற இன்னும் பல காலம் செல்லும் என்றே தோன்றுகிறது.

எனவே சர்வதேச சமூகத்திற்குப் பதில் கூறத்தேவையில்லாத இந்தக் கட்சிகள் செய்பவற்றை மறைமுகமாக ஊக்குவித்துக்கொண்டு அல்லது அதை எதிர்க்காமல் விடுவதன்மூலம் இரண்டு பெரியகட்சிகளும் தமக்கு இதில் பங்கில்லை என்பதுபோல ஒரு தோற்றத்தைக் காட்டப்பார்க்கின்றன.

உண்மையில் ரணிலோ அல்லது சந்திரிகாவோ ஒரு இடைக்கால நிர்வாக ஏற்பாட்டிற்கு தயார் என்றால் அதை அவர்கள் சிங்கள வெகுசனத்தின் முன்சென்று துணிந்து சொல்லட்டும். உண்மையான சமாதானத்தின் எதிரிகள்யார் என்ற தலைப்பில் ஜே.வி.பி செய்துவரும் துர்ப்பிரசாரத்திற்கு எதிராக இந்த இரண்டு கட்சிகளும் பிரசாரம் செய்யட்டும்.

ஆனால் ரணில் அப்படிச் செய்ய மாட்டார். ஏனெனில், முதலாவதாக அவர் சந்திரிகா கவிழ வேண்டும் என்று காத்திருக்கிறார். இரண்டாவதாக ஜே.வி.பி யைப் போல மக்கள் மத்தியில் இறங்கி பிரசாரம் செய்யும் வெகுசன அரசியலிற்குப் பொருத்தமானவராக அவர் தன்னை இதுவரை நிரூபித்திருக்கவில்லை. சந்திரிகா ஒன்றில் ஜே.வி.பி யுடன் முட்டுப்பட்டோ அல்லது புலிகளுடன் முட்டுப்பட்டோ அல்லது உதவி வழங்கும் நாடுகள் மற்றும் நிறுவனங்களுடன் முட்டுப்பட்டோ அதாவது யாரோடாயினும் முட்டுப்பட்டோ விழட்டும் என்றே ரணில் காத்திருக்கிறார்.

உண்மையில் இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை குறித்து அவரிடமும் ஒரு தெளிவான சித்திரம் இல்லை. புலிகள் தமது யோசனைகளை முன்வைத்தபோது அவர் முடிவு சொல்லாது காலத்தை இழுத்தடித்தார். சந்திரிகா அவரது ஆட்சியில் கை வைப்பதற்கு முன்பே அதாவது ரணிலின் காலத்திலேயே சமாதானம் தேங்கி நின்றுவிட்டது. இடைக்கால தன்னாட்சி அதிகார சபை பற்றிய அவருடைய உண்மையான நிலைப்பாடு வெளிவர முன்பே அவரது ஆட்சி கவிழ்க்கப்பட்டுவிட்டது.

இதை இன்னும் சரியாகக் கூறின், ரணில் தனது முடிவை சொல்லவேண்டியிருந்த ஒரு சோதனையான காலகட்டத்தில் சந்திரிகா அவரை அந்த நெருக்கடியில் இருந்து விடுவித்து விட்டார் என்றே சொல்லவேண்டும்.

சமாதான முயற்சிகளை முரட்டுத்தனமாக எதிர்க்கும் ஹெல உறுமயப்பிக்குக்களுக்கும், தனக்கும் உறவேதும் இல்லை என்பதுபோல யு.என்.பி காட்டப்பார்க்கிறது. ஆனால் ஹெல உறுமயவின் நிதிப்பின் தளத்தை கூர்ந்து கவனித்தால் ஒன்று தெரிய வரும். அங்கே யு.என்.பி க்கு ஏதோ ஒரு தொடர்பு இருக்கிறது என்பது.

ஹெல உறுமயவிற்கு நிதி உதவிகள் செய்பவருள் முக்கியமானவர் மிலீனா சுமதிபால என்று கூறப்படுகிறது. இவர் சர்ச்சைக்குரிய திலங்கசுமதிபாலவின் தாயாராவார். அதோடு அகில இலங்கை பௌத்த சம்மேளனத்தின் தலைமைப் பொறுப்பிலும் இவர் உள்ளார். பிரபலமான சுமதி கோட்ஸ் எனப்படும் குதிரைப் பந்தய முதலாளிகளான இவர்களே லக்பிம, அரலிய என்ற இரு சிங்களப் பத்திரிகையையும் வெளியிட்டு வருகின்றனர்.



குதிரைப்பந்தய முதலாளிகளான இவர்கள் யு.என்.பி 1970 களில் தொடங்கி வைத்த திறந்த சந்தைப் பொருளாதாரத்தின் விளைவாகவும் யுத்த காலத்து வன்செயல் வியாபாரத்தின் விளைவாகவும் மேலேழுந்தவர்கள் என்று கூறப்படுகின்றது.

திலங்க சுமதிபால முன்பு யு.என்.பிக்குள் இருந்து பின்பு ஊழல் வழக்குகளிற்குள் சிக்கியவர். சில மாதங்களிற்கு முன்பு யு.என்.பிக்குள் ரணிலின் தலைமைத்துவத்தை அகற்றி கருஜெயசூரியாவை தலைவராக்கும் கிளர்ச்சி ஒன்றைத் தூண்ட முற்பட்டுத்தோல்வியடைந்தவர்.

இது தான் ஹெல உறுமயவின் நிதி மூலங்களின் பின்னணி. ஆனால் யு.என்.பி இந்தப் பிக்குகளின் சமாதானத்திற்கு எதிரான அரசியலிற்கும் 'தனக்கும் தொடர்பில்லை என்பதான ஒரு தோற்றத்தைக்காட்ட முயற்சிக்கிறது. ஆனால் தென்னிலங்கையில் அதிதீவிரமதவாதக் கட்சியொன்று மூன்றாவது சக்தியாக எழுச்சி பெற்றதற்கு சந்திரிகாவை விடவும் யு.என்.பியே அதிகம் பொறுப்பு.

இப்பொழுது சிங்களத் தீவிரவாதிகளிற்குத் தலைமைதாங்குவது யார் என்ற ஜே.வி.பி க்கும் ஹெல உறுமயவிற்கும் இடையிலான போட்டியில் ஹெல உறுமயவை விடவும் கூடுதல் இன வாதத்தைக் கக்கிவரும் ஜே.வி.பி அதன் இயல்பான வளர்ச்சிப்போக்கில் சமாதானத்தை முரட்டுத்தனமாக எதிர்க்கிறது.

இதில் யு.என்.பி. யும் சரி எஸ்.எல்.எவ் பியும் சரி தாம் கதைக்கமுடியாத இனவாதத்தை ஜே.வி.பி. மற்றும் ஹெல உறுமயவிற்கூடாக கதைக்கின்றன என்பதே மெய்நிலை. இந்த இரண்டு பெரிய கட்சிகளும் தீவிர இனப்பகை அரசியலை நடத்த முடியாதளவிற்கு அவர்களுடைய சர்வதேச உறவுகள் அவர்களைக் கட்டுப்படுத்துகின்றன.

எனவே ஜே.வி.பியும் ஹெல உறுமயவும் செய்துகொண்டிருப்பதெல்லாம் இந்த இரண்டு பெரிய கட்சிகளுடையதும் இரண்டக அரசியலின் அசிங்கமான நீட்சியே. இவர்களுடைய இந்த இரண்டக அரசியலின் விளைவாகவே ஜே.வி.பியும், ஹெல உறுமயவும் வளர்ந்து வருகின்றன இனியும் வளரப் போகின்றன.

எனவே ஜே.வி.பியும், பிக்குக்களும்தான் இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபைக்கு எதிர் என்றில்லை. இது விசயத்தில் நழுவி நழுவிக்கதைக்கும் யு.என்.பி யும் முன் பின் முரணாகக்கதைக்கும் எஸ்.எல்.எவ்.பி யும் தான் உண்மையான சமாதானத்தின் பிரதான எதிரிகள். மிதக்கும் பனிப்பாறையின் நீரின்மேல் வெளித்தெரியும் முகடே ஜே.வி.பியும் ஹெல உறுமயவும்.

இந்நிலையில் ஜே.வி.பியும் புலிகளும் சந்தித்து பிரச்சினை தீரப்போவதில்லை. மல்வத்தை பீடாதிபதியும் புலிகளும் சந்தித்தாலும் பிரச்சினை தீரப்போவதில்லை. கிழக்கில் புலிகளின் தளபதிகளும், இராணுவத்தளபதிகளும் சந்தித்தாலும் பிரச்சினை தீரப்போவதில்லை.

மாறாக, உதவிவழங்கும் நாடுகளும், நிறுவனங்களும் சமாதானத்தை மேற்பார்வை செய்யும் நாடுகளும் மனித உரிமை பேணும் அமைப்புகளும் மேற்படி இரண்டு பெரிய கட்சிகளின் மீதும் நிர்ப்பந்தங்களைப் பிரயோகிக்கவேண்டும். இத்தகைய நிர்பந்தங்கள் மட்டுமே சமாதானத்தை முன் நகர்த்தும். இல்லையென்றால் இப்பொழுது நிலவும் மென்தீவிரயுத்தம் ஒரு வன்தீவிர யுத்தமாக மாறும் வாய்ப்புக்களே அதிகரித்துக் கொண்டு செல்லும்.


கடந்த வாரம் யாழ்ப்பாணத்திலும் இருவர் கொல்லப்பட்டிருக்கிறார்கள். கடந்த சில மாதங்களாக ஒரு மென் தீவிர யுத்தம் கிழக்கிலும் கொழும்பிலுமே நிகழ்ந்து வந்தது. ஆனால் புல்லுமலைச் சம்பவத்தின் பின் அது வடக்கிற்கும் விஸ்தரிக்கப்படலாம் போலத்தோன்றுகிறது.

இப்படி, நிலவும் மென்தீவிர யுத்தத்தின் எல்லைகள் விரிந்து செல்வது நல்லதல்ல. இது ஒரு கட்டத்தில் யுத்த நிறுத்தத்திற்கு திரும்பிவரமுடியாத வளர்ச்சியைப் பெற்றுவிடக்கூடும். அதாவது சமாதான முயற்சிகள் யுத்தநிறுத்தத்திற்கு திரும்பிச் செல்ல வியலாத வளர்ச்சியை அடையப்போகின்றன என்றிருந்த காலங்கள் யாவும் தீர்ந்து போய்விட்டன. இப்பொழுதுள்ள பிரச்சினை - நிலவும் மென்தீவிர யுத்தமானது யுத்தநிறுத்தத்திற்கு திரும்பிச்செல்லவியலாத ஒரு வளர்ச்சியை அடைவதை எப்படித்தடுப்பது என்பதே.

# நறுக்கென...

இந்தியாவின் பிரசித்தி பெற்ற அரசியல் கோமாளிகளில் முக்கியமானவரான சுப்பிரமணிய(ஆ)சாமி மீண்டும் இலங்கை விவகாரம் தொடர்பாக ஒரு கருத்தை திருவாய்மலர்ந்தருளியுள்ளார்.

அதாவது இலங்கையில் இயங்கும் 'தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு' அரசியல் கட்சியை இந்தியாவில் தடைசெய்ய வேண்டும் என இந்திய மத்திய அரசிடம் அவர் கோரியுள்ளார்....



தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினர் விடுதலைப்புலி களைப் போலவே செயற்பட்டுவருவதால்... இக்கூட்டமைப்பின் உறுப்பினர்கள் விடுதலைப்புலிகள் அமைப்பின் உறுப்பினர்கள் போன்றே இயங்கிவருகின்றமையால்... இந்த அமைப்பை இந்தியாவில்தடைசெய்யவேண்டும் என்பதே அதற்கான அன்னாரின் விளக்கமாகும்.

'தென்னைமரத்திற்கு தேள் கொட்டினால் பனைமரத் துக்கு நெறி கட்டுமாம்' என்ற பழமொழிபோன்றே ஆசாமியின் கதையும் இருக்குப்பாருங்கோ...

எப்போதுமே இலங்கை விவகாரம் பற்றிப் பேசியே...

## சுப்பிரமணிய சுவாமியா...! அறிக்கை சுவாமியா...!

அதுவும் விடுதலைப்புலிகளைச் சீண்டிப்பேசியே தனது அன்றாட அரசியல் இருப்பை பரபரப்பாக உணர்த்த நினைக்கும் சுப்பிரமணிய ஆசாமியை எவரும் ஒரு பொருட்டாக மதித்ததும் இல்லை...


ஒரு தடவை திருச்சி விமான நிலையம் வந்திறங்கிய இந்தச் சுப்பிரமணிய ஆசாமிக்கு பெண்கள் அணிதிரண்டு விளக்குமாற்றுப் பூசைநடத்திய வரலாறும் இருக்கவே இருக்கிறது.

இலங்கையில் இலங்கை அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்டு, இலங்கைத்தமிழ்மக்களின் ஏகோபித்த ஆதரவைப் பெற்று இலங்கை நாடாளுமன்றத்தில் நான்காவது பெரும் அரசியல் சக்தியாக விளங்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு இந்தியாவில் தடைவிதிக்கவேண்டுமென கோரிக்கை விடுப்பது எத்தகைய பைத்தியக்காரத்தனம் என்பது இந்திய அரசுக்கு தெரியாதா...?

அது மட்டுமல்ல... இலங்கை வேண்டுகோள் விடுத்தால் இந்தியா தனது இராணுவத்தின் ஒரு பிரிவையும், வான்படையின் ஒரு பிரிவையும் நிலைகொள்ளச் செய்யலாம் என்று ஒரு அற்புதமான ஆலோசனையையும் அவர் பிதற்றியுள்ளார். வடக்கு கிழக்கை இந்தியப்படை அமைதிப்பணி என்ற பெயரில் ஆக்கிரமித்து நின்றபோது அதற்கு எதிராக கொழும்பில் நடைபெற்ற இந்திய எதிர்ப்பு நடவடிக்கைக்கு இன்று ஆட்சியில் ஒண்டிக்கொண்டிருக்கும் ஜே.வி.பி தான் காரணம் என்பது இந்த (ஆ) சாமிக்கு தெரியாதா என்ன? இந்த இலட்சணத்தில், இலங்கையில் பணியாற்ற இந்திய அமைதிப்படைகால அனுபவங்கள் இந்தியப்படையினருக்கு உதவுமாம் என்றும் கூறியுள்ள ஆசாமியார் இந்தியப்படையைக் கிண்டலடிக்கிறாரா என்று சந்தேகப்படவேண்டியுள்ளது.

இப்படியெல்லாம் பேசும் இந்த - அமெரிக்காவின் ஹவார்ட் பல்கலைக்கழகப்படிப்பாளி இந்திய அரசியலில் அநாமதேயமாகிவரும் தனது இருப்பை அவ்வப்போது உணர்த்த, விடுதலைப்புலிகளின் தயவையே நம்பி இருக்கிறார் என்றால் மிகையில்லை...! அதாவது விடு தலைப்புலிகளைப் பற்றி அவர்களுக்கு எதிராக அறிக்கை விடுவதையே - பொழுதுபோக்காகக் கொண்ட சுப்பிரமணியசாமி தனது பெயரை 'அறிக்கைசுவாமி' என்று மாற்றிக் கொண்டால் பொருத்தமாக இருக்கும்.

---



இடைக்கால நிர்வாக அதிகாரசபைகுறித்து விடு தலைப்புலிகளுடன் பேச்சுக்களை நடத்துவதற்கு முன்னர் சர்வகட்சி ஆலோசனைச்சபை ஒன்றை உருவாக்கி சமாதான முயற்சிகளை காலங்கடத்தி இழுத்துச்செல்ல சந்திரிகா அம்மையார் மேற்கொள்ளும் நடவடிக்கைக்கு ஒத்துழைப்புத்தர ரணில் மறுப்புத் தெரிவித்துவிட்டார்.

ஆனாலும் ஏனைய கட்சிகளை வைத்துக்கொண்டு அந்த சர்வகட்சி ஆலோசனைச்சபையை உருவாக்கலாம் என்றால் அதற்கும் வாய்ப்பில்லை. ஆளும் கட்சிக்குஅடுத்த பெரும் கட்சியான ஐ.தே.கட்சியும், அதற்கடுத்து இருக்கும்

## சந்திரிகாவின் சூழ்ச்சிக்கு நழுவிய ரணில் விக்கிரமசிங்க

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பும் சந்திரிகாவின் இந்த புதிய ஏமாற்று முயற்சிக்கு ஆதரவளிக்காத, நிலையில் அரசில் அங்கம்வகிக்கும் - அரசை ஆதரிக்கும் - கட்சிகளைவைத்தே சர்வகட்சி ஆலோசனைச்சபை ஒன்றை உருவாக்கினால் அதனை விடவும் கோமாளித்தனம் எதுவுமில்லை. அப்படியாக உருவாக்கப்படும் ஆலோசனைச்சபை சமாதான எதிர்ப்பு ஆலோசனைச் சபையாக மட்டுமே அமையும் என்பதில் சந்தேகமே இல்லை.

இடைக்காலநிர்வாக அதிகாரசபை குறித்து அரசுசாதகமான முடிவினை எடுக்காத நிலையில் சமாதானப்பேச்சுவார்த்தைஆக்கபூர்வமான வகையில் தொடரப்போவது கிடையாது.

சந்திரிகா அமைக்கநினைக்கும் சர்வகட்சி ஆலோசனைச்சபை, இடைக்காலநிர்வாக அதிகார சபை குறித்து சாதகமாக பரிசீலிக்கவே மாட்டாது என்பதும் சர்வநிச்சயம்.


எனவே சந்திரிகா இடைக்கால நிர்வாக அதிகார சபைக்கு மாற்றாக வேறு யோசனைகளை முன்வைக்கும் தனது முந்தைய திட்டத்தை மீண்டும் அரங்கிற்கு புதிய வடிவில் கொண்டுவர முயலலாம். ஆனால் அதனை விடுதலைப்புலிகள் நிராகரிக்கவே செய்வர்.

அப்படியானால் சமாதான முயற்சிகள் தொடர்ந்தும் திரிசங்கு சொர்க்கத்திலேயே இருக்கும். அத்தகையதோர் நிலையை தமிழ்மக்கள்தொடர்ந்தும் ஏற்றுக்கொள்ளப்போவது கிடையாது.

இயல்பு வாழ்வை ஏற்படுத்த இரண்டாண்டு சமாதானத்தால் முடியவில்லை என்றால், அந்த சமாதானத்திற்கு என்னதான் அர்த்தமிருக்கிறது. அன்றாடவாழ்க்கைப் பிரச்சினை தொடர்பான தமிழ்மக்களின் நியாயபூர்வமான, அவசியமான விடயங்களைக்கூட, இராணுவ நலன்களை பாதுகாக்க வேண்டுமென்ற காரணத்திற்காக நிறைவேற்றத்தயங்கும் அரசால் நிரந்தரமான நீதியான, தமிழ்மக்களின் அரசியல் - வாழ்வியல் - அபிலாஷைகளை பூர்த்திசெய்யக்கூடியதான தீர்வொன்றினை எட்டும் வரை பேச்சுவார்த்தை மே[illegible]சையில் உறுதியாக அமரமுயுமா என்றால் முடியவே முடியாது என்பதே பதிலாகும்....

சிறிலங்கா அரசின் சமாதானம் மீதா[illegible] விசுவாசம் இவ்வளவு தான் என்பது தெரிந்தவிடயமே... இந்தநிலையில் சமாதான முயற்சிகளின் முன்னேற்றத்தின் அடிப்படையில் வழங்க உறுதியளித்த இலங்கைக்கு உதவும் நாடுகளின் பெருந்தொகை நிதியை எவ்வாறாவது பெ[illegible]றுக் கொள்வதற்காக அரசு பகீரதப்பிரயத்தனம்செய்துவருகிறது.

அதற்காகவே சமாதானம் வேஷம் கட்டி ஆடவும் தொடங்கியுள்ளது. ஆனாலும் [illegible]ம் அரங்கேறுமா என்பதே இன்றைய கேள்வியாகும்.



இலங்கையின் இனவிவகாரத்தில் இந்தியாவும், அமெரிக்காவும் காட்டும் அக்கறை தீவிரம்கொண்டு வருவ தாகவே தெரிகிறது. இரு தரப்பினரதும் நடவடிக்கைகள் சமாதான முயற்சிகளுக்கான உதவி, பரஸ்பர ஒத்துழைப்புக் கான ஒப்பந்தம், பாதுகாப்புக்கான ஆலோசனை என்ற பெயர்களில் இலங்கை மீதான அரசியல் - இராணுவ மற்றும் ராஜதந்திரரீதியிலான மேலாதிக்கத்தை தம் வசம்வைத்துக் கொண்டு இந்து சமுத்திரப்பிராந்தியம் மீதான கட்டுப்பாட்டை ஸ்திரப்படுத்தும் தொலைநோக்குச் சிந்தனையுடனேயே மேற் கொள்ளப்பட்டு வருகின்றன என்பதே யதார்த்தநிலையாகும்.

## பிராந்திய வியூகத்துள்; இலங்கை விவகாரம்

ஏற்கனவே 1980 களின் இறுதிப்பகுதியில் வெறும் இந்திய அபிலாசைகளுடன் மட்டும் இலங்கை விவகாரத்தினுள் முழுமையாக படைநடத்தி நுழைந்த இந்தியாவுக்கு கிடைத்த வரலாற்றுத் தோல்வியும் அவமானமும் இந்தியாவின் ராஜதந்திரத்திற்கும் இராணுவ மூலோபாயத்திற்கும் விழுந்த பலமான அடியேயாகும்.

அகண்ட பாரதத்தின் ஆட்சியாளர் சின்னஞ்சிறு சிறிலங்காவின் சிங்கள தலைமைகள் விரித்த சதிவலைக்குள் சிக்கி சீரழிந்த வரலாற்று வடுக்கள் இன்னும் வலிமைஏற்படுத்தும் மாறாக்காயங்களாகவே இந்தியாவுக்கு இருக்கும் என்பதில் ஐயமில்லை.

எனினும் வரலாற்றுத் தவறுகளில் இருந்து இன்னமும் இந்தியா பாடம் கற்றுக்கொண்டதாக இல்லை. மீண்டும் மீண்டும் சிங்களத் தலைமைகளுக்கு அனுசரணையான நிலைப்பாட்டையே அது எடுத்து வருகிறது.

இந்தியா ஒரு புறம் இலங்கையை தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர புதிய புதிய நகர்வுகளை மேற்கொள்ள... அமெரிக்காவோ அதனைத் தனது முந்தானை முடிச்சுக் குள்போட தவறானதும் தந்திரோபாயம் கொண்டதுமான செயற்பாடுகளை ஏட்டிக்குப்போட்டியாக மேற்கொண்டுவரத் தொடங்கியுமுள்ளது.

இரண்டு பெண்டாட்டிக்காரன் நிலையில் சிறிலங்கா இருவரையும் பேய்க்காட்டி சமாளித்தபடி தனது தேவைகளை நிறைவேற்றிக்கொள்வதில் குறியாக இயங்குகிறது.

பாதுகாப்பு - சமாதானம் ஆகியவை தொடர்பான பரஸ்பர ஒத்துழைப்பு என்ற பெயரில் இலங்கையை இரு நாடுகளும் தம்வசமாக்க வியூகங்களை வகுப்பதுதான் இலங்கையின் பாதுகாப்பையும், சமாதானத்தையும், பலவீனப்படுத்தவும், சாத்தியமற்றதாகவும் ஆக்கப்போகின்றது என்பதை முத்தரப்பும் புரிந்துகொள்ளும் நிலையில் இல்லை என்பதுதான் உண்மை.

இரண்டையும் இலங்கை சமாளித்து ஏமாற்றிவருவது அதன் தற்போதைய ரை தேவையாகவும் இருக்கிறது.

அமெரிக்க கடற்படை அதிகாரிவந்துவிட்டுப் போனால், இந்தியக்கடற்படை அதிகாரி அடுத்துவருகிறார்...

இந்திய இராணுவ நிபுணர்கள் வந்து ஆராய்ந்துவிட்டுச் சென்ற மறுவாரமே அமெரிக்க இராணுவ நிபுணர்குழு ஆராய வருகைதருகிறது...

அமெரிக்க புலனாய்வாளர் வந்துபோக, இந்திய புலனாய்வாளர் குழுவருகை தரத்தயாராகிறது...

இந்த மேலாதிக்கப்போட்டிக்குள் இலங்கை தனது அரசியல் மற்றும் இராணுவ தேவைகளை நிறைவேற்றிக்கொள்ளும் நோக்கத்தினை எட்டமுயல்கின்றது...!

சமாதானமும், இலங்கையின் பாதுகாப்பும் மட்டும் நிரந்தரக்கேள்விக்குறியாகவே இருக்கப்போகின்றது என்பதுமட்டும் உண்மை.

---



தென்பகுதியில் அரசியல் சார்ந்தபோராட்டங்கள், பேரணிகள், ஆர்ப்பாட்டங்கள், கொடி எரிப்பு, கொடும்பாவி எரிப்பு நடவடிக்கைகள் எதுவானாலும் முன்னணிவகித்துவந்த ஜே.வி.பி உட்பட ஏனைய கட்சிகள் அனைத்தையும் ஒரு புறம் ஒதுக்கித்தள்ளிவிட்டு அந்தஇடத்தை மஞ்சள் அல்லது செங்காரி அங்கிபோர்த்திய பௌத்த குருமார் பிடித்துக்கொண்டு விட்டனர் என்றால், அதில்மிகையில்லை.

சாது...சாது....சாது... என்றும் சாந்தி....சாந்தி.... சாந்தி என்றும் கூறிக்கொண்டு தம்மோபதேசம் செய்து வந்த இந்த சாதுக்கள் இப்போது அரசியலில் இறங்கி யுத்தம் சன்னதம் கொள்ளத்தொடங்கியுள்ளனர்.

## நோர்வேயின் கொடியை எரித்தார்களா? தங்கள் பெருமையை அழித்தார்களா?

சமாதானம் என்பது அவர்களின் ஒவ்வாமைக்குரிய சொல்லாகிவிட்டது. அதுவும், கடந்த தேர்தலில் ஜாதிக ஹெல உறுமயக்காரர்களான 'நவக்கிரகங்களின்' நாடாளுமன்றப் பிரவேசத்தின் பின்னர் சமாதான முயற்சிகளுக்கு பெரும் அச்சுறுத்தலாக, குழப்பத்தை ஏற்படுத்துபவர்களாக இந்த 'நவக்கிரகங்களே' விளங்கிவருகின்றனர்.

கடந்த வாரம் அவர்களின் தமது எதிர்ப்பை வெளிப்படுத்தை - அதாவது சமாதான முன்னெடுப்பு நகர்வுகள் மீதான தமது எதிர்ப்பினை வெளிப்படுத்த மீண்டும் ஒரு கொடிஎரிப்பு முயற்சியில் ஈடுபட்டனர்.

முன்னர் ஒருதடவை செய்து தமது அரசியல் அசிங்கத்தனத்தை, அதிவேகத்தை வெளிப்படுத்திய, அதே நோர்வே நாட்டு தேசியக் கொடியை - அதுவும் நோர்வே தூதரகத்தின் முன்வைத்தே ஆர்ப்பாட்டக் கோஷமெழுப்பி எரித்துள்ளனர். ஒரு எதிரிநாட்டின், ஆக்கிரமிப்புநாட்டின் மீதான வெறுப்பையும், ஆத்திரத்தையும் வெளிப்படுத்த அந்தநாட்டின் தேசியக் கொடியை எரிப் பதை தேசிய கீதத்தை அவமதிப்பதைக் கூட ஒரு நாகரிகமான அரசியல் எதிர்ப்பு நடவடிக்கையாக எவரும் கருதமாட்டார்கள். இதனையும் மீறி அப்படி ஒரு நிகழ்வு அரங்கேறுமானால் அது அந்த எதிரி அல்லது ஆக்கிரமிப்பு நாட்டுடனான பகைமை உணர்வை பிரகடனம் செய்யும் நடவடிக்கை யாகவே கருதப்படும்.

ஆனால் நோர்வே, இலங்கையில் அமைதியை ஏற்படுத்த பல தசாப்தகால இனப் பிரச்சினைக்கு சமாதான பேச்சுக்கள் மூலம் தீர்வொன்றை காண்பதற்கு அனுசரணையாளராகச் செயற்பட சிங்கள ஆட்சித்தலைமைகளின் அழைப்பின்பேரில் இங்கு வந்த நட்பு நாடாகும்.

அதனை அவமதிக்கும் நோக்கில் அந்த நாட்டின் தேசியக்கொடியை எரிப்பது என்பது அரசியல் அநாகரிகத்தின் உச்சக்கட்டமேயாகும்.

சென்ற ஆட்சிக்காலத்திலும் இதேமாதிரி நோர்வேயின் தேசியக்கொடியை எரித்தும், எரிக்சொல்ஹெய்ம் அவர்களின் கொடும்பாவியை எரித்தும் பிக்குமார் செய்த சமாதான எதிர்ப்புக் கூத்தின் அசிங்கத்தை மறந்துவிட்டு ஆட்சியாளரின் அழைப்பிற்கு கௌரவமளித்து வந்து அனுசரணையாளராக செயற்பட்டுவரும் நோர்வே தரப்பினரின் பண்பும் நிதானமும் பிக்குகளுக்கு இல்லாமல் போனது அவமானத்திற்குரியதே...! ஆர்ப்பாட்டம் செய்த பிக்குமாரே நீங்கள் அன்று எரியூட்டியது நோர்வே அரசின் தேசியக்கொடியை மட்டுமல்ல... சிறிலங்காவின் பௌத்த சிங்கள, தம்மபதக்கலாசாரத்தின் எஞ்சியுள்ள அற்பசொற்ப பெருமைகளையும்தான்... இனிமேல் நீங்கள் புத்தம் சரணம் கச்சாமி என்று ஓதும் தகைமையை இழந்தவர்களே... இனி உங்களின் கோஷம் 'யுத்தம் சரணம் கச்சாமி' என்பதாகவே இருக்கும்.

செங்குட்டுவன்

# உளவாளிகளும் உளவு வளையங்களும்

> “சிங்கள உளவு நிறுவனத்தின் உளவாளிகள் தமிழர் தாயகப்பகுதிகளில் தேசத்துரோகத்தின் சூழ்நிலையை எப்பாடுபட்டாயினும் உருவாக்கும் உளவு உழைப்பிலே செயற்பட்டு வருகின்றார்கள். இவர்கள் சதி வேலைசெய்யும் மூளையுடனேயே பணியாற்றுகின்றார்கள். சுயரூபங்களை மறைத்தபடி சிங்கள உளவுச் சேவையினரது உளவாளிகளாக இயங்குகின்றவர்கள், செயலாற்றுபவர்கள் இனங்காணப்படும்போதே அவர்களின் உளவுச் சேவையைச் செயலிழக்கச் செய்யமுடியும்.”

உலகநாடுகள் உளவு வேலைச்சதுரங்க ஆட்டத்தில் உளவுத்திறன் எல்லாவற்றையும் பிரயோகித்து வெற்றிகரமாக தம் உளவு வளையங்களை அமைத்து தமது தேசிய நலன்களையும், தேசிய பாதுகாப்பு ஒழுங்குமுறைகளையும் பேணிக்காத்துவருகின்றன.

உளவு வளையங்களை அமைக்கும் நோக்கில் தமது உளவாளிகளைத் திறமையான விதத்தில் ஈடுபடுத்திவருகின்றன.

உளவாளிகள் தம் உளவுப் பணிகளின்போது நிலைமைக்கேற்பத் திட்டமிட்டு தங்களது உருவச் சாயலை மாற்றிக்கொள்வார்கள்.

உளவுப்பணியை ஆற்ற வேண்டிய பிறநாட்டில் வாழும் உளவாளிகள் அந் நாட்டின் கொள்கைக்குச் சார்பானவர்களாகத் தம்மை வெளிப்படுத்துவார்கள். தன் தாய் நாட்டைப் பாதுகாக்கும் உளவுப் பணிக்காகத் தாயகத்துக்கு எதிரான போக்குள்ளவர்களாக வெளிப்படுத்திக் கொள்வார்கள்.

உளவுச் சேவைச்சரித்திரத்தில் சுயரூபங்களை மறைத்துக் கொண்டு வெற்றிகரமாக உளவு வேலைகளில் ஈடுபட்ட மூன்று உளவாளிகளின் உண்மை நிகழ்ச்சிகளை ஆராய்ந்து பார்ப்போம்.

முதலாவது நிகழ்ச்சியாக ஜேர்மனிய உளவாளியான ஸ்ரீபரின் உளவுச்சேவையை இப்பொழுது கவனிப்போம்.

ஜேர்மனி 1863ஆம் ஆண்டு ஒஸ்ரியாவைத் தனது ஆட்சியின் கீழ் கொண்டுவரத் தீர்மானித்தது. அத் தீர்மானத்தை நிறைவேற்ற ஒஸ்ரியாவின் இராணுவ போர்த்திட்டங்கள் பற்றிய இரகசியத் தகவல்களைச் சேகரித்து அனுப்பும் உளவு வேலையை ஸ்ரீபர் பொறுப்பேற்றுக்கொண்டார்.

ஸ்ரீபர் ஒரு அங்காடி வியாபாரிபோல் மாறுவேடம் தரித்துக் கொண்டு ஒஸ்ரியா முழுவதும் சுதந்திரமாக உலாவந்து உளவுப்பணிகளில் ஈடுபட்டார்.

அவர் எப்போதும் இரண்டு பெரிய பெட்டிகளைத் தனது வண்டியில் வைத்திருந்தார். ஒரு பெட்டியில் சமயப் பிரசாரப்புத்தகங்களும், மற்றைய பெட்டியில் பாலியல் சம்பந்தமான படங்களும் நிரம்பி இருந்தன.

மக்கள் சமயத்திற்கோ அல்லது பாலியலுக்கோ பெரிதும் கவர்ந்திழுக்கப்படுபவர்களாக இருக்கின்றதை ஸ்ரீபர் நன்கு அறிந்து இருந்தார்.

ஸ்ரீபர் மக்கள் உளவியலை நுட்பமாகப்பயன்படுத்தி ஒஸ்ரியாவில் உளவு வளையங்களை அமைத்துக்கொண்டார். அவ் உளவு வளையங்கள் மூலம் ஜேர்மனிக்குப் பயன்படக்கூடிய தகவல்களைச் சேகரித்துக்கொண்டார்.

அவர் ஒஸ்ரியாவின் இராணுவப் பலத்தைப் பற்றிய பூரணமான அறிக்கையொன்றை ஜேர்மனி அரசுக்கு கையளித்தார். அவ் அறிக்கையில் ஜேர்மனியின் துப்பாக்கிகளுக்கு எவ்விதத்திலும் ஈடுகொடுக்கமுடியாத மிகப்பழைய துப்பாக்கிகளையே ஒஸ்ரியா இராணுவம் இன்னமும் பாவிப்பதாகக் குறிப்பிட்டிருந்தார்.

உளவு அறிக்கையைப் பெற்றுக்கொண்ட ஜேர்மனி அரச உயர்மட்டக்குழு ஜேர்மன் இராணுவத்தளபதி “மால்டெடுடன்”ஒஸ்ரியா மீதான தாக்குதல் திட்டம் பற்றி ஆலோசனை நடாத்தியது. அதனை அடுத்து இராணுவத்தளபதி முழு நம்பிக்கையோடு ஒஸ்ரியாவைத் தாக்கினார்.

1866 ஆம் ஆண்டு ஒஸ்ரியா மீதான தாக்குதல் ஆரம்பித்து ஏழு வாரங்களாகப் போர் நடந்தது. இப் போரின்போது ஒஸ்ரியா 40000 போர் வீரர்களைஇழந்ததுடன் ஜேர்மனியிடம் சரண் அடைந்தது. ஆக ஜேர்மனி 9000 போர்வீரர்களை மட்டும் இழந்து வியக்கத்தக்க வெற்றியைப் பெற்றது.

ஜேர்மனியின் வெற்றிக்கு ஸ்ரீபரின் உளவுச்சேவை பெரும் பங்காற்றியுள்ளது.

இரண்டாவது நிகழ்ச்சியாக பிரித்தானியாவில் நிறுவப்பட்டு இருந்த ஜேர்மன் உளவு வளையம் தொடர்பாக அறிவோம்.

1910 ஆம் ஆண்டு எட்வேட் மன்னரின் இறுதி மரண நிகழ்ச்சியில் கலந்துகொள்ளஜேர்மன் அரச முக்கியஸ்தர்கள் அடங்கிய குழுவொன்று பிரித்தானியாவுக்கு வந்து சேர்ந்தது.

ஜேர்மன் அரச முக்கியஸ்தர்களில் ஒருவரான கடற்படைக் கப்டன் கலிடோசியம் வீதியில் அமைந்திருந்த சிகை அலங்கரிப்பு நிலையமொன்றுக்கு அடிக்கடி வந்து போனார்.

ஜேர்மனியர் ஒருவரால் இவ் நிலையம் நடத்தப்பட்டதால் இவ் நிலையம் அந் நாட்டு உளவு அமைப்புடன் சம்பந்தப்பட்டு இருக்கலாம் என்கின்ற சந்தேகம் பிரித்தானிய உளவுஅமைப்பான எம்.ஐ. 5க்கு இருந்தது.

சந்தேகங்களை உறுதி செய்வதற்காக கடற்படைக் கப்டனை எம்.ஐ.5 ஆட்கள் பின்தொடர்ந்து கண்காணித்தார்கள். அவ் நிலையத் துக்கு வரும் கடிதங்கள் யாவும் எம்.ஐ.5 யினரால் பரிசோதனை செய்யப்பட்டு வாசிக்கப்பட்டன.

எம்.ஐ 5 இன் உளவுச் சேவையினரால் சிகை அலங்கரிப்பு நிலையத்தினது மர்மமான நாடகத்தின் திரை நீக்கப்பட்டது. அதாவது ஜேர்மனிய உளவுச்சேவைக்கான செயற்திறன் வாய்ந்த அலுவலகமாகச் செயற்பட்டது நிரூபிக்கப்பட்டது.

ஜேர்மன் உளவுச் சேவையின் உள்நோக்கத்தை எம்.ஐ 5 யினர் அறிந்தும், அங்கு வந்து செல்பவர்களை உடன் கைதுசெய்யவில்லை. மெதுமெதுவாக எல்லா ஜேர்மன் உளவாளிகள் பற்றிய தகவல்களையும் சேகரித்த பிற்பாடு கைதுகளைச் செய்து அதன் உளவு வளையத்தைச் சீருலைத்தார்கள்.

மூன்றாவது நிகழ்ச்சியாக ஜேர்மனியில் மூன்று வருடங்களாக அமெரிக்க உளவாளியாக வெற்றிகரமாக இயங்கிய எரிக்எரிக்ஸனின் உளவுச் சேவையைக் கண்ணோக்குவோம்.

எரிக் எரிக்ஸன் எண்ணெய் வர்த்தகப் பிரமுகராகத் தொழிற்பட்டார். சுவீடன் நாட்டவரான இவருக்கு ஜேர்மனிமீதான வெறுப்புணர்வு மேலோங்கி இருந்தது.

எரிக்ஸன் ஜேர்மனி மீது வெறுப்புக்கொண்டவராக இருந்தனாலும் அந் நாட்டு மொழியை மிகச் சரளமாகப் பேசக்கூடியவராக இருந்தனாலும் இவரை அமெரிக்க இரகசிய சேவையைச் சேர்ந்த “ஸ்ரென்” தனது உளவுச் சேவையில் சேர்த்துக் கொண்டார்.

அவரின் உளவுப்பணியானது ஜேர்மனியின் எண்ணெய் வழங்கல்சம்பந்தமான முக்கிய தகவல்களை சேகரிப்பதாகவே இருந்தது. இப்பணிகளை மேற்கொள்வதற்காக தனது மறைப்பைப் பலப்படுத்திக்கொண்டார். அதாவது “ஹிட்லரின்” புகைப்படங்களைத் தனது அலுவலகங்களிலும் வீட்டிலும் தொங்கவிட்டார். ஜேர்மனியர்களுக்கு சார்பானவராகத் தன்னை அடையாளப்படுத்தி அவர்களுள் ஒருவராகக் கலந்துவாழ்ந்தார்.

ஜேர்மன் எண்ணெயை சுவீடனுக்கு வாங்குவதற்காக எரிக்ஸன் அந்நாட்டின் எல்லாப்பாகங்களிலும் உலாவரத்தொடங்கினார். இச்சந்தர்ப்பங்களைப்பயன்படுத்தி அவர் ஜேர்மனிய எண்ணெய் சுத்திகரிப்பு ஆலைகளைப் பற்றிய நம்பகமான தகவல்களைப் பெறத் தக்கவோர் உளவு வளையத்தை அமைத்துக்கொண்டார்.

அவர் எண்ணெய் சுத்திகரிப்பு ஆலைகள் அமைந்திருந்த இடங்கள், ஆலைகளுக்கு அண்மித்திருக்கும் நில அமைப்புக்கள், விமான எதிர்ப்புப் பீரங்கித் தளங்கள், இராணுவத்தளங்கள் போன்ற தகவல்களைச் சேகரித்து அமெரிக்க இரகசிய சேவையினரிடம் ஒப்படைத்தார்.

அமெரிக்க இரகசிய சேவையினரின் தகவல்களைப்பெற்றுக் கொண்ட நேசநாடுகள் ஜேர்மன் எண்ணெய் சுத்திகரிப்பு ஆலைகள் மீது விமானத்தாக்குதல்களை மிகப் பெரியளவில் தொடுத்தன. இத்தாக்குதல்களால் எண்ணெய் சுத்திகரிப்பு ஆலைகள் பெரும் சேதத்திற்குள்ளாகின.

**— நீலன் —**

சேதத்திற்குள்ளாகிய ஆலைகளின் திருத்தவேலைகளில் ஒரு இலட்சம் ஜேர்மன் படைவீரர்கள் ஈடுபட்டார்கள். ஜேர்மனியின் எல்லா எண்ணெய்வழங்கும் மூலங்களும் சேதமாக்கப்பட்டதனால் பெரும் எண்ணெய்த் தட்டுப்பாடு ஏற்பட்டது.

எண்ணெய் வழங்கும் மூலங்கள் அழிந்ததனால் ஜேர்மனியிடம் புதிய இயந்திரங்களைப் பரிசோதிப்பதற்கும் விமான ஓட்டிகளைப் பயிற்றுவிப்பதற்கும், டிறக்வண்டிகளை, ஜீப்புகளை, டாங்கிகளை ஓட்டுவதற்கும் தேவையான எரிபொருள் இல்லாமல் போனது.

எரிபொருள் இல்லாமல் போனதால் இரண்டாம் உலகயுத் தத்தின் இறுதிக்கட்டம் மிக நெருக்கடிகளுக்குள்ளானது. இதனால் டாங்கிகளையும், பீரங்கிகளையும் சுடு நிலைகளுக்கு கொண்டுவருவதற்கு குதிரைகளும், கோவேறு கழுதைகளும் பயன்படுத்தப்பட்டன. இவ் மோசமான நிலைவரங்களால் 1945 ஆம் ஆண்டு ஜேர்மனி நேசநாடுகளிடம் சரண் அடைந்தது.

ஜேர்மனி நேசநாடுகளிடம் சரண் அடைவதற்கு எரிக்ஸன் பெருமளவில் பங்காற்றியிருந்தார். ஜேர்மனியின் சரண் அடைவு அவரின் உளவு வேலைக்குக் கிடைத்த வெற்றியாக அமைந்தது.

எரிக்ஸனுடைய புகைப்படத்தையும் அவரது வெற்றிகரமான உளவுப்பணிகளைப்பற்றியும் உலகப்பத்திரிகைகள் எல்லாம் செய்திகளாக அப்போது வெளியிட்டிருந்தன.

மேலே கூறப்பட்டுள்ள உண்மையான மூன்று உளவு நிகழ்ச்சிகளையும் மூன்று உளவாளிகளின் உளவு வளையங்களையும் தமிழர் தாயகத்தோடு ஒப்புநோக்கின் சிங்கள உளவுச்சேவையினர் உளவு வளையங்களை அமைக்கமுயலும் உளவு நுட்பங்களை தமிழ் மக்கள் அறிந்துகொள்ள ஏதுவாகும்.

ஜேர்மனிய உளவாளியான அங்காடி வியாபாரி ஸ்ரீபர், பிரித்தானியாவில் நிறுவப்பட்டு இருந்த ஜேர்மனிய சிகை அலங்கரிப்பு நிலைய உரிமையாளர், அமெரிக்க உளவாளியான எண்ணெய் வர்த்தகர் எரிக்ஸன் ஆகியோர் போலவே சிங்கள உளவு நிறுவனத்தின் உளவாளிகள் நாடுபூராகவும் இயங்குகின்றார்கள்.

சிங்கள உளவு நிறுவனத்தின் உளவாளிகள் தமிழர் தாயகப் பகுதிகளில் தேசத்துரோகத்தின் சூழ்நிலையை எப்பாடுபட்டாயினும் உருவாக்கும் உளவு உழைப்பிலே செயற்பட்டுவருகின்றார்கள். இவர்கள் சதிவேலைசெய்யும் மூளையுடனேயே பணியாற்றுகின்றார்கள்.

சுயரூபங்களை மறைத்தபடி சிங்கள உளவுச் சேவையினரது உளவாளிகளாக இயங்குகின்றவர்கள், செயலாற்றுபவர்கள் இனங்காணப்படும்போதே அவர்களின் உளவுச் சேவையைச் செயலிழக்கச் செய்யமுடியும்.

அவ்வாறு சிங்கள உளவு அமைப்பினது உளவு வளையங்களை இனங்காணும் தமிழர்களின் உளவுச்சேவையானது வலுமிக்கதாக இருந்தால்; அது சிங்கள தேசத்தை ஒப்பிட்டுப்பார்க்கும்போது பலத்திலும், எண்ணிக்கையிலும் குறைந்த தமிழர்களின் பலத்தைப் பன்மடங்குகளாக்கும்.

தேசத்துரோகத்தின் சூழ்நிலைக்குச் சிக்குண்டு போகும் தமிழர்கள் இறுதியில் அபகீர்த்தியையும், மரணத்தையும் சந்திப்பவர்களாகவே இருந்தார்கள். ஆதலால் வர்த்தகப் பிரமுகர்கள் தொடக்கம் அங்காடி வியாபாரிகள்வரை நாடுகளெங்கும் உலாவரும் தமிழர்கள் சுயபுத்தியை இழக்கும் நிலைக்கு ஆளாகாது தமிழ் இனத்தைப் பாதுகாக்கும் தமிழ் உணர்வாளர்களாக இருக்கவேண்டும்.

தமிழர்கள், தமிழர்களின் உளவுச் சேவையில் பணியாற்றவும் தமிழீழத் தனியரசை பாதுகாக்கும் உளவு வளையங்களை அமைக்கவும், உயரிய தேசப்பற்றுடன் செயலாளிகளாகும்போதுதான் சிங்கள உளவு வளையங்களை நொருக்க முடியும்.

ஈழநாதம்
வெள்ளிநாதம்
யாழ்சாலை, கிளிநொச்சி. 17 . 09 . 2004
மின் அஞ்சல : weekly @ eezhanatham.com

# நீர் ஊர்ந்து... மெல்லக்கரையும் கல் !!

தமிழ் மக்களின் பிரச்சினைகள் தொடர்பாகச் சிங்கள மக்கள் இன்னும்தான் சரியான வகையில் புரிந்துகொள்ளவில்லை.

தமிழ் மக்களின் அரசியல் பிரச்சினை தொடர்பாக முன்வைக்கும் திட்டங்களை அதிகமான சிங்கள மக்கள் ஒரு 'தீண்டத்தகாத' பொருளாகவே பார்க்கின்றார்கள்.

சிங்கள மக்களின் மனோநிலையைத் தமிழ் மக்கள் புரிந்துகொண்ட அளவுக்கு தமிழ்மக்களின் மனோ நிலையை சிங்கள மக்கள் புரிந்துகொள்ளாததும் இதற்கொரு முக்கிய காரணம்.

இன்னுமொரு வகையில் தமிழ் மக்களுக்கும் சிங்கள மக்களுக்கும் இடையில் நியாயமான புரிந்துணர்வைப் பரஸ்பர அபிலாசைகளை இனம்கண்டு கொள்ளவும் பகிர்ந்துகொள்ளவும் முடியாதவாறு இரண்டு இனங்களுக்குமிடையில் ஒரு பெரிய கருத்து மாயைச் சுவரை இனவாத நோக்கோடும் குறுகிய அரசியல் லாபம் கருதியும் செயற்படும் சிங்கள அரசியல் தலைமைகள் ஏற்படுத்திவைத்திருக்கின்றன.

இதன் விளைவால் ஏற்பட்ட துன்பங்களையும், துயரங்களையும். இடர்களையும் சுமப்பவர்கள் சாதாரண சிங்கள மக்களாகவே இருக்கிறார்கள்.

தமிழ் மக்களின் அரசியல் விடுதலைக்கான தலைமையை சுமந்துவருகின்ற தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கமும், அதன் தலைமையும் சிங்கள மக்கள் தொடர்பான தெளிவான நிலைப்பாட்டைத்தமிழ் மக்கள் மத்தியில் வெற்றிகரமாகக்கொண்டு சென்றேயுள்ளனர்.

தமிழ் மக்களோ, தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கமோ சிங்கள மக்களுக்கு எதிரானவர்களல்ல என்பதையும், தமிழர்களின் நியாயங்களைக் 'கலப்படமற்ற' உண்மையாக சிங்கள மக்கள் மத்தியில் கொண்டு செல்லப்படவேண்டுமென்பதிலும் பேரார்வம் கொண்டே செயற்பட்டுவருகின்றனர்.

ஆனால், இவை யாவற்றிற்கும் அப்பால் சிங்கள மக்கள் மத்தியில் தமிழ் மக்களின் போராட்டத்தையும், அவர்களின் கோரிக்கைகளையும் இனவிரோத மனோபாவனையில் பார்க்கக்கூடியதாக சிங்கள மக்களின் எண்ணக்கருக்களில் நச்சுவிதைகள் விதைக்கப்பட்டுள்ளது.

இதில் முக்கியபங்கை அரசியல் தலைமைகளுக்கு இணையாக தென்னிலங்கையிலிருந்து வெளியாகும் சிங்கள, ஆங்கில நாளிதழ்கள் பெரும் பங்காற்றிவருகின்றன.

சிங்கள மக்களுள் இருக்கக்கூடிய சில நெருடலான பலவீனங்களுக்குள் இனவிரோதப்போக்கான கருத்துக்களையும் வன்முறைப்போக்கான மனவியாபிப்புக்களையும் செலுத்தி போர் நிறைந்த பூமியாக இலங்கையை வைத்திருக்க இந்தச் சக்திகள் விரும்புகின்றன.

உண்மையில் இந்த நிலைமை முற்றாக மாற்றப்படுகிற போது சுமுகமான வாழ்வை நோக்கி இலங்கைத்தீவில் வாழும் மக்கள் எவரும் பயணிக்க முடியும்.

மாறாக யதார்த்தபுரச் சூழல்நிலைகளைப் புரிந்துகொள்ளாமல் செயற்படுகின்றபட்சத்தில் அமைதி என்பது இலங்கைத்தீவில் காணல் நீராகவே இருக்கும்.

அந்தவகையில் தேசிய சமாதானப் பேரவையின் ஏற்பாட்டில் கிளிநொச்சிக்கு விஜயம் செய்திருந்த தென்னிலங்கை ஊடகவியலாளர்கள் இதனைச் சிங்கள மக்கள் மத்தியில் கொண்டு செல்லவேண்டிய வரலாற்றுக்கடமையில் இருக்கிறார்கள்.

கிளிநொச்சிக்கு வருகை தந்திருந்த தென்னிலங்கை ஊடகவியலாளர்களுக்கு தமிழீழ அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் அவர்களும், இங்குள்ள பொதுஅமைப்புக்களும் தெளிவாகவே நிலைமையைத் தெளிவுபடுத்தியிருக்கிறார்கள்.

இதனை எந்தளவு தூரம் சிங்கள மக்கள் மத்தியில் கொண்டுசெல்வதில் அவர்கள் உழைக்கப் போகிறார்கள் என்பது முக்கியமானதே.

நீர் ஊர்ந்து மெல்லக்கரையும் கல்லென சிங்கள மக்கள் மத்தியில் தமிழ் மக்கள் தொடர்பாக உருவாக்கப்பட்டிருக்கும் பொய்யான தோற்றப்பாட்டைக் களைவார்களா?களைவதே சிங்கள மக்களுக்கு அதிக நன்மையை ஏற்படுத்தும்.

# உதவிகளுக்கு பின்னால் பதுங்கியிருக்கும் பயங்கரங்கள்

மக்கள் விவசாயத்தில் இருந்து விடுபட்டு கைத்தொழில் துறைக்குள் இன்று பெருமளவு குடித்தனம் புகுந்துவிட்டனர்.

இதனால் கைத்தொழில் துறையில் ஏற்பட்டுள்ள போட்டியினால், மேலைநாடுகளில் கைத் தொழில்சாலைகளில் இருந்து வெளியேறும் தொழிற்சாலை கழிவுகளால் நிலம், நீர், வளி என்பன மிகவும் மோசமாக பாதிப்பிற்குள்ளாகியுள்ளன. இவ்வாறு பாதிப்பிற்குள்ளானவற்றில் வளிமண்டலம் முதலிடம் வகிக்கின்றது.

வளிமண்டலத்தில் கலந்துள்ள காபனீரொட்சைட், குளோரோ புளோரோகாபன் போன்ற வாயுக்களினால் ஓசோன்படை பாதிக்கப்பட்டுள்ளது; பாதிக்கப்பட்டு வருகின்றது. அதுமாத்திரமன்றி புவியினை பசுமை வீட்டுத்தாக்கத்திற்கு உள்ளாக்கி யுள்ளது. இதன் காரணமாக புவியின் வெப்பநிலை நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே செல்கிறது. அத்துடன் வருடம் மும்மாரி பெய்தமழை இன்று என்றோ ஒருநாள் பெய்கின்றது. சில வருடங்களில் அதுவும் இல்லை. அத்துடன் கடுமையான வரட்சி அல்லது வெள்ளப்பெருக்கு என்பன ஏற்படுகின்றன. 300மில்லியன் ஆண்டு காலமாக நிலவிய இயற்கைச் சமநிலையை புவி இழந்துள்ளது என்பது ஒரு கசப்பான உண்மையே.

இதனை நன்குணர்ந்த மேற்குலக நாடுகள் சூழலின் பாதுகாப்பை விட தங்களுடைய நாட்டின் மேலான்மையை நிலைநிறுத்தும் நோக்கில் விண்ணை நோக்கிய பயணங்களையும், இராணுவ தளபாடப் பயன்பாட்டையும், வாகன பய்ன்பாட்டையும் அதிகரித்துக் கொண்டேசென்றன. இந்நாடுகளின் இவ்வாறான போக்குகளை வளிமண்டல ஆய்வாளர்களின் அபாயக் குரல் திரும்பிப்பார்க்கவைத்தது.

இந்நிலையில் அபிவிருத்தியடைந்த நாடுகள் தங்களுடைய கைத் தொழில்துறையின் வருமானத்தை இழக்கத் தயாராகவில்லை. அத்துடன் தங்களுடைய நாட்டில் விவசாயத்தை சீராகச் செய்யக்கூடிய நிலையில் மண் வளமும், மக்களின் மனமும் இடங்கொடுக்கவில்லை. கைத்தொழில் போட்டிகள் காரணமாக காடுகள் அழிந்து போயின; பெரும்பாலான உயிரினங்களையும், தாவரங்களையும் அந்நாடுகளின் தேசிய பூங்காக்கள் தவிர்ந்த ஏனைய இடங்களில் பார்க்கமுடியாது போனது.

இவ்வாறான நிலையில் தங்களின் கைத்தொழில்துறைக்கு பாதுகாப்புத்தேடவேண்டியநிலை இந்நாடுகளுக்கு ஏற்பட்டது. அதாவது இயற்கைச் சமநிலையைபேண வேண்டிய முக்கியத்துவம் உணரப்பட்டது.

இவ்வாறான நிலையில் யப்பான், அமெரிக்கா, போன்ற நாடுகள் தங்கள் நாடுகளில் காடுகளைப் பாதுகாக்க பெருமளவு நிதியை செலவிட வேண்டி ஏற்பட்டது. நிதி செலவுக்கேற்ப பயன்கிடைக்கவில்லை.

செலவுக்கேற்ற மாற்றுத் திட்டமாக இந்நாடுகளின் கவனம் மூன்றாந்தர அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகள் மீது திரும்பியது. அதாவது இந்நாடுகளின் காடுகளை பாதுகாக்கவும், விவசாயத்துறையை ஊக்குவிக்கவும் கவனம் செலுத்தியது. வறிய நாடுகளுக்கு உதவுதல் எனும் பெயரில் இந்நாடுகள் அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளிற்கு நீண்டகால கடன் அடிப்படையில் உதவிகளை வழங்க முன்வந்து நிதி வழங்குகின்றன.

அதுவும் இந்நாடுகள் தமது நிதியுதவிகள்மூலம் பல நன்மைகளை பெறமுடிகின்றன.

01. இயற்கை சமநிலையை பேணல்.

02.அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகள் கைத்தொழில் துறைக்கு முன்னேறுவதை தடுத்தல்.

03.மூலப்பொருட்களை (உற்பத்தி செய்யப்பட்ட) கொள்வனவு செய்தல் முடிவுப்பொருட்களை விற்பனை செய்தல்.

இவ்வாறு பல தந்திரங்களை இந்நாடுகள் கையாளுகின்றன. இதில் இயற்கை சமநிலையை பேணுவது முக்கியப்படுகின்றது. அதாவது இலங்கை போன்ற நாடுகளுக்கு விவசாயத்துறை அபிவிருத்திக்கு உதவுவதன் மூலம் இந்நாடுகளில் பேணப்படும் பாதுகாப்பான சூழலும் பெருமளவான காடுகளும் அபிவிருத்தி அடைந்த நாடுகளின் கைத் தொழில் துறைக்கு பெரும் பாதுகாப்பாக அமைகிறது. அதாவது இந்நாடுகளை தொடர்ந்தும் விவசாய துறையில் வைத்திருப்பதன்மூலம் புவியின் இயற்கைச் சமநிலையை பேண ஏதுவாகின்றது.

அடுத்து இந்நாடுகள் விவசாயத்துறையில் இருந்து கைத் தொழில்துறைக்கு முன்னேறுவதை தடுத்தலாகும். அதாவது ஒரு நாட்டின் விவசாயத்துறைக்கு உதவுவதன் மூலம் அந்நாடு அத்துறையில் தொடர்ந்து வருமானமீட்டிக்கொண்டிருக்கும். இந்நிலையில் இந்நாடுகள் கைத் தொழில்துறைபற்றி சிந்திக்காது அல்லது சிந்தித்தாலும் பொருளாதாரம் இடங்கொடுக்காது. இதன்மூலம் கைத்தொழில் துறையில் அபிவிருத்தி அடைந்த நாடுகளுக்கிடையேயான போட்டிகள் குறைவடையும். இது அபிவிருத்தி அடைந்த நாடுகளுக்கு சாதகமான நிலையாக இருக்கும். இந்நிலையில் இந்நாடுகளில் உற்பத்தி செய்யப்படும் பல மூலப்பொருட்களை கொள்வனவு செய்துகொண்டு அதன் முடிவுப் பொருட்களை அந்நாடு களுக்கே விற்பனை செய்வதன் மூலம் அபிவிருத்தி அடைந்த நாடுகள் பெரும் இலாபம் ஈட்டுகின்றன. உதாரணமாக இலங்கையின் மூலப்பொருளான இறப்பரை யப்பான் கொள்வனவு செய்து இதன் முடிவுப் பொருட்களை இலங்கைக்கே விற்பனை செய்வதைக் குறிப்பிடலாம்.

> இலங்கை போன்ற நாடுகளுக்கு விவசாயத்துறை அபிவிருத்திக்கு உதவு வதன் மூலம் இந்நாடுகளில் பேணப் படும் பாதுகாப்பான சூழலும் பெருமளவான காடுகளும் அபி விருத்தி அடைந்த நாடுகளின் கைத்தொழில்துறைக்கு பெரும் பாதுகாப்பாக அமைகிறது. அதாவது இந்நாடுகளை தொடர்ந்தும் விவசாய துறையில் வைத்திருப்பதன்மூலம் புவியின் இயற்கை சமநிலையை பேண ஏதுவாகின்றது.

இவ்வாறு பல அபிவிருத்தி அடைந்த நாடுகள் தங்களின் பொருளாதார நலன்களை முன்னுரிமைப்படுத்தி வழங்கப்படும் உதவிகளை பெற்றுக்கொள்ள வறிய நாடுகள் முண்டியடிக்கின்றன. காரணம் அந்நாடுகளின் பொருளாதாரநிலை அப்படியிருக்கின்றது என்றே கூற வேண்டும். அத்துடன் இவை தவிர்க்க முடியாத நிலையும் கூட.

இவ்வாறு நிதியினை பெற்ற நாடுகள் பின்னர் நிதிவழங்கிய நாடுகளின் மேலாதிக்கத்திற்கு உட்பட்டு கடன் மீளளிப்பு எனும் பெயரில் சிறிது சிறிதாக வளங்கள் சுரண்டப்பட்டுக்கொண்டே இருக்கும்.

இவ்வாறு இன்று ஆசியப் பிராந்தியத்தில் அபிவிருத்தி அடைந்த நாடுகளின் உதவிகளை பெறும் நாடாக இலங்கை மாறியுள்ளது. இலங்கையை பொறுத்தவரை நாட்டின் எதிர்காலஅழிவைவிட தமிழின அழிப்பையே முன்நிலைப்படுத்தியுள்ளது. இதன் காரணமாக யுத்த காலத்தில் வாங்கிய கடன்களுக்காக இலங்கையில் தற்போது ஒவ்வொருமனிதனும் வெளிநாடுகளுக்கு கடனாளியாக உள்ளான்.

எனவே வெளிநாடுகளின் "மனிதாபிமான" உதவிகளுக்கு பின்னால் ஒளிந்திருக்கும் பயங்கரங்கள் பலவுண்டு. இதனை அறியாமல் நாம் வெளிநாட்டு உதவிகளைக் கண்டு சந்தோசப் படவும் முடியாது அல்லது அறிந்து கொண்டு கடனை பெறாமல் இருக்கவும் முடியாது.

அபிரகாஷ்

# சர்வதேச நாடுகள்-அரசை திருப்தி்ப்படுத்த முயலுகின்றனவா...?

சிறி.இந்திரகுமார்



அரசு - புலிகளுக்கிடையில் நோர்வே அரசின் அனுசரணையுடன் ஆரம்பிக்கப்பட்ட சமாதான முயற்சிகளின்பின் இலங்கை விவகாரத்தில் சர்வதேச நாடுகளினதும் சர்வதேச அமைப்புகளினதும் கவனமும் ஈர்ப்பும் இலங்கையின்பால் என்றுமில்லாதவாறு திரும்பியிருக்கின்றது.

அதேவேளை அரசு - புலிகளுக்கிடையிலான சமாதான முயற்சிகூட திம்பு பேச்சுவார்த்தையை விட, தோல்வியில் முடிந்த இலங்கை இந்திய ஒப்பந்தத்தைவிட, இரண்டாம்கட்ட ஈழப்போரிற்கு முன்னதான பிரேமதாசா அரசுடன் நடைபெற்ற பேச்சுவார்த்தையைவிட, மூன்றாம்கட்ட ஈழப்போரிற்கு முன்னதான சனாதிபதி சந்திரிகா அரசுடனான பேச்சுவார்த்தையைவிட அதிக ஈர்ப்புடன் கூடிய ஒரு தீர்வுக்கான இடைப்புள்ளிவரை கொண்டு சென்றுள்ளது என்பதை மறுக்கமுடியாது.

இன்று சமாதான முயற்சியானது அதன் பாதையிலிருந்து இடைவிலகி நின்றாலும் அது தோல்வியின் எல்லையை நோக்கி நகரவில்லை என்பதை புரிந்து கொள்ளலாம்.

இதற்கு இம்முறை நடைபெறும் சமாதான முயற்சி தொடர்பில் அரசு கடைப்பிடித்த அனுகுமுறையைவிட புலிகள் இயக்கம் சமாதானமுயற்சி தொடர்பாக கையாண்ட அதன் முதிர்ச்சி மிக காத்திரமான அரசியல் நகர்வே இந்த சமாதான முயற்சி தொடர்பில் இன்றுவரை தொடரும் நம்பிக்கைக்கு வலுவூட்டிவருகிறது.

இந்த சமாதான முயற்சியில் புலிகள் இயக்கத்தை கடந்தகால அனுகுமுறையிலிருந்து மாறி சமாதானமுயற்சியில் நம்பிக்கை கொள்ளவைத்ததும் சமாதான முயற்சியில் பற்றுறுதியோடு செயற்பட வைத்ததற்கும் காரணம் அரசு - புலிகளுக்கிடையிலான சமாதான முயற்சியில் பிராந்திய நலன்களுக்கு அப்பால் மூன்றாந்தரப்பாக செயற்படும் நோர்வே அரசின் பின்னால் மேற்குலக நாடுகள் இருக்கிறது என்ற நம்பிக்கையின் அடிப்படையிலானதாகும்.

இதனை புலிகள் இயக்கத்திற்கும்' தெளிவுபடுத்தும் வகையிலான சில நல்ல சமிக்ஞைகளை, அமெரிக்கா, ஐரோப்பியயூனியன் மற்றும்' ஜப்பான்போன்ற நாடுகள் வெளிப்படுத்தியிருந்த சமிக்ஞைகளும் ஒரு காரணம்.

அதோடு சமாதான முயற்சியின் ஆரம்பத்தில் இலங்கை விவகாரம் தொடர்பில் அக்கறை செலுத்திய இந்த நாடுகள் தமது இராஜதந்திரிகளினூடாகவும் தமது அதிகார மையங்களினூடாகவும் வெளியிட்ட; வெளிப்படுத்திய அறிக்கைகளிலும் கருத்துக்களிலும் ஓரளவு நடு நிலைமையுடன் கூடிய இராஜதந்திர அனுசரணைப்போக்கொன்று இருக்கவே செய்தன.

அவ்வாறான அறிக்கைகளை வெளியிட்ட அமெரிக்கா கூட தனது கரிசனைகளை வெளியிட்டிருந்தாலும் அதில் தமிழ்மக்களை திருப்திப்படுத்துகின்ற, தமிழ்மக்களின் பிரச்சினைகளை புரிந்துகொண்ட அறிக்கைகளாக இருந்ததை அவதானிக்கக்கூடியதாகவே இருந்தது.

அதோடு நோர்வே, ஜப்பான், ஐரோப்பிய யூனியன் போன்ற நாடுகள் பேச்சின் சமபங்காளிகளாக மட்டுமன்றி இலங்கை விவகாரத்தில் சமபங்காளிகளாக கையாளவேண்டிய ஒரு தரப்பாக புலிகள் இயக்கம் இருப்பதை ஏற்றுக்கொண்டு செயற்பட்டுவந்தன.

இந்த நாடுகளின் இந்த முற்போக்கான போக்கே இலங்கை விவகாரத்தில் இந்த நாடுகளால் வெற்றியின் பாதையில் தொடர்ந்து பயணிக்கவும் வழிசமைத்தன.

இன்னுமொரு வகையில் இலங்கை இனப்பிரச்சினையின் பின்னணியில் செயற்பட்ட தீங்குகளின் குகைகளையும் அதன் இயக்குநர்களின் பின்னணிகளையும் இந்தநாடுகள் ஓரளவு புரிந்துகொண்டனவோ என எண்ண வைத்தன.

ஆனால் சமிபகாலமாக இந்த நாடுகளினதும், சில அமைப்புகளினதும் அறிக்கைகளும், இந்த நாடுகள் தனித்து அரசுக்கென கையாளும் அனுகுமுறைகளும் இந்த நாடுகளின் போக்கில் பாரிய சந்தேகங்களை தோற்றுவித்துள்ளன.

புலிகள் இயக்கம் வெளிப்படுத்திய; வெளிப்படுத்துகின்ற எல்லா நல்ல சமிக்ஞைகளையும் கவனத்தில் எடுக்காத இந்த நாடுகள் தமது அரசுகளின் நலன்சார்ந்த விடயங்களுக்காக இலங்கை அரசைத் திருப்திப்படுத்துகின்ற முயற்சியாகவும் அறிக்கைகளை விடுவதும், கருத்துக்களைத் தெரிவிப்பதிலும் குறியாக இருக்கிறது.

இந்த நாடுகளின் இந்த அண்மைய போக்குகளானது சமாதான முயற்சியின் சமபங்காளிகளாக செயற்படுகின்ற புலிகள் இயக்கத்தை புறக்கணிப்பதாக மட்டுமின்றி, நீண்ட கொடிய பலதுயரங்களுக்குள்ளிருந்து பேச்சு மூலமாக பிரச்சினைகளுக்கு தீர்வு காணலாம் என கருதும் தமிழ்மக்களின் அபிலாசைகளை புறந்தள்ளுவதாகவே நோக்க வேண்டியுள்ளது.

இந்த நாடுகளின் அறிக்கைகளும், இந்த நாடுகளின் இராஜதந்திரிகள் விடுக்கும் கருத்துக்களிலும் ஒரு நடுநிலைமையும், உண்மைத்தன்மைகளும் இருக்கவேண்டும். அதோடு, அவை ஊகங்களுக்கு அப்பாலான இலங்கைப் பிரச்சினையில் கரிசனையின் பாலானதாக அமைதல் வேண்டும்.

இதை, இத்தனை தூரம் அழுத்தித் தெரிவிப்பதற்கு காரணம் அண்மையில் ஐரோப்பிய யூனியன் விடுத்த அறிக்கையும், இலங்கைக்கு அண்மையில் விஜயம்செய்த அமெரிக்க அரசின் இராஜாங்கத் திணைக்களத்தின் பயங்கரவாத எதிர்ப்பு ஒருங்கிணைப்பாளரும், தூதுவர் அந்தஸ்துடன் கூடிய வருமான கொபர் பிளாக் ஊகத்தின் அடிப்படையில் வெளியிட்ட சில கருத்துக்களுமேயாகும்.

இலங்கையில் நடைபெறும் தீங்கான நிகழ்வுகள் அனைத்திற்கும் விடுதலைப் புலிகளே மூலக்காரணம் என தெரிவித்திருந்தார்.

அமெரிக்க பிரதிநிதி கொபர் பிளாக்கின் இந்த கூற்றானது வன்மையகாக் கண்டிக்கப்படவேண்டியதும் ஏற்றுக்கொள்ளமுடியாததுமான கூற்றாகும்.

அத்தோடு இலங்கை அரசின் இன்றைய தீங்கான நிகழ்வுகளுக்கு அப்பால் இலங்கை சுதந்திரத்தை பிரிட்டிசாரிடமிருந்து அரச அதிகார மையத்தை சிங்கள மேலான்மை அதிகார வாதிகள் பெற்றுக்கொண்டதிலிருந்து ஒவ்வொருகாலத்துக்கு காலமும் இழைத்து வந்த தீங்கான நிகழ்வுகளை புரிந்து கொள்ளாத அறியாமையின் விளைவின் பாற்பட்டதே.

தமிழ்மக்களின் நிலங்களை திட்டமிட்ட சிங்கள குடியேற்றங்களினாலும், தமிழ்மக்களின் சொத்துக்களையும், உரிமைகளையும், சட்ட வாக்கங்கள்மூலமாகவும் இதற்கு அப்பால் பாரிய வன்முறைகளாக 1977இலும் 1983இலும் என அதற்கு முன்னரும் பின்னரும் மேற்கொண்ட கொலை வன்முறைப்பரவலை புரிந்து கொள்ளாததன் விளைவாகவுமே இருக்கிறது.

அன்று தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளையோ, தமிழ் மக்களின் ஈர்ப்பபைப்பெற்ற பின்னர் இழைக்கப்பட்ட அநீதிகளையோ இவர்கள் புரிந்து கொள்ளவுமில்லை அவை தொடர்பில் சுட்டிக்காட்ட துணியவும் இல்லை.

இத்தகையதொரு நடுநிலைமை தவறிய அவதானிப்பின் மத்தியிலிருந்துகொண்டு ஆதாரங்கள் எதுவுமற்ற அநுமானங்களை புலிகளுக்கு எதிராக விடுவது இந்த அரசுகள் மீதான தமிழ்மக்களின் கோபங்களையே தூண்டும்.


தமிழ்மக்களுக்கு எதிராக கொடுமையைப்புரிந்த சிங்கள இனவாதிகள் பிரச்சினையை தீர்ப்பதற்கான 'விளக்காக' இருக்கமுயலும் நோர்வே போன்றநாடுகளின் கொடிகளை எரித்தும் ஊர்வலங்களை நடாத்தியும் தமது எதிர்ப்பை வெளிப்படுத்துகிறார்கள் என்றால்,

தமிழ்மக்கள், இந்த நாடுகளும் சில அமைப்புகளும் விடுக்கும் அறிக்கைகள் தொடர்பாகவும், கருத்துக்கள் தொடர்பாகவும் எத்தனை தடவைபோராட்டங்களை நடாத்தவேண்டியிருக்கும்.

இப்பொழுது பொறுமையுடன் கூடிய பெறுமதியான ஒரு முயற்சியாகவே சமாதான முயற்சிகள் தொடர்கிறது.

இதில் இந்த நாடுகளினதும் அமைப்புகளினதும் அறிக்கைகளும் கருத்துக்களும் நடு நிலைமையோடு இருக்க வேண்டியது அவசியமானதாகும். பொறுப்பற்ற விதத்தில் அறிக்கைகளையும், கருத்துக்களையும் தெரிவிப்பதானது தமிழ் மக்களுக்கு இருக்கும் சில உரிமைகளின் அடிப்படையில் தட்டிக்கேட்கவேண்டியதை உணாத்துகிறது.சமாதான முயற்சி நடைபெற்றுக் கொண்டிருந்தபோதே தீங்கான நிகழ்வுளை அரங்கேற்றிய பெருமை அரசையே சாரும்.

இதனை தமிழ் மக்கள் மத்தியில் இருக்கும் வெகுசன அமைப்புக்கள் வெளிக்கொணர மேற்கொள்ள வேண்டிய தேவைகளையே வலியுறுத்தகின்றது.



## நாற்றிசை நட்பு

# விஸ்தரிப்பு வாதத்துக்கான ஆயுதமே நாடுகள் மீதான பொருளாதாரத்தடை விதிப்பு

அமெரிக்காவின் ஆதிக்க விஸ்தரிப்பு கொள்கை நெருக்கடிகளை கடந்தும் தொடர்ந்த வண்ணமே உள்ளது. ஈராக்கில் அமெரிக்கா எதிர்கொள்ளும் பகைமைக்கு அப்பால் இன்னும் பல நாடுகள் மீது பொருளாதாரத் தடையை விதித்துள்ளது. இது அமெரிக்கா விதித்துள்ள பொருளாதாரத்தடை என்று விட்டு விடலாம் என்பதல்ல. அத்தகைய பொருளாதாரத் தடைக்குட்பட்ட நாடுகளும் பொருளாதார தடையை விதித்த நாடும் வேறுவேறுபட்ட கண்டத்தையும் கொள்கையையும் கொண்டிருப்பதாக உள்ளன. இதுவே கடந்த பல நூற்றாண்டுகளாக நிகழ்ந்து வரும் அரசியலாக உள்ளது. அமெரிக்கா தடையை ஆரம்பித்து பின்னர் தனது கொள்கைகளை அதனை அமுல் படுத்தும் நட




வடிக்கையில் ஈடுபடுகின்ற போக்கே காணப்படுகிறது. அமெரிக்க வல்லரசுக்கு ஆபத்து ஏற்பட்டாலும் மீண்டுமொரு மேற்கு சக்தியே வல்லரசாகும்; அல்லது வல்லரசு போட்டி நாடாக இருக்கும். இந்த வன்முறையை மேற்கு நாடுகள் ஒரு போதும் கைவிடுவதில்லை.

### பிரெசல்ஸ் மாநாடு

நேட்டோ நாடுகள் பிரெசல்ஸ் சந்தித்து பயங்கரவாதத்தை முறியடிப்பது பற்றி உரையாடிக் கொண்டிருக்கின்றன. இம் மாநாட்டின் பிரதான விடயமான பயங்கரவாதம் நேட்டோ தலைமை நாடான அமெரிக்காவின் உந்துதலுக்குட்பட்டதொன்றாகவே காணப்படுகின்றது. அமெரிக்கா உலகத்தில் பயங்கரவாதத்தை முறியடிக்கின்ற போர்வையிலும்ஆயுத தளபாட ஆபத்தான நிலையிலும் உலகத்தை மீட்டெடுக்க முயன்ற ஈராக்கில் எதிர்கொள்ளும் நெருக்கடியை சமாளிக்க உலக நாடுகளையே நம்புகின்றது. இதில் நேட்டோ நாடுகளின் பங்கு மிக காத்திரமானதாக இருக்கின்றது. அத்தகைய நேட்டோ அமைப்பில் புதிதாக இடம் பெறும் கிழக்கு ஐரோப்பிய நாடுகளையும் சோவியத்குடியரசுகளையும் மிகத் தீவிரமாக ஒன்றிணைத்து பயங்கரவாதத்திற்கு எதிராக செயற்படுகின்றனவோ இல்லையோ ரஷ்சியாவின் பலத்தை உடைக்க உதவினாலே போதுமென அமெரிக்கா கருதுகின்றது. அந்த வகையிலும் பயங்கரவாத முறியடிப்பு வகையிலும் பிரெசல்ஸ் மாநாடு தனித்துவமானதாக விளங்குகின்றது.

இம் மாநாட்டில் நிகழ்ந்த ஏகப்பட்ட விடயங்களில் இரண்டு அம்சங்கள் அமெரிக்காவின் போக்கை கோடிட்டு காட்டும் விடயங்களாக அமைந்தன.

ஒன்று ரஷ்சிய வரலாற்றில் ஏற்பட்ட பயங்கரவாத நடவடிக்கையாக கருதப்படும் பாடசாலைச் சிறார்களை பணயக்கைதிகளாக வைத்திருந்தவிடயம். இதனை தூண்டிய சக்திகள் மறைந்திருந்தாலும் அவ்வப்போது வெளிவராமல் அவை விடுவதில்லை. அவ்வாறே நேட்டோ ரஷ்சிய இணைப்புக்குழு (NATO-Russia Joint Commssion) சந்திப்பிலும் விளாடிமிர் புட்டி



னுடானான சந்திப்பிலும் பயங்கரவாதம் தொடர்பான வேலைத் திட்டத்தில் ரஷ்சியாவை இணைத்து பணியாற்ற திட்டமிட்டது. இவ் விணைப்பு செயல்பாட்டில் கலந்து கொண்ட ரஷ்சிய சனாதிபதி தனது அமைச்சுக்களுடனான சந்திப்பில் ரஷ்சிய அதிகாரக் கட்டமைப்பை மேலும் வலுப்படுத்தும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளார். புட்டின் முன்னாள் கே.ஜி.பி யை சேர்ந்தவர் என்ற வகையில் நேட்டோ நாடுகளின் அசைவுகளை புரியாதவர் அல்ல என்பதை நிர்வாக அதிகார கட்டமைப்பை வலுப்படுத்தியதன் வாயிலாக உணர்த்தியுள்ளார். எனவே நேட்டோ அமைப்பு நாடுகள் ரஷ்சியாவை ஒரு இணைப்புகரமாக மட்டுமே நினைக்கின்றனவே அன்றி இணைப்பின் மையமாகக் கருதவில்லை.

**ஐங்கரன்**

இரண்டாவது விடயம் நேட்டோ மாநாட்டில் கலந்துகொண்ட பிரித்தானிய அரசின் பிரதிநிதியின் ஆதங்கமும் அதிர்ச்சியும் ஈரானைப் பற்றியிருந்ததாக இருந்தது. ஈரான் அணுவாயுதத்தை தயாரிக்கும் யுரேனியத்தை அண்மையில் அதிகமாக கொள்வனவு செய்துவருவதாகவும் மிக அண்மையில் அணுவாயுத பரிசோதனையை செய்ய தயாராகி வருவதை தம்மால் உணர முடிந்ததெனவும் கூறியிருந்தார். இது பெரும் பரபரப்பை நேட்டோ நாடுகளுக்குள் ஏற்படுத்தினாலும் முழு உலகத்திலும் ஏற்படவேண்டும் என்ற நோக்குடனேயே பிரித்தானியா நடந்து கொண்டது. மன்னனின் கௌரவத்தை பறைசாற்றும் பிரித்தானிய ஆட்சியாளர்கள் தற்போது அமெரிக்காவின் கருத்துக்களை பரப்பும் ஏவலாளர்களாகவும், தூதுவர்களாகவும் நடந்துகொள்கின்ற அசிங்கமான அரசியலையே பரித்தானியாவில் காண முடிகின்றது. எனவே அமெரிக்க ஆட்சியாளரின் ஆதிக்க அ[illegible] மேலும் விரிவடைந்தே செ[illegible]ன்றது.

### காஸா குடியிருப்பு

அமெரிக்கரின் அடிவருடிகளான இஸ்ரேலியர்களின் ஆதிக்கம் காஸா குடியிருப்புக்களை மையப்படுத்தியுள்ளது. காஸா- ஜெரிக்கோ உடன்பாட்டின் படி 1995 ஆம் ஆண்டின் இறுதிப்பகுதியே யூதக் குடியிருப்புகளை அகற்றி பாலஸ்தீன குடியிருப்பு நிறுவுவதென நிர்ணயமான இறுதித்திகதியாக வரையப்பட்டது. ஏறக்குறைய ஒன்பது வருடங்களை வெற்றிகரமாக நிறைவேற்றியும் அவ் வுடன்பாட்டின் அம்சங்கள் நிறைவு பெறாமல் உள்ளன. இது யூத ஆட்சியாளரின் அமெரிக்கபலமும் தந்திரமுமாகும்.


தற்போது கூட காஸா குடியிருப்புக்களை அகற்றுகின்ற முடிவுடன் செயல்படுவதாக காட்டிக் கொள்ளும் ஏரியல் ஷரோன் அதற்கு மாறாக ஹமாஸ் இயக்கத்தை அழிக்கும் வேலையும் தீவிரப்படுத்தியுள்ளது. அமைச்சரவை முடிவுகளின் போதும் பத்திரிகை மாநாடுகளிலும் ஷரோன் திரும்பத் திரும்ப காஸா குடியிருப்பு பகுதியிலிருந்து யூதப் படைகளும் குடியிருப்புக்களும் அகற்றப்படுமெனக் கூறுகின்றார். ஆனால் அது அமுலாகும் காலத்தைப் பின்போடுவதுடன் அப்பகுதியை நோக்கி ஏவுகணைகளும் டாங்கிகளும் விமானத்தாக்குதல்களுமே தொடர்ந்தவண்ணமுள்ளன. அண்மையில் ஹமாஸின் பயிற்சி முகாம் மீது இஸ்ரேல் நடாத்திய தாக்குதலில் 14 போராளிகள் கொல்லப்பட்டதுடன் நூற்றுக்கணக்கில் பொதுமக்கள் காயமடைந்துள்ளனர். இதனால் காஸாப்பகுதியிலுள்ள யூதக் குடியிருப்புக்கள் மீது ஹமாஸ் தீவிரவாதிகள் தாக்குதலை மேற்கொள்ளலாமெனவும் இதுதொடரான வன்முறையாகவே மாறும் விடயமெனவும் கூறப்படுகின்றது. இதனால் 2005 ஆம் ஆண்டு இறுதிக்கால அட்டவணையும் பாதிப்புக்குள்ளாகலாமென அச்சம் நிலவுகின்றது. ஆனால் ஷரோனைப் பொறுத்தவரை காஸா பலஸ்தீனரிடம் ஒப்படைக்கப்பட்டாலும் வெறுமனமே ஒரு பயன்பாடற்ற பிரதேசமாக மாற்றுவதுடன் ஹமாஸின் இராணுவரீதியான மற்றும் யூதர்மீதான தற்கொலைத்தாக்குதல்களை கட்டுப்படுத்தும் நோக்குடனேயே மேற்கொள்ளப்படுவதாக அமையும் அத்தகைய உத்தரவாதம் கிடைத்தபின்பே காஸாவை யூதர்கள் கைவிடலாம். காஸா இஸ்ரேலின் பாதுகாப்பு பொறுத்து மிகப்பிரதான பகுதியில் அமைந்திருக்கின்றதென்பதையும் கருத்தில்கொள்ளுதல் வேண்டும். எதுவாயினும் இஸ்ரேல் மீதான ஆயுதப் போராட்டத்தினை முறியடிப்பதே ஷரோனின் பிரதான திட்டமிடலாகும்.

### அவுஸ்திரேலியரின் பங்கு

ஐரோப்பிய இனப்பரம்பலில் மிகப் பிந்திய வடிவமாக விளங்கும் அவுஸ்திரேலியர் உலக அரசியலில் எத்தகைய பங்கை வகிக்கிறார்கள் என்பது புதிய சர்ச்சையாக பேசப்படுகின்றது. குறிப்பாக பாலித்தீவு, கிழக்கு திமோர் மற்றும் இந்தோனேஷிய விவகாரங் களை மையப்படுத்தி அவுஸ்திரே லியர் அதிகமாக பேசப்படும் நாடாக விளங்குவது போன்று ஈராக் மற்றும் தீவிரவாதத்துக்கு எதிரான நடவடிக்கைகளிலும் முக்கியம் வகிக்கும் நாடாக உள்ளது.

இவை யாவற்றுக்கும் அப்பால் தனிக்கண்டமாகவும் தீவகவும் விளங்கும் அவுஸ்திரேலியா பொருளாதார, இராணுவபலத்தை பெறுமாயின் உலக அரசியலில் அதிகமான செல்வாக்கை செலுத்துமென சில வரலாற்று அறிஞர்களும் குறிப்பிடத் தவறவில்லை. ஆனால் அவுஸ்திரேலியர்கள் அமெரிக்க அரசியல் ஆதிக்கத்துக்கு முண்டு கொடுக்கும் ஒரு சக்தியே அன்றி வேறு பாரிய பலத்தைக் கொண்ட அரசு அல்ல எப்படி பிரித்தானியர் தற்போதைய காலத்தில் செயல்படுகின்றனரோ அவ்வாறான ஒரு உந்துதலை அளிக்கும் சக்தியாகவே அவுஸ்திரேலியர் காணப்படுகின்றனர். ஆனால் அவுஸ்திரேலிய அரசாங்கம் மேற்கொள்ளும் நடவடிக்கைகள் ஒன்றுக்கொன்று அமெரிக்காவின் ஆக்கிரமிப்பு நடவடிக்கைக்கு ஒத்துழைப்பு வழங்குவதாக உள்ளது. இதனாலேயே இஸ்லாமியத் தீவிரவாதம் அவுஸ்திரேலியா மீது அதிக அழுத்தத்தை ஏற்படுத்தி வருகின்றது. உலகம் எங்கும் அமெரிக்கர் எப்படியோ அப்படியே அவுஸ்திரேலியரும் தீவிரவாதத்தால் மதிப்பிடப்படுகின்றது. இதற்கு மிக வாய்ப்பான பகுதியாக இந்தோனேஷியா காணப்படுவதும் அதன் மீது அடிக்கடி தாக்குதல் நிகழ்த்தப்படுவதும் வழமையான விடயமாக மாறிவருகிறது. ஆரம்பத்தில் இந்தோனேஷிய சனாதிபதி மேற்கின் எதிரியாக பார்க்கப்பட்டதனாலும் பிராந்திய சூழலாலும் கிழக்கு திமோரை அமெரிக்கர் பிரித்ததன் வாயிலாக தனது செல்வாக்குக்குள் இந்தோனேசியாவை கொண்டு வந்தனர். தற்போது தீவரவாதம் இந்தோனேசியாவை தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதற்கு பாரிய தற்கொலைக் குண்டுத் தாக்குதல்களை நிகழ்த்திவருகின்றன.

எனவே மேற்குக்கு கட்டுப்படும் இஸ்லாமிய நாடுகளுக்கு இந்தோனேஷியாவின் அனுபவம் தனித்துவமானது. இதனால் தீவிரவாதம் வெற்றிபெறாதுவிட்டாலும் மேற்கு வெற்றிபெற முடியாத நிலைக்குள் தீவிரவாதம் தள்ளுவதையே நோக்கமாக கொண்டிருக்கிறது. இத்தகைய ஆபத்தான அரசியல் முழு ஆசிய, ஆபிரிக்க, இலத்தீனமரிக்க நாடுகளுக்கும் பொதுவான காரணியாகும்.



### அனுவாயுத வடகொரியா?

வடகொரியா அணுவாயுதப் பரிசோதனையை முடித்துவிட்டதாக அமெரிக்கா அடங்கிய மேற்குலகம் கருதுகிறது. அமெரிக்கா அவ்வாறு கருதுவதற்கு அது கூறும் காரணம் வேடிக்கையானதாக இருந்தாலும் அதுவே வடகொரியாவின் நிலையுமாகும். சீனாவின் பிரதேசத்தை அண்டிய வடகொரியப்பகுதியில் பாரிய குண்டுவெடிப்புசத்தம் ஒன்று பதிவாகியிருப்பதாக அமெரிக்கா கூறுகின்றது. அதன் அதிர்வையும் வெளிக்கிழம்பிய புகைப்படிமத்தையும் கொண்டு அத்தகைய முடிவுக்கு வரவாய்ப்புண்டு என பிரித்தானிய அரசாங்கமும் அறிவித்துள்ளது. எனவே அமெரிக்காவைப் பொறுத்தவரை புதிய அணுவாயுத நாடாக வடகொரியா மாறிவிட்டதென்பதே அதன் முடிவாகும்.

ஆனால் யதார்தமான நிலைமை எந்த நாட்டுக்குமே தெளிவாக தெரியாது. இப்பகுதி எழுதும் வரை அது தொடர்பான பூரணமான தகவல் வெளிவரவில்லை. இருந்த போதும் வடகொரியா அணுவாயுத பரிசோதனையை நிறைவேற்றும் தறுவாயிலிருந்ததென்பதும் அண்மைக்கால பேச்சுக்களின்போது அதனை உணரமுடிந்ததென்பதையும் விளங்கிக்கொள்ளுதல் அவசியம். அணுவாயுத அரசாக வடகொரியா மாறுவதில் சங்கடங்களுக்கப்பால் சீனாவுக்கு இலாபகரமானதொன்றாகும். வடகொரியா சீனாவுக்கு அண்மையிலுள்ள நாடுமட்டுமல்ல சோசலிச சித்தாந்தத்தை சீனாவின் உதவியுடன் வளர்த்துக்கொண்ட நாடாகவுள்ளது. அத்துடன் சீனாவின் ஒத்துழைப்புடன் செயற்படும் வடகொரியா அமெரிக்காவின் சதிப் பொறிக்குள் வீழ்ந்துவிடக் கூடாதென்பதில் அதிக சிரத்தையுடைய நாடாக சீனா விளங்குகின்றது. சீனாவின் அமெரிக்க எதிர்ப்பை வடகொரியாவின் அணுவாயுத ஆற்றலும் சாதிக்குமென்ற நம்பிக்கை சீனாவுக்கு உண்டு. எனவே சீனாவுக்கு மட்டுமே வட கொரியாவின் அணுவாயுதப் பரிசோதனையின் அனைத்தும் புலப்படும். ஜப்பான், தென்கொரியாக் களை இராணுவ அணுவாயுத ஆற்றலில் வளர்த்து வரும் மேற்கு லகம் தமக்கே தனித்து




வமாக்கியுள்ள அணுவாயுதத்தை வடகொரியா பெறுவது கொரியக குடாவுக்குள் அமைதியும், சமாதானமும் ஏற்படுவதுடன் யுத்தப்பீதி நீங்கிவிடும். இது அமெரிக்க ஆதிக்க விஸ்தரிப்பு பெரும் பின்னடைவாக விளங்குமென விமர்ச ணங்கள் முன்வைக்கப்படும். இதனால் முழு ஆசியாவிலும் அணுவாயுத பரிமாணம் விரிவடைவதோடு மனித பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் நிகழ வாய்ப்புண்டு. இதனை முறியடிக்கவே அமெரிக்கா பொருளாதார தடையை வடகொரியா மீதும் சீனாவின் இன்னோர் நட்புச்சக்தியான மியான்மார் மீதும் பொருளாதாரதடையை விதிப்பதுடன் கியூபாவையும் அதில் இணைத்துள்ளது.

அமெரிக்காவின் ஆதிக்க அரசியல் விஸ்தரிப்பு தொடர்வதுடன் அதன் அடாவடித்தனம் அதிகரிக்கின்றது. முழு பின்தங்கிய நாடுகளையும் அடிமையாக பேணுவதே அமெரிக்காவின் இலக்காக உள்ளது. அந்த நாட்டு மக்களை சுதேச உணர்விலிருந்தும், அதன் பலத்திலிருந்து விடுபடச் செய்து அடிமைகளாக்கவே தடைகளை விதிப்பதும் இராணுவ ஆக்கிரமிப்புக்களை மேற்கொள்ளு வதாகவுமுள்ளது அமெரிக்கா. அமெரிக்காவின் அடாவடித்தனத்தையும், அடிமைப்படுத்தும் செயலையும் தகர்க்க முழு ஆசிய ஆபிரிக்க இலத்தீனமரிக்க அரசியல் தலைமைகளும் ஒன்றுதிரள வேண்டும். அரசியல் விழிப்புணர்வை ஆட்சியாளரும், மக்களும் எப்போதும் அமெரிக்காவுக்கும் அதன் மேற்க்குக்கும் எதிராக பிரயோகிக்கின்றார்களோ அன்றே கீழைத் தேசத்திற்கு விடுதலையாகும்.

# சேது சமுத்திரக்கால்வாய்த்திட்டம்

# பயனடையப்போகும் பணமுதலைகள்




''சிங்களத்தீவினுக்கோர் பாலம் அமைப்போம், சேதுவை மேடுறுத்தி வீதி சமைப்போம்!'' என்று நூறு ஆண்டுகளுக்கு முன்னதாகவே, இரு நாடுகளுக்கு மிடையேயான உறவை வலுப்படுத்தவேண்டும் என்ற உணர்வாவேசத்தில் பாரதியால் பாடப்பட்டது. 'இலங்கை சிங்களத்தீவு அல்ல' என்பதற்கு அப்பால் (இலங்கைத்தீவின் தென்பகுதி வாழ் மக்கள் 'சினைப் பெயராக' மிகைப்படுத்தப்பட்டுக்கூறப்பட்டிருக்கலாம்) 'சேதுவை மேடுறுத்தி வீதி அமைக்கவே அந்த யுகக் கவிஞன் ஆசைப்பட்டானே தவிர, ஆழவே கிண்டி அகலச்சிதைப்பதற்கல்ல! இரு நாட்டு மக்களிடையேயான உறவை வலுப்படுத்தவே பாலம் சமைக்க ஆசைப்பட்டான். ஆனால், இப்போது முடுக்கிவிடப்பட்டுள்ள 'சேது கால்வாய்த்திட்டம்' இந்தியாவிலுள்ள குறிப்பிட்ட சில பாரிய நிறுவனங்களில் பொருளாதாரப் பேராசையை கண்மூடித்தனமாக பின்பற்றுவதாகவே உள்ளது. தென்மேற்கு மற்றும் மேற்கிந்தியத் துறைமுகங்களிலிருந்து பொருட்களை ஏற்றிச்செல்லும் பாரியகப்பல்கள் தற்போது இலங்கைத்தீவைச் சுற்றியே பயணிக்கவேண்டியுள்ளன. ஆனால் இந்த 'சேது கால்வாய்த் திட்டம்' பூர்த்தியாகும் போது மேற்குறித்த கப்பல்கள் யாவும் பாக்கு நீரினைக்கு ஊடாகவே தம் பயணத்தை மேற்கொள்ள கூடியதாக இருக்கும் இதன் மூலம் சுமார் 36 மணித்தியாலங்களை குறித்த நிறுவனங்கள் மிச்சப்படுத்திக் கொள்ளலாம்.

இந்தத் திட்டத்திற்கான செலவு தொகையாகிய 5000 கோடி (ஐயாயிரம் கோடி ரூபா' எங்கேயோ கேள்விப்பட்ட தொகையாக இருக்கின்றதா? ஆமாம், 2000 ஆம் ஆண்டில் சிறிலங்காப்பாதுகாப்புத் துறைக்கென ஒதுக்கப்பட்ட அதேயளவு தொகைதான்!) ரூபாவிலே 1/3 பங்கு மத்திய அரசினாலும், மிகுதி 2/3 பங்குத்தொகை கடன் பத்திரங்கள் மூலமும் பெறப்படவுள்ளன. இத் திட்டத்தினால் இலாபம் அடையப்போகும் நிறுவனங்களின் முகவரிகள், இந்தக்கடன் பத்திரங்களிலே முகமூடி போட்டவாறு காத்திருக்கும் என்பது ஊகித்து அறியக்கூடியதே!

ஆமாம்! அப்படி இந்தத் திட்டத்திற்காக என்னதான் செய்யப்போகிறார்கள்? மன்னார்க்குடாப்பகுதி உட்பட பாக்கு நீரினை ஆழம் குறைந்த கடலைக் கொண்டது. இதன் காரணமாக பெரிய கப்பல்கள் இதனூடாக பயணம் செய்யமுடியாது. 1983 யூலைக் கலவரத்தை அடுத்து கொழும்பில் வாழ்ந்து வந்த தமிழ்மக்களை குடாநாட்டிற்குக் கொண்டு செல்வதற்காக 'சிதம்பரம்' என்ற பயணிகள் கப்பல் இலங்கைத்தீவை தெற்கு-கிழக்காகவே சுற்றிவர வேண்டியிருந்ததை நீங்கள் அறிந்திருப்பீர்கள். இது தவிர தமிழர்களுக்கோ, சிங்களவர்களுக்கோ தற்போதைய யதார்த்த சூழ்நிலைகளின்படி சேது கால்வாய்திட்டம் எந்த விதத்திலும் பயனளிக்கப்போவதில்லை. சிறிலங்கா தனது தென்பகுதி துறைமுகங்களையும், தமிழீழம் தனது கிழக்குக்கரையோரத் துறைமுகங்களையும் தமது பன்னாட்டுத் தொடர்புகளுக்காகப் பயன்படுத்திக்கொள்ளலாம். ஆக இந்தக் கால்வாய்திட்டத்தினால் இந்தியா போன்றதொரு பெரிய நாடு தனது பொருள் நகர்த்தல்களுக்காக கடல்வழியை இலகுவாக பயன்படுத்தக்கூடிய வாய்ப்பு எட்டப்படுகின்றது என்ற ஒரு அனுகூலமே 5000 கோடி ரூபா முதலீட்டிற்குக் காரணமாகிறது.

சரி சரி! பக்கத்து நாடுதானே, எங்கேயாவது பயன்படுத்திப்பிழைக்கட்டுமே! என்று எண்ணிக்கொண்டு பாரா முகத்தோடு நாம் இருந்துவிடக் கூடிய விடயமாஇது? இலங்கையையும் இந்தியாவையும் பிரிக்கும் கடற்பகுதியிலே கப்பல்களுக்கு வசதியாக 300 மீற்றர் அகலத்திற்கு (12.8M) 12.8 மீற்றர் ஆழம்வரை கடலடிக் கால்வாய் ஒன்றை அமைத்துக் கொள்ளப் போகிறது இந்தியா. அதாவது பல கிலோமீற்றர் நீளத்திற்கு 3840 சதுரமீற்றர் (300மீx12.8.மீ) பரப்பளவைக் கொண்ட கால்வாய் நகர்த்தப்பட உள்ளது. இதன்மூலம் முத்து மற்றும் பவளப் பாறையினாலான கடலடித் திட்டுகள் சிதைக்கப்பட்டு, இயற்கை சமநிலை தூரநோக்கின்றி அழிக்கப்படப் போகிறது. இதனால் ஏற்கனவே நீர்ப்பற்றாக்குறையினால் பாதிக்கப் பட்டுள்ள தமிழீழத்தின் வடபகுதி உட்பட தென்னிந்தியக் கரையோரப் பிரதேசங்களும் கடுமையான விளைவுகளைச் சந்திக்க நேரிடும். நிலத்தடி நீர் ஊற்றுக்களுள் உப்புநீர் உட்புகுவதோடு, கண்டமேடைகளும் மீன்பிடிவாய்ப்புகளும் பாதிப்புக்குள்ளாக்கப்படும். இயற்கை அன்னை என்பவள் எல்லாவற்றையும் பொறுமையோடு தாங்கிக்கொள்பவள் அல்லள். பூமிப்பந்து என்னதான் கோளவடிவாக இருந்தாலும் அதன் மேற்பரப்பு ஒன்றையொன்று முட்டி மோதும். 07 தனித்தனியான நகரும் கண்டத்திட்டுக்களால் ஆனது Tectonic என்ற துறையின் பேரில் இந்தக்கண்டத்திட்டுகளின் அசைவுகள்பற்றி ஆராயப்பட்டு வருகின்றது. இப்போது சொல்லுங்கள்! குறிப்பிட்ட இரு கரைகளிலும் வாழும் மக்களின் கருத்துக்கள் அறியப்படாது. வெறுமனே சில பணமுதலைகளின் ஆதாயத்திற்காக 140 கி.மீ நீளமான பாக்கு நீரிணையில் 'கைவைப்பது' என்பது, நாம் கொஞ்சம் கூடுதலான கவனமெடுக்கவேண்டிய விடயம் அல்லவா!

'யுத்தத்தினால் முடங்கிக் கிடந்த சிறிதோர் தேசத்தின் கட்டுரையாளனுக்கே இந்தளவு யோசனை வந்துள்ளதென்றால்,

**சு.ஞானவன்**

தகவல் தொழிநுட்பத்தின் இமயங்களைப் பெற்றெடுத்த வல்லரசு நாடாகிய இந்தியாவின் அறிஞர்கள், திட்டஆய்வாளர்கள் இதுகளைப் பற்றி யெல்லாம் யோசித்துத்தானே செய்வார்கள்' என்னும் சில புத்திஜீவிகளின் ஏளனமான வாதம் சிலவேளை எழக்கூடும்! அவர்களுக்கு எனது தாழ்மையான வேண்டுகோள்; ''ஐயா அறிவாளிகளே! இந்த முட்டாள் பையனின் கீழே தரப்பட்டுள்ள முறைப்பாடுகளை தயவுசெய்து கவனத்தில் கொள்ளுங்கள்!''

இந்தியாவிலும் சில அரசசார்பற்ற பொது அமைப்புக்கள் இது பற்றிக் கேள்வி எழுப்பியிருந்தாலும், இதனால் நன்மை அடையப்போகும் ஒரு சிலரின் பின்னணி பலமாகவே உள்ளது. இது குறித்து பொது மக்களின் கருத்தும், கவலையும் அவர்களிடம் எடுபடாது. 'இன்னும் 3 நாட்களுக்குள் பெரியதொரு இயற்கை அனர்த்தம் நடைபெறப்போகின்றது,' என்று வானியல் சுற்றுப்புற அவதானிகள் எச்சரித்திருந்தும், பிரபல சாத்திரிகளிடம் அப்படி நடக்க வாய்ப்பில்லை என்று உறுதிமொழி (?) வாங்கிவிட்டு, உறங்கிக் கிடந்த மாநிலம் ஒன்று, அடுத்தடுத்த நாட்களில் எதுவித முன்னேற்பாடுகளும் இல்லாத காரணத்தினால், பல்லாயிரக் கணக்கான மக்களின் உயிர்களைப்பலிகொண்ட வரலாறு இந்தியாவிலேதான் நடந்தது. உலகளவில் கடைப்பிடிக்கப்பட்டு வரும் நியமங்களைக் கடைப்பிடிக்காது காசு பண்ணிக் கொண்டிருந்த வெளிநாட்டு நிறுவனத்தின், போபால் நகரிலிருந்த அணு உலையில் கசிவு ஏற்பட்ட விபத்தில், 3800 மரணங்களோடு பல்லாயிரக்கணக்கான நோயாளிகளையும் 1984 ஆம் ஆண்டிலே உண்டாக்கியபோது, மக்கள் நலனாகருத்தில் எடுக்கப்பட்டது? இல்லையே! மேலும், மத்திய பிரதேசத்திலிருந்து தென்மேற்காகப் பாய்ந்து கடலில் கலக்கும் 1300 கி.மீ.நீளமான நர்மதா ஆற்றின் குறுக்கே மேற்கொள்ளப்படும் திட்டங்கள் சிலதையும் நாம் உதாரணப்படுத்திக் கொள்ளலாம். அதிலும் 'மகேஸ்வர்' என்னும் திட்டத்தின்படி 400 மெகாவற்ஸ் மின்சாரம் பெறுவதைக் காரணம் காட்டி, வயல் வளம் மிகுந்த162 பசுமையான கிராமங்களை நீரிலே மூழ்கடித்து, 20,000 பேரை அகதிகளாக்கத் தயாரானதற்குக் காரணம் மக்கள் நலனா? அல்லது இத்திட்டத்தின் படி மின்சார உற்பத்திக்கான பொறிகளைப் பெற்றுக்கொடுத்த Voith நிறுவனம் அரசியல்வாதிகளைக் கவனித்துக் கொண்ட விதமா? இதே Voith சிறுவனத்தின் கங்கைநதியைக் குறுக்கீடு செய்யும் Tehri-திட்டத்தின் படி 107 கிராமங்களைச் சேர்ந்த 100,000 (ஒரு லட்சம்) பேர் குடிமனைகளை இழக்க வேண்டிவரும். உலகப் பெண்களுக்கே இந்தியா தந்த உதாரணப் புருஷியும், சிறந்த சிந்தனையாளருமாகிய எழுத்தாளர் அருந்ததி றோய் (The God of Small things'நாவலின் ஆசிரியர்) நர்மதா, அணைக் கட்டுத் திட்டங்கள் தொடர்பாக, பாதிக்கப்பட்ட மக்களுக்கான குரலாய் ஒலித்து வருபவர் என்பதும் இங்கு நோக்கப்படவேண்டியதாகும்.

காவிரி நீர் வழங்கல் தொடர்பான இழுபறிகளின் போது ஏற்பட்ட வரட்சியின் கொடுமை தாங்காது தென்னகத்து விவசாயிகள் எலிகளையும் புசித்து உயிர்வாழநிர்ப்பந்திக்கப்பட்ட போது, தமிழ்நாட்டில் ஒரு திரைப் படப்பாடல் காட்சியில் கதாநாயகனும், நாயகியும் அரைகுறையாகக் குளிப்பதற்காக ஒருகோடி ரூபா (இந்தியரூபா) செலவில் செயற்கைக் கடல் ஒன்று அமைக் கப்பட்டதாம்! ஆகவேதான்பெரிய திட்டங்களுக்குப் பின்னாலே எப்போதும் பெரியமனம் படைத்தவர்கள்தான் இருக்கவேண்டும் என்றில்லை! குறுகியமனம் படைத்தவர்களின் கொள்ளையடிக்கும் குணத்தினை ஆராய்ந்தறிந்து எதிர்ப்பதற்கு, கோலியாத்திற்கு முன்னே சிறிய டேவிட் ஆக நிற்பதற்கு, நாம் வெட்கம் கொள்ளத்தேவை யில்லை!

''வங்கத்தில் ஓடிவரும் நீரின் மிகையால், மையத்து நாடுகளில் பயிர் செய்குவோம்!'' என்றான் அந்த யுகக்கவிஞன். ஆனால், பிரம்மபுத்திரா நதியின் நீர்மிகை, சம்பந்தப்பட்டவர்களின் அசமந்தப் போக்கினால் பங்களாதேஷில் அடிக்கடி ஆயிரத்திற்கும் மேற்பட்ட உயிர்களைக் காவுகொண்டு வருகிறது.

'இல்லாதவர்களிடமும் பறிக்கும் இருப்பவர்கள், பறிப்பவர்களிடம் பறிபோகும் இல்லாதவர்கள்!'' பூகம்பங்களைத் திரைப் படங்களிலே கண்டுகளித்துவிடுபவர்கள், தங்களிடையே உள்ள தீக்குச்சிகளை அலட்சியம் செய்கிறார்கள்; 'அவர்கள்'!

முன்பு ஒருமுறை அனுமார் கூட்டம் அணைகட்டி வந்து எம்மை அழித்து விட்டுப்போனது: பின்னர் 'ஒபரேசன்' பூமாலை போட்டது: இப்போது கால்வாய் வெட்டியே கழுத்தறுக்கப் பார்க்கிறது. இந்தவிடயத்தில் சிங்கள அரசின்/மக்களின் ஆதரவும் நமக்குக்கிட்டலாம், எதுஎப்படி இருந்தாலும், மக்கள், மாணவர்கள், பல்கலைக்கழகங்கள் என இவ் விடயம் குறித்து சகலதரப்பிலும் விழிப்பு ஏற்பட்டு, விரைவான வெகுசன முன்னெடுப்புக்களால் ஓங்கிக்குரல் எழுப்ப வேண்டிய கடமை நமக்குண்டு!

# நேர்நோக்கு

ஒரு பிரச்சினையை கிடப்பில் போட்டு அதன் வேகத்தைக் குறைப்பதென்றால்,அல்லது அதனைத்தீர்க்காது இழுத்தடிப்பதென்றால் அதனை ஆராய ஆணைக்குழு அமைக்கவேண்டும் என்பது ராஜதந்திரி ஒருவரின் ஆலோசனை. இதனை முன்னரும் பலமுறை சிங்கள ஆட்சியாளர்கள் செய்து முடித்திருக்கின்றார்கள். இனப்பிரச்சினை தீர்வு விடயத்தில் மட்டுமல்ல, தமிழ் மக்கள் மீதான வன்முறைகளுக்கும் அவர்கள் பலமுறை அவ்வாறே நடந்து கொண்டிருக்கின்றனர்.

இதனைத்தான் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவும் முன்னைய ஆட்சிக்காலத்தில் செய்தார். இப்பொழுதும் செய்யமுயல்கிறார். அதாவது முன்னைய ஆட்சியாளர்கள் செய்ததையும் தனது முதலாவது பதவிக்காலத்தில் செய்ததையும் வேறொரு பெயரில் மீண்டும் செய்ய அவர் திட்டமிட்டுள்ளதையே அவரது "தேசிய ஆலோசனைச்சபை" குறித்த அறிவிப்பு வெளிப்படுத்தியிருக்கிறது.

பண்டா- செல்வாஒப்பந்தம் டட்லி- செல்வா ஒப்பந்தம் எல்லாம் கிழித்தெறியப்பட்டுவிட பின்னர் மென்முறைப்போராட்டம் ஆயுதப் போராட்டமாக தீவிரம் பெற்று பின் திம்புப் பேச்சு வார்த்தை தொடர்ந்த போதும், இனப்பிரச்சினைக்கான தீர்வு எதுவும் எட்டப்பட்டுவிடவில்லை. இவை எல்லாவற்றுக்கும் சிங்களத் தலைவர்களின் ஏமாற்றும் போக்கே காரணமாக அமைந்தது.



அவர்கள் தமது தேவை கருதி ஒப்பந்தங்களையும், பேச்சுவார்த்தைகளையும் நடத்தினார்களே தவிர, உண்மையில் பிரச்சினைக்குத் தீர்வுகானவேண்டும் என அவர்கள் ஒருபோதும் மனப்பூர்வமாக முயலவில்லை. இவ்வாறுதான் ஜே.ஆருக்கும் ராஜீவுக்கும் இடையிலான ஒப்பந்தமும் கூட அமைந்தது.

அதேவேளை தமிழ் மக்களின் போராட்டம் முனைப்புப் பட்டவேளை உருவாக்கப்பட்ட மாவட்ட அபி விருத்திச்சபையாயினும் சரி, மாகாணசபையாயினும் சரி சிங்கள ஆட்சியாளர்களால் சரிவர இயங்க அனுமதிக்கப்படவில்லை.

இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணவெனக் கூறி ராஜீவுக்கும் ஜே.ஆருக்கும் இடையில் செய்துகொண்ட ஒப்பந்தத்தின் அடிப்படையில் அமைக்கப்பட்ட மாகாண சபைகளுக்கு சட்டம்மூலம் குறைந்தளவு அதிகாரங்களே வழங்கப்பட்டன.

## பயனற்ற வேலைக்கு இணைத்தலைமை

எழுத்து மூலம் இருந்த இந்த அதிகாரங்கள் கூட நடைமுறையில் வழங்கப்படவில்லை. அண்மையில் கூட மாகாணசபை முதல்வர்களின் கூட்டத்தில் மாகாணசபைகளுக்குரிய பொலிஸ் அதிகாரங்களைப் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுப்பது எனத்தீர்மானம் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.



அதாவது சிங்கள மக்கள் பெரும்பான்மையாக வாழும் மாகாணங்களுக்குக்கூட சட்டத்தில் இருக்கின்ற அதிகாரங்களை 17 வருடங்கள் கடந்தும் வழங்கப்படவில்லை.

இவையெல்லாவற்றையும் பட்டறிவாகக்கொண்டு தான் தமிழ் மக்களின் விடுதலைக்காகப் போராடுகின்ற விடுதலைப்புலிகள் கடந்த காலத்தில் பிரேமதாசவுடனும் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுடனும் பேச்சுக்களை நடத்தினர். அவர்களின் நேர்மையற்ற நடவடிக்கைகள் காரணமாக பேச்சுவார்த்தைகள் முறிவடைந்தன.

பிரேமதாச அரசாங்கத்துடனான பேச்சுவார்த்தை நடைபெற்றுக்கொண்டிருந்தபோது பிரேமதாசவினால் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண்பது தொடர்பாக சர்வகட்சி மாநாடு நடைபெற்றது. இதன்போது தென்னிலங்கைக் கட்சிகள் கூடி ஆராய்ந்த பின்னர் தமிழ் மக்களுக்கு எவ்வாறான அதிகாரங்களை வழங்கலாம் என்ற இணக்கப்பாட்டிற்கு வரமுடியவில்லை. ஆனால் எவ்வாறான அதிகாரங்களை வழங்கக்கூடாது என்பதில்ஓர் இணக்கப்பாட்டிற்கு வந்தன.

பின்னர் 1994 இல் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுடன் ஆரம்பிக்கப்பட்ட பேச்சு வார்த்தைகள் முறிவடைந்த பின்னர் அவர் தீர்வுப்பொதி என்ற பெயரில்ஆவணமொன்றை அதாவது ஆலோசனைகள் சிலவற்றை முன்வைத்தார்.

இந்த ஆலோசனைகளையும் தென்னிலங்கைக் கட்சிகள் ஆராய்ந்தன. தீர்வுப் பொதி முன்வைக்கப்பட்டபோது அதில் பலமுன்னேற்றமான அம்சங்கள் உள்ளன எனப் புகழப்பட்டது. ஆனால் இறுதியில் எந்தவித உயிர்ப்பு மற்ற சடலமாக அது நாடாளுமன்றத்திற்கு கொண்டு வர முயற்சித்தபோதும் அதனைக் கூட நாடாளுமன்றத்தில் கொண்டுவர முடியாது போனது.

தற்போதைய சமாதான முயற்சிகளிலும் கூட போர் நிறுத்த ஒப்பந்தவிதிகள் படைத்தரப்பால் அமுல்படுத்தப்படவில்லை.அத்துடன் பேச்சுகளில் இணக்கம் காணப்பட்டதன் அடிப்படையில் அமைக்கப்பட்ட "சிரான்" அமைப்பை சரிவரச் செயற்பட அனுமதிக்கவில்லை.

அதேவேளை கடந்த ஐக்கிய தேசிய முன்னணி ஆட்சியின்போது இடைக்காலத் தீர்வுகாணும் நோக்குடன் விடுதலைப்புலிகளால் முன்வைக்கப்பட்ட இடைக்காலத்தன்னாட்சி அதிகார சபை குறித்து ஆராயப்படவிருந்தவேளையில், அந்த ஆட்சியைக் களைத்துவிட்டு ஆட்சி பீடம் ஏறியுள்ள ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி, இப்போது எவ்வாறாயினும் சமாதான முயற்சிகளை மேற்கொள்வது போலக்காட்டவேண்டிய தேவையில் உள்ளது.

ஆனால், இதற்கு விடுதலைப் புலிகளுடனான பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்க அவ் ஆட்சியில் முக்கிய பங்கு வகிக்கும் ஜே.வி.பி தயாராக இல்லை. அவ்வாறு ஆரம்பிக்கப்படுமாயின் அது ஆட்சிக்கவிழ்ப்பிலேயே முடியுமென்ற அச்சம் சனாதிபதி சந்திரிகாவுக்கு உள்ளது.

எனவே சமாதான முயற்சிகளை மேற்கொள்வது போலக் காட்டிக்கொண்டு விடுதலைப் புலிகளுடன் உடனடியாகப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்காதிருக்கும் முயற்சியாகவே தேசிய ஆலோசனை சபையை அமைக்கமுயல்கின்றார்.

இதனால் மாற்றம் எதுவுமே ஏற்படப்போவதில்லை என அவருக்கு நன்றாகவே தெரியும். அதனாலேயே அவர் மகிந்தராஜபக்ஷவையும் ரணில் விக்கிரமசிங்கவையும் இணைத்து தலைமை தாங்குமாறும் கேட்டுவருகிறார்.

**வேலவன்**

மட்டக்களப்பு மாவட்டத்தின் சனத்தொகையில் 68 சதவீதமானோர் அரசின் சமுர்த்தி நிவாரணம் பெறும் குடும்பங்களாக இருப்பதுடன் கடந்த 20 வருடகால போரினால் இம்மாவட்ட மக்களின் பூர்வீக தொழில்களான மீன்பிடி, விவசாயம் என்பன, முற்றாக பாதிக்கப்பட்டுள்ளன.

இதனால், பொருளாதார பின்னடைவைச் சந்தித்த இப்பகுதி மக்களின் இயல்பு வாழ்க்கை முற்றாக பாதிக்கப்பட்டதுடன் தொடர்ந்து ஏற்பட்ட இடப்பெயர்வு, இராணுவ அடக்கு முறைகள், போதியளவு கல்வி கற்றும் தொழில் வாய்பின்மைபோன்ற பல்வேறு பிரச்சினைகள் மக்களின் இயல்புவாழ்வை அழிவுப்பாதைக்குள் தள்ளிச்சென்றுள்ளன.

இம்மாவட்டத்தில் 80 வீதமான நிலப்பகுதியானது இராணுவ ஆக்கிரமிப்பற்ற பகுதியாகவே உள்ளது. இதன் காரணமாக கடந்தகாலங்களில் சிறிலங்கா அரசினால் எந்த வித அபிவிருத்தி பணிகளும், உதவித்திட்டங்களும் மேற்கொள்ளப்படவில்லை.

இன்றும் கூட சிறு சிறு குடிசைகளில் அடிப்படைவசதிகள் இன்றி வாழ்ந்துவருகின்றனர். பாடசாலைகளில் பெரும் வளப்பற்றாக்குறை, இதைவிட நீண்டதூரம் கால்நடையாக செல்லும் மாணவர்கள் காலில் பாதணிகள் இல்லாது கொழுத்தும் வெயிலிலும் சுடுமண் பாதையூடாகவும் நடந்துசெல்வதைக் காணக்கூடியதாக உள்ளது. இங்கு ஒரு சில தனியார் பேருந்துகள் மட்டும் அளவுக்கு அதிகமான பயணிகளை ஏற்றிக்கொண்டு சீரற்ற பாதைகளினூடாக பயணிக் கின்றன. மருத்துவ வசதிஎன்பது அறவே இல்லை என்றே கூறவேண்டும்.

இவ்வாறு பின்தங்கியபகுதிகளில் உள்ள மக்களிற்கு உதவ எந்தவொரு தன்னார்வ தொண்டு நிறுவனங்களும் முன்வராத நிலையில் உள்ளதாக மட்டக்களப்பு வேப்ப வெட்டுவான் மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர். தேவைகள் எதிர்பார்ப்புக்கள் உதவிகளுக்காக காத்திருக்கும் மட்டக்களப்பு மாவட்டமக்களுக்கு துரித புனர்வாழ்வு அபிவிருத்தி திட்டங்களை வேகமாக முன்னெடுக்கவேண்டியுள்ளது. இதனையே, இப்பகுதி மக்களும் எதிர்பார்த்த வண்ணமுள்ளனர்.

தமிழர் புனர்வாழ்வுக்கழகமானது அடிப்படை தேவைகளை இனங்கண்டு பல்வேறு திட்டங்களை நடைமுறைப்படுத்தி பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்க்கையை கட்டி எழுப்பி வருகின்றது. அந்தவகையிலே மட்டக்களப்பு முறாவோடை கிராமம் அபிவிருத்தி செய்யப்பட்டு வருகின்றது. மட்டக்களப்பு மாவட்டத்தின் மிகவும் பின்தங்கிய கிராமங்களில் ஒன்றான முறாவோடை தமிழ்க்கிராமம் கடந்தகால போர் நடவடிக்கைமூலம் மக்கள் வாழ்விடங்கள் முற்றாக அழிவிற்குள்ளாகியது. ஏதிலிகளாக்கப்பட்டு பலதடவைகள் பிற இனத்தவர்களால் சொந்த ஊர்களைவிட்டு விரட்டப்பட்ட மக்கள் தற்பொழுது மீண்டும் சிறு சிறு குடிசைகளை அமைத்து மீளக்குடியமர்ந்துள்ளனர். இக்கிராமத்தில் வசிக்கும் குடும்பங்களில் 73 விதவைகளும் 10 அங்கவீனர்களும் வசித்துவருகின்றனர். இவற்றைவிட 47 குடும்பங்களின் பிரதான தொழில் மீன்பிடியாகும். 315 குடும்பங்கள் வாழ்ந்துவருகின்ற முறாவோடை கிராமத்தில் வைத்தியசாலை போக்குவரத்து வசதிகள் உட்பட எவ்வித அடிப்படை வசதிகளும் அற்றநிலையில் வாழும் மக்களின் அவலங்களைக் கண்டு இக்கிராமம் மீளக்கட்டி எழுப்பப்பட்டுவருகின்றது.

கடந்த காலங்களில் 487 குடும்பங்கள் வாழ்ந்த இக் கிராமத்தில் மக்கள் குடியிருப்புக்கள் முற்றாக அழிந்துள்ளன. வீதிகள் முற்றாக சேதமடைந்துள்ளன. சில வீதிகள் இருந்த



## அபிவிருத்தியில் புறக்கணிக்கப்பட்ட மட்டக்களப்பு மாவட்டம்

இடமேதெரியாத நிலையில் காணப்படுகின்றன. எஞ்சிய குடியிருப்புக்கள் படைமுகாம்களாக இன்றும் உள்ளதோடு வழிபாட்டு தலங்கள் அழிக்கப்பட்டுள்ளன.

தற்பொழுது நெக்கோட் திட்டத்தின் கீழ் 100 வீடுகள் அமைக்கப்பட்டுவருகின்றன. வேறு சில அபிவிருத்தி பணிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இவற்றைவிட முன்பள்ளிகள் தனியார் முன்பள்ளிகளாகவே இயங்கிவந்தன. இவை செயலிழந்த நிலையில் காணப்பட்டன. தற்பொழுது 20 முன்பள்ளிகளை தமிழர் புனர்வாழ்வு கழகம் பொறுப்பேற்றுக் கொண்டுள்ளதுடன் இம்முன்பள்ளிச் சிறார்களின் கற்றல் செயற்பாடுகளில் அக்கறைகொண்டு ஆசிரியர்களுக்கான சம்பளம் என்பவற்றை வழங்கிவருகின்றது.

இவ்வாறு போர் என்பது கடந்த காலங்களில் எமது உறவுகளை அழித்துக் கொண்டதுடன் மட்டும் நின்றுவிடவில்லை. தொடர்ந்து ஏற்பட்ட போரின் விளைவால் எமது பொருளாதாரம் முற்றாக அழிக்கப்பட்டது. பௌதீக வளங்கள் அழிக்கப்பட்டதுடன் சில வளங்கள் சுரண்டிக்கொள்ளப்பட்டும், முற்றாக அழிக்கப்பட்டும், எமது விவசாயநிலங்கள் கண்ணிவெடி, வெடிபொருட்கள் விதைக்கப்பட்ட பூமியாக மாற்றப்பட்டது. இதனால் இன்றும் மீளக் குடியமர்ந்துள்ள, தமிழர் தாயகப்பகுதியின் பெரும்பாலான இடங்களில் எந்த ஒரு விவசாய நடவடிக்கைகளும் மேற்கொள்ளமுடியாத அவலநிலை ஏற்பட்டுள்ளது. மருத்துவத்தினை எடுத்துக் கொண்டால் எந்த ஒரு இடத்தில் மருத்துவமனை என்றோ அல்லது அரச கட்டடம் என்றோ அவற்றை கூடவிட்டு வைக்காது முற்றாக அழித்துவிட்டதால் இன்று ஏராளமான பகுதிகளில் மருத்துவ வசதியைப் பெறுவதில் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டுவருகின்றனர். இவ்வாறு மருத்துவ வசதியைப் பெறுவதாயின் பெரும்பாலான பின்தங்கிய கிராமமக்கள் குறைந்தது 10 கிலோமீற்றர் தூரமாவது செல்லவேண்டும். அவ்வாறு செல்வதாயின் அவர்களுக்கான போக்குவரத்து வசதியில்லை. அவற்றை மேற்கொள்வதற்கான வீதிகள் புனரமைப்பு செய்யப்படாதுள்ளன. கல்வி என்பதில் மிக மோசமான பின்னடைவு இதன் முக்கிய காரணம் ஆசிரியர் போதியளவு நியமிக்கப்படாமை, கட்டடவசதிகள் செய்யப்படாமை, ஒழுங்கான முறையில் பாடநூல்கள் விநியோகிக்கப்படாமை எனப்பல்வேறு குறைபாடுகள் உண்டு.

தற்பொழுது பல்வேறு அபிவிருத்தி பணிகளை மேற்கொண்டுவரும் நிலையில் இவ்வாறான அபிவிருத்தி பணிகள் அழிக்கப்பட்ட வளங்களில் இருந்து 10 வீதத்திலும் குறைவான அளவிலேயே, முதலீடு செய்யப்பட்டு அபிவிருத்திசெய்யப்பட்டுள்ளன. போரினால் அழிக்கப்பட்ட தமிழர் தாயகத்தினை முழுமையாக கட்டி எழுப்புவது என்பது மிக கடினமான காரியம் என்றே கூறவேண்டும்.

**பாஸ்கரன்**

**முல்லைத்தீவு வலய கல்விப்பணிப்பாளர் திரு.குருகுலராஜா அவர்களை இவ்வார நேர்காணலுக்காக நாம் சந்தித்தோம்.**

**முல்லை வலய மாணவர்களின் கல்வி வளர்ச்சியில் பாதிப்பை ஏற்படுத்துகின்ற வளப்பற்றாக்குறை, மற்றும் அரசின் பாராமுகம் என பல விடயங்களை எம்மோடு பகிர்ந்துகொண்டார்.**

**விளையாட்டு, இலக்கியங்கள் மீதான அக்கறையும் ஈடுபாடும் என பலதுறை ஆற்றலும் அனுபவமும் கொண்டவர் முல்லை வலய கல்விப் பணிப்பாளர் திரு.குருகுலராஜா அவர்கள்.**

**ஆயினும் அவரிடம் எமது நேர்காணல் நீண்டு சென்றுவிடும் என்பதால் அவை தொடர்பான அவரின் கருத்துகளை எமது வாசகர்களோடு முழுமையாக பகிர்ந்துகொள்ளமுடியவில்லை.**

**ஆயினும் முல்லை வலய கல்வி நிலை தொடர்பாக அவர் எம்மோடு பகிர்ந்துகொண்டவை வருமாறு;**

*முல்லைத்தீவு வலயப் பாடசாலைகள் வளர்ந்துவரும் கல்விக்கொள்கையில் எதிர்கொள்கின்ற பிரச்சினைகள் பற்றி கூறமுடியுமா?*


எமது வலயப் பாடசாலைகள் எதிர்கொள்கின்ற பிரச்சினைகளில் முக்கிமானவை ஆரம்பக்கல்விக்கான, ஆசிரியர்கள் பற்றாக்குறை ஒரு புறம், ஏனைய வகுப்புக்களுக்கான ஆங்கில ஆசிரியர் இல்லாமை மறுபுறம் இவற்றை விட கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடங்களுக்கான குறிப்பிட்ட அளவு ஆசிரியர்கள் மட்டுமே உள்ளவை ஆகும்.

இதைவிட முக்கியமான பிரச்சினை கூடுதலான பாடசாலைகளில் மாணவர்களுக்கான, வகுப்பறை கட்டடங்கள் இல்லாமை உதாரணமாக சிறிசிவசுப்பிரமணிய சினையாகவே உள்ளது.

*ஆசிரியர்களின் கற்றல்; கற்பித்தல் செயற்பாடுகளை வலுவாக்கும்வகையில் ஆசிரிய வளநிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளதா?*

ஆசிரிய வள நிலையங்களை அமைப்பதற்கென கடந்த வருடம் விண்ணப்பித்திருந்த போதிலும், அரசு எம்மை பாராமுகமாக இருந்து எமக்குரிய அந்த நிதியினை வழங்கவில்லை. இதனால் தற்காலிகமாக ஒரு கட்டடத்தொகுதியினை அமைத்து பெரும் சிரமங்களின் மத்தியில் பயிற்சிகளை வழங்கி வருகின்றோம்.

இவ்வாண்டு நாங்கள் அனுப்பி வந்திருக்கும். அவ்வாறு ஒதுக்கீடுகள் செய்யப்பட்ட காலங்களில் அபிவிருத்தி பணிகள் மேற்கொள்ள அரசு புறக்கணித்தமையால் இப்பொழுது பெரும் பற்றாக்குறை



அமைக் கப்படுகின்றது.

இதைவிட மாடிக்கட்டடத் தொகுதி அமைப்பதற்கான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டும் ஒப்பந்தக்காரர் எவரும் முன்வராத நிலையில் அதனை அமைப்பதற்கான வேலைத் திட்டங்கள் ஆரம்பிக்கப்படவில்லை. இதன் முக்கிய காரணம் ஒப்பந்தகாரர் எவரும் முன்வராமையாகும். கிளிநொச்சி மாவட்டத்தை விட எமது மாவட்டத்திற்கான நிதியுதவி கூடுதலாக இருந்தாலும் (கல்விக்கு) போதிய ஒப்பந்தக் காரர் இன்மையால் அபிவிருத்தி வேலைகளை முன்னெடுக்கமுடியாதுள்ளது.

*ஏனைய, கல்வி வலயங்களிலும் உள்ள பிரச்சினைகளில் ஒன்றாகவும் முல்லைத்தீவு வலயத்தில் உள்ள பிரச்சினையாகவும் தற்பொழுது இருந்து வரும் கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம் ஆகிய பாடங்களில் மாணவர்கள் சித்தி பெறும் விகிதம் மிகமிக குறைவாகவே இருந்து வருகின்றது; இது தொடர்பாக,*

எங்களுடைய வலயத்தில் கணித பாடத்தினை பொறுத்த வரையில் மாணவர்கள் சித்தி பெறும் விகிதம் ஓரளவு கடந்த நான்கு வருடங்களிற்கு பின்னர் பரவாயில்லை என்றே கூறவேண்டும். இது சில பாடசாலைகளில் குறைவாகவே இருக்கின்றது. இதற்கு முக்கிய காரணம் தரம் 05 தரம் 06 களில் கணிதம் தொடர்பான எண்ணக்கரு பற்றிய அறிவின்மை இது. தொடர்ந்து வருகின்ற வகுப்புக்களில் இந் உள்ளது. *இதற்கான காரணங்கள் பற்றிக்கூறமுடியுமா?*

முக்கிய காரணங்களாக, கூடுதலான முன்னணிப் பாடசாலைகளில் ஆசிரியர்கள் பற்றாக்குறை என்பதைவிட, ஆசிரியர்கள் இல்லை என்றே கூறவேண்டும். தற்பொழுது தான் ஓரிரு ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். அடுத்து இவ்விளையாட்டு துறையில் மாணவர்கள் அக்கறை காட்டுவதில்லை உதாரணமாக இரண்டு பெரிய பாடசாலைகளில் விளையாட்டு முக்கிய பிரச்சினையாக உள்ளது. இவ்விருபாடசாலைகளிலும் வெளிப்படையான விளையாட்டு வளர்ச்சி மிக மோசமான நிலையிலேயே இருந்து வருகின்றது. ஆனால் மிகவும் போசாக்கான, சக்தியுள்ள மாணவர்கள் அதிகம் இருக்கின்றனர். அதைவிட விளையாட்டு மைத்தானங்கள் இருக்கின்றன.

இவற்றை ஒன்றிணைத்து விளையாட்டுத்துறையை வளர்த்து கொள்வதில் பெரும் பின்னடைவுகள் ஏற்பட்டுள்ளன. ஆசிரியர்கள் ஒத்துழைப்பு இன்மையும் ஒரு காரணமாக அமைகின்றது. அண்மையில் தேசிய மட்டத்திலான விளையாட்டு போட்டிக்கு தெரிவான ஒரு மாணவரை கூட்டி செல்வதற்கு ஆசிரியர்கள் எவருமே முன்வராமையால் அப்பாடசாலையின் அதிபரே அம் மாணவனை கூட்டிச் செல்ல வேண்டிய நிலை உருவாகியது.

இதைவிட மாணவர்களுக்கான விளையாட்டு வசதிகள் உபகரணவசதிகள் உரியமுறையில் வழங்கப்படாமையும் ஒரு காரணமாகும். முக்கியமாக விளையாட்டு துறைக்கு ஆசிரியர்கள் நியமிக்கப்

# ஆசிரிய வள நிலையங்களை அமைப்பதில் அரசு பாரா முகமாக இருந்து வருகிறது

**-முல்லை வலய கல்விப் பணிப்பாளர் த.குருகுலராஜா-**

வித்தியாசாலையை எடுத்துக் கொண்டால், இது ஒரு பிரபல்யமான முன்னணிப் பாடசாலையாகவும் நகரத்தில் உள்ள பாடசாலையாகவும் இருந்து வருகின்றது. மிகவும் நெருக்கமாக வகுப்புக்களை வைத்து பெரும் சிரமங்களுக்கு மத்தியில் கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளைமேற்கொள்ள வேண்டிய நிலை காணப்படுகின்றது.

இது ஒரு புறம் இருக்க, விஞ்ஞான ஆய்வு கூடங்கள் என்பது பெரிய பிரச்சினை. கூடுதலான உயர்தரப் பாடசாலைகளில் விஞ்ஞான ஆய்வு கூடங்கள் இல்லை. அவற்றுக்கான உபகரணங்கள் இல்லை. விசேட கற்றல் அறைகள் இல்லை. 80 வீத மான பாடசாலைகளிற்கு தளபாட வசதிகள் செய்து தரப்பட்டுள்ள போதிலும், ஏனைய பௌதீக வளங்கள் மிக குறைவாகவே உள்ளது. அதிலும் கட்டட வசதி என்பது பெரும் பற்றாக் குறையாகவே உள்ளது.

உதாரணமாக எங்களுடைய வலயத்தில் 50 பாடசாலைகள் உள்ள நிலையில் 50 கட்டடங்கள் அமைக்கவேண்டும். இருட்டுமடு பாடசாலையினை எடுத்துக்கொண்டால், அங்கு 100 இற்கு மேற்பட்ட மாணவர்கள் கல்விகற்று வருகின்றனர். தரம் 07 வரையான வகுப்புக்கள் உள்ளன 07 வகுப்பறைகள் தேவையாக உள்ளபோதிலும் 03 வகுப்பறைகள் மட்டுமே உள்ளன. 04 வகுப்பறைகள் மிக கட்டாயமாக தேவையாகவே உள்ளது.

ஆசிரியவளங்களை ஓரளவு சமாளித்துக் கொண்டு இருந்தாலும் பௌதீக வளம் என்பது பெரும் பிரச் வைத்த மதிப்பீடுகளை ஏற்றுக் கொண்டு, அதற்கென ஒரு நிதி ஒதுக்கீட்டினை மேற்கொண்டுள்ளனர். அதுவும் இந்த ஆண்டிற்குள் செய்து முடிக்கவேண்டும். அதற்கான அனுமதி கிடைக்கப்பெறவில்லை. ஏனைய வலயங்களில் மூன்று வருடங்களுக்கு முன்னர் ஓரளவு கட்டி முடித்துவிட்டார்கள். அத்தோடு முள்ளியவளை வித்தியானந்தா கல்லூரியில் உள்ள மத்திய ஆசிரிய வளநிலையத்தினை பெரிதாக அமைப்பதற்கு கோரியுள்ளோம். ஆனால் அதற்கான அனுமதியோ, நிதி ஒதுக்கீடுகளோ இது வரையில் கிடைக்கப்பெறவில்லை. இது அரசு எமக்குச் செய்த தவறு என்றே கூறவேண்டும்.

பொதுக்கல்வித்திட்டம் 1, பொதுக்கல்வித்திட்டம் 2 என்ற 1990, 1996 ஆகிய ஆண்டுகளில் அறிமுகப் படுத்தப்பட்ட திட்டங்கள் இரண்டிலும் எமது வலயத்திற்கு கிடைக்கவேண்டிய வளங்கள் சிறிலங்காவில் உள்ள மற்றய வலயங்களிற்கு வழங்கியது போன்று எமக்கு அந்த நிதியுதவி கிடைக்கவில்லை. அவ்வாறு நிதியுதவி கிடைத்திருந்தால் நூல் நிலையங்கள், வகுப்பறை கட்டடங்கள் காணப்படுகின்றது.

*தற்பொழுது கல்வி அபிவிருத்தி நடவடிக்கைகளின் அடிப்படையில் கிடைக்கப்பெறுகின்ற உதவிகள் பற்றி.*

நிக்கோட் திட்டத்தின் கீழ் புதுக்குடியிருப்பு மகாவித்தியாலயம், முள்ளியவளை றோமன் கத்தோலிக்க வித்தியாலயம் ஆகிய இரு பாடசாலைகளிலும் புதிய கட்டடங்கள் திறந்து வைக்கப்பட்டுள்ளன. இதைவிட சிலாவத்தை பாடசாலையில் இரு கட்டடங்களும் முல்லைத்தீவு ம.வியில் ஒரு கட்டடமும் அமைக்கப்பட்டுள்ளது. வேணாவில் பாடசாலையில் இருகட்டடம் அமைக்கும் வேலை இடம் பெறுகின்றது. வள்ளிபுனம் பாடசாலையில் அமைக்கப்படுவது மந்த கதியில் இடம்பெறுகின்றது. உடுப்புக்குளம் பாடசாலையிலும் கட்டடம் நிலை தொடர்வதனால் இவ்வாறான பிரச்சினை ஏற்படுகின்றது. கடந்த ஆண்டு மேற்கொண்ட புள்ளி விபரத்தை எடுத்துக்கொண்டால் தரம் 09இல் கல்வி கற்ற மாணவர்களில் மிகக் கூடுதலானோர் கணிதம் பற்றிய அடிப்படை அறிவு இன்மையாக காணப்பட்டனர். இதைவிட வகுப்பறைகளில் ஆசிரியர்களின் கற்றல், கற்பித்தல் தன்மை, அதாவது வலுக்குன்றிய மாணவர்களுக்கு மேலதிக வகுப்புக்களை ஒழுங்குசெய்து கற்றல் விருத்தியை வளர்க்கமுடியும். இதுவும் ஒரு குன்றபாடாகவே இருக்கின்றது.

*முல்லைத்தீவு வலயப் பாடசாலைகள் கல்வியில் கணிசமான அளவு வளர்ச்சி கண்டாலும், விளையாட்டுத்துறையில் மிகவும் பின்தங்கிய நிலையிலே* படாமல், விளையாட்டு மைதானங்கள் அபிவிருத்தி செய்யப்படாமல் உள்ளமை போன்றன முக்கிய பிரச்சினையாக உள்ளது.

*தமிழீழ கல்விக் கழகத்தினால் மாவட்ட ரீதியாக அமைக்கப்பட்ட கல்விப் பேரவையின் செயற்பாடுகள் பற்றி கூறமுடியுமா?*

முல்லைத்தீவு வலயமும் துணுக்காய் வலயமும் இணைந்து கல்விப் பேரவை என்ற அமைப்பை உருவாக்கியிருக்கின்றோம். அதற்கான நிதி முதலீடும் சிறிதளவு செய்யப்பட்டுள்ளதுடன் அடுத்த மாதம் இப்பேரவைக்கான ஒன்று கூடலை நடாத்தி இவ்வாண்டிற்கான வேலைத் திட்டங்கள், அடுத்த ஆண்டிற்கான திட்டங்கள் பற்றியும் ஆராயவுள்ளோம்.

*முல்லைத்தீவு கல்வி வலயம் தனது சொந்த இடமான முல்லை நகரில் மீள இயங்காது உள்ளமையால், பல்வேறுபட்ட விமர்சனங்கள் எழுந்துள்ளன. இதனை சொந்த இடத்தில் இது வரை காலமும் ஆரம்பிக்கப்படாமைக்கான காரணம் பற்றி கூற முடியுமா?*

கடந்த 1990 ஆம் ஆண்டு முல்லைத்தீவு மகாவித்தியாலயத்திற்கு அண்மையாக ஒரு கட்டடத்தினை அமைத்துவரும் போது ஏற்பட்ட இராணுவ நடவடிக்கை மூலம் இடம்பெயர்ந்து புதுக்குடியிருப்பு பகுதியில் அலுவலகம் தற்காலிகமாக இயங்க ஆரம்பித்து இன்றைக்கு 14 ஆண்டுகளாக இயங்கி வருகிறது.

(22 ஆம் பக்கம் பார்க்க)

***முல்லை மண் விடுதலைப்புலிகளால் வெற்றிகொள்ளப்பட்டபின் எமது கட்டடம் ஓரளவு நல்லநிலையில் இருந்ததையிட்டு அதனை புனரமைப்பு செய்யும்வகையில், ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியுடன் எமக்கு கிடைத்த 12 லட்சம் ரூபா நிதியினை கொண்டு அக்கட்டடத்திற்கான கூரையினை அமைத்து, மேலும் ஏற்பட்ட நிதி தேவையினை நிக்கோட்திட்டம் போன்ற நிதிநிறுவனங்களிடம் நிதி கோரியிருந்த போதும் அவர்கள் தர மறுத்துவிட்டனர். பின்னர் முல்லைத்தீவு அரச அதிபரின் உதவியுடன் நல்லிணக்க அமைச்சின் மூலம் 35 லட்சம் ரூபா நிதியினை பெற்று தொடர்ந்து புனரமைப்பு பணிகளை மேற்கொண்டு மீண்டும் 2005 ஆம் ஆண்டு சனவரி முதல் சொந்த இடத்தில் இயங்கவுள்ளது.***

**நேர்காணல் சு.பிரபா**




# எரிபொருளாகும் ஐதரசன்

அமெரிக்காவில் ஐதரசனை எரிபொருளாகப் பயன்படுத்தும் ஆய்வு தற்போது தீவிர மடைந்துவருகிறது.

உலகம் முழுவதுக்கும் தேவையான எரிபொருள் பூமியின் மேற்பகுதியில் அதிகளவு கிடைப்பதாக ஆய்வாளர்கள் தெரிவிக் கின்றனர்.

தற்போது எரிபொருளாகப் பயன்படுகிற நிலக்கரி, வாயு மற்றும் எண்ணெய், இன்னும் 10முதல் 15ஆண்டுகளில் பெருமளவு குறைந்துவிடும் என்று கருதப்படுகிறது.

இந்நிலையில், இது போன்ற எரிபொருள்களுக்கு மாற்றாக ஐதரசன் வாயு பயன்படக்கூடும். ஐதரசன் வாயு, மற்ற எரிபொருள் களைவிட சுத்தமானதாகும். இதனால் ஐதரசன் வாயுவை எரிபொருளாகப் பயன்படுத்தினால் சுற்றுச்சூழல் மாசுபடாது. ஐதரசன் வாயு கிடைப்பது மிகவும் அரிது. இயற்கை வாயு விலிருந்தோ கடல் நீரிலிருந்தோ கிடைக்கக்கூடிய ஐதரசன் வாயுவை, இவற்றிலிருந்து பிரித்து எடுப்பதற்கு அதிக செலவாகிறது. சுற்றுச்சூழலும் மாசுபடுகிறது.

இந்நிலையில் அமெரிக்க விண்வெளிஆய்வு மையமான நாசாவிலுள்ள விஞ்ஞானிகள் பூமிக்குள் பல கிலோமீட்டர்கள் தாண்டி எப்படி சில பக்டீரியாக்கள் உயிர் வாழ்கின்றன என்று கண்டறியும் ஆராய்ச்சியில் ஈடுபட்டுவந்தனர். இதில் சூரிய ஒளி சிறிதும் உள்ளே புகாத அந்த இடத்தில் வாழும் பக் டீரியாக்கள், ஐதரசன் வாயுவைப் பயன்படுத்தி வாழ்ந்துவருவது தெரியவந்தது. "அங்குள்ள கடினமான பாறைகளின் இடுக்கு களில் உள்ள தண்ணீரின் மூலக்கூறுகள் உடைத்து ஐதரசனாக வெளியேறுகிறது" என்கிறார்கள் விஞ்ஞானிகள்.

குறிப்பாக கிறனைற் ஒலிவைன் போன்ற விலை உயர்ந்த கற்களின் இடுக்குகளில் அதிகளவு ஐதரசன் வாயு இருப்பது தெரியவந்தது. மேலும் ஒரு கியூபிக் மீட்டர் அளவு பாறையில் ஆயிரம் லீட்டர் ஐதரசன் கிடைப்பதற்கான ஆதாரங் கள் தங்களிடம் உள்ளதாக, இந்த குழுவைச் சேர்ந்தவர்கள் தெரிவிக்கின்றனர்.

இந்தப் புதிய முறையில் ஐதரசன் வாயுவை வெளிக் கொணர்வதற்கு அதிக செலவு ஏற்படுவதோடு, கூடுதல் ஆற்றலும் செலவிட வேண்டியிருக்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. எண் ணெய் கிடைக்கும் ஆழத்தைவிட கூடுதலாக 2மைல் ஆழத்தில் தான் ஐதரசன் வாயு கிடைக்கிறது என்பதே இதற்குக் காரணம்.

# அறிவியல் நகரம்!

நம் முகவரிகளில் நம் ஊர் பெயரை நகரமாகக் குறிப்பிடுவோம். ஆனால் ஜப்பானில் ஒரு நகரத்தை சேர்ந்தோர் அறிவியல் நகரம் என குறிப்பிட்டால் போதுமானது. ஏனெனில், அங்கு அறிவியலுக்கென்றே ஒரு நகரத்தை உருவாக்கி விட்டனர் ஜப்பானியர்.

ஜப்பானியர் அறிவியல் உலகிற்கு முன்னோடியாக விளங்குவதுடன் பிற நாடுகளை முந்திக் கொண்டு இந்நகரத்தை உருவாக்கியுள்ளனர்.

இந்த அதிசய நகரத்தின் பெயர் டுக்கூபா! இந்த நகரில் அப்படி என்னதான் இருக்கும்?

இந்நகரில் 53 பல்கலைக்கழகங்களும், பல ஆய்வுக் கூடங்களும் உள்ளன. இந்நகரில் பணிபுரியும் ஆய்வாளர்களின் எண்ணிக்கை எவ்வளவு தெரியுமா? 65 ஆயிரம்.



இந்நகரில் அனைத்து அறிவியல் துறையைச் சார்ந்த ஆய்வுகளும் மேற்கொள்ளப்பட உள்ளன என்பது குறிப் பிடத்தக்கது. மாதிரிக்கு சில ஆய்வுகள் இங்கே இங்குள்ள மருத்துவ ஆய்வுகளில் 50 நாடுகளிலிருந்து பல மருத்துவ மூலிகைகளின் விதைகள் விதைக்கப்பட்டு, தக்க சூழ்நிலையில் வளர்க்கப்பட்டு ஆராயப்படுகின்றன. இது மருத்துவத் துறையில் புதிய பலன்களை அளிக்குமென நம்பப்படுகிறது. அறிவியல் நகரின் அரும்பணியால் மிகப் பெரிய தொழிலக வைரம் தயாரிக்கப்பட்டுள்ளது. இதன் எடை 0.7 கிராம். சுற்றுச் சூழலில் ஏற்படும் காற்றுத் தூய்மைக்கேட்டைக் கண்டறிய லேசர் உள்ளடக்கிய ராடார் - லிசார் பயன்படுத்தப்படுகிறது. அறிவியல் நகரில் உள்ள லிசாரே உலகின் மிகப் பெரிய லிசார். இந்த லிசார் 1979 முதல் தொடர்ந்து செயற்படுகிறது. 8மாடி கோபுரத் தின் உச்சியில் உள்ள இந்த லிசார் சுமார் 60கி.மீ., விட்டத் திற்கு லேசர் ஒளியை வீசித்தூசிகளை இனங்கண்டு அதை கட்டுப்படுத்த வேண்டிய நடவடிக்கைகளை எடுக்க உதவுகிறது.

இதுபோல இன்னும் எண்ணற்ற ஆய்வுகள் நடந்தவண்ணம் உள்ளன. நாள்தோறும் புதுப்புது ஆய்வுகளும் மேற்கொள்ளப்படுகின்றன. இந்நகரத்தின் மொத்தப் பரப்பு எவ்வளவு தெரியுமா? சுமார் 28 ஆயிரம் ஹெக்யேர். ஜப்பானிற்கு மற்றொரு சிறப்பும் காத்துக்கொண்டிருக்கிறது. ஜப்பானின் கவாசாகி நகரம் வருங்காலத்தில் தகவல் நகரமாக ஆகப் போகிறது. இதனால் கணினி தொலைத்தொடர்பு கருவிகளை செயற்கைக் கோள் மூலம் உலகின் அனைத்து இடங்களுக்கும் தகவல் பரிமாற்றம் துரிதமாகவும் துல்லிய மாகவும் நடைபெறுமாம்.

# பயன்மிக்க இயற்கை பருத்தி

இந்தியாவில் முற்றிலும் இயற்கைச் சூழலில் வளர்ந்த இயற்கையான பருத்தி விளைவிக்கப்பட்டுள்ளது. இதில் தயாரிக்கப்பட்ட மெத்தைகள் அஸ்மா மற்றும் ஒவ்வாமை நோயாளிகளுக்கு ஏற்றது என தெரியவந்துள்ளது.

ஒல்லாந்தில் உள்ள 'ஸ்கால்' ஆய்வுக்கூடம், அவுஸ்திரேலியா, நியூசிலாந்து போன்றவை இந்த இயற்கைப் பருத்தித் துணிக்கு அங்கீகாரம் அளித்து பரிந்துரை செய்துள்ளன.

ரெசின் மற்றும் குளோரைட் போன்றவை இந்த இயற்கைப் பருத்தி ஆடையில் முற்றிலும் இல்லை. தற் போதுள்ள ஆடைகளில் இவை அதிகளவில் காணப்படுகின்றன.


குஜராத்தில் உள்ள மாண்ட்வி பகுதியில் முதலில் இயற்கைப் பருத்தி விளைவிக்கப்பட்டது. பருத்தி விளைவிப்பதற்கு மூன்று ஆண்டுகளுக்கு முன்னரே நிலத்தில் வேதி உரங்கள், பூச்சிக் கொல்லிகள் பயன்படுத்துவது முற்றிலும் தடைசெய்யப்பட்டது. நிலத்தில் வேதி உரங்கள், பூச்சிக் கொல்லிகள் தன்மையில்லாத சூழ்நிலையிலேயே பருத்தி விதைக்கப்பட்டது. மரபணு மாற்றம் செய்யப்படாத விதையே விவசாயத்திற்குப் பயன்படுத்தப்பட்டது.

பருத்தி விளையும் பருவத்திலேயும் எந்தவிதமான உரங்களோ, பூச்சிக்கொல்லிகளோ, களைகொல்லிகளோ பயன்படுத்தப்படவில்லை. மாட்டின் சாணமும், மண்புழு உரமுமேபயன்படுத்தப்பட்டு பருத்தி விளைவிக்கப்பட்டது.

முற்றிலும் முழுமையான அளவில் வேதிப் பொருட்கள் கலக்காத பருத்தி முதன் முதலில் இந்தியாவில் தான் பயிரிடப்பட்டுள்ளது.

பருத்தி அறுவடை, நூல்விற்றல், நெசவு, சாயமேற்றுதல் என எந்த நிலையிலும் வேதிப் பொருட்கள் கலப்பு இல்லாமல் இயற்கையான பருத்தி ஆடை தயாரிக் கப்பட்டுள்ளது.

**த.அருவி**




# கண்ணில் தூசி விழுந்தால்..

01. கையை சவற்காரம் போட்டுக் கழுவிய பிறகு, கண்ணில் அழுந்த தூசியை விரல்களால் தொட்டு எடுக்க முயலுங்கள்.

02. தூசியை நாமே எடுக்க முயற்சிப்பதைவிடவும் இன்னொருவர் உதவியோடு அதைச் செய்வது நல்லது.

03. கண்ணை அகலமாக விரித்து, சுத்தமான தண்ணீரால் கண்ணைக் கழுவுவது நல்லது.

04. நீர் நிரம்பிய பாத்திரத்தில்சுத்தமான தண்ணீரூற்றி அதில் கண்ணை அமிழும்படி வைத்திருந்து இடதுபக்கம், வலதுபக்கம் என மாற்றி மாற்றிப்பார்க்கவும். சின்னச் சின்ன கரடுகள் இருந்தால் நீங்கும்.

05. சிறிய தூசு கண்ணீரில் கலந்து தானாக வெளியேறிவிடும். வராமல் உறுத்திக்கொண்டிருந்தால், சுத்தமான துணியை நல்ல தண்ணீரில் நனைத்து, நுனியால் எடுக்க முயற்சிக்கவும்.

06. இத்தனைக்குப் பிற கும் கண்ணில் தூசு தங்கி விட் டால், எங்கேயோ ஆழமாகப் பதிந்துவிட்டது என்று அர்த்தம். இந்நிலையில் வைத்தியரிடம் செல்வதே நல்லது. நாமாக கண் ணில் எந்தமருந்தையும் விடக் கூடாது.



# உடற் பயிற்சியும் புற்றுநோயும்

உடற்பயிற்சி செய்வது பொதுவாகவே நல்லது. இரத்த அழுத்தம், நீரிழிவு நோய், இதயநோய் என்று ஒவ்வொன்றுக்கும் தனித்தனி யான உடற்பயிற்சிகளும் உண்டு. இது ஒருபுற மிருக்க, உடற்பயிற்சி செய்யாமல் இருந்தால் என்னென்ன பாதிப்புகள் ஏற்படும்? பெருங்குடல், விதைப்பை, மார்பகம் ஆகிய உறுப்புகளில் புற்று நோய் ஏற்படும் வாய்ப்பு அவர்களுக்கு அதிகம். எனவே, ஏதாவது ஒரு உடற்பயிற்சி செய்யுங்கள், அச்சமின்றி வாழுங்கள்.

# கணனிக்கு முன்னால் நீண்டநேரம் அமர்ந்து பணியாற்றுபவர்களுக்கு சில குறிப்புகள்

01. கீ போட்டுக்கு இணையாக உங்கள் கைகள் இருக்கும்படி பார்த்துக்கொள்ளுங்கள் எக் காரணம் கொண்டும் ஒரு குறிப்பிட்ட 'பாகை'க்கு மேல் மணிக்கட்டைச் சுழற்றாதீர்கள். முதுகு சற்று சாய்ந்தவாறு இருக்கட்டும். ஒருவேளை உங்கள் இருக்கை இதற்கு ஒத்துவரவில்லை என்றால், ஏதுவாக அமர தலையணையை பயன்படுத் துங்கள்.

02. கால்களை கீழே தொங்கப் போடாமல், நன்றாக தரையில் படும்படி இருக்கட்டும். சாய்வான பலகையை கீழே போட்டு அதன்மேல் கால்களை வையுங்கள்.

03. தோள் பட்டைகளை நிமிர்த்தி, தலை கணனி திரைக்கு நேரோக, அதாவது 18" முதல் 26" வரை இடைவெளி இருக்குமாறு அமரவும்.


# குழந்தைகளுக்கு பழம் கொடுக்கலாமா?

சுமார் ஐந்து மாதங்கள் ஆகும்போதே குழந்தைக்கு பழங்களை அறிமுகப்படுத்திவிட லாம். சும்மா பார்வைக்கல்ல... சாப் பிடத்தான். அப்பிள், வாழைப் பழம், பழுத்த பப்பாசி ஆகி யவை நல்லது.



வாழைப்பழத்தில் எந்தவகை என்று கேட்டால், இதரவாழைப் பழம் கொடுக்கலாம். இது குறித்து இரு விதக் கருத்துக்கள் இருக் கின்றன. முடிந்த வரை இது மலச் சிக்கலுக்கு வழி வகுக்கிறது. விட்டமின் சி சத்து நிறைய அடங்கியவை வகைப்பழங்கள். ஒரேஞ்ச், எலு மிச்சை ஆகியவை இந்த வகையைச் சேர்ந்தவை. பெற் றோருக்கு இந்த வகைப் பழங்கள் அலர்ஜி என்றால், குழந்தைக்கு சுமார் ஒன்றரை வயது ஆனபிறகு இது போன்ற பழங்களைக் கொடுத் துப் பார்க்கலாம்.

அடுக்குத் தும்மல், தோல்தடிப்பு போன்றவை உண்டாக வில்லை என்பது உறு தியானால், இந்தப் பழங்களையும் தொட ர்ந்து கொடுக்கலாம். சிலர் இந்த பழச் சாறை சுடவைத்துக் கொடுக்கி றார்கள். அது தவறு. சுடவைக் கும்போது அதில் உள்ள விட்டமின் சி சத்து அழிந்து விடும். காய்ந்த திராட்சை, பேரீச்சம்பழம் ஆகி யவை குழந்தையின் உட லுக்கு நல்லது. ஆனால் இவற்றை சாப்பிட்ட பிறகு மறக்காமல் பற்களைச் சுத்தம் செய்துவிடுங்கள்.



## மண்ணின் மைந்தர்களின் கதை

நியூட்டன், நியூட்டன்......இராகவன். நியூட்டன்.....இராகவன், நியூட்டன் இராகவன் என்று நடைபேசியில் ஆவேசமாக அழைப்பது கேட்கிறது. என்னதான் நடக்கிறது என்று எவருக்குமே தெரியாத ஒரு அச்சம் நிகழ மறுமுனையில்....

இராகவண்ணை நியூட்டன்,

எதிரியின் படைமுகாம் நோக்கி பக்கவாட்டாக நகர்ந்த அணி பாதை உடைத்துவிட்டதற்கு அறி குறியாக பெரியதொரு வெடியோசை யும் பல நூறு வேட்டோசையும் தொடர்ந்து கேட்கத்தொடங்கிவிட்டன, எமது பக்கம் மிக இடர் சூழ்ந்து விட்டது. நிச்சயமாக எதிரி உசார டையப்போகிறான் என்பது புலனாகி விட்டது. அப்படி எதிரி உசாராகிவிட் டால், நிலைமை மிகமோசமாக இருக் கப்போகிறது என்பதை அனைவரும் உணர்ந்துவிட்டனர்.

உயிரை பணயம் வைத்து எதிரியை எதிர்கொள்ளும் விடயமல்ல இது, மாறாக உயிரின் மேலாக நின்று உயிரை அழுத்தி நாடிபார்க் கின்ற ரணகளம் இது என்பதை எல்லோரும் உணர்ந்து விட்டதனால், தடை உடைப்பிற்கான உத்வே கத்தை அதிகரித்துவிட்டனர். முற்றி லும் எதிர்பார்க்காத அளவு சண்டை திசைமாறப்பார்த்ததனால், விடு தலைப்புலிகளுக்கே உரிய சீரிய பண் புடன் தனது கடமையை செய்ய தீர் மானித்துவிட்டான். ஏற்கனவே நடை பேசியில் உத்வேகம் பெற்றக்குரல்

டவாறே முன்னேற தொடங்கிவிட்டான்.

தடையணி தனது செயற் பாட்டை வேகப்படுத்திவிட்டது என்ப தைவிட, தடையணியானது மிகுந்த ஓர்மத்துடன் எதிரியின் தடைகளை உடைத்தெறிந்திட காப்புச் சூடுகளை வழங்கத்தொடங்கிவிட்டது. அந்த வேகத்தின் உச்சம் எதிரிக்கு மட்டுமே தெரிந்திருக்கவேண்டும்.

ரான தடைகள் உடைக்கப்பட்டு அணிகள் உள்நுழைகின்றன. அதே நேரத்தில் வெடியோசையையும் கடந்து இராகவனின் குரலோசை இடியாய் அதிர்கிறது.

இராகவனின் பாதுகாவலன் ஒருவன் அண்ண போகவேண்டாம்! அண்ண போகவேண்டாம். என உரக்கக் கத்தியவாறே

போதே சொன்னான் "நானென்றால் இந்தச்சண்டையில திரும்பி வருவேனோ தெரியாது" ஆனால் சண்டை பெரியளவில் வெற்றிபெறும். என்றைக்கும் அண்ணையின்ர திட்டம் பிழைத்ததில்லை என்று சொல்லி விட்டே சென்றான்.

ஓயாத அலைகள் 03 என்ற வரலாற்றுக் காவியம் வெற்றியை நோக்கி ஆரம்பிக்கும் போதே, அந்த வெற் றிச் சமரிற்காய் தன் உயிர் விலையை



# இடர்களுக்குள் நிமிர்ந்து நின்று வெற்றிகளை பெற்றுத்தந்தவன்

என்ற ஒருஅவசர குரல் பதில்சொல் கிறது. இந்த அவசர அழைப்பு இக்கட்டான சூழலை உணர்த்து கிறது.

டேய் நியூட்டன் அங்கால உடைச்சிட்டாங்கள், உன்னால முடியுமா? இல்லையா என்று சொல் என கேட்கிறான் மாவீரன் லெப். கேணல் இராகவன்.

இராகவண்ணை இப்ப உடைச்சிருவன் என்று பதில் வர சில விநாடிகள் ஒரு சலனத்தையும் காணவில்லை.

அதே சம நேரத்தில் எதிர் எதிராக பிரதான,உபகட்டளை மையத்திலிருந்து. தளபதிஜெயம் அவர்களும், தளபதி சொர்ணம் அவர்களும் இராகவனை தொடர்வு கொண்டு நிலைமையை விசாரிக் கிறார்கள்.

கலோ....5.2என்ன மாதிரி மச்சான் நிலைமை.
இங்கால உடைச்சிட்டாங்கள் கெதியா உடையுங்கோ என்றதும்....

இந்தா, இப்ப உடைக் கிறன் என்று தெளிவான குரலில் இராகவன் சொல்லும் போதே

மேலும் கடும் சீற்றத்துடன் எழுகிறது. கலோ.....5.3,......5.2,.....5.3......5.2 (என கனல் பறக்கின்ற குரல்களில் கேட்கின்றது.)

5.2, 5.3.... சொல்லுங்கோ

இந்தா இப்ப வாறன் நீ வேகப்படுத்து.

இப்படித்தான் மாவீரன் லெப்.கேணல் இராகவனின் குரல் சீற்றத்துடன் ஒலித்தது. எதிர்ப்பக்கம் எதிரிமுகாமிற்குள் புகுவதற்கு எம்மவர்கள் திட்டமிட்டத்தாக்குதல் களை தொடந்து நடத்திக்கொண்டி ருந்தார்கள். அந்த நேரத்தில்தான் இராகவன், தடையணி எதிரியின் தடைகளை உடைக்க பிரயத்தனப் படும் அந்த இக்கட்டான பகுதிக்குள் வந்தான்.

தம்பி நீ அதிலிருந்து அடி
தம்பி நீ ஓடி அங்க போ.
டேய் அடிங்கடா எல்லோரும் சேட் டையா விடுறாங்கள்

இப்ப நாங்கள் யாரெண்டு காட்டுவம். தம்பி டேய் ஓடிப்போய் வேகமா டோபிற் ரோவை வை என்று வேகமாக கட்டளைகளை இராகவன் தெளிவாக வழங்கியபடியே தடையுடைப்பணியோடு சண்டையிட்

வலம், இடமாக இரண்டு 50 கனரக உயர்வலு துப்பாக்கிகளும், இரண்டு பொதுப் பயன்பாட்டு இடை வலு துப்பாக்கிகளும், உந்து கணைச் செலுத்திகளும், இயந் திரத் துப்பாக்கிகளும், மின்னிடும் வேகத்துடன் அணலை கக்கத் தொடங்கின.


தாக்குதலின் உச்சத்தால் எதிரி நிலைகுலைந்திருக்க வேண்டும. காரணம் அவனிடமிருந்து பல நிமிடங்கள் எதுவித சூடும் வரவில்லை என்பதை உணரமுடிந்தது.

**— க. மிரேசு —**

காரிருள் விண்ணை படர்ந்திருக்க அந்த இருளை வர்ண ஜாலமிட்டு ரவைகளும் எறிகணை வெடிப்பொறிகளும் அதிசயமாக்கி காட்டிய அதேவேளை, காரிருளை கிழித்த பெரியதொரு தீப்பிளம்பு முடிவில் பெரும்வெடியோசையாக எழுந்து ஒட்டுசுட்டான் பிரதேச அமைதியை குலைத்துவிட்டது.

ஆம் வெடிமருந்துபொதி (ரோபிற்ரோ) வெடித்து தடையும் உடைக்கப்பட்டுவிட்டது.

ஒன்று..... இரண்டு... மூன்று...... நான்கு என பல தொட



இழுத்துப்பிடிக்கிறான்.

என்னை விடுடா என்ற வாறு அவனை தள்ளிவிட்டு முன்னே செல்கிறான்.

அவனது வருகையை கண்டபோராளிகள் இராகவண்ணை நீங்கள் வரவேண்டாம். நாங்கள் வேகமா பிடித்து தாரம் என கத்தி யதையும் கேளாது இராகவன் முன்னேறுகிறான்.

இராகவன் புலிப்படையின் தளபதியல்லவா, அப்படி இருக் கையில் உறங்கி விடுவானா என்ன? சிறுத்தை சீறத்தொடங்கியது.

அந்தசீற்றத்தின் உச்சம் உடன் தெரியத்தொடங்கியது. ஒட்டுசுட்டான் எதிரியின் குகைக்குள் புலிகள் சேனை புகுந்துவிட்டது. சண்டை ஆரம்பித்த உடனேயே வெற்றி எமதென நினைத்து சந் தோசப்படமுடியாது போய்விட்டது.

நெஞ்சிலே ரவைக்கூட்டு அங்கியுடன், ஒரு கையில் இயந்திர துப்பாக்கியுடனும் தலையிலே உரு மறைப்பு சாக்குத் தொப்பியுடனும் மறுகையில் நடைபேசியில் விரை வான கட்டளையை வழங்கிக் கொண்டிருந்த இராகவனின் தலை யில் எதிரியின் ரவை ஒன்று நுழைந்துவிட்டது.

சாக்குத்தொப்பியை துளை த்து மண்டை ஓட்டினூடாக ரவை வெளியேறிவிட்டது. இராகவனின் தலையிலிருந்து இரத்தம் பெருகத் தொடங்கியது.

சிறு முனகலுடன் இராக வன், தமிழ் மண்ணிலே சரிந்துவிட் டான், ஆனால் எமது வேகம் சரிய வில்லை. மாறாக பன்மடங்கு வேக முடன் உருப்பெற்று ஓயாத அலை கள் 03 வேகம் பெறத்தொடங் கியது.

மாவீரன் லெப்.கேணல் இராக வன் சண்டைக்கு வெளிக்கிடும்

முதலாய் கொடுத்தவன் இராகவன்.

எனவேதான் ஓயாத அலை கள் மூன்றில் முதல் களப்பழியான வன் என்ற பெருமையை தனதாக் கிக்கொண்டான்.

மேன்மையான தேசபக் தியும், விடுதலையின் பால் மிகுந்த நேசிப்பும் கடமையுணர்வும், தலைவ ரின் கலங்கமில்லா விசுவாசமும் கொண்டவன் இராகவன்.

வீரம், வேகம், விவேகம், படைநகர்த்தும் தந்திரம் என்பன வற்றில் இராகவன் தனிசிறப்பு பெற்றவன் என்பதை அவனது சண்டைகள் பல நிரூபித்திருக்கிறது.


மாவீரன் லெப்.கேணல் இராகவன் எல்லோராலும் நேசிக் கப்பட்ட, போற்றப்பட்ட போர்த்தளபதி. அவனை எப்போது பார்த்தாலும் ஒரு இராணுவ மேல் அதிகாரிக்கே உரிய தோற்றத்துடன் இருப்பான், போராளி களிடத்தில் மிகுந்த அன்பு கொண் டவன், ஆனால், சண்டைக்களங்க ளில் முழுமையாக எதிரியை பகைமைகொண்டு தாக்குவான். சண்டைக்களங்களில் அவனது கட்ட ளைகள் உறுதியும் இறுதியுமிக்க தெளிவான கட்டளையாகவே இருக்கும், தலைவரால் தரப்படுகின்ற எந்த இக்கட்டான கடமைகளையும் உடன் செய்து முடிப்பதில் மிகுந்த அக்கறையுள்ளவன். அவனது சண் டைகள் மிகவும் வித்தியாசமானவை.


1990ஆம் ஆண்டு எதிரி களின் கொடுமைகளை கண்டு வெகுண்டெழுந்த இராகவன் போராட் டத்தில் தன்னையும் இணைத்துக் கொண்டான். ஆரம்பப்பயிற்சிகளை முடித்துக்கொண்டு வெளியேறிய அந்தப்போராளிக்கு உடனடியாகவே களம் செல்லும் சந்தர்ப்பம் கிடைத் தது. அவனது தாயக தாகம் நிறை வேறும் நாளும் தொடர்ந்தது.

90ஆம் ஆண்டு வவுனியா மாவட்டத்தில் நடந்த சிறு சிறு தாக்குதல்களுக்கெல்லாம் இராகவ னும் தொடர்ந்து சென்று தனது போர்த்திறமையை வளர்த்துக்கொண் டான்.அவனது வேகமான கள அனு பவமே போராட்டத்தில் அவனை களத்தளபதியாக்கியது.

சிங்களப் பேரினவாதிகள் வன்னிமண்ணை ஆக்கிரமிக்க பெரும் படைகொண்டு வந்த "மின்னல்" நட வடிக்கையில் திறம்பட சண்டை செய் தவன், அந்தக் களத்திலேயே தளபதி தீபன் அவர்களால் சிறந்த சண்டை வீரன் என போற்றப்பட்டவன் "மின் னல்" நடவடிக்கை ஊடாக சண்டை யில் சாதனை செய்யத்தொடங்கிய வன் இறுதிவரை ஓயாத அலைகள் 03தொடங்கும் நாள்வரை தனது திறமைகளையும், வீரத்தையும் சண் டையில் காட்டி புலிகளின் தளபதி களில் ஒருவனாகவும் மாறியிருந்தான்.

(22 ஆம் பக்கம் பார்க்க...)



# சேவல்களின் கதையும் சொல்லாத சேதிகளும்

என்னவோ தெரியவில்லை, சிறுவயது முதலே பறவைகள்... பிராணிகள் வளர்ப்பதென்றால் எனக்கு உயிர். ஒவ்வொரு காலத்திலும் ஏதாவதொன்றைப் பிடித்துவந்து வளர்த்துவிடுவேன். நான் வளர்த்த பிராணிகளிற்கு என்ன நடந்தது என்று மட்டும் கேட்டுவிடாதீர்கள். அநேகமானவை இறந்தும்... அதிஷ்டமுள்ள சிலதப்பியும் போய்விட்டன.

நான் அப்படியொன்றும் கொடூரமனக்காரனல்ல. கொடூரமனமிருந்தால் ஏன் இவற்றை வளர்க்கின்றேன்? இறைச்சியாக்கியிருப்பேனே!

அவற்றின் போதாத காலமோ என்னவோ தெரியவில்லை, என்னிடம் வந்த இரண்டொரு நாட்களிலெல்லாம் அவை இறந்துவிடுகின்றன. அவற்றைப் பட்டினியாக்கியோ... வேறுவகையிலோ துன்புறுத்தியது கிடையாது. ஆயினும் இறந்துவிடுகின்றன.

என் வளர்ப்பு முயற்சிக்கு ஆளானவற்றின் பட்டியல் கிளி...புறா... அணில் என முவுற்று நீண்டு கொண்டேபோனது. எது சிக்குகின்றதோ அது கூண்டுக்குள்வரும்.

இவற்றைக் கூண்டுக்குள் அடைத்தபின் மனதில் ஒரேயொரு எண்ணம்தான் மேலோங்கியிருக்கும் - அந்தப் பறவைகள்... பிராணிகளெல்லாம் வெளியில் உணவு தேடிக் கஷ்டப்படுவதாகவும் கூண்டுக்குள்ளடைப்பதால் அவற்றின் சிரமம் குறைவதாகவும் எண்ணிக் கொள்வேன்.

இவையெல்லாம் பழைய கதை. பத்துவருடங்களிற்கு முந்தைய - என் பத்து வயதுவரை நடந்த கதை. நான் கூண்டுக்குள் பறவை வளர்ப்பதை நிறுத்தியே பத்துவருடங்களாகின்றது. அந்த ஞானத்தைப் புகட்டியவர் என் அம்மம்மா.

ஒரு மாரி நாளில், ஓரளவு வளர்ந்த கிளியொன்று அகப்பட்டிருந்தது. பிறகென்ன, கூண்டுக்குள் அடைத்து உணவு போட்டேன். பயற்றங்காய்... மிளகாய்... கொவ்வைப் பழம் என ஏராளம் உணவு. அன்று பாடசாலை முடிந்து வந்து பார்த்த போது கூண்டுக்குள் கிளி இறந்து கிடந்தது. நான் வைத்த உணவைத் தொட்டும் பார்த்திருக்கவில்லை.

கிளி ஏன் இறந்தது என்ற மர்மம் துலங்காமலே, கிளியை எறிவதற்கு எடுத்துப்போனேன். அப்பொழுதுதான் அம்மம்மா கிளியைப் பார்த்துவிட்டு.

"எடராசா... உனக்கேன்ரா இந்தப் பாவங்கள்... எங்கட சனத்தைச் சிறைக்குள்ள போட்டுக் கொல்லுறமாதிரியல்லோ கொல்லுறாய்... நீ நரகத்துக்குத்தான் போவாய்... அங்க சிறைதான் உனக்கு"

அதன்பின், பறவைகளைக் கூண்டிலடைக்க வேண்டுமென மனதளவிலும் நினைக்கவில்லை. அதற்குக் காரணம், நரகம் குறித்த பயமல்ல, அப்போதுதான் தர்க்க ரீதியில் சிந்தித்திருந்தேன்.

ஆயினும் ஏதாவதொன்று வளர்ப்பது என்ற நிலையில் மாற்றமிருக்கவில்லை. கூண்டுக்குள் அடைக்காமல்... அதன் சுதந்திரத்தைப் பறிக்காமல் ஏதாவது வளர்க்க விரும்பி நாயின்பால் என்கவனம் திரும்பியிருந்தது.

ஒரு நாய்க்குட்டி பிடித்தேன்; பப்பியென்ற பெயரும் வைத்தேன்.

நான் நாய் வளர்த்ததாகப் பெயர்தானே தவிர, மற்றபடி அது வீட்டில் நின்றதில்லை. ஊரெல்லாம் சுற்றிவிட்டு இளைத்துப்போய்வரும். இதனால் பப்பியும் என் அன்பிற்குப் பாத்தியதையற்றுப்போய்விட்டது.

எட்டோ பத்தோ வருடங்கள் நின்றது, ஒரு நாள்க் காணாமலே போய்விட்டது.

இந்நிலையில்தான் என் கவனம் கோழி வளர்ப்பில் திரும்பியது. கோழி வளர்ப்பால் ஏதாவதொன்றை வளர்த்தேயாகவேண்டுமென்ற என் மனமும் அடங்கும்; முட்டையுமாகும். சமயங்களில் இறைச்சியும் கிடைக்கலாம். என் நண்பனொருவனின் வீட்டுக்குப் போயிருந்தபோது, அடை பொரித்துச் சில நாட்களேயான குஞ்சுகள் சிலவற்றைக் கண்டேன். சிறு சிறு பஞ்சுக் குவியல்களாக அங்குமிங்கும் ஓடித்திரிந்த அவை என் மனதைத் திருடிவிட்டன. நானும் அடை வைப்பதாக அப்பொழுதே தீர்மானித்துக்கொண்டேன்.

அடைவைத்து எட்டுக் குஞ்சுகள் பொரித்தன என்ற பெயர்தானே தவிர, என்னிடம் இப்போது எட்டுக்குஞ்சுகளில்லை. ஆக மூன்றுதான் நிற்கின்றன. மிகுதி ஐந்தையும் பூனை... காகம்... வல்லூறு என்பன பிடித்துவிட்டன.

கிரிக்கெட்டில் பந்து வீச்சாளர்கள் கைப்பற்றும் இலக்கின் தொகையைக் குறிப்பிடுவது போலக் குறிப்பிட்டால், பூனை இரண்டையும்... [illegible]கம், வல்லூறு என்பன தலா [illegible]வொன்றையும் 'கைப்பற்றின' [illegible]க்குறிப்பிடலாம்.

உயிர் பிழைத்தவற்றில் ஒன்று சேவல், மிகுதி இரண்டும் பேடுகள்.

கறுப்பும் வெள்ளையுமான நிறக்கலவையில் சேவல் மிகவும் அழகாயிருந்தது. தன் அழகினால் என் மனதையும் கவர்ந்துவிட்டது. அப்பொழுதே ஒரு முடிவுக்கு வந்துவிட்டேன் இந்தச் சேவலை வளர்ப்பதென்று. என் அன்பிற்குப் பாத்திரமான அந்தச் சேவலுக்கு அடிக்கடி உணவிடுவேன். வீட்டில் எஞ்சிய உணவெல்லாம் அதற்குத்தான் அர்ப்பணம்.

'மளமள'வென சேவல் வளர்ந்த மாதிரியைக் கண்ட பலருக்கு ஆச்சரியம். எங்கள்வீட்டிற்கு வருவோரில் அநேகம் பேர் அதனைப் பார்த்து ஆச்சரியப்படுவதைப் பார்க்கையில் எனக்குப்பெருமை பொங்கி வழியும். எங்காவது பொறாமைப்படத் தெரியாத மனிதர்களைக் கண்டிருக்கிறீர்களா? இந்தப் பூலோகமெங்கும் தேடியும் அப்படியொருவனைப் பிடிக்க முடியாது. எங்கள் வீட்டிற்கு எதிர் வீட்டுக்காரரான இராசண்ணையும் இந்த இரகம் தான். மனிதர் சேவலைப்பார்த்துப் பார்த்து எரிச்சலினாலேயே எரிந்துவிடுவார் போலிருக்கும்.

என் சேவல் குறித்து எனக்குள்ளேயே ஏராளம் கற்பனை. மினுமினுப்பாயிருக்கும் அது வளர்ந்தபின் சண்டைச் சேவலாக்க வேண்டும்... எங்கள் வீட்டுப்பகுதியில் வேறொரு சேவல் நுழைந்து ஆதிக்கம் செலுத்தக்கூடாது.

என் சேவல் ஓரளவு பக்குவப்பட்டுவிட்டது போல்த்தான் தோன்றுகின்றது. கூவுவதற்கு மிகுந்த சிரமப்பட்டுக்கொண்டிருந்தது. மிக நன்றாகக் கூவுகின்றதே! இறக்கை அடித்து... கழுத்து மயிர் சிலிர்த்து.. கழுத்துயர்த்திக் கூவுவதே கொள்ளையழகு. கூவியபின், உடன் பிறப்புக்களான இரு பேடுகளுடன் முற்றத்தில் இராஜ நடையிடும். கழுத்தை அசைத்தபடி அது நடையிடுவதைப் பார்க்க கோடிபெறும்.

சேவல் கூவுவது சந்தோசம்தான், ஆயினும், புதுப்பிரச்சினையொன்று முளைத்து விட்டதே! அது சாதாரண பிரச்சனையல்ல.

அதாவது எங்கள் வீட்டிற்கு அடுத்த - என் சின்னம்மா - வீட்டுச் சேவல் என் சேவலைக்கொத்தத் தொடங்கிவிட்டது.

சேவல்ப் பிரச்சினையை நீங்கள் பூரணமாக விளங்கவேண்டுமெனில் எங்கள் வீட்டினதும் சின்னம்மா வீட்டினதும் அமைவிடம், வரலாறு பற்றிச் சுருக்கக் கூறவேண்டியுள்ளது.

எங்கள் வீடும், சின்னம்மா வீடும் அமைந்துள்ள இப்பெருங் காணி, தாய் வழிப் பரம்பரைச் சொத்தாகும். அம்மாவிற்குப் பாதியாகவும் சின்னம்மாவிற்குப் பாதியாகவுமுள்ளது. காணிபிரிக்க முன்பு சுற்று மதில் கட்டியிருந்தார்கள்தான். ஆயினும் காணி பிரித்தபின் எல்லை வேலியிடவில்லை. சகோதரிகள் தானே என விட்டிருக்கலாம். சின்னம்மா வீட்டில் வளர்க்கும் பெரிய சேவல்தான் இப்பகுதியின் ஒரேயொரு சேவலாயிருந்தது. எங்கள் வீட்டுப் பேடுகள் கூட அதனுடன்தான் திரியும். பேடுகள் புடைசூழ இப்பகுதி முழுமைக்குமான ஏக போகஸ்தனாக அது உலவி வந்தது.

சின்னம்மா வீட்டிற்குச் சேவல் வந்த காலத்தில், எங்கள் வீட்டிலும் ஒரு சேவல் நின்றதுதான். ஆயினும், அது எதற்குமே இலாயக்கற்றது. சின்னம்மாவின் சேவலைக் கண்டாலே சிலமைல் தூரம் ஓடிவிடும். சின்னம்மாவின் சேவலிற்குப் பயந்து வீட்டுப்பக்கம் வருவதையே குறைத்துக்கொண்டபோது, அதை வெட்டிவிட்டோம். இப்போது மீண்டும் அந்தப் பிரச்சினை கிளம்புகின்றது. எங்கள் சேவல் கூவினால் போதும், சின்னம்மாவின் சேவல் பரந்துவரும்.

**யோ. கர்னன்**

வந்த வேகத்தில் ஓரிரண்டு கொத்துக் கொத்தியதும் எங்கள் சேவல் ஓடிவிடும். சிலவேளைகளில் சின்னம்மாவின் சேவலைக் கண்டாலே ஓடிவிடுவதுண்டு. ஆயினும் ஒரு வித்தியாசம் - முன்னைய சேவல் ஓடினால் ஓடியதுதான். வெகுநேரம் வீட்டுப் பக்கமே வருவதில்லை. இது அப்படியல்ல. சின்னம்மாவின் சேவல் துரத்தியபோது எவ்வளவு இடைவெளியில் ஓடியதோ, சின்னம்மாவின் சேவல் திரும்பி வரும்போது அவ்வளவு இடைவெளியில்த் திரும்பிவரும்.

ஏன் எங்கள் சேவலைச் சின்னம்மாவின் சேவல் கொத்த வேண்டும்? கூவுவதென்பது சேவல்களின் பிறப்புரிமை. அதைத் தடுக்கும் சின்னம்மாவின் சேவலில் பயங்கரக் கோபமேற்படும். இருந்தாலும் எதுவும் செய்யமுடியாத நிலை. எறிந்து கலைத்தால் சின்னம்மா என்ன நினைக்கின்றாவோ? இதனால் ஒப்புக்குக் கலைப்பதோட சரி.

சின்னம்மாவின் சேவலுக்குள்ளது போன்ற பரிவாரம் என் சேவலிற்கில்லை. அதனுடன் பொரித்த இரண்டு பேடுகளும்தான் அதன் பரிவாரம்.

இந்த நிலை வெகு நாள் நீடித்தது.

இதற்கு ஏதாவது முடிவு காணவேண்டுமென வெகுநாள் யோசித்துக்கொண்டிருந்தேன். அப்போதுதான் அதுநடந்தது .

வீட்டின் பின்புறம் பலத்த சத்தம் கேட்கவே ஓடிப்போய்ப்பார்த்தேன். என்ன ஆச்சரியம்! சின்னம்மாவின் சேவலைக் கண்டாலே ஓடும் என் சேவல், அதனுடன் சண்டையிட்டுக்கொண்டிருந்தது. ஆயினும் சண்டை வெகுநேரம் நீடிக்கவில்லை. என்சேவல் ஓடிவிட்டது. சின்னம்மாவின் சேவல் வெற்றிக்களிப்பில் இறக்கையடித்துக் கூவியது. இப்போதெல்லாம் இந்தக் காட்சி சகஜமாகிவிட்டது. இரண்டு சேவல்களும் ஆங்காங்கே சண்டையிட்டுக்கொள்ளும். அதைப்பார்க்கையில், என் சேவலின் வலிமை அதிகரித்திருப்பது புலப்படும். ஆரம்பத்தில் சற்று நேரத்தில் ஓடிவிடும் என் சேவல், இப்போது நின்று நிலைத்துச் சண்டையிடும். அது சண்டையிடும் அழகே தனியழகுதான்.

இன்னுமொரு ஆச்சரியம் - என்னுடைய சேவலின் பரிவாரங்களும் சற்று அதிகரித்துக்காணப்பட்டன. சின்னம்மாவின் சேவலின் பரிவாரத்திலிருந்த எங்கள் வீட்டுப் பேடைகள் சில என் சேவலுடன் இணைந்திருந்தன.

ஆயினும் நான் விரும்பிய.. எதிர்பார்த்த நாள்தான் வரவில்லை. அதாவது சின்னம்மாவின் சேவலை முழுமையாகத் தோற்கடித்து... என் வீட்டுப் பேடுகளைத் தன் பக்கம் இழுப்பதுதான் அது.

அன்றொரு நாள், ஏதோ அலுவலாக சின்னம்மா வீட்டிற்குப் போய் வருகையில் இரு சேவல்களும் சண்டையிட்டுக் கொண்டதைக்கண்டேன். நின்று இரசித்துப்பார்த்தேன். இரண்டும் வெகு நேரமாகச் சண்டையிட்டுக்கொண்டன. முடிவில், இரண்டும் வெவ்வேறு திசைகளில் பிரிந்து சென்றன.

எனக்கு மிகவும் மகிழ்ச்சியாயிருந்தது. என் சேவலின் அபரிமிதமான வளர்ச்சி உவகை கொள்ள வைத்தது. நான் எதிர்பார்த்த நாள் விரைவில் வருமென்ற நம்பிக்கை துளிர்த்து.

என் சேவலின் பரிவாரத் தொகையும் வெகுவாக அதிகரித்துக் கொண்டு போனது. எங்களின் ஒரேயொரு பேடுதான் சின்னம்மாவின் சேவலின் பரிவாரத்திலிருந்தது. சின்னம்மாவின் வீட்டுப் பேடுகள் சிலவும் என் சேவலின் பரிவாரத்திலிருந்தது.

ஒருநாள் என் சேவலைப் பிடித்துப்பார்த்தேன். அதன் முகத்தில்... கொண்டையில் எனப் பல இடங்களில் காயமிருந்தது. தன்னை நிலைநிறுத்த அது கொடுத்த விலைகளவை.

இப்போதுசேவல்கள் அவ்வளவாகச் சண்டையிட்டுக்கொள்வதில்லை. தத்தமது எல்லைப்பகுதியில் சண்டைக்குத் தயாராகிவிட்டு விலகிக் கொண்டன. என் சேவலின் பலம்தான் இதற்குக் காரணமென்பதும் புரிந்தது.

சில நாட்களில்... வெகு சில நாட்களில் நான் எதிர்பார்த்த நாள் வந்தது. என் சேவல் என்ன நோக்கத்தை அடைய வேண்டுமென எதிர்பாத்திருந்தேனே, அதனை அடைந்தே விட்டது.

(24ஆம் பக்கம் பார்க்க)

## கவிதைகள்

# எனதும், மச்சானினதும் நாட்கள்

கிந்தித் தொட்டு,
கிட்டிப் புள்ளு,
பேணிபந்து,
கள்ளன் பொலிஸ்,
அடிச்சுத் தொட்டு,
ஒழிச்சும் பிடிச்சு,
கொக்கான் வெட்டு,
கீச்சு மாச்சுத் தம்பளம்,
நண்டுருது நரியூருது,
இப்படியான
எல்லா விளையாட்டுக்களையும்
நீயும் நானுமாகவே
விளையாடினோம்.
அதுவொரு பருவம்.

பிறகு எப்பன்
வளர்ந்துவிட்டாய் நீ
நான் கையைப் பற்றினால்
நாணப்படுவாய்.

கண்டாயம் தாண்டி
முற்றத்திற்கு நீ வர,
"கொத்தான் தின்ட சோறு
மிச்சமிருக்கு
அந்தக் கோப்பைக்குள்ளை
போட்டுத்தாறன்
சாப்பிடன்"
மனசுக்கள் இருக்கும்
விருப்பை
பகிடிபோலசொல்லிவிட்டு
கொடுப்பிற்குள் சிரிப்பா
என் அம்மா.

நீரில் தோய்ந்த
ஆடைகள் போலவாய்
உன்னுடைய பூப்புனித நீராட்டு விழா.
இப்போதுமெனக்கு
ஞாபகமிருக்கு
ஞாபகமிருக்கு ஈரமாய!

"உவன் கறுப்பன்
கரி ஒட்டப்போகுது
மச்சாளிலை முட்டாமல் நில்"
சித்தப்பா பகிடி விட
"அவன் கறுப்பெண்டாலும்
உறுப்பப்பா"
சித்தி ஆதரவு தர
நானருகில் நின்று படமெடுக்க
நீ வெக்கப்பட்டதும்
பின்னுன்னுதடுகள்
வெண்கொலுசாகி நகைத்ததும்...

எத்தனை எதிர்பார்ப்புக்கள்
கற்பனைகள்
அவர்களுக்கு
ஏன் பின்னாளில்
எங்களிற்குள்ளும் தானே
ஒரு ஈர்ப்பு.

காலம் எங்களை
போராளிகளாக்கியது.


காலைச்சாப்பாடு
கடமையாக வந்தால்
அதில் எப்படினேப்பன்
கிள்ளி வைத்து
மரவரலில் இடித்து
மாலையில் வடைசுடும்
சிறுமனையாக மாறும்
உனது காவலரண்.

எனது காவலரணிற்கும் வடைவரும்.
"மச்சான் சுட்டதெண்டு
நீ எடுப்பெடுக்காதை"
பெடியள் பகிடியாய் கொழுவ
நான் நைசாக நழுவ,
பம்பலாயும், வீரமாயும் களமாடிய
மறக்க முடியாத
'ஜெயசிக்குறுய்' நாட்களவை

எல்லாம்
எல்லாமே அப்படியே
றோஜாப்பூவுடன் சேர்ந்திருக்கும்
பசும் முள்ளாய்
உராய்கிறது நெஞ்சில்.

விழுப்புண்ணடைந்த போராளிகளின்
முகாமிற்கு வந்து,
நான், மச்சான் வந்திருக்கிறேன்
என்றதும்
எப்போதும் போலவே
இப்போதும் புன்னகைக்கிறாய்
மகிழ்ச்சியால் கண்ணீரை உருக்கும்
உன் விழிகளில்
பார்வை எப்ப முகிழ்க்கும்...?

ஆவரங்கால் சுதன்



# இலக்கியப்பகிர்வு

"ஆதித்த நிலா எழுதிய பன்னிரண்டு சிறுகதைகளின் தொகுப்புத்தான் "எங்கே மனக்கண்ணையும் திறவுங்கள்": "முதற்பயணம்" என்னும் சிறுகதைத் தொகுதி வெளியிடப்பட்ட நிகழ்விலேயே இந்தத்தொகுப்பும் வெளியிட்டு வைக்கப்பட்டது." முதற் பிரதியினை பெற்றுக்கொண்டவர் தமிழீழத்தேசியத் தலைவர் வே.பிரபாகரன் அவர்கள் ஆகும்.

"ஆதித்த நிலா அண்மைக் காலத்தில் புயலடிக்கும் ஒரு புதிய வரவு. ஈழநாதம், வெளிச்சம், சுதந்திரப்பறவைகள், புலிகளின் குரல் என சமகாலத்து எமது ஊடகங்களில் எழுத்தாட்சி செய்துவருபவர்."

வாழ்வின் மகா கொடுமை புரிதலற்ற வாழ்வு! புரிதல் பூச்சியமாகையில், இயல்புகள் இழுக்கடிக்கப்பட்டு நிமிர்வுகளைக்கூட வளைவுகளால் வலிந்து வரித்துக்கொள்ளும் சறுக்கல் சரிவேதான்"

"புரிதலே புத்துயிர்ப்பு, புரிதலே பலம், வளம், வாழ்வு, நிமிர்வு" என்று வலியுறுத்தும் ஆதித்தநிலா அழுத்தமாக கூறும் விடயம் இந்தப் புரிதல்தான்.

கணவன் மனைவி புரிதல், தாய் தகப்பன் பிள்ளைகள் புரிதல் என இந்தப் புரிதல் மனித வாழ்க்கையில் சகல செயற்பாடுகளுக்கும் அத்திவாரமானது.

"ஆதித்தநிலா" வின் புரிதல் தொடர்பான உச்சம் "ஆலமரம்" என்னும் சிறுகதையின் ஊடாக புரிதலை புட்டுப்புட்டு வைக்கின்றார்.

கதைநாயகி கோகிலா ஒரு சமூகவியல் பட்டதாரி. அவள் கணவன் தயானந் தன் தகுதிகாண் தமிழ் ஆசிரியர் இருவர் இடையேயும் உள்ள புரிதல் பற்றி "ஆலமரம்" கதைபேசுகிறது.

"அவ்வளவு படிச்சிருந்தும் (கோகிலா) எவ்வளவு கேள்விகளைப் படிக்கும்போது துணிந்துகேட்டவளுக்கு அவரிடம் (தயானந்தன்) மட்டும் கேட்கத்தோணுதேயில்லை. அப்பமென்டா புட்டா காட்டவேணும். அவளைப் பகிர்ந்துகொண்டவருக்கு அவளின்ரை உணர்வுகளைப் புரிய முடியாதா? என்ன? வருஷத்துக் கொண்டில குறைச்சலில்லை படிச்ச மட்டத்திலேயே இப்படியெண்டா பாமரனிட்டை எப்படி எதிர்பார்க்க முடியும்? எப்படி இருந்தவள் எப்படி பூதம் மாதிரி ஊதிப்போட்டாள்" "வாசெக்கடமி" அது இது என்று எத்தனை நவீன தடைகளை ஆண்கள் இலகுவா பயன்படுத்தக்கூடிய மாதிரிக் கிடக்குது. ஊசிபோட்டு ஊசி போட்டு ஊதிப் போனதுகளும் ஊசியாப் போனதுகளும் எத்தினை பேர். இவ்வளவையும் நினைத்துக்கொள்வாளே ஒழிய சொல்லமாட்டாள்.

"அவளது பெற்றோர்தான் அவளுக்குப் பலம். அவர்கள் புரிதல் தான் அவர்களின் எதிர்பார்ப்பும் அவளின் மூன்று சகோதரர்களுக்கும் இடையில் மூன்று வயதுகள் இடைவெளி. அவள் தந்தை எச்.என்.சி. பாஸ்பண்ணினதோட சரி. அவள் தாய் மூன்றாம் தரம் கூடப் படிக்கேல்லை."

"தன்ரை உடுப்புக்களைக் கூட வயதாகியும் இற்றைவரைக்கும் தான் தான் துவைப்பார். மறந்து போட்டிருந்தால் மட்டும் அவள் தாயோ அவளோ துவைத்திருக்கிறார்கள்."

"அவரது புரிதல் விசாலமானது. அவள் தாய் செத்தவீடு அது இது எண்டு போய் வந்தா, "தண்ணி சுடவைச்சியோ பிள்ளை பாவம் மனிசி பொழுதுபட்ட நேரத்தில பச்சத் தண்ணியில குளிச்சா விறைச்சுப் போகும்" என்ற மனைவிமீதான அக்கறை அவளைத் தொடும்.

"ஆலமரம்" சிறு கதையில் "ஆதித்தநிலா" எழுதிக் காட்டும் வரிகள்தான் மேற்கூறப்பட்டவை. "புரிதல் தொடர்பான அவரின் அக்கறையினை இதன் மூலம் அறிந்து கொள்ளலாம்."

"ஆலமரம்" கதை ஆதித்த நிலாவின் கதைகளில் குறிப்பிட்டுச் சொல்லக் கூடிய கதை.

இத்தொகுப்புக்கு முன்னதாகவே இந்தக்கதையினை நான் படித்துள்ளேன். அப்போது இதனை யார் எழுதியது என்று தெரியாது. சிறுகதைப் போட்டி ஒன்றுக்காகக் கிடைத்த ஒரு நூறு கதைகளுக்குள் வந்தது. பரிசுக்குரிய கதைகளில் ஒன்றாக என்னால் தெரிவு செய்யப்பட்டது. இறுதியில் பரிசு கிடைத்ததா? இல்லையா என்பதை என்னால் உறுதிப்படுத்தமுடியவில்லை.

ஆதித்த நிலாவின் "புருஷ லட்சணம்" கதையும் ஆண் பெண் "புரிதல்" பற்றிப் பேசும் கதைதான்.

"இரண்டாவது உரிமைகளில் மட்டுமல்ல உணர்வுகளிலையும் 50:50 தான் நானும் உயிர் உள்ள, உணர்வுகள் உள்ள மனுசி வா எண்டுற நேரம் நான் போகோணுமெண்டா, நான் வா எண்டுற போது, அது ஆபாசமெண்டா வாழத் தெரியாத வில்லங்கங்களைக் கட்டிப் போட்டு அல்லாட்ட என்னால ஏலாது."

"நான் ஒண்டும் கசாப்புக் கடைக்காரன் இல்லை. அவன் பல்லுப் பாத்துக் காசு குடுத்து மாட்டை வேண்டுறது பங்கு போட்டுக் கொள்ள. இதென்னடா எண்டா என்ர பல்லக்காட்டி நானும் காசும் குடுத்து என்னப் பங்குக்குவிட நான் ஒண்டும் அடி மாடில்ல. அறிவுள்ள மனுசி மாஸ்ரர்..."

"ஒரு சதம் குடுத்து வேண்டத் தயாரில்ல நானும் படிச்சவள். நானும் உழைப்பவள். என்னையும் என்ர அம்மா அப்பா கஷ்டப்பட்டுத்தான் படிக்கவைச்சவையள். என்ன ஆளாக்கியதோட அவையின்ரை கடமை முடிஞ்சு போச்சு. இனி செய்யவேண்டியது நான் தான்"

ஆரும் ஆருக்கும் கணக்கெழுத வேண்டாம். அறிவு இருக்கு! ஆரோக்கியமான உடம்பிருக்கு உழைப்பம், வாழுவம், தெளிவு இருந்தா வரச்சொல்லுங்கோ....."

"சொல்லுறன். மனுசனுக்கு மனுசத்தன்மை இருக்கவேணும். அறிவும், ஆளுமையும் மட்டுமில்ல பனுசன்! பண்புவேணும், பரிவு வேணும், அன்புவேணும், ஆதரவு வேணும், அழகுணர்ச்சிவேணும், புரிதல்வேணும், சிகரமாய்ப் போலிகள், வேசங்கள், உருட்டுப் பிரட்டுகள் இல்லாத உண்மை வேணும்."


"பொய்யும் புரளியும் தில்லுமுல்லுகளும் ஆண்டான் அடிமை எஜமானப் பாங்கும்தான் அறிவு எண்டா, ஆளுமை எண்டா, பண்பு எண்டா எனக்கது வேண்டாம்."

எனப் புருஷ இலட்சணம் கதையில் வலியுறுத்தும் ஆதித்த நிலாவின் கருத்து நிலையை உங்களால் புரிந்துகொள்ள முடிகின்றதா?

ஆதித்தநிலா வலியுறுத்தும் இயல்புகள் போலித்தனமோ பாசாங்கோ இல்லாதவை. உள்ளார்ந்தமாக ஆழமான நேசிப்பின் ஊடாகக் கிளைபரப்பி விரிந்து நிற்கவேண்டிய விடயங்கள். மொத்தத்தில் ஆண் பெண் உறவில் அது யாராக இருந்தாலும் முக்கியமானவை. மனிதாபிமானம் கொண்ட மனிதர்களுக்கானது.

கம்யூனிசிய மனப்பாங்கு என்பது வெறும் சித்தாந்தப் படிப்பு ஊடாக வருவது அல்ல. ஒருவனுக்கு இருக்கவேண்டிய அடிப்படை மனிதாபிமான பண்புகள் இருந்தாலே போதும். அவனுக்கு எந்த சித்தாந்தப் படிப்பும் தேவைப்படாது.

இது போலதான் "ஆதித்த நிலா"வும் தன் கருத்துகளை வலியுறுத்துகின்றார். ஆண் பெண் உறவில் இந்தப் புரிதல் முக்கியமானது. அவசியமானது. ஆபத்து இல்லாதது.





# எங்கே மனக்கண்ணையும் திறவுங்கள்

"அண்மைக்காலங்களில் ஈழத்தில் இலக்கியப் பரப்பில் நன்கு அறிமுகமாகியுள்ள படைப்பாளிகளில் ஆதித்தநிலாவும் முதன்மையானவர். காலத்தின் தேவையை உணர்ந்து தன்னைப் படைப்பாளியாக்கி கொண்டவர் இவர். இவரின் சிறுகதைகள் நெற்றிக்கண்ணில் இருந்து புறப்படும் நெருப்புப் பொறிகள். சிறுகதைக்கு எந்த வரையறையுமில்லை. அது தன்னைத்தானே வரையறுத்துக்கொள்ளும் என்பார்கள். ஆதித்தநிலாவின் கூர்மையான பார்வை, தெளிவான நடை, இயல்பான மொழி, அலட்டல் இல்லாத செறிந்த அமைப்பு என்பன இவரை தூக்கி நிமிர்த்தி இலக்கியப் பரப்பில் அடையாளப்படுத்துகின்றன என உணர்தல் எனும் பகுதியில் ஆதிலட்சுமி சிவகுமார் அவர்கள் தெரிவிப்பதில் இருந்து உங்களால் ஆதித்தநிலாவை புரிந்துகொள்ளலாம். அதைவிட அவர் படைப்புக்களை வாசிப்பதன் ஊடாக சரியா தவறா என்பதை தெளிவுபடுத்தியும் கொள்ளலாம்.

"அலைவிரிந்து
மனதிற் பதிவாயிற்று
மனப்பதிவு
எழுது கோல் எடுத்தது
எழுது கோல்
அச்சுப்பதிப்பிற்கு ஏவிற்று"


எனக் கூறும் ஆதித்த நிலாவின் தொகுப்பில் உள்ள பன்னிரண்டு கதைகளும் பல்வேறு கருப்பொருளைப் பற்றிப் பேசினாலும் அது இந்த மண்விடுதலை, சமூகவிடுதலை பெண்விடுதலை, போன்றவற்றையே அடிப்படையாகக்கொண்டது.

இணுவையூர்
சிதம்பரதிருச்செந்திநாதன்



# இளைய நாதம்


## மறைந்திருக்கும் உருவத்தைக் கண்டுபிடியுங்கள்



# எங்கள் உக்கிலான்

காட்டிறைச்சிக் கடைகளின் வாசலில் சின்ன ஆட்டுக்குட்டி யளவு உயரத்தில் பழுப்பு நிறத்தில் கொழுத்த விலங்குகள் கால்கள் கட்டப்பட்டு போட்டுக்கிடத்தியிருப்பதைப் பார்த்திருப்பீர்கள். வன விலங்குகளை வேட்டையாடத தடை என்பதால் இப்ப பார்க்க முடியாது. கொஞ்சம் 2 வருடம் பின்னால் நினைவுகளை திருப்பிப் பார்த்தீர்கள் என்றால், காட்டிறைச்சிக் கடைகளில்-வன்னியில் கால்கள் கட்டப்பட்டு எலிமாதிரி கூரான மூஞ்சியுடன் பரிதாபமாக பயத்தால் விடும் வேகமான மூச்சுகளுடன் கிடக்கும் அந்த விலங்கு, உங்கள் கண்முன்வரும். அதை உக்கிளான் என்று சொல்லவும் கேள்விப்பட்டிருப்பீர்கள்.

உண்மையில் அதன் பெயர் உக்கிளான் இல்லை உக்கிலான். இதற்கு சருகுமான் என்ற பெயரும் உண்டு. எலிமான் என்று ஆங்கிலத்தில் 'Mouse deer' என்று இது சுட்டப்படுகின்றது. எங்களின் வரண்டபாலை மரங்கள் நிறைந்த செடிகள் அல்லது கீழ்மரங்கள் உள்ள காடுகளில் இந்த உக்கிலான் அதிகமாக இருக்கிறது. காடுகளுள் இரவில் இவற்றின் நடமாட்டம் அதிகம் இருக்கும். ஏனென்றால் இந்த குட்டி - சருகு மானுக்கு பயம் மிக மிக அதிகம். தனித்தனியாக பற்றைகளுள் மரப்பொந்துகளுள் பதுங்கிக்கிடக்கும் இவை கடும்பயத்துடன்தான் நடமாடும். பயத்தால்தான் அதன் நடமாட்டம் அதிகம் இரவில் இருக்கிறது. அதிகம் இதன் வாழ்விடம் பற்றைகள் அதிகமாக இருக்கிற பகுதிகளில் மரப்பொந்துகளாக இருக்கும் அல்லது கற்பொந்துகளாக இருக்கும். இது பழுப்பு நிறத்தை கொண்டது. உடன் அல்லது திடீரென்று காணமுடியாது. கொஞ்சம் நிதானமாகப்பார்த்தால்தான் இந்த உக்கிலான்கள் தெரியும்.



சூழலைப்பாதுகாக்கும் அக்கறை அல்லது விழிப்பில்லாத எங்கடை வேட்டைக் காரருக்கும் ஊனுண்ணிகளுக்கும் உக்கிலான் திறமான ருசியான இறைச்சியாகும்.

இந்த சருகு மான் அல்லது உக்கிலான் ரகுலஸ் மெமினா (Tragulas Meminna) என்ற உயிரியல் பேரைக் கொண்டது. இதின்ர ஆக வளர்ந்த உயரம் 25 சென்ரிமீற்றர். கிட்டத்தட்ட ஒரு அடிக்கு 2அங்குலம் குறைவான உயரம். ஆண் உக்கிலானுக்கு இரண்டுபல்லுகள் கூராக வாய்க்கு வெளியில நீட்டிக்கொண்டிருக்கும். கொறிவிலங்கு என்ற கொறித்து உண்ணும்வகை விலங்கு களிலதான் உக்கிலானும் அடங்கு கின்றது. எதிரிகள் இதனை துரத் தினால் டக்கென்று ஓடி ஒளியிறது பற்றை மரங்களுக்கு இடையிலதான். சிறுத்தை , வெங்கிணாந்தி (மலைப் பாம்பு) ஆகிய விலங்குகள்தான் உக்கிலான்களுக்கு கடுமையான எதிரிகள். உணவுகள் - புற்கள், தளைகள், பழங்கள். பெண் உக்கிலான் - ஒன்று அல்லது இரண்டு குட்டிகளை ஈனும்.

# பஞ்சு-மேகமே

பறந்து பறந்து செல்கின்றாய்
பஞ்சு மேகமே
இறகு இன்றிப் பறக்கின்றாய்
இறங்கி வருவயோ...?

உறக்கமின்றி ஓடுகிறாய்
பஞ்சு மேகமே
இறங்கி வந்து என்மடியில்
உறங்கு மேகமே

கருமுகிலாய் வருகிறாய்
பஞ்சுமேகமே
இருண்டு மழை பொழிந்திடும்
பஞ்சு மேகமே

கருணை உனக்கு இல்லையே
பஞ்சு மேகமே
புரிந்தேன் உன்னை வருவாயே
பஞ்சு மேகமே.

முருகுபாரிமகன

# சொற்சிலம்பம் - 53

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ம | ர் | ஜ | கா | ற | ஏ | டு |
| கி | கா | நி | ர் | கெள | சி | த் |
| அ | ங் | ல் | ஆ | பி | எ | ட் |
| ரே | றீ | சீ | வ | உ | லி | யி |
| ண | ஆ | ம் | த் | ம | க | த |
| க் | கை | க | இ | ப் | ம் | தே |
| வு | பூ | வ | ஓ | ச | வி | ளை |

கட்டங்களில் காணப்படும் எழுத்துக்களை இணைத்து கேட்கப்படும் வினாவுக்கு விடை அனுப்பி வையுங்கள்.

## சொற்சிலம்பம் -51 இன் விடைகள்

01. பண்டாரவன்னியன்

02. இமயமலை

## சொற்சிலம்பம் - 51 இன் பரிசுக்குரியவர்

சு.பிரதீபன்,
தரம் -8
கிளி/இந்துக்கல்லூரி.

## சொற்சிலம்பம் - 51 இன் பாராட்டுக்குரியவர்கள்

01. செ.ரதினி, அடம்பன், மன்னார்.
02. செ.பிரேமலதா, கண்டிவீதி, சாவகச்சேரி.
03. ஆர்.ஜலில், மதினாநகர், வவுனியா.
04. கி.சரிதா, கொக்கிளாய் அ.த.க பாடசாலை, புதுக்குடியிருப்பு.
05. ச. நித்தியா, கோவிற்புதுக்குளம், வவுனியா.
06. க.நேசப்பிரியா, மன்/புனித/சவேரியார்/பெண் -கள் கல்லூரி.
07. கா.டக்சனா, இல.42 உதயநகர் கிழக்கு கிளிநொச்சி,
08. பா.கலாதீபன், தரம் - 10, முருகானந்தா/ம.வி.

01. அண்மையில் ஒலிம்பிக் போட்டிகள் நடைபெற்ற நாடு?

01) ..............................................

02. இலங்கையில் மிக நீளமான ஆறு?

01) ..............................................


பெயர் :- ..............................................

முகவரி :- ..............................................

சொற்சிலம்பம்-53
ஈழநாதம்.
யாழ் சாலை.
கிளிநொச்சி.

# எலியாரின் பண்டில்

பகுதி-03



ஊர்காவற்றுறைக்கு பின்வாங்கி அங்கு நிலையமைத்து சிங்களப்படைகள் அங்கு பலப்படுத்த - பண்ணைவழியாக மக்கள் தீவுகளுக்கு வந்துபோகும் நிலைஏற்பட்டது.


ஆனால், தரைத்தொடர்பற்ற எழுவைத்தீவு, அனலைதீவு, நயினாதீவு, நெடுந்தீவு நிலை அப்படி இல்லை. இதனை முன்னரே குறிப்பிட்டிருந்தோம்.

சுருவில் ஐயனார் கோவிலடி துறையூடாக இரவுவேளையில் அனலைதீவு, எழுவைதீவுமக்கள் போக்குவரவில் ஈடுபட்டிருந்தனர். ஆனால் அதற்கும் ஒருநாள் வேட்டு விழுந்தது. 1990 நவம்பர்மாதம்.

எழுவைதீவினைச்சேர்ந்த ஒருவருக்குச் சொந்தமான விடி வெள்ளி என்ற லோஞ்சு (பெரியவகை பயணிகள் போக்குவரவுப் படகுகளை லோஞ்சு என்றே இம்மக்கள் அழைப்பார்கள்) இந்த விடிவெள்ளிக்கு சாந்தா என பெயர் மாற்றம் செய்யப்பட்டிருந்தது.

இந்த சாந்தா படகு அன்று இரவு சுருவில்ஐயனார் கோவிலடி

# ஒரு பயணத்தின் மீள்நினைவுகள்... 14



துறையில் எழுவைதீவுக்கும் - அனலைதீவுக்கும் மக்களை கொண்டு செல்ல தயாராகியிருந்தது. இத்தீவுகளின் மக்களுக்கான அரிசி, சீனி, மா, பருப்பு என்பன மூட்டைகளாக படகில் ஏற்றப்பட்டிருந்தன. இவை தனியாருக்கும் ஊர்காவற்றுறை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்துக்கும் உரியது. இரவு 7.00 மணி இருக்கும். சுமார் 27 பேர் படகில் ஏற்றப்பட்டிருந்த மூட்டைகளுக்கு மேலாக ஏறியிருந்தனர். அவர்களில் எழுவை தீவு - அனலைதீவு வாசிகளும் அத்தீவுகளுக்கு பொருட்களை கொண்டு சென்ற பிற இடத்தவர்களும் இருந்தனர்.

சிறிலங்கா கடற்படையின் சுற்றுக்காவல் நேரம் முடிந்ததும் படகு ஐயனார்கோவிலடி துறையிலிருந்து புறப்பட்டது. புறப்பட்ட சிறிது நேரத்தில் சுருவில் - புளியங்கூடல் ஆகிய அயல்கிராமமக்களை அதிரவைத்த துப்பாக்கிவேட்டொலி பீரங்கிவேட்டொலி சரமாரியாக கேட்டது. கடலில் ஒளி மின்னல் தெரிந்தது. அங்கு எவரும் கடற்கரைக்கு ஓடிச்சென்று நிலைமையைப் பார்க்கும் நிலை இல்லை. காரணம் படையினரின் நகர்வுகள் ஏதாவது இருக்கலாம் என்றபயம். ஆனால் எழுவைதீவு - அனலைதீவு மக்கள் கரைக்குவந்து பார்த்தனர்.

அங்கு கடலின் நடுவில் கடற்படைப்பீரங்கிப்படகுகள் ஒரு துவம்சநடவடிக்கையில் ஈடுபட்டிருப்பது தெரிந்தது. ஆனால் என்ன நடக்கிறது என்று தெரியவில்லை.

அந்த இரவு தம்மை வந்துசேரவேண்டிய சாந்தாபடகு வந்து சேரவில்லை என்பது மட்டுமே அவர்களுக்கு தெரிந்தசெய்தி.

பொழுதுவிடிந்தது.

• ஐயனார் கோவிலடி இறங்குதுறையில் படகு இல்லை. எழுவைதீவுக்கும் - அனலைதீவுக்கும் படகு சென்றடையவில்லை. படகு காணாமல்போய்விட்டது. படகில் சென்றவர்கள் காணாமல் போயினர். இது மட்டுமே அறியப்பட்ட உணரப்பட்ட செய்தி.

அதற்கும் அப்பால் உணரக்கூடியதாக உறுதி செய்யக்கூடியதகவல் சிறிலங்காகடற்படையினரால் சாந்தாப்படகு தாக்கப்பட்டுவிட்டது. அதன் மேலேயே பயணிகள் இருந்ததால் அனைவரும் கொல்லப்பட்டுவிட்டனர். ஆனால் அவர்களின் சடலங்கள் எதுவுமே கடைசிவரை எடுக்கப்படவேயில்லை. பின்னர் அப்படகு சிறிலங்கா கடற்படையின் காரைநகர் இறங்குதுறையில் கட்டிவிடப்பட்டு நின்றதாக ஒரு தகவல்கிடைக்க பிரஜைகள் குழுவினால் இது பற்றி கேட்கப்பட்டது. ஆனால் கடற்படையினர் அப்படி எதுவும் தமக்கு தெரியாது எனக்கூறிவிட்டனர்.

அதனுடன் அந்த மக்களின் கதைமுடிந்தது. பிறகு சாந்தாப்படகு நயினாதீவு சிறிலங்கா கடற்படை இறங்குதுறையருகே கட்டிவிடப்பட்டு காணப்பட்டிருந்தது. அங்கேயே அது கடலில் மூழ்கிவிட்டது.

சாந்தாப்படகு பயணிகள் இறந்துவிட்டனர் என்பது அவர்களின் உறவினர்களின் முடிவு. ஆனால் மரணவிசாரணை - இறப்புப்பதிவு என்ற சட்டமுறைகளின்படி அவர்களுக்கு என்ன நடந்தது என்பது தெரியாது.

இன்றுவரை அவர்கள் காணாமல்போனவர்கள். மறைந்து போனவர்கள்.

இது நடந்து 14 ஆண்டுகளாகிவிட்டன.

துருவன்

# அறிவியல் பூர்வமான தொல்லியல் ஆவணம்

*வழமையான வரலாற்று அல்லது தொல்லியல் நூல்களைப்போல் முடிவுகளை வைத்து ~முடிவுகளின் அடிப்படையில் இல்லாமல் ஒரு நேர்பார்வை ஆவணப்படுத்தலாக இது அமைந்திருக்கிறது ஒரு சிறப்பம்சம். தமிழர் வரலாற்றை அறிவியல் ரீதி யாக சான்றுகள் மூலம் பார்க்கமுயல்பவர்களுக்கு இது ஒரு சிறந்தவடிவமாகும்.*




யாழ்ப்பாணத்தின் தொல்லியல்மையங்கள் ஒரு ஆவணம். இந்த தொல்லியல் பத்தியில் ஒரு நூலைப் பற்றிப் பார்க்கப்போகிறோம்.

இது ஒரு அறிவியல் பூர்வமான - தொல்லியல் ஆவணம். யாழ்ப்பாணத்தின் சகல தொல்லியல்மையங் களும் சர்வதேச முறைப்படி இந்த நூலில் ஆவணப்படுத் தப்பட்டுள்ளன.

சிறந்த தமிழ் - தொல் லியலாளரான கலாநிதி பொ ரகுபதி ஆங்கிலத்தில் வெளி யிட்ட **EARLY SETTLEMENTS IN JAFFNA - An Archaeological survey** நூலே அது.

1987 இல் இந்த நூல் வெளியிடப்பட்டது. யாழ்ப் பாணத்தில் கண்டுபிடிக்கப் பட்ட சகலதொல்லியல் மையங்களும் - ஒளிப்படங் கள் - வரைபடங்களுடன் இதில் ஆவணப்படுத்தப் பட்டுள்ளன.

இதுவே சர்வதேச தொல்லியல் ஆவணப்படுத் தல்முறையாகும் ஒரு தொல் லியல் மையம்.

- புவி இட நிலை (**Geo Position**) அகலாங்கு நெட் டாங்கு.
- வரைபடத்தில் எந்த பாகம்,
- சுற்றுச் சூழல்
- இடம்.
- மண்வகை.
- நீர்வளம்.
- இயற்கைவளம்.
- சமகாலவாழ்வுச் சூழல்.
- புவியக வளம்.
- நிர்வாகப்பிரிவு.
- ஒளிப்படங்கள்.
- கண்டெடுக்கப்பட்ட தொல் பொருட்களின் வரைபுகள்.
- வரைபடம்.
- மேற்கொள்ளப்பட்ட ஆய்வு விபரங்கள்.

எடுக்கப்பட்டமுடிவுகள் - என்ற ஒழுங்கில் ஆவணப் படுத்தப்பட்டுள்ளன.

- வழமையான வரலாற்று அல்லது தொல்லியல் நூல் களைப்போல் முடிவுகளை வைத்து -முடிவுகளின் அடிப் படையில் இல்லாமல் - ஒரு நேர்பார்வை ஆவணப்படுத்த லாக இது அமைந்திருக்கி றது ஒரு சிறப்பம்சம். தமிழர் வரலாற்றை அறிவியல் ரீதி யாக சான்றுகள்மூலம் பார் க்கமுயல்பவர்களுக்கு இது ஒரு சிறந்தவடிவமாகும்.


யாழ்ப்பாணத்தில் கண்டு பிடிக்கப்பட்ட தொல்லியல் மையங்கள் முழுமையாக இதில் பதிவுசெய்யப்பட்டுள் ளன. இப்பதிவு இந்தநூலின் முதற்பகுதி.

இந்த தொல்லியல் மையங்கள் எவை எனப் பார்ப்போம்.

- வெடியரசன் கோட்டை - நெடுந்தீவு.
- திக்கறி - புங்குடுதீவு.
- கும்புறுபிட்டி, சோழாவத்தை, நீத்தில், ஆவரந் துலா - சாட்டி - அல்லைப் பிட்டி - வேலணை,
- பூம்புகார், மணியந்தோட் டம் - அரி யாலை,
- சத்திராந்தை - காரைநகர்,
- வேரம்பிட்டி - காரைநகர்,
- திருவடிநிலை, காட்டுப் புலம், திக்கமறுவாய் - சம்புத் துறை,
- ஆனைவிழுந்தான் - இள வாலை,
- கந்தரோடை- சுன்னாகம்.
- ஆனைக்கோட்டை,
- களையோடை - நவாலி
- துலுக்கன்கோட்டை - கரவெட்டி,
- வல்லிபுரம் - வடமராட்சி கிழக்கு,
- வலிக்கண்டி - சூடத்தனை,
- நாகர்கோவில், சருகு மணல்கும்பி - வடமராட்சி கிழக்கு,
- தாளையடி - செம்பியன் பற்று - வடமராட்சி கிழக்கு,
- வெற்றிலைக்கேணி - வடமராட்சி கிழக்கு,
- பச்சிலைப்பள்ளி - பளைப பிரதேசம்,
- பாப்பராபிட்டி - சாலை,
- இருபாலை - கோப்பாய்,
- ராசமாலிகை கோப்பாய்,
- கல்வளை - மந்துவில்,
- சங்கிலியன் திடல் - வரணி,
- பங்குனிப்பிட்டி - வரணி,
- வேரக்காடு,
- கச்சாய்,
- நல்லூர்,

என்பனவே அந்த மையங்கள்.


இதைவிட சிறப்புப் பகுதியாக ஆனைகோட்டை மனிதர், சத்திராந்தை மனிதர் அகழாய்வு விபரங்களும் பட ஙகளும் - இதில் உள்ளமை. யாழ்ப்பாணத்தின் பொதுப் புவியியல் சூழல் யாழ்ப்பாண தற்போதைய சமூக அமைப்பு - ஒழுங்குகள் தொல்பொருட் களில் காபன் -14 காலக் கணிப்பு விபரம் உட்பட்ட விடயங்கள் இந்த நூலில் இடம்பெற்றுள்ளன.




யாழ்ப்பாணத்தின் தொல் வரலாற்றை அறிய ஆராய முனைபவர்களுக்கு முழுமை யான அடிப்படை ஆவணமாக **EARLY SETTLE MENTS IN JAFFNA** வில் அமைந் துள்ளது.

இலங்கையில் தமிழ ரின் தொல்இருப்பை வெளிப் படுத்தும் இந்த ஆங்கில நூல் சகலருக்கும் ஒரு புல த்தை உண்டாக்குகின்றது.

சூரலோன்




இன்று பல வீடுகளில் கணவன் மனைவியிடையே சண்டையும் சச்சரவும் நிகழ்வது வழக்கமாக உள்ளது. ஒரு குடும்பம் என்கிற போது இது சகஜம் தானே எண அலட்சியப்படுத்தி விட முடியாது. இந்த சண்டைக்கும் சச்சரவுக்குமான காரணங்களை கண்டறிந்து அல்லது கால சூழ்நிலை அறிந்து பிரச்சினையை கையாள்வது போன்ற யோகித முடிவுகள் மூலம் பிரச்சினையை தவிர்த்துக் கொள்ள முடியும். உதாரணமாக ஒரு குடும்பத்தை எடுத்துப்பார்ப்போம். அங்கே கணவன் வேலைவிட்டு வரும் நேரம் மனைவி அவரின் "மனநிலையை அறியாமல் "என்னப்பா இவ்வளவு நேரமா எங்கபோனியள்" எண்டு எள்ளாய் வெடிப்பாள். வீட்டில் யார் இருந்தாலும் பரவாயில்லை தன் ஆத்திரத்தை



# தருணமறிந்து பேசுங்கள்

அப்படியே அவ் விடத்தில் அள்ளிக் கொட்டி விடுவாள். கணவனை நேரம் பிந்தியமைக்கான காரணத்தைக் கேட்கத்தான் வேண்டும். அதற்காக இப்படி அநாகரிகமான முறையில் வார்த்தைகளை அள்ளி வீசாமல் ஆறுதலாக தனிமையில் கதைக்கலாம். மனைவி என்பவளுக்கு தன் கணவனின் முகத்தை வைத்தே அவருக்கு என்ன பிரச்சினை மனதில் இருக்கு என்றறியும் திறன் இருக்கும். அப்போதுதான் ஒரு மனைவி கணவனை எவ்வாறு புரிந்து வைத்திருக்கிறாள் என்று புலப்படும். கணவன் விடும் எந்தத் தவறையும் நாம் தருணமறிந்து பேசவேண்டும். களைத்துப் போய் வருபவருக்கு முதல் தாகம் தீர குடிக்க குளிர்பானமோ தேனீரோ கொடுத்து அவரின் களைப்பைக் குறைக்க வேண்டும். என்ன தான் தவறுசெய்யும் கணவனாக இருந்தாலும் அவரின் குறைகள் பலபேரின் முன் சுட்டிக் காட்டக்கூடாது. அப்படி மனைவி நடக்கும்போது கணவன் திருந்த வாய்ப் பில்லை. நல்ல கணவன் மாரை மனைவிமார் தங்கள் பிழைகளால் நடத்தத் தெரியாமல் பல பிரச்சினைகளுக்கு ஆளாகின்றனர். எதையும் நாம் தருணமறிந்து தான் பேச வேண்டும். கண்டபடி வார்த்தைகளை கொட்டி விட்டு பின்னர் அவைகள் எம்மை வதைக்கும் போது கவலைப் படுவதில் அர்த்தமில்லை.

குடும்பங்களில் நடைபெறும் என்ன விடயமாக இருந்தாலும் திறமைகள் என்றால் பலபேரின் முன் பாராட்டலாம். குறைகளாய் இருந்தால் அதை தனிமையில் பக்குவமாய் எடுத்துச்சொல்லி நீங்கள் செய்வது பிழை என்று விளங்கப்படுத்தலாம். இதைவிட்டு கணவனின் பிழைகளை (சின்னச் சின்ன) பலபேர் முன் அவர் இப்படிச் செய்கிறார் என்று குறைபடுவதால் எம் குடும்பப் பிரச்சினை தீராது. சரியோ தவறோ முடிவு எம் கையில்தான் இருக்கின்றது. குடும்ப விசயங்கள் நாலு சுவருக்குள் இருக்கவேண்டும். பகிரங்கமாக்கும் போது தெருவரை சென்று அது அலங்கோலமாகிவிடும். வீடு என்றால் வாசல் இருக்கத்தான் செயயும். அது போல குடும்பமென்றால் சின்னச் சின்ன சண்டைகள் இல்லாமல்இராது. அதை நாம் உணர்ந்து இன்பம் துன்பம் என்ற இரண்டும் வரும் போதும் கணவன் மனைவி இருவரும் மகிழ்வாக ஏற்று ஒற்றுமையாக இருக்க வேண்டும். இல்லறம் நல்லறமாக இதைவிட வேறு வழியுண்டா? எனவே இவற்றைப் பின்பற்றி மகிழ்வான வாழ்வை அமையுங்கள்.

சு. சிவாஜினி

# மீன் குருமா




**தேவையானவை:-**

| | |
|---|---|
| மீன் பொரித்தது | - 500 கிராம் |
| தக்காளி | - 250 கிராம் |
| வெங்காயம் | - 250 கிராம் |
| பட்டர் | - 3 மேசைக்கரண்டி |
| இஞ்சி பூண்டு | - 1 மேசைக்கரண்டி (அரைத்து) |
| சோயா சோஸ் | - 1 தேக்கரண்டி |
| தக்காளிசோஸ் | - 1 மேசைக்கரண்டி |
| மிளகுத்தூள் | - 1 மேசைக்கரண்டி |
| ரம்பை | - சிறிதளவு |
| மஞ்சல் தூள் | - 1/2 தேக்கரண்டி |
| மல்லித்தூள் | - 1 தேக்கரண்டி |
| உப்பு | - தேவையான அளவு |

**செய் முறை:-**

முதலில் பட்டரை ஒரு பாத்திரத்தில் இட்டு அதை அடுப்பில் வைத்து உருகியதும் நறுக்கிய வெங்காயம், தக்காளி, இஞ்சி, பூண்டு, ரம்பை, மிளகாய், மஞ்சள், தூள், மல்லித் தூள், சோயா சோஸ், தக்காளி சோஸ், உப்பு, பொரித்த மீன் என்பவற்றை ஒன்றன் பின் ஒன்றாக சேர்த்து சிறிதளவு நீர் சேர்த்து சிறு தணலில் வேகவிடவும்.

நீர் தன்மை வற்றியதும் அடுப்பில் இருந்து இறக்கி பாண் அல்லது இடியப்பம் போன்றவற்றுடன் சுவைக்கலாம்.

# வீட்டில் நுளம்புகளைக் கட்டுப்படுத்துவது எப்படி

வீட்டுப் பூச்சிகளால் அடையும் தொல்லைகள் ஆயிரம். தொல்லைகள் மட்டுமா? நோய்க் கிருமிகளையும் அல்லவா இவை பரப்புகின்றன. அவற்றையும் ஒழித்தாகவேண்டுமே!

நுளம்புக்குத் தாவரங்களின் சாறுதான் உணவு, ஆனாலும் இரத்தத்தையும் 'ஊருகாய்'' மாதிரி சேர்த்துக் கொள்கின்றன. இவற்றால்தான் பல நோய்க்கிருமிகளும் பரவுகின்றன. இவை தோலை மரக்கச் செய்வதற்காக நம் உடலுக்குள் திரவத்தைச் செலுத்துவதால் இது பரவுகிறது.

மலேரியா, யானைக்கால் போன்ற வியாதிகள் நுளம்பினால் பரவுகின்றன.

இவற்றை ஒழிப்பதற்கு வீட்டைச் சுற்றிலும் தண்ணீர் தேங்க விடக் கூடாது, எல்லாப்பள்ளங்களையும் மூடிவிடவேண்டும். இல்லையென்றால் மண்ணெண்ணெய் போன்றவற்றைத் தண்ணீர் தேக்கங்களில் தெளிக்கலாம்.

தூங்கும் போது நுளம்பு வலைகளையும் உபயோகிக்கலாம்.

ஆண் நுளம்பு இரண்டு-மூன்று வாரங்களில் இறந்து விடும், ஆனால் பெண் நுளம்பு இருபது வாரங்கள் வாழும், உணவு இல்லாமலும் நெடு நாட்கள் உயிரோடு இருக்கும்.

# இப்படிச் செய்யலாம்...

பிள்ளைகளின் கைச் செலவுக்ென்று பெற்றோர்கள் ஒவ்வொரு மாதமும் இவ்வளவு என்று கொஞ்சம் பணம் கொடுக்க வேண்டும். இந்தப் பணத்தை உபயோகமான துறையில் செலவு செய்யவும், சேமித்து வைக்கவும் அவர்களுக்குச் சொல்லிக் கொடுக்கவேண்டும். அப்போதுதான் பிள்ளைகளுக்கு மற்றவர்கள் காசைத் திருடவேண்டும் என்ற எண்ணமே வராது.

* * *

தேனீர் தயாரிப்பவர்கள் தேயிலைக் சாயத்தில் இரண்டு ஏலக்காய்களைப் போட்டு விட்டால் போதும் தேனீரின் வாசனையும் சுவையும் நன்றாக இருக்கும்.

* * *

காய்கறிகள் சில நாட்களுக்குக் கெட்டுப் போகாமல் இருக்க வேண்டுமா? அதன் காம்புகளை வெட்டி விடுங்கள். காம்புகளை வெட்டி விட்டால் காய்கறிகள் காய்ந்து போகாமல் இருக்கும். அழுகிப் போகாமலும் இருக்கும்.

* * *

காய்ச்சிய பால் சிலவேளைகளில் மணம்வரும், அதிகமாகக் காய்ச்சி விடுவதால் வரும் மணம் இது. இந்த மணத்தைப் போக்கப் பாலில் சில துளிகள் பன்னீரை விட்டால் போதும். இப்படிச் செய்வதால் மணமே வராது.

* * *

வீடு பகுதியில் வெளிவரும் ஆக்கங்கள் தொடர்பாக உங்களது விமர்சனங்களை எதிர்பார்ப்பதோடு, இப்பகுதிக்கு உங்கள் ஆக்கங்கள், மற்றும் குமரகுரு பரிசுத் திட்ட கூப்பன் ஆகியவற்றை கீழ் உள்ள முகவரிக்கு அனுப்பிவையுங்கள்.

வீடு,
வெள்ளிநாதம், ஈழநாதம்,
யாழ்சாலை, கிளிநொச்சி.

குமரகுரு பரிசுத் திட்டத்தின் 09 தொடக்கம் 12 வரை பரிசு பெற்றவர்களின் பெயர் விபரம்.

**பரிசுத்திட்டம் –09**
கே.நதிவதனி,
பாலமுருகன் வீதி,
இலுப்பக்கடவை,
மன்னார்.

**பரிசுத்திட்டம் –10**
ரூ.ஆனந்தசர்வினி,
10ஆம் வட்டாரம்,
புதுக்குடியிருப்பு,
முல்லைத்தீவு.

**பரிசுத்திட்டம் –11**
அ.கனிஎழில், (அ.தர்மினி)
இல.08 மீனாச்சி அம்மன்
கோவிலடி, ஆனந்தபுரம்,
கிளிநொச்சி.

**பரிசுத்திட்டம் –12**
இ.அபிராமி,
மீனாச்சி அம்மன் கோவில்டி,
வல்வெட்டித்துறை,
யாழ்ப்பாணம்.

பரிசு பெறுவது தொடர்பான விபரத்தை நாங்கள் விரைவில் உங்களுக்கு கடிதம் மூலம் தெரியப்படுத்துவோம்.


# குமரகுரு பல்பொருள் புடைவை வாணிபத்தின் பரிசுத்திட்டம்



வெள்ளிநாத வாசகிகளுக்கு கிழமை தோறும் பெறுமதிமிக்க சாறி ஒன்றை குமரகுரு புடைவை வாணிபத்தினர் பரிசளிக்கவுள்ளனர்.
நீங்கள் செய்யவேண்டியது கீழ்காணும் கூப்பனை வெட்டி நிரப்பி அனுப்ப வேண்டும். குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்படும் வாசகிக்கு பரிசு காத்திருக்கிறது.

**குமரகுரு பரிசுத்திட்டம்–14**

பெயர்:..............................................

முகவரி:............................................

...................................................


**குறிப்பு:**
ஈழநாதம் நிறுவனத்தில் கடமையாற்றும் ஊழியர்களும் அவர்களது நெருங்கிய உறவினர்களும் இப்போட்டியில் பங்குபற்றமுடியாது.




# திரைவிமர்சனம்

பெண் பற்றித் தமிழ்ச்சினிமா காட்டும் அடையாளம் எப்பொழுதும் சரிவானது; கொச்சையானது; கலங்கலானது. ஒன்றில் பெண்ணை அழவைத்துக் காட்டும். அல்லது அழகுப்பொம்மை, கவர்ச்சிப்பாவை என்ற மாதிரிக் காண்பிக்கும். பொதுவாக தமிழச்சினிமாவின் பார்வையில் பெண் ஒரு பண்டம்தான். பெண் ஒருஉயிர். உடலும் உணர்வும் நிரம்பிய உயிர். அன்பிலும், மதிப்பிலும், ஆற்றலிலும் வாழ்விலும் சரிநிகரான பங்கு அவள் என்ற பார்வை தமிழ் சினிமாவுக்கு இல்லை. மிகப்பிந்திய-நவீன கலை வடிவமான, அறிவியல் வளர்ச்சியில் தொழில் நுட்ப யுகத்தில் கண்டு பிடிக்கப்பட்ட சினிமா; பெண்ணை இப்படி மிகப்பழைய கண்ணோட்டத்தில் பார்ப்பது மிகத்துயரமானது.

ஒரு புதிய விஞ்ஞானபூர்வமான வெளிப்பாட்டுச் சாதனம், கலையூடகம், மிகப்பழைய அனுமானங்களோடு இயங்குவது வளர்ச்சி விதிக்கு மாறானது. சாதி, மதம், பண்பாடு, பெண் அரசியல் என எல்லா வற்றிலும் தமிழ்ச் சினிமாவின் பார்வையும் வெளிப்பாடும் கோளாறு நிரம்பிய குட்டையாகவே தொடர்கிறது. அபூர்வமாக அருமையாகச் சில சிறு நற்காரியங்கள் நடக்கும். அப்படியொரு சிறு புண்ணியமாக இன்னொரு சினிமா "தினந்தோறும்." பெண் ஆளுமையை சிறிய அளவில் காட்டுறது இந்தப் படம். அதிகப் பிரசங்கித்தனமில்லாமல், யதார்த்தத்திற்கு நெருக்கமாக நிற்க முனைந்திருக்கும் இந்தப் படத்தில், வேலையில்லாப் பிரச்சினை படித்த இளைஞர்களை எப்படி வைத்திருக்கிறது என்பதையும் சொல்கிறது.




படிப்புக்கும் பட்டத்துக்கும் பொருத்தமான வேலையொன்று வருமென்று வயது ஏறஏறக்காத்திருக்கும் இளைஞர்களின் பொழுதுகள் வீணே கழிவது எப்படி என்று பார்ப்பதற்கு "தினம் தோறும்" ஒரு ஆதாரம். ஆசைகள், தேவைகள், விருப்பங்கள் எல்லாம் வேலையில்லாமையால், உழைப்பின்மையால் எப்படி இயலாதவையாக சருகாகிப்போகின்றன என்பதற்கு இதில் நிறைய சாட்சியங்கள்.

அரசாங்க உத்தியோகத்துக்காக காத்திருப்பது படித்த இளைஞர்களின் ஒரு இயலாமை தான். அல்லது படித்தவர்களின் இயலாமைதான். அரசாங்கத்தில் வேலைவாய்ப்பை எதிர்பார்க்க வைக்கிறது. உழைக்க வேண்டிய வயதில், நிமிர்ந்து நிற்கவேண்டிய துடிப்பான இளமைப் பருவத்தில் ஒன்றுமே செய்ய முடியாதவர்களாக தண்டைச் சோறுதின்பவர்களாக வாழவேண்டிய நிர்ப்பந்தம். ஒரு மாயைதான் என்பதை மெல்ல உடைப்பது படத்தின் பாதி வேலை.

மீதி, விவேகமாகவும் புத்திசாலித் தனமாகவும் இயங்குகிற பெண். தீர்வுகளைக் காண்பதில் நிலைமைகளை வெல்வதில், பிரச்சினைகளை கையாள்வதில் எல்லாம் பெண்ணின் அறிவும், துணிவும் புதிய பரிமாணத்தில் துலங்குகிறது. இளைய தலைமுறை பெண்ணை ஒரு குறியீடாக இதில் இணைத்துக் காட்டுவதனூடாக இனிப் பெண்கள் புதிய ஒளிமுகமாகவே இருப்பார்கள் என்கிறது படம், அல்லது பெண் ஒளிமுகமாகவே இயங்குகிறாள் என்பதை உணர்ந்து கொள்ளுங்கள் என்பதாகவும் இருக்கிறது "தினந்தோறும்."

கிராமிய வாழ்க்கையும் சூழலும் படத்தில் அடித்தளம். பாரதிராஜாவின் படங்களுக்குப் பிறகு செழுமையாக கிராமிய வாழ்வை, யதார்த்தத்துக்கு நெருக்கமாக நின்று காட்டுவதில் இந்தப்படத்தின் இயக்குநர் நடராஜ் வெற்றிகொள்கிறார் . கமெரா படம் இயங்குகிற சூழலுக்கு எங்களைக்கொண்டு போகிறது. வெறுமனே அழகைக் காண்பிப்பதல்ல கமெராவின் நோக்கம்.

கதை நிகழ்கிற, சூழல்; பாத்திரங்கள், காலநிலை எல்லாம் பிரக்ஞை பூர்வமாக அணுகப்பட்டிருக்கின்றன. ஒரு சினிமா வெற்றி பெறுவதில் இந்த இடங்கள் எப்போதும் கூடுதல் கவனத்திற்குரியவை. மனிதர்களும் பிரச்சினைகளும் சூழலும் ஒத்திசைவுடன், சரியான அடையாளத்துடன் இருப்பதில் தான் யதார்த்தச் சினிமா தன் இலக்கை தொடுகிறது. அவற்றிலிருந்து பிரமிப்புக்கும், பிரமாண்டத்துக்கும் தாவினால் அது மிகைக்கும் யதார்த்த விலகலுக்குமாகப்போய் சறுக்கி விழும். பெருபாலான தமிழ்ப்படங்கள் தோற்பது பிரமாண்டத்திலும் கனவிலும்தான்.

பிரச்சினையின் தீவிரத்தையும் மெய்மையையும் காணத் தவறும்போதும், காட்டத்தவறும்போதும் படத்தின் மீதான பார்வையாளரின் அவதானமும் ஈர்ப்பும் மேலோட்டமாகிவிடும். இங்கே எல்லாமே யதார்த்தத்துக்கு நெருக்கமாக வருகையில் படத்தின்மீதான ஈர்ப்பும் மதிப்பும் உயர்கிறது.

முரளி, சுவலட்சுமி உட்பட பல பாத்திரங்கள் படம் காட்டுகிற வாழ்வில் வாழ்கிறார்கள். இசையும் கமெராவும் பொருந்தி வந்திருக்கின்றன. கூடுதல் வெற்றி கமெராவுக்குத்தான். கமெரா காட்டுகிற வாழ்வையும் காட்சிகளையும் திரும்பத்திரும்ப பார்க்கத் தோன்றுகிறது. நடராஜ் என்றொரு புதிய- இளைஞர் இயக்குநர் "தினந்தோறும்" அவருடைய அடையாளத்தை, பிரக்ஞையை, திசையை, வழியை எல்லாம் காட்டுகிறது. தமிழ்ச்சினிமா பார்வையாளர்கள் இனங்காணவேண்டிய, ஆதரவு தரவேண்டிய இன்னொரு நல்லமுகம் நடராஜ் "தினந்தோறும்" அதற்கொரு சாட்சி.

**ஆரதி**

# சாப்பாட்டுக் கடை அதிகாரம்

இரவு, நகரிலுள்ள சாப்பாட்டுக்கடையொன்றிலிருந்து பாண் வாங்கிச் சென்றேன். வாங்கிய மூன்று பாண்களிலும் தாராளமாக எறும்புகள் மொய்த்திருந்தன. இந்த மூன்று பாண்களையும் தரும்போது "இவை பின் நேரம் புதிதாக வந்த பாண்கள்" என்று கடைக்காரர் சத்தியம் செய்யாத குறையாக உறுதிபடக் கூறியிருந்தார். இந்தப்பாண்களை அவர் பையில் போட்டுத்தந்ததால் இவற்றில் எறும்புகள் இருந்ததையோ, இவை பழைய பாண்கள் என்பதையோ கவனிக்க முடியாமற்போய்விட்டது.

அப்படியே மூன்று பாண்களையும் வீசுவதைத்தவிர வேறுவழியிருக்கவில்லை. வயிற்றில் வெறுமனே தண்ணீரை நிரப்பிவிட்டு கடைக்காரரைத் திட்டியபடி படுப்பதைத்தவிர வேறு வழிகளிருக்கவில்லை.

இது ஒரு உதிரிச்சம்பவமல்ல. எங்களின் சூழலிலுள்ள எல்லாச் சாப்பாட்டுக்கடைகளின் கதையும் ஏதோ ஒரு விதத்தில் இப்பிடித்தானிருக்கின்றன.

பல கடைகளில் சுத்தமில்லை. எத்தனை அறிவித்தலையும், கண்டிப்புகளையும் யார்தான் சொன்னாலும் அவை திருந்துவதாகத் தெரியவில்லை. பலகடைகளின் உட்பக்கம் அல்லது பின்பக்கம் போனால் அந்தக்கடைப்பக்கம் பார்க்கவே மனம் வராது. அந்தளவுக்கு துப்பரவில்லாமல் சமையல்கூடமே இருக்கும். வேலைசெய்பவர்கள் இருப்பார்கள்; கிணற்றடியிருக்கும்; அவர்கள் பயன்படுத்துகிற மலசல கூடமிருக்கும். சில சாப்பாட்டுக்கடைகளில் கிணறுகளே இருப்பதில்லை.

பதிலாக வெளியேயிருந்து வேலையாட்களின் மூலமாகத் தண்ணீரைப் பெற்று கடையை நடத்துகிறார்கள். இப்படி எடுக்கப்படும் தண்ணீரை அவர்கள் பொன்னைவிடவும் சிக்கனமாகவே பாவிகிறார்கள்.


அரிசி கழுவிய தண்ணீரில் மரக்கறியைக் கழுவுவார்கள்; பிறகு மரக்கறி கழுவிய அந்தக்கழிவு நீரில் மீனைக்கழுவுவார்கள். ஆக "நீரின் பயனை மிக உச்சமாகப் பயன்படுத்துவார்கள்; பெறுபவர்கள் நாங்கள்தான். இல்லையென்றால் இப்படி ஒன்றின் கழிவுநீரைஏனைய எல்லாவற்றுக்கும் பாவிப்போமா" என்று கேட்பதுபோலத் தோன்றும் இந்தச் சாப்பாட்டுக்கடைக்காரர்களின் செய்கைகள்.

சிலகடைகளில் சாப்பிட்ட பின் கைகழுவுவதற்கே சரியான, துப்புரவான இடமிருக்காது; இடமிருந்தாலும் தண்ணீர் இருக்காது. கழிவுகளைப் போடுமிடத்தை எட்டிப்பார்த்தால் குமட்டல்தான் வரும். அந்தளவுக்கு அந்த இடத்தை வைத்திருக்கிறார்கள்.

இதைவிட வேறு விடயங்களும் இருக்கின்றன பாருங்கள்.

கடைகளுக்குச் சாப்பிடப் போனால் அங்கே உபசரிப்பாளர்கள் உரியநேரத்துக்குவந்து கவனிப்பதில்லை. நீண்ட நேரக்காத்திருப்புக்குப்பிறகு, பொறுமையின் கடைசி நுனிவரை எம்மை விட்டுவிட்டுத்தான் 'என்ன வேணும்' என்று கேட்டு வருவார்கள் நாங்கள் வேண்டியதைச் சொன்னால் உள்ளே அவற்றை எடுத்துவரப் போனவர் போனவர்தான். மீண்டும் காத்திருக்க வேண்டியது தான். பிறகு வேறொரு உபசரிப்பாளர் வருவார். என்ன வேணும் என்று கேட்பார். சொன்னால் அதைக் கேட்டு விட்டு அவரும் போய்விடுவார். பிறகு இரண்டுபேரையும் காணக்கிடைக்காது. நீண்ட தாமதத்தின்பிறகு ஆடி அசைந்துகொண்டு வருவார் ஒருவர். ஏதோ புண்ணியத்துக்குத் தருவது போல பரிமாறல் நடக்கும். மடங்களில் சத்திரங்களில் அன்னதானம் கொடுப்போர்கூட சாப்பிடவருவோரை மதித்து, அன்பாக உபசரித்தே சாப்பாட்டைப் பரிமாறுவார்கள். ஆனால் காசுவாங்குகிற கடைகளில் அலட்சியமும், பாராமுகமும் ஏனோதானோ என்ற நிலையும் வரக்காரணம் என்ன? தொடர்ந்தும் இந்த நிலையிருக்கும் நோக்கமென்ன?

ஒருதடவை ஒருவர் கடையொன்றுக்கு சாப்பிடப் போயிருந்தார். வழமையைப்போல நீண்டநேரத்துக்குப்பிறகு 'என்னவேணும்' என்று கேட்டுவந்தார் உபசரிப்பாளர். அவ்வளவு நேரமும் காத்திருந்த கோபத்துடன் இருந்தவர் சொன்னார் 'வாசிக்கப் பேப்பர்வேணும்' என்று உபசரிப்பாளருக்கு ஒன்றும் விளங்காமல் விழித்துக்கொண்டிருந்தார். "இவ்வளவு நேரம் இங்கே சும்மா எப்படி இருப்பது? பொழுது போவதற்கு பேப்பரைத் தாருங்கள்' என்று வந்தவர் கேட்டார் பதிலடியாக. 'இதென்ன சாப்பாட்டுக்கடையா அல்லது பொழுது போக்கு இடமா" என்று கேட்டார் மேலுமவர். உபசரிப்பாளர் பேந்தப் பேந்த விழித்துக்கொண்டு நின்றார். அவ்வளவுக்கு அக்கறையில்லாமல் இருக்கிறார்கள் கடைக்காரர்கள்.



வேறொருதடவை இருவர் சாப்பிடக் கடைக்குப்போயிருந்தார்கள். உபசரிப்பாளரிடம் தமக்குத் தேவையான உணவுக்கு ஓடர் கொடுத்துவிட்டு காத்திருந்தார்கள் இருவரும். நீண்ட நேரமாகிவிட்டது. போனவர் வரவில்லை. மற்ற உபசரிப்பாளர் வந்து இவர்கள் நீண்டநேரம் காத்திருப்பதைப் பார்த்துவிட்டு ' என்ன வேணும்' என்று கேட்டார். "போன வாரம் இரண்டு சாப்பாட்டுக்கு ஓடர் கொடுத்திருந்தோம். அதுக்காகத்தான் இப்ப காத்திருக்கிறோம்" என்றார்கள். அருகில் இதைக் கேட்டுக் கொண்டிருந்தவர்களுக்குச் சந்தோசம் தாங்க முடியவில்லை.

ஏனென்றால் அவர்களும் இப்படிக் காத்துக்கொண்டிருந்த வர்களல்லவா!

சாப்பிடவருபவர்களின் நேரத்தைப்பற்றிக் கடைக்காரர்கள் சிறிதும் யோசிப்பதில்லை. சில கடைகளில் ஆளணி இல்லை, சில கடைகளில் வேண்டிய ஆளணி இருந்தும் கவனிக்கும் ஏற்பாடுகள் சீராக இருப்பதில்லை. பசியோடு வருபவர் வேறு வேலைகளுக்கிடையில், பஸ் பயணத்துக்கிடையில் சாப்பிட்டுவிட்டுப்போகலாம் என்று வந்தால் கடைகளிலுள்ள நிலைமையோ மந்தகதியில் இருக்கிறது.

சாப்பாட்டுக்கடை வைத்திருப்பவர்களில் சிலர் ஆமை ராசிக்காரர்களோ என்றொரு நண்பர் ஆச்சரியத்தோடு கேட்டது சிலவேளைகளில உண்மைபோலத்தான் தோன்றுகிறது.

கடையில் கவனிக்க வேண்டிய பலதை இந்தக் கடைக்காரர்கள் கவனிப்பதில்லை. அது பற்றிய அக்கறையும் அவர்களுக்கிருப்பதாகத் தெரியவில்லை.

கடைகளில் நெரிசல் அதிகமானால் கடுமையான புழுக்கமிருக்கும். அதைப் போக்குவதற்கு மின் விசிறியைப் பாவிப்பதுபற்றி எந்தச்சாப்பாட்டுக்கடைக்காரரும் யோசித்ததாக இல்லை. பதிலாக 'காட்டுக்கத்தலில்' குப்பைத்தனமான பாடல்களை ஒலிக்கவிடுவார்கள். காதுச்சவ்வு கிழிந்து விடுமளவுக்குச் சத்தத்தைக் கூட்டிவிட்டு கதைப்பதும் கேட்க முடியாமல் சொல்வதும் கேட்கமுடியாமல் வாடிக்கையாளர்கள் அவதிப்படுவதில் அப்படி என்னதான் சுகமோ இவர்களுக்கு? சாப்பாட்டுக்கடை என்றால் சத்தமிட்டுப் பாட்டுப்பாட வேண்டும் என்று என்ன விதிமுறை இருக்கிறது? அல்லது யார் கேட்டார்கள் இவர்களை அப்படிப் பாட்டுக்களைப் போடுங்கள் என்று?

அமைதியாக இருந்து. ருசித்துச் சாப்பிடுவதற்கு வகையில்லாத நிலைமைதான் எங்கும் பரவி வருகிறது.


இந்தத் தொல்லைகள் ஒரு பக்கமென்றால் மறுபக்கத்தில் வேறு பிரச்சினைகள்.

சாதாரணமாக ஒரு கடையில் சாப்பிடுவதற்குப் பெருந்தயக்கமாயிருக்கிறது. நகரிலுள்ள சில பெரும் உணவகங்களில் உள்ளூர் உணவு வகைகளுக்கு இடமில்லை. சாதாரணமாகச் சாப்பிடுவதற்கும் அங்கே முடியாது. எல்லாமே சீன வகை உணவுகளும் வட இந்திய - பிராமணிய உணவுகளும்தான் அங்கே பரிமாறப்படுகின்றன. அவற்றுக்கான கட்டணமும் உச்சத்தில்தான். நமது உணவுவகைகளை அங்கே விற்பனை செய்வது அந்த உணவகங்களுக்கு பெருமைக்குறைவாக இருக்கலாம். அல்லது, அவை அவற்றை வெட்கக்கேடாகவும் கருதலாம்.

(24 ஆம் பக்கம் பார்க்க)


**வெளிவாசல்பாலன்**

# கைகளுக்கு கிட்டுமா...? கைநழுவிப்போகுமா...?



உலக கிண்ண கிரிக்கெட் போட்டிகளில் மூன்று தடவை அதாவது 1987,1999,2004 களில் கிண்ணத்தைக்கைப்பற்றி கிரிக்கெட் என்றால் அவுஸ்திரேலிய அணி என மனக் கண்முன் கொண்டுவந்த அணி அவுஸ்திரேலிய அணி.

ஆனாலும் மூன்று தடவைகள் உலக கிண்ணத்தை சுவீகரித்துக்கொண்ட இந்த கிரிக்கெட் புயல்களால் இன்னும்தான் மினி உலக கிண்ணத்தை கைப்பற்றமுடியவில்லை என்பது நம்புவதற்கு சற்று புதினமாகத்தான் இருக்கிறது.



ஆனால் இப்போது இங்கிலாந்தில் நடைபெற்றுவரும் மினி உலக கிண்ணபோட்டிகளில் தங்கள் அணி நிச்சயமாக கிண்ணத்தை கைப்பற்றி தங்கள் நாட்டிற்கு போகவேண்டும் என துடிப்போடு இருக்கிறது.

ஆனாலும் தொடர்ந்து ஒரு நாள் போட்டிகளில் பிரகாசித்து வரும் அவுஸ்திரேலிய அணி கிண்ணத்தை கைப்பற்றிச் சென்றுவிடும் எனஅறுதியிட்டுக் கூறமுடியாது.

காரணம் இந்த போட்டியில் பங்குகொண்டுள்ள அணிகள் ஒவ்வொன்றுமே தனித்தன்மைகளோடு போட்டியிட்டு வருகின்றன.

ஆனால் அதிகமான கிரிக்கெட் விமர்சகர்களும் இரசிகர்களும் அவுஸ்திரேலிய அணியே மினி உலக கிண்ணத்தை கைப்பற்றும் என நம்புகிறார்கள்?

இந்தமுறை மினி உலகக் கிண்ணம் அவுஸ்திரேலிய அணியின் கைகளுக்கு கிட்டாமல் நழுவிவிடுமா என்பதை பார்க்க சற்று பொறுத் திருக்கத்தான்வேண்டும்.

# நடக்கப்போவது போரா? போட்டியா?



இந்திய- பாகிஸ்தான் கிரிக்கெட் போட்டி என்றால் இந்திய இரசிகர்களையும் பாகிஸ்தானிய இரசி கர்களையும் ஆவேசம்கொள்ளவைப் பதுண்டு.

அதேபோன்றுதான் இந்திய பாகிஸ்தானிய அணி வீரர்களும் தங்களுக்கிடையில் நடைபெறும் போட்டியில் கரிசனையோடு விளை யாடுவதுபோல வேறு அணிகளுக் கிடையில் நடைபெறும் போட்டிகளில் விளையாடுகின்றார்களா என்றால் சற்று சந்தேகமாகவே இருப்பதுண்டு.

அந்தளவுக்கு இந்திய பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான போட்டி சூடு, சுவாரஸ்யம் நிறைந்தது.

பொதுவாக இவ்விரு அணி களுக்கிடையில் நடைபெறும் போட் டியே உலக கிரிக்கெட் ரசிகர்க ளுக்கு அதிகவிருந்தளிப்பதுண்டு.

இத்தகையதொருபோட்டி எதிர்வரும் பத்தொன்பதாம் திகதி நடைபெறுகிறது.

இந்த போட்டியில் பாகிஸ் தானிய அணியை இந்திய அணி வெற்றிபெருமா? என்பதையோ இந்திய அணியை பாகிஸ்தான் அணி வெற்றிபெறும் என்பதையோ நிச்ச யம் எதிர்வு கூறுவது முடியாது.

ஆனால் பாகிஸ்தான் அணியை பொருத்தவரை அடுத் தடுத்து இந்திய அணியை வீழ்த்தி உத்வேகம் கொண்ட மனோநிலை யிலிருக்கும் அணியாக திகழ்ந்து வருகிறது.

அத்தோடு இந்திய அணி க்கோ தனது நட்சத்திர வீரர் சச்சின் டெண்டுல்கரை இழந்து பலவீனமான மனோ நிலையிலிருக்கிறது.



இந்தநிலையில் இந்திய அணி பாகிஸ்தான் அணியை எதிர் கொள்ளப் போகிறது.

அத்தோடு இந்தப் போட்டி யில் தோற்றுப்போகும் அணி மினி உலககிண்ணப் போட்டியில் அரை இறுதிப் போட்டிக்கான வாய்ப்பை இழந்து நாடு திரும்பவேண்டியது தான். பாகிஸ்தானிடம் தோற்று இந்திய அணி நாடு திரும்புவதை இந்திய அணியோ இந்திய அணியிடம் தோற்று பாகிஸ்தான் அணி நாடு திரும்புவதை பாகிஸ்தான் அணியோ விரும்பாது. ஆகவே போட்டி, போட்டியாக அல்லாமல் கிரிக்கெட் போராகவே நிச்சயம் இருக்கும்.

**மகிழன்**


# சினிமாவுக்கு மட்டுமல்ல கிரிக்கெட்டுக்கும் "ஒஸ்கார்"

உலகில் கொலிவூட் நட்சத்திரங்கள் பெற்றுவரும் 'ஒஸ்கார்' விருதை பெறும்அன்றைய நிகழ்வு ஒரு உன்னதமான நிகழ்வாகவே இருந்து வருகிறது.

அத்தகைய நிகழ்வுகளில் இன்னொரு நிகழ்வாக இடம்பிடித்திருக்கும் நட்சத்திரங்கள் கிரிக்கெட் வீரர்கள்.

கிரிக்கெட் 'ஒஸ்கார்' என்று அழைக்கப்படும் இந்த விருதுகளை சர்வதேச கிரிகெட் சபையினால் (ஐ.சி.சி) வழங்கப்படும் இந்த விருது இனி கிரிக்கெட் உல்கை இனி கவர்ந்திழுக்கவே செய்யும்.

இந்தவிருது வழங்கும் நிகழ்வில் பல கிரிக்கெட் ஜாம்பவான் களை பின்னுக்குத் தள்ளி பல புதிய இளம் வீரர்கள் முன்னணி வகித்திருக்கின்றார்கள்.



சச்சின் டென்டுல்கர், பிறைன்லாறா. முத்தையா முரளிதரன் மத்தியூஹைடன், ஜக்ஸ்,கலீஸ், அன்ரி பிளின்டப் போன்றோர்களை கூட பின்னுக்கு தள்ளியிருக்கிறார்கள்.



அந்த விருது பெரும் நிகழ்வில் பெருமைக்குரியவர்களாக திகழ்ந்தவர்களில் முக்கிமான வர்களுள் இந்திய அணியின் துணைத் தலைவர் ராகுல் ட்ராவிட் முக்கியமானவரே.

அண்மைக் காலமாகவே கிரிக்கெட் போட்டிகளில் ஒரு நாள் மற்றும், டெஸ்ட் போட் டிகளில் அதிகம் பிரகாசித்தவராகவும் அவர் திகழ்கிறார்.

ராகுல் ராவிட்டில் அதிக உழைப்பிற்கான பரிசாக அவருக்கு கிடைத்த 'உலகின்தலை சிறந்த கிரிக்கெட்வீரர்' என்ற விருதும், உலகின் தலைசிறந்த டெஸ்ட் வீரர் விருதும் கிடைத்து இருக்கிறது.

இந்திய அணியின் விக்கட் கீப்பராகவும் இருக்கும் ராகுல் பாகிஸ்தான் மற்றும் அவுஸ்திரேலியா போன்ற பலம்பொருந்திய அணிகளுக்கு எதிராக அடித்த இரட்டைச் சதங்கள் நிச்சயம் பாராட்டுக்குரியதே.

இதேபோன்று அண்மையிலே இளம் வீரராக பிரகாசிக்கதொடங்கியிருக்கும் இக்பான் பதானும் கவனத்தையும் வசிகரிப்பையும் ஐ.சி.சியினரிடே யேயும் கிரிக்கெட் ரசிகர்களிடேயேயும் பெற்றிருக்கிறார்.

சிறந்த இளம் கிரிக்கெட் வீரர் என்ற விருதை தட்டிச் சென்றிருக்கும் இர்பான் பதான் இந்திய அணியில் இருக்கும் சகிர்கான், அசிஸ் நெஹ்ரா, போன்றோரோடு பேசுமளவிற்கு பிரகாசிக்கிறார் என்றால் மிகையாகாது.

இதே போன்று இலங்கை அணியில் மிதவேகப் பந்து வீச்சாளரான சமிந்தவாசும் விருதை தட்டிச் சென்றுள்ளார்.

ஆனால் பெருமைக்குரிய இந்த விழாவில் விருதுபெற்ற வீரர்கள் பலர் பெருமை பெற்றது என்பது உண்மையே என்றாலும் உலகின் டெஸ்ட் போட்டிகளில் அதிக விக்கட்டுகளை வீழ்த்தி பெருமையைத் தேடி வைத்துள்ள முத்தையா முரளிதரனை புறக்கணித்ததன் மூலம் ஐ.சி.சி தனக்கான அபகீர்த்தியை தேடிக்கொண்டதும் நிச்சயம் உண்மையே.

**புகழன்**

# வீரர்கள் சாதனை படைத்தால் போதுமா?


உலகிலுள்ள கிரிகெட் விளையாடும் நாடுகள் சில அன்று தொட்டு இன்றுவரை சாதனைகளை நிகழ்த்திவந்திருப்பதை அறிந் துள்ளோம். ஆயினும் அந்நாடுகளை நிர்வகிக்கும் I.C.C என்ற நிறுவனமே இப்போது சாதனைப் படைத்துள் ளதை நாம் கவனத்தில்கொள்ள முடியாது. அது தற்போது வெளி யிட்டுள்ள தரப்படுத்தல் வரிசையும் அளித்த பரிசுகளுமாகும்.

ஒரு துடுப்பாட்ட வீரர், அல்லது பந்து வீச்சாளர் ஏற்படுத்திய சாதனையை அதன் பின்னர் முறிய டிப்பவர் சாதனையாளராகின்றார். இது ஒரு வாரத்தினுள்ளாகவோ மாதத்தினுள்ளாகவோ பல வருடங்களிலோ நிகழலாம். அந்த வகையில் சிறிலங்கா கிரிக்கெட் அணியின் பந்துவீச்சாளர் முரளிதரன் இந்த நூற்றாண்டில் சாதனை வீரராகின்றார். அவர் 519 விக்கட்டுக் களை கடந்த போது உலக கிரிக்கட் ரசிகர்கள மானசிகமாகவேனும் பாராட்டியிருப்பார்கள் என்றே கூறலாம்.

எனினும் இச்சாதனை களை சகிக்கமுடியாத நிறை வெறியினர் முரளியின் பந்துவீச்சு பற்றி பெரும்விமர்சனங்களை வெளியிட்டுவந்தனர். அதற்கு I.C.C எனப்படும் சர்வதேச கிரிக்கெட் சபையும் ஒத்து ஊதியது. எனினும் அதன் பின்னரும் முரளிதரன் போட்டி களில் பங்கேற்றார், விக்கட்டுக்களை வீழ்த்தினார்.

இந்த நிலையில் அண்மை யில் வருடத்தின் சிறந்த டெஸ்ட் துடுப்பாட்ட வீரர், ஒருநாள் போட்டி களின் துடுப்பாட்ட வீரர், பந்துவீச்சாளர் ஆகியோருக்கு I.C.C விருது வழங்கி கௌரவித்தது. இந்த நிகழ்வுக்கு பெரும் எதிர்பார்ப்புடன் சென்ற முரளி தரன் அதிர்ச்சித் தோல்வியடைந்து மீண்டுள்ளார். மனச்சாட்சி கொண்ட யாரும் இந்த சம்பவம் பற்றி சிந்திக் காமல் இருக்க முடியாது. கிரிக்கெட் உலகின் நீதிபதியாக கடமையாற்றும் I.C.C தனது தரப்படுத்தலில் பாரபட் சம் காட்டியிருப்பது தெட்டத் தெளி வான உண்மையாகும்.

அத்துடன் I.C.C கெண்ய அணி தொடர்பாகவும் மாற்றான்தாய் மனப்பாங்கை கொண்டிருப்பதாக அவ் வணியின் தலைவர் குறை கூறியுள்ளார். அதாவது தனது அணிக்கு உள்நாட்டிலோ வெளி நாட்டிலோ முத்தரப்பு ஒரு நாள் போட்டிகளுக்கு சந்தர்ப்பம் அளிக்க



வில்லை எனவும் தனது திறமையை மழுங்கடிக்கச் செய்திருப்பதாகவும் தெரிவித்துள்ளார். இவ்வாறான செயற் பாடுகள் மூலம் அணிகள் அல்ல I.C.C யே பெரும் சாதனை படைப்பதாக எண்ணத் தோன்றுகிறது. எனவே மீண்டும் ஒரு தரப்படுத்தலில் I.C.C சிறந்த தரத்துடன் முடிவுகளை எடுக்கவேண்டும் என்பது உலக கிரிக்கெட் அணிவீரர்களினதும் ரசிகர்களினதும் எதிர்பார்ப்பாக இருக்கும்.

**சம்பத்**

பயணம்-03





# ஏதோ... கிடக்கிறதக்கொண்டு எங்கட சீவியம் போகுது...!

## முல்லை.பொன்நகர், நளாயினி குடியிருப்பு மக்கள்

முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறைப்பற்று பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட பொன்நகர் கிராமம் 1985ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட கிராமமாகும். இதில் வாழும் மக்கள் திருகோணமலை தென்னமரவாடி, முல்லைத்தீவு கொக்கிளாய், கொக்குத்தொடுவாய் ஆகிய இடங்களில் இருந்து இடம்பெயர்ந்து 1985 முதல் இக்குடியிருப்பில் வசித்து வருகின்றனர்.



இவர்களுடன் 1995இல் யாழ்நகர் இராணுவத்தால் ஆக்கிரமிக்கப்பட்டதன் காரணமாக இடம்பெயர்ந்து வந்த மக்களைக் கொண்டு இப்பொன்நகர் கிராமத்தின் பின் பகுதியில் நளாயினி குடியிருப்பு எனும் குடியிருப்பு அமைக்கப்பட்டது. தற்போது இதில் பெரும்பாலானவர்கள் யாழ் சென்றுள்ள நிலையில் சுமார் 29 குடும்பம்பங்கள்வரை வாழ்ந்து வருகின்றனர். இதே போன்று பொன்நகரில் சுமார் 60குடும்பங்கள்வரை வாழ்ந்து வருகின்றனர்.

இக்கிராமத்தில் வாழும் மக்களின் இன்றைய நிலை குறித்து அறிந்துகொள்ளும் முகமாக இக்கிராமத்திற்குச் சென்றோம். அங்கு நளாயினி குடியிருப்பில் வசிக்கும் அருள்நேசன் இந்திரா, அவர்களை நாம் சந்தித்தபோது..

"எங்கட சொந்த இடம் சுழிபுரம் யாழ்ப்பாணம், எங்கட இடத்துக்கு போகேலாது. அங்க ஆமி விடமாட்டான். நாங்கள் இந்த குடியிருப்புக்கு வந்து எட்டு வருசமாகிது. எங்களுக்கு ஆரம்பத்தில வீடுபோட்டுத்தந்து இஞ்ச குடியிருத்தினவை. அதுக்குப்பிறகு இடைக்கிடை கிடுகுதந்தவை. வேறு உதவி ஒண்டும் செய்யேல்லை. தொண்ணூற்றிஆறாமாண்டளவில் பாயும், பிளாஸ்ரிக் வாளியும் தந்தவை. அதுக்குப்பிறகு சொல்லிப் போட்டினம் நீங்கள் உங்கட காலிலை நில்லுங்கோ எண்டு. எங்களுக்கு இப்ப நிவாரணம் மட்டும் தாரினம். அதுவும் இப்ப ஒழுங்கா எடுக்கேலாமக்கிடக்கு அரிசி தட்டுப்பாடாம். அதால எந்தநாளும் கொஞ்ச கொஞ்ச பேருக்குத்தான் குடுக்கினம். அண்டைக்கும் போய் அரிசியில்லையெண்டு கொஞ்சப்பேர் திரும்பி வந்தவை. இப்படித்தான் எங்கட வாழ்க்கைபோகுது. அதோட எங்களுக்கு இப்ப இரண்டு வருசமா கிடுகும் தரேல்ல. எங்கட வீட்டை பாருங்கோ அண்டைக்குப்பெய்த மழையால வீட்டுக்க தண்ணி. என்ன செய்யிறது. ஏதோ கிடைக்கிறத கொண்டுதான் சீவியம் நடத்திறம். எங்களை எல்லோரும் கைவிட்டிட்டினம். இந்த குடியிருப்புக்கு தலைவர், செயலாளர் எண்டு எவரும் இல்லை. எங்கட பிரச்சினையை சொல்லுறதுக்கு அரச அதிகாரிகள் கவனத்தில்எடுக்கிறதில்லை.

இந்த பொன்நகர் கிராமத்தில முன்னுக்கு இருக்கிற ஆக்களுக்கு ஆறாயிரம் பெறுமதியான சாமான் (உணவல்லாத பொருட்கள்) "சீற்"எல்லாம் குடுத்தவை. எங்களுக்கு அதுவும் தரேல்ல. அதோட எங்களுக்கு குடி தண்ணி இல்ல. இதில கட்டியிருக்கிற கிணறு தண்ணிவற்றிப்போட்டுது. நாங்கள் கொஞ்சம் தாழ்வமாக்கித்தாங்கோ எண்டு கேட்டநாங்க அது கூட செய்யேல்ல. இப்ப மழைபெய்ய கொஞ்சத் தண்ணிநிக்கிது. இதைத்தான் குடிக்கிற நாங்கள்." என்கிறார். பொன்நகர் நளாயினி குடியிருப்பில் வசிக்கும் இவர்.

இவருடன் நாம் உரையாடிக்கொண்டிருந்த போது எம்மைச்சூழ பல சிறுவர்கள் சூழ்ந்து நின்றார்கள். நாம் இவர்களைப் பார்த்து "நீங்கள் ஏன் பாடசாலைக்கு போகவில்லை" எனக் கேட்டோம். அதில் ஒரு சிறுவனின் பதில் "பள்ளிக்கூடம் தூரத்துக்குப்போட்டுது. நடந்துபோக நேரம் போகும்" என்கிறான். இவரின் அருகில் நின்ற மற்றொருசிறுவனிடம் கேட்டோம். நீங்கள் ஏன் தம்பி பாடசாலைக்குப் போகவில்லையென. "அப்பா மறிச்சுப்போட்டார். மூன்றாம் ஆண்டுவரைக்கும்தான் போனநான். இஞ்ச பள்ளிக்கூடம் இப்பயில்லை. அதான் பேகேல்ல. அப்பா காட்டா விநாயகர் பள்ளிக்கூடத்தில சேர்க்கிறனெண்டார்" என்கிறான் அந்தச் சிறுவன்.

இச்சிறுவர்கள் ஏன் பள்ளிக்கூடம் போகவில்லையென பெற்றோர் ஒருவரிடம் கேட்டோம்.

"இதில பழம்பாசிப் பள்ளிக்கூடம் இயங்கினது. இப்ப அது சொந்த இடத்துக்கு கொண்டு போயிட்டினம். பிறகு கொஞ்ச நாள் மாஸ்ரர் மாரைப்போட்டு நடத்தினவை இப்ப விட்டிட்டினம். எல்லாப்பிள்ளைகளும் அங்கால காட்டாவிநாயகர் பள்ளிக்கூடத்துக்குத்தான் போகுதுகள் அது தூரம் காலம நேரத்திற்கு வெளிக்கிட்டாத்தான் சரியான நேரத்திற்கு போய்ச் சேருவினம். இண்டைக்கு இவையள் எல்லாம் போகேல்லை. என்கிறார் பெற்றோர் ஒருவர்.

இவர்களுடனான உரையாடலை நிறைவு செய்துகொண்டு பொன்நகர்பாடசாலைக்கு அருகில் இருக்கும் அ.யோகராணி அவர்களை சந்தித்தோம், அவர்.

எங்கட சொந்த இடம் திருகோணமலை தென்னமரவாடி கிராமம், அங்கசிங்கள ஆமியும் சிங்களவர்களும் எண்பத்தி நான்காம் ஆண்டு எங்கட சனத்தின்ர வீட்டையெல்லாம் கொழுத்த நாங்கள் இஞ்ச எண்பத்திநாலாம் ஆண்டு வந்த நாங்கள், வந்து பள்ளிக்கூடத்தில இருக்க கண்ணாடிச்சந்திரன் அண்ணை தான் இந்த பொன்நகர் என்டிர இடத்தில இருத்தினவர். அன்றிலிருந்து இருக்கிறம். இது ஆற்ரையோ காணி எங்கட ஒரு சிலருக்கு இஞ்ச காணிகாரர் வந்து "எழும்புங்கோ இது எங்கடகாணி'' எண்டவையள். எங்களுக்கு இஞ்ச கொஞ்சபேருக்கு "சீற்" தந்தவையள், ஆறாயிரம் சாமான் கொஞ்சம் தந்தவையள் வேறுபெரிசா உதவியொண்டும் இல்லையுங்கோ நாங்கள் இஞ்ச கமம்தான் செய்யிறம். அதுக்கேதும் உதவிசெய்தா நல்லது. அதோட காணிக்காரன் காணியை விடுஎண்டா விடவேண்டியதுதான் எங்கட நிலை. திருகோணமலையில் எங்கட கிராமத்தில ஆமி இருக்கிறான். இப்போதைக்கு அங்க போகேலாது. இஞ்ச இந்த ரோட்டுகளையும் திருத்தி நிரந்தரமா ஒரு காணியைத்தந்தா எங்களுக்கு உதவியா இருக்கும் அதோட எங்களுக்கு இருபத்தையாயிரம் காசு தரேல்ல. எங்களுக்கு அது கிடைக்கவழி செய்தா பெரிய உதவியாயிருக்கும் என்றார் அவர்.

**அருள்**

இக்கிராமத்தை பொறுத்தவரை கல்வி, குடிநீர், காணி, என்பன பாரிய பிரச்சினையாக உள்ளதாக இப்பகுதி மக்களின் பெரும்பாலானவர்களின் கருத்தாகும். அத்துடன் வழங்கப்படுகின்ற நிவா ரணம் இம்மக்களுக்கு சரியான முறையில் பெற்றுக்கொள்ள முடி யாதிருப்பதாக தெரிவிக்கின்றனர். தற்போது இப்பகுதியில் அரிசி தட்டுப்பாடு நிலவுவதாகவும் அதனால் நிவாரணம் சீராக வழங்குவதில் தடையேற்பட்டதாக இம்மக்கள் கூறியதுடன் கூலித்தொழில் செய்யும் தமது ஜீவனோபாயம் பெரிதும் பாதிக்கப்படுவதாகவும் கூறினர்.

இது விடயமாக நாம் கரைதுறைப்பற்று பலநோக்குக் கூட்டுறவு சங்கத்தின் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் தொடர்புகொண்டு கேட்டோம். அதற்கு அவர்கள் தங்களுக்கு ஒரு முறை நிவாரணம் வழங்க ஒரு இலட்சத்திப்பத்தாயிரம் கிலோ (110000) அரிசி தேவைப்படுவதாகவும் இதற்கேற்ப நெல்லைக் களஞ்சியப்படுத்த களஞ்சியவசதிகள் இல்லையெனவும் இடம்பெயர்வினால் தற்போது புதிய இடத்தில் இயங்க ஆரம்பித்துள்ள தமது சங்கத்திற்கான களஞ்சியம் அமைக்கும் பணி நடைபெற்று வருவதாகவும் கூறியதுடன் கடந்த காலங்களில் தங்களின் அரிசி ஆலையின் அரிசியுடன் தனியார் ஆலைகளிலும் கொள்வனவுசெய்து திட்டமிடப்பட்ட வகையில் நிவாரணம் வழங்கப்பட்ட போதும் தற்போது ஏற்பட்ட அரிசியின் திடீர்விலை அதிகரிப்பும், தொடர்ந்து பெய்துவரும் மழையினாலும் சிறுதடங்கல் ஏற்பட்டதாகவும் இவை ஓரிருநாட்களில் சீர் செய்யப்பட்டுவிடும் என்று பல நோ.கூ.சங்கத்தினர் தெரிவித்தனர்.

இப்பகுதி மக்களுக்கு காணி வழங்கி இவர்களிற்கான உதவிகள் மேற்கொள்ளுமிடத்து முயற்சியுடைய இம்மக்களின் வாழ்க்கைத்தரம் உயர்வடைய வழிசமைக்கலாம் என அபிவிருத்தி ஆர்வலர்கள் கருதுகின்றனர். பொன்நகர் நளாயினி குடியிருப்பில் வசிக்கும் மக்கள் மிகவும் பின்தங்கிய நிலையில் வாழ்ந்து வருகின்றனர். இவர்களின் குடிநீர் கிணறு நீர் வற்றியநிலையில் உள்ளது. இக்கிணற்றினுள் கஞ்சல் குப்பைகள் காணப்படுகின்றன. சிறிதளவு நீரே உண்டு. இந்நீரினால் நோய் ஏற்பட வாய்ப்புண்டு. எனவே இம்மக்களின் குடிநீர் வசதி மேம்படுத்துவது அவசியமாகிறது. இதில் ஒரு சிலரின் வீடுகள் அவர்களின் முயற்சியால் வேயப்பட்டுள்ளது. ஆனால் விறகு வெட்டுதல், நாளாந்தக்கூலி போன்ற தொழில் செய்வோரின் வீடுகள் வேயப்படாமல் உள்ளது இவை தற்போது பெய்யும் மழையில் பாதிக்கப்படுவதை காணக்கூடியதாக உள்ளது. இவை நிவர்த்தி செய்யப்படுமா? பொன்நகர் மக்களுக்கு கிட்டிய சில உதவிகள் இக் குடியிருப்பு மக்களுக்கு கிட்டவில்லையென கூறுகிறார்களே பிரதேச செயலர் இதனை நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்கவேண்டும் என எதிர்பார்க்கின்றனர்.

இப்பகுதி மாணவர்கள் கல்வியில் பின் தங்கியுள்ளனர். இதற்கு முக்கியமாக பாடசாலைதூரம் ஒரு



காரணமாக அமைந்தாலும் இம்மக்களுக்கும் பெற்றோர்களுக்கும் கல்வி தொடர்பில் அக்கறையும், பூரண விழிப்புணர்வும் இன்மையே இந் நிலைக்கு காரணம் என பாடசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. நாம் சென்ற ஒருபகுதியில் மாத்திரம் பல மாணவர்கள் பாடசாலைக்கு செல்வதில்லை; அல்லது சீராக செல்வதில்லை. இவர்களின் எதிர்காலம் எவ்வாறு அமையப்போகின்றது. சிறுவர் நலன் அமைப்புகள் இது தொடர்பாக கவனம் செலுத்த வேண்டியுள்ளது.

இப்பகுதியில் உள்ள பாடசாலை ஒன்று கைவிடப்பட்ட நிலையில் உள்ளது. இது தண்டுவன் பழம்பாசி அ.த.க.பாடசாலைக்கட்டடம் எனக் கூறுகிறார்கள் இப்பாடசாலை சொந்த இடத்திற்கு சென்றவுடன் இக்குடியிருப்பின் கல்வித்தேவைக்காக இக்கட்டடம் பயன்பட்டதாகவும் நாளடைவில் இதன் சீரற்றகல்வியால் மாணவர்கள் வேறு பாடசாலைக்கு இடமாற்றம் செய்தார்கள் எனவும் இதனால் இப்பாடசாலை தொடர்ந்து நடத்தமுடியாது போனதாக கூறுகின்றார்கள். இப்பாடசாலையில் ஆரம்பக்கல்வி வகுப்புகள் நடத்தினால் மாணவர்களுக்கு உதவியாய் இருக்குமென மக்கள் கூறுகின்றார்கள்.

அத்துடன் இம்மக்களின் போக்குவரத்திற்கு வீதிகள் சீரிண்மையாக இருப்பதாக கூறுகின்றார்கள். வீதிகள் மணலும், குன்றும் குழியுமாக இருப்பதை அவதானிக்கக்கூடியதாக உள்ளது. இவை நிவர்த்தி செய்து மக்களின் போக்குவரத்து வசதியை மேம் படுத்துவது யாரின் பொறுப்பு? பொன் நகர் நளாயினி குடியிருப்பில் வசிக்கும் மக்களின் நிலை தொடர்பாக கருத்துத்தெரிவித்த பொன்நகர் மாதர்சங்க பொருளாளர் அவர்கள்.

"அந்த குடியிருப்பில் இருக்கிற சனத்துக்கு ஆறாயிரம் பெறுமதியான சாமான்கள் இது வரையும் குடுக்கேல்ல எல்லாம் குடுக்கவேணுமெண்டு தான் எல்லாரும் சொன்னவை. ஆனால் குடுக்கயில்லை. ஏன் எண்டு எங்களுக்கு தெரியாது. எங்கட இடத்தில 38 குடும்பங்களுக்கு இந்த சாமான்கள் குடுத்தினம். உண்மையிலேயே நளாயினி குடியிருப்புக்கு உதவிகள் செய்யவேணும். அவர்களுக்கு சரியான கஸ்டம். வீடுகளும் சீரில்லாம இருக்கு. அந்த சனத்தை ஒருதரும் கவனத்தில் எடுக்கேல்லை. அவையளிண்ட விபரம் எல்லாம் எடுத்துக்கொண்டு போனவையல் அப்படியே விட்டிட்டினம். நாங்கள் அரசாங்க அதிபரிட்ட கேட்டுக்கொள்ளுவது என்னெண்டா எங்களுக்கு விவசாய உதவிகள், காணிப்பிரச்சினை, ரோட்டு திருத்திரது அதோட இந்த நளாயினி குடியிருப்பு சனத்திற்கு இந்த சாமான்கள் குடுத்து உதவினால் பெரிய உதவியா இருக்கும்.

நளாயினி குடியிருப்பு சனத் துக்கு உண்மையிலேயே வீடு ஒரு பிரச்சினைதான், கிடுகு வசதியில்லை. சொல்லப்போனா எந்த வசதியுமில்லை குடியிருக்கும் பிரச்சினைதான் எங்கடசனம் இஞ்ச கூடுதலா இருக்கிறபடியால சண்டை பிடிச்சென்றாலும் வாங்கிப்போடுவம். எங்கட குழுத்தலைவர்மார் ஊக்கமா இருக்கிறபடியால பிரச்சினையில்லை. ஆனால் நளாயினி குடியிருப்பு ஒரு கைவிடப்பட்ட நிலையில்தான் இருக்கெண்டு சொல்ல வேணும். முதல் சனம்கூட இருந்தபடியாலை ஏதாவது செய்தினம் இப்ப ஒண்டும் குடுத்துதவிரேல்ல." என்றார்.



## பொருண்மிய வாசல்

“இப்போது வன்னிப் பிரதேசத்திற்கு எல்லாப் பொருட்களையும் தடையின்றிக்கொண்டு வருவதற்குரிய சூழல் உருவாக்கப்பட்டிருக்கிறது. நிதித்துறை கூட விவசாய உள்ளீடுகளைக்கொண்டு வருவதற்குரிய தீர்வைகளை நீக்கியிருக்கிறது. எனவே புதிய பயிரினங்களையும், நவீன பொறிமுறைகளையும் கொண்டு வருவதில் எந்தப் பிரச்சினைகளும் இருக்கவில்லை. ஆனால் அவற்றைக் கொண்டு வருகின்ற மார்க்கங்கள் தெரியாத நிலையில்தான்

# எங்கள் பொருண்மிய வளம்

**சிதம்பரதிரு**

விவசாயிகள் இருக்கின்றார்கள்.

தென்பகுதியில் விவசாய உபகரணங்களை உற்பத்தி செய்யும் நிறுவனங்கள் இருக்கின்றன. ஆனால் அவர்களுடனான தொடர்புகள் இல்லாத நிலை இருந்தது. இந்த விவசாயக் கண்காட்சி மூலமாக அந்தத் தொடர்புகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன”

எனப் பத்திரிகை பேட்டி ஒன்றில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் “கரிகாலன்” அவர்கள் தெரிவித்துள்ளார்.

எங்கள் மண்ணின் விவசாயிகள் எத்தனையோ சவால்களை எதிர் கொண்டு தமது உறுதியான செயற்பாடுகளால் கடந்த காலங்களில் வெற்றி கண்டவர்கள்.

விவசாய முயற்சிக்கு தேவையான உள்ளீடுகள், இரசாயனஉரவகைகள், எரிபொருட்கள் என சகலவற்றுக்குமே தடைவிதித்து சிங்கள ஆட்சியாளர்கள் கொக்கரித்து நின்ற போதும் “நாங்கள் உணவை அனுப்பாவிட்டால் தமிழ் மக்கள் மண்ணைத்தான் தின்னவேணும்” என முன்னைய சனாதிபதி ஒருவர் வீரமுழக்கம் இட்ட போதும் எங்கள் விவசாயிகள் சோர்ந்து போகவில்லை.

கடந்த காலங்களில் எங்கள் மக்களின் வாழ்க்கை ஓரளவுக்கேனும் தலைநிமிர இந்த விவசாயிகளே காரணம்.

இத்தகைய தீரம்மிக்க எங்கள் விவசாயப் பெருமக்கள் இந்தச் சூழலைப் பயன்படுத்தி தேவையான புதிய முறைகள், புதிய கருவிகள் புதிய தொழில் நுட்பங்கள் போன்றவற்றை பெற, அறிய, வழங்க முனைய வேண்டும்.

அது அவர்களுக்கும் இந்த மண்ணுக்கும் பயன்தரக் கூடிய ஒரு விடயமாகும்.

(சி-10343)

# கோழி அம்மை நோய்

இன்று கோழிவளர்ப்போர் எதிர்நோக்கும் பிரச்சினை கோழி அம்மைநோயாகும். இந்நோய் அநேகமான கோழிகளில் காணப் படுகின்றன. கோழிகளின் பூவல் தாடை, கண்மடல்களில் கறுப்பு நிறமான கொப்பளங்கள் தோன்றியுள்ளது. சில கோழிகளுக்கு கண் மடல்களில் போடப்பட்ட கொப்பளங்களால் கண்ணே தெரியாத அளவுக்கு கொப்பளங்கள் பெரிதாகவே உள்ளது.



கோழியம்மை நோய் ஒரு தொற்றுநோயாகும். கோழிகளில் இந்நோய் காணப்பட்டால் நோயுற்ற கோழிகளைத் தனிமைப்படுத்திக் கொள்ளவேண்டும். இல்லையேல் ஏனைய கோழிகளுக்கும் இந்நோய் பரவிவிடும்.

இந்நோய் ஏனைய கோழிகளுக்கும் பரவாது இருக்க கவனிக்க வேண்டியது;

- கூடுகள் காய்ந்து சுத்தமாக இருத்தல் வேண்டும்.
- உணவு நீர்ப்பாத்திரங்கள் சுத்தமாக இருத்தல்வேண்டும்.
- இடவசதி குறைவாக இருத்தலை தவிர்த்துக் கொள்ளவும். போதிய இடவசதி தேவை.
- அளவுக்கதிகமான எண்ணிக்கையில் கூடுகளுக்குள் குஞ்சுகளை வைத்திருக்கக் கூடாது.

இடவசதியும், காற்றோட்டமும் அவசியமானது.

- நோய் வாய்ப்பட்ட குஞ்சுகளை தனிமைப்படுத்தி சிகிச்சை அழிக்கவேண்டும். தொற்று நோயான கோழிஅம்மை நோய் காணப்பட்டால், கூட்டை முற்றாகச்சுத்தப்படுத்தி நிலத்திற்கு போட்ட உமி, முதலியவற்றை எரித்து கிருமி நாசினி தெளித்தும் சில நாட்கள் விட்ட பின்பே அதே கூட்டில் மீண்டும் கோழிகளைவிடலாம்.

**நோயின் அறிகுறிகள்:-**

பூக்களிலும் தாடைகளிலும் கறுப்பு நிற கொப்பளங்கள் காணப்படும்.

**நோய் தடுப்பு:-**

அயலில் உள்ள கால் நடை வைத்தியரை சந்தித்து இந் நோய்க்கெதிரான தடுப்பூசியை ஏற்றுவதன் மூலம் இந்நோய் வராது தடுத்துக் கொள்ளலாம்.

1மாதக் குஞ்சுக்கு முதலாவது தடுப்பூசி போடவும் 4-5 மாத வயதுக் குஞ்சுக்கு (முட்டை இடமுன்) இரண்டாவது தடுப்பூசி போட்டு கொள்ளவும்.

இந்நோய் காணுமிடத்து சிலர் வேப்பிலைத்துளிருடன் மஞ்சள் அரைத்து கொப்பளங்களில் போட்டு குணமடையச் செய்வதையும் அறியக் கூடியதாக இருக்கிறது.

**சிவகமலா**

# ஆடுகளில் கோமாரி நோய்

கோமாரி நோய் காற்றின்மூலம் ஆடுகளிடையே பரவும். பாதிக்கப்பட்ட ஆடுகளில் காய்ச்சல் காணப்படும். வாயிலும் குளம்புகளிலும் இடுக்குகளிலும் கொப்பளங்கள் உண்டாகி புண் ஏற்படும். குட்டி ஆடுகளில் அதிக இறப்பு ஏற்படும். பெரிய ஆடுகளில் இறப்பு ஏற்படும். அதனால் ஆடுகளுக்கு நன்கு காய்ச்சிய நெய்க்கஞ்சி கொடுப்பதோடு இளம் பசும்புல் அளிப்பதாலும் இறப்பு வீதத்தைக் குறைக்கலாம்.

தடுப்பு முறைகள் பாதிக்கப்பட்ட ஆடுகளை உடனே பிரித்துவையுங்கள். நோயுள்ள ஆடுகளிலிருந்து சாணம் மற்றும் கழிவுப்பொருட்களை அகற்றி எரித்துவிடுங்கள். தடுப்பூசிமூலம் பட்டியிலுள்ள ஆடுகளை பாதுகாத்துக்கொள்ளலாம்.

(13 பக்கத் தொடர்ச்சி)

தமிழீழத்தின் சுதந்திர விடிவிற்காய் நடந்த பெரும்பாலான சண்டைகளில் இராகவன் பங்குபற்றி சாதனைகள் செய்திருக்கிறான். அவனது சண்டைவரிசையில் ஓயாத அலைகள் 01.02.03 மற்றும் ஆனையிறவு பரந்தன் சண்டைகள் புகழ்பூத்தச்சண்டையாகும். இவற்றை விட ஜெயசிக்குறு எதிர்ச்சமரில் பெரும்பாலான நாட்கள்எதிரிக்கு முகம்கொடுத்தப்பெருமையும் இராகவனையே சேரும்.

ஜெயசிக்குறு எதிர்ச்சமர் நடவடிக்கையில் ஒரு நாள் நாம் முகாமிட்டிருந்த புளியங்குளம் முகாமிற்குள் சிங்கள எதிரிப் பட்டாளங்கள் உட்புகுந்துவிட்டன. இராணுவ கவசவாகனங்கள் பல உள்ளே நுழைந்து தாக்குதலைத் தொடர்ந்தன. முகாமின் மையப் பகுதியான கண்டிவீதியையும், அதனோடு அமைந்திருந்த எமது கட்டளை நிலைகளையும் கைப்பற்றுவதே எதிரியின் திட்டமாக இருந்தது என்பதை இராகவன் உணர்ந்துகொண்டான்.

சண்டையின் கடும் உக்கிரத்திற்குள்ளும் தனது துப்பாக்கியுடனும் நடைபேசியுடனும் பாதுகாப்பு அரணுக்குள்ளிருந்து வெளியேவந்துவிட்டான். கட்டளைகளை வேகமாக வழங்கியவாறு தற்காப்பு நிலை எடுத்து தாக்கத் தொடங்கினான். அவனோடு நின்ற போராளிகளை ஒழுங்குபடுத்தி எல்லா இடங்களிலும் ஆக்கிரமித்த எதிரிகளை தாக்கும்படி சொன்னான்.

இராகவன் கட்டளைகளை எதிரியின் தலைமையகம் ஒட்டுக் கேட்டிருக்கவேண்டும். காரணம் எதிரியின் நிலை தடுமாறியது. வெளிப்படையாக தெரிந்தது. புளியங்குள முகாமிற்கு பொறுப்பாக இருந்த இராகவன் தொடக்கம் அனைவரும் வெளியில் வந்து சண்டையிட தொடங்கிவிட்டனர். மூர்க்கத்தனமான தாக்குதல்களின் உச்சத்தால் எதிரியின் கவசங்கள் எரியத்தொடங்கிட எதிரியும் பின் வாங்கி ஓடத்தொடங்கினான்.

அதிர்ச்சியூட்டும் நடவடிக்கைகள் மூலம் புளியங்குள முகாமை கடைசிவரை பாதுகாத்த பெருமை எங்கள் இராகவனை சாரும், தனது மன உறுதியின் வெளிப்பாட்டை சண்டைக்களங்களில் காட்டியவனாக புளியங்குளத்தை புரட்சிக்குளமாக மாற்றியவன் இராகவன்.

மாவீரன் இராகவனின் வீரத்தில் என்றுமே சிறிதேனும் கலங்கம் இருக்கவில்லை. சண்டையின் போது அவனது செயற்பாடே தனிரகம்தான், இராகவன் சண்டைக்கு வரப்போகிறான் என்றாலே எல்லோரது முகமும் பிரகாசிக்கும். அதேபோல் இராகவன் சண்டையில் புகுந்துவிட்டால் அந்தச் சண்டை எந்த இக்கட்டையும் கடந்துவிடும் என்பது உண்மை.

ஜெயசிக்குறு காலப் பகுதியிலேயே நடந்த ஓமந்தை, தாண்டிக்குளச்சண்டைகளில் இராகவனின் அதி உச்சமான சண்டையும், மிகவும் இக்கட்டான நிலையில் அவன் எடுக்கின்ற முடிவுகளோடு அவனது நிர்வாகத்திறமையும் வெளிப்பட்டது.

தாண்டிக்குளச் சண்டைக்கென அணிகளை தயார்படுத்தி, நீண்டதூரம் சென்று குறுகிய நேரத்தில் சண்டைக் களத்துக்குள் புகுந்தவன். தனது வேகமான படைநகர்த்தும் ஆற்றலால் பல வெற்றிகளை பெற்றுத்தந்தவன்.

ஓமந்தை தாக்குதல் தொடங்கிவிட்டது, எதிரியின் தூக்குதல் [illegible] உக்கிரமடைந்த நிலையில் அ[illegible]ள் செய்ய வேண்டிய வேலைகளை குறித்த நேரத்திற்குள் செய்ய முடி[illegible]து போக இராகவன் களம் இற[illegible]குகிறான்.

“டேய் என்னடா” என்று அடிக்கடிசொல்லும் அவனது மொழியிலேயே உரையாடுகிறான்.

“டேய் என்னடா செய்யிறியல்” என்ன செய்யனும் சொல், உவங்களுக்கு என்ன கொம்பா முளைச்சிருக்கு என்று சொல்லியவாறே இராகவன் களம் இறங்கி விட்டான்.

எதிரியின் பலத்ததாக்குதல், இடைவிடாத எறிகணை வீச்சு, கவசங்களின் தொடர்தாக்குதல் இத்தனைக்கும் மத்தியில் சுட்டுக்கொண்டு தனது சில போராளிகளுடன் முன்னேறத்தொடங்கினான்.

ஓரிடத்தில் இருந்து தாக்கிக் கொண்டிருக்கும்போது எதிரி எமது மற்றுமொரு அணியை தாக்க விரைந்ததை கண்டு கொண்டான்.

டேய்எல்லோரும் மாறி இந்தப்பக்கம் அடியுங்கோ என்று சொல்லியவாறே எதிரியைப் பார்த்து சுடத்தொடங்கினான். எதிரி நிலைகுலைந்துவிட்டான். முன்னேறி வந்தப்பக்கமாகவே ஓடத்தொடங்கினான். ஆனால், எதிரி நாமிருந்த இடத்தை நன்கு கண்டுவிட்டான். எனவே, நேரத்தையும், வரப்போகும் ஆபத்தையும் தனது அனுபவத்தினால் கணிப்பிட்டு எல்லோரையும் எழும்பி ஓடச்சொல்லிவிட்டு தானும் நிலையை மாற்றினான். அவன் சொன்னது சில விநாடிகளில் நடந்தது. நாமிருந்த இடத்தை எதிரிசல்லடையாக்கினான். எதிரியின் கவசவாகனம் ஒன்று எமது இடத்தை குறிதவறாது சுட்டது. அங்கிருந்த மரங்கள் சிதைவுண்டு தூளாகிப் பறந்தன. அதேநேரத்தில் எதிரி எம்மை நோக்கி வருவதை அவதானித்தவன் மீண்டும் தாக்கும்படி கட்டளை இட்டான், அதன்படி தாக்கத் தொடங்கினோம். அந்தச்சண்டையில் எதிரிக்கு பலத்த இழப்பை ஏற்படுத்திய மன நிறைவோடு திரும்பினோம்.

ஆனால் இராகவன் மட்டும் மனக்கவலையுடன் திரும்பிவந்தான். செய்றன் வேலை இவனுக்கு என்று கர்ச்சித்தபடியே வந்தான். ஓமந்தை தாக்குதல் முடிந்து சில நாட்களின் பின் எதிரியை தாக்குவதற்கு திட்டமிட்டு, பழையவாடிக்கும் நெடுங்கேணி வீதிக்கும் இடையில் 07-08-97 அன்று காலை ஒரு அதிரடித்தாக்குதலை ஆரம்பித்தான்.

காலை நேரம் ஜெயசிக்குறு எதிரிமிக உற்சாகமாக இருந்தான். ஓமந்தையில் திளைத்தவனை திகைக்கவைக்க தாக்குதலைத் தொடர்ந்து, காலையிலேயே எதிரிக்கு பாரிய சேதத்தை ஏற்படுத்தினான்.

எதிரிக்கு எப்போதுமே இடியாய் இமயமாய் இருந்தவன் இராகவன். ஓமந்தையைவிட்டு வெளியேறியப்போது திரும்பவும் பிடிப்போம் என்று கூறியே வந்தான். அவனது மனம் எதை நினைத்ததோ அதேபோல் அவன் உயிர்விலை கொடுத்து ஆரம்பித்துவைத்த ஓயாத அலைகள் 03இல் புலிகள் பெரும் வெற்றியைப் பெற்றனர். இராகவன் இருந்திருந்தால் இன்னும் பெரிய வெற்றிகளைப் பெற்றிருப்போம் என்பதை எதிரியே சொன்னான் “கலோ உங்கட 5.2 செத்ததா! நல்லம், நல்லம் அவனுக்குத்தான் பயம்” என்ற எதிரியின்உரையாடல் இராகவனின் தேசப்பற்று மிக்க வீரத்தை சுட்டிக்காட்டுகிறது.

(11 பக்கத் தொடர்ச்சி)

முல்லை மண் விடுதலைப் புலிகளால் வெற்றிகொள்ளப்பட்ட பின் எமது கட்டடம் ஓரளவு நல்ல நிலையில் இருந்ததையிட்டு அதனை புனரமைப்பு செய்யும்வகையில் ஆசிய அபிவிருத்திவங்கியின் நிதியுதவியுடன் எமக்குக் கிடைத்த 12 லட்சம் ரூபா நிதியினை கொண்டு அக்கட்டடத்திற்கான கூரையினை அமைத்து, மேலும் ஏற்பட்ட நிதி தேவையினை நிக்கோட்திட்டம் போன்ற நிதிநிறுவனங்களிடம் நிதி கோரியிருந்தபோதும் அவர்கள் தர மறுத்துவிட்டனர். பின்னர் முல்லை தீவு அரச அதிபரின் உதவியுடன் நல்லிணக்க அமைச்சின்மூலம் 35 லட்சம் ரூபா நிதியினைப் பெற்று தொடர்ந்து புனரமைப்பு பணிகளை மேற்கொண்டு மீண்டும் 2005 ஆம் ஆண்டு சனவரி முதல் சொந்த இடத்தில் இயங்கவுள்ளது.

இவ்வாறு எமது அலுவலகத்திற்கான நிதி ஒதுக்கீடு உரிய காலத்தில் கிடைத்திருந்தால், நாம் சொந்த இடத்திற்குச் சென்று அங்கு தற்பொழுது அலுவலகத்தினை நடாத்த முடிதிருக்கும்.

முன்னர் எமது அலுவலகத்திற்கு ஒரு கட்டடம் அமைத்து வரும் போது, ஒருபாடசாலையில் இயங்கியது.அங்கிருந்து இடம் பெயர்ந்து இன்று வரை (14 ஆண்டு காலமாக) புதுக்குடியிருப்பு சிறி சுப்பிரமணிய வித்தியா சாலையில் தற்காலிகமாக பெரும் சிரமங் களின் மத்தியில் இயங்கி வரு கின்றது. மீண்டும் முல்லைத் தீவில் சொந்த கட்டடம் அமைக் கப்படாது இங்கிருந்து (புதுக்குடியிருப்பில்) முல்லைத்தீவிற்கு சென்று ஒரு தற்காலிக கட்டடத்தில் இயங்குவதைவிட, சொந்த அலுவலகத்தில் இயங்குவதையே விரும்புகின்றேன்.

இவ்வலுவலகம் புனரமைப்பதற்கான நிதி ஏற்கனவே கிடைத்திருந்தால் இன்று இவ்வலுவலகம் சொந்த இடத்தில் இயங்கி இருக்கும் என்று தெரிவித்தார்.




வணக்கம் எல்லாருக்கும்! எப்பிடி எல்லோரும் சுகமா இருக்கிறீயளோ? தயவுசெய்து இண்டைக்கு நீங்கள் எல்லாரும் என்னை மன்னிச்சுக் கொள்ளோணும்! எனக்கு மனசு அவ்வளவா சரியில்லை. உங்களோட கதைக்கிற மூட்டில (Mood) நானில்லை. வீட்டிலை சின்னச்சின்ன தகராறுகள். வாழ்க்கையே வெறுக்குது. ஏதோ சின்னவயசெண்டால் அப்பிடி இப்பிடி சின்னச்சின்னச்சச்சரவுகள் வரத்தான் செய்யும். ஆனா உவருக்கென்ன கட்டையில போறவயசில வாழ்க்கை வெறுக்கிற அளவுக்கு ஊடல் வேண்டிக்கிடக்கு!' எண்டு யோசிக்கிறீயள் போல நீங்கள்! இல்லைப் பாருங்கோ! குடும்பம் எண்டால் ஒருத்தரையொருத்தர் தங்கடதங்கட மனத்தாங்கல்களைப் பற்றிக்கதைச்சு ஆறுதல் அடையக் கூடியதா இருக்கோணும். இது அதை விட்டிட்டு சே! என்னை அடிக்கோணும். இப்பை உங்களுக்கு நான் இருக்கிற மாதிரி. 50 வருசங்களுக்கு முன்னால எனக்கும் அறிவுரை சொல்லிறதுக்கெண்டு ஒரு அப்பு இருந்திருந்தால். இவ்வளவு தூரத்துக்கு வந்திருக்காது.


வீட்டு விசயங்களை றோட்டுக்குந்தில இருந்து கதைக்கிறது சரியில்லை. ஆனாலும். நீங்களும் என்ர பிள்ளையள் மாதிரித்தான்! ஆகவே சொல்லிறன் பிரச்சினையை. உங்களோடேயே விசயம் இருக்கட்டும்.

காலையில வீட்டில புத்தகம் வாசிச்சுக்கொண்டிருந்தனான். மேலே வானத்தில உந்த 'வண்டு' எண்டு சொல்லிற 'ஆளில்லாத வேவு விமானம்'(UAV-Unmanned Air Vehicle) வட்ட மிட்டுக்கொண்டிருந்திச்சு. போர் நிறுத்த ஒப்பந்தத்தின்படி உப்பிடியெல்லாம் செய்யிறது. ஒப்பந்த மீறல் பாருங்கோ! எட கிட்ட வந்து பர்க்க எலாம எட்ட நிண்டு நோட்டம் விடுறாங்கள்! உவையள் உந்தச் சேட்டை எல்லாம் விடினம் எவ்வளவு வசதியா இருந்த சனம் எங்கடசனம் அந்தக் காலத்திலை! லியனாடோ டாவின்சி பிளேனுக்கு பிளான் போட்டது 15ஆம் நூற்றாண்டில தான். ஏன் மனுசர் பறந்தால் எப்படியிருக்கு மெண்டு கற்பனை பண்ணி கதை விட்டது கி.மு. 2ஆம் நூற்றாண் டளவில. ஒலிம்பிக் நடந்த கிரேக்க நாட்டிலே. ஆனால். நாங்கள் தமிழர் அதுக்கு முன்னமே (கிட்டத்தட்ட கி.மு.900கி.மு 10ஆம் நூற்றாண்டளவில்) விமானங்களோட நல்ல வசதியா வாழ்ந்திருக்கிறோம். அதுவும் பாருங்கோ! ஆசை மிஞ்சி அளவுக்கு மீறிக் கிடந்ததால. பொம்பிளையைத் தூக்கிக்கொண்டு ஓடிற அலுவல்களுக்கெல்லாம் 'புஷ்பக விமானம்' எண்டதைப்பாவிச்சிருக்கினம். கொழுப்பு மிஞ்சினவேலை! இப்பை என்னடா வெண்டால் அந்தர மாவத்துக்கு ஒரு எங்களிட்டையும் ஒண்டு இருந்திருந்தால் எவ்வளவு பிரயோசனமா இருந்திருக்கும். எங்கட இளம் தலைமுறை இப்பிடியான துறையளில முன்னேறியிருந்தா எவ்வளவு திறம்! இப்பிடி என்ரை வயித்தெரிச்சலை மனிசியோட கொட்டிக்கொண்டிருந்தன். "ஏன் என்ர சொந்தக்காரர் எத்தினை பேர் டொக்ரராகவும். இஞ்சினியராவும் இருக்கினம். உங்கட ஆக்கள்தான் வாத்திவேலையும் .வயல் வேலையும் எண்டு திரியினம்!"எண்டு ஒரு விளக்கம் வெளிவந்திச்சு. "ஓம்! உன்ரை டொக்ரரம்மா. இஞ்ச படிச்சுப் போட்டு லண்டனில எல்லோ. நிண்டு கிழிக்கிறா! எப்பையாவது இஞ்சால் பக்கம் வந்தவவோ? சொந்த நாட்டில கைகாவலா கூட ஒண்டில்லை எண்டிற நிலைமை!

சே!எங்கட தலைமுறை தான் பிழைவிட்டிட்டு எண்டாலும் இந்த இளம் பிள்ளையள் எண்டாலும் கொஞ்சம் கூடக்கவனம் எடுத்து. பொறியியல். விஞ்ஞானம் எண்டிருக்கிற துறையளில மேற்படிப்புகளைப் படிக்கலாமெல்லே! ஏதோ தங்களிட்டைத்தான் இருக்குதெண்டு அரசாங்கம் துள்ளிறதாலதானே மட்டக்களப்பில இருந்து கிளிநொச்சிக்குக் கொண்டுவந்துவிட்ட எங்கட பொறுப்பாளர்மாரை. திருப்பிக்கொண்டு போய் விடிறதுக்கு பெரிய நாடகம் போடுது. ஒரு தலையிடிக்கு குளிசை குடுக்காதவை எல்லாரும் என்னண்டு டொக்ரர் எண்டு மதிக்கிறது ஆ..... மற்றது ஆர் இஞ்சினியர் ஐயாவோ? படிச்சு முடிச்சதுதான் ஆளையே காணேல்லை! டொலரில சம்பளம் எடுக்க நைஜீரியாவுக்குப்போய்விட்டு. அங்கை ஆட்சி கவிண்டதுதான் தாமதம் அவுஸ்திரேலியாவுக்கு மாறிட்டார். பெத்து வளர்த்து ஆளாக்கின நாட்டிலஒரு கிணத்தடிக்குந்து கட்டியிருப்பானே அவன்? 'ஏ9' முழுக்க இண்டைக்கு ஆக்கள் இல்லாததால சிங்கள வல்லுநர்கள் வந்து வேலைசெய்யினம். கனகாலம் வேண்டாம். ஒரு மாசம் உன்ர இஞ்சினியர் சொந்தக்காரனை இஞ்சவந்து நிண்டு. எங்கே யாவது ஒரு 'றொய்லெற' கட்டிப் போட்டுப்போகச் சொல்லு! அதுக் குப்பிறகு நான் அவனை மனுசனாய் மதிக்கிறன். "ஓம்!உங்களுக்கு என்ர ஆக்கள் படிச்ச ஆக்கள் எண்ட வயித்தெரிச்சல்! 65ஆவது பிறந்தநாள் எனக்கு நெருங்குதெண்டு. ஒரு தாலிக்கொடி வாங்கித்தரவக்கில்லை. சும்மா ஆரோ பிறத்தி ஆக்கள் எல்லே குத்தகைக்கு வயல் செய்யினம். அதை வித்தெடுத்து செய்யலாமெல்லே!" ஏங்கிப்போய் "தாலிக்கொடியை துலைச்சிட்டீரே! எண்டு கேட்டன்" ஏழு பவுண் கொடியைத் துலைச்சாலும். இந்தக்காலத்தில சனம் குனிஞ்சு எடுக்காது. பழைய பாய் மாதிரி புறுபுறுக்காமல் இந்தக் காலத்துக்கு வாங்கோ! 65 வயசு எண்டால் அதுக்கேற்றமாதிரி கொடி கட்டினால் தான் குளிர்ச்சி" "ஓ" காலம் உப்படியெல்லாம் மாறி விட்டுதே? கள்ளர் காடையருக்குப் பயந்து யாழ்ப்பாணப் பக்கம் சனம் நகையளைக் குறைச்சுத் திருந்துதெண்டு பார்த்தால் இஞ்ச எங்கட காவல்துறை இரவு பகலா காவலில நிண்டு திருட்டுகளைக் குறைச்சிட்டிது எண்டதும். கிலோக் கணக்கில சாத்தி. வெளிக்கிட்டினம்? ஏய்! உனக்கென்னைப் பற்றி வடிவாய்த் தெரியாது நான் விடாக் கண்டன்! ஏழு பவுணை விரும்பித் தான் கட்டினனான் அதைக் குறைக்கிறதைப் பற்றியெண்டால் கதைக்கலாம் அதை விட்டிட்டு பெரிசா ஏதாவது ஆசைப்பட்டால் தாலிக்கொடி மட்டு மில்லை. கலர்ச்சீலை சுட்டவும் இயலாத மாதிரி எனக்கேதாவது நடந்திடும். வாசிச்சுக்கொண்டிருந்த புத்தகத்தை சுவர்ப்பக்கமா வீசி எறிஞ்சு போட்டு சைக்கிளை எடுத்துக் கொண்டு வந்திட்டன்.

சே! என்ன மனுசர்? ஏன் தான் இப்பிடி நகை நகையெண்டு பேயாய் அலையிதுகளோ தெரியாது. உந்த சிங்களச்சனம் உந்த விசயத்தில எவ்வளவோ திருத்தம் வீட்டைவிட்டு வெளிக்கிட முதல் வாசிச்சுக் கொண்டிருந்த புத்தகத்தில ஒரு பெண் எழுத்தாளர் கதையொண்டில சொல்லியிருந்தா 'பெண்கள் வளர்த்தெடுக்கப் படவில்லை. வார்த்தெடுக்கப்படுகிறார்கள்' எண்டு. அது உண்மைதான்! ஆனாலும் அந்தச்சமுதாய அச்சையே அந்த வார்ப்புகளுக்கு காரணமா இன்னும் எத்தினை காலத்துக்கு காரணம் கற்பிச்சுக்கொண்டிருக்கிறது? மேல 'வண்டின்ர' சத்தம் தொடர்ச்சியாக் கேட்டுக்கொண்டிருந்திச்சு எப்பதான் உதுக்கெல்லாம் ஒரு முடிவு வருதோ எண்டு வேதனைப்பட்டபடி சைக்கிளை உழக்கினேன் "வணக்கம் அப்பு! சத்தம் கேட்டுத் திரும்பிப் பார்த்தன். முட்டை விழிகளோடும் முகம் நிறைந்த புன்னகையோடும் அவள் சைக்கிளில்ல போய்க் கொண்டிருந்தாள். கழுத்தளவில் வெட்டிய கூந்தல். வெறுமையான காதுகள். கழுத்தில் 'அந்த'க் கறுப்புக் கயிறு மட்டும்! " எருமையளில் இயமன் மாமாக்கள் திரியிறறோட் இது பார்த்து கவனமாப்போங்கோ!" இந்தக் குந்திற்கு வந்தபிறகு எனக்குக் கூட்டாளியா ஆகிவிட்ட பலரில அவளும் ஒருத்தி. என்னுடைய பேத்திவயசா இருந்தாலும்" 'என்னைக் கவனமாப் பார்த்துப போகச் சொல்லி' ஒரு உரிமையுடனான செல்லக் கண்டிப்புடன் கூறிக்கொண்டு. கடந்து சென்றாள் யார் இவள்? ஏன் இவள் யாரோ ஒரு அப்புவின்ர உயிரில அக்கறை கொள்ளவேணும்? சும்மா ஆரோ பிறத்தி ஆக்கள் எல்லே குத்தகைக்கு வயல் செய்யினம்! அதை வித்தெடுத்து நகை செய்யலாம் எல்லே' வீட்டில எனக்கு மண்டைக்குள்ளை வெடிச்சது ஞாபகம் வந்திச்சு. திரும்பிப் பார்த்தன். எல்லாத்துக்கும் ஒருபதிலை வைச்சி ருக்கிற வாய்மட்டுமல்ல. எல்லாத்தையும் அறிஞ்சு வைச்சிருக்கோணும் எண்டு சொல்லிற மூளையையும் கொண்டிருக்கிற அந்த 'முட்டை விழிகளின் சொந்தக்காரி ஒரு தனித்துவமான நிமிர்வோடு பயணித்துக் கொண்டிருந்தாள் நானும் நிம்மதிப் பெருமூச்சுடன். உற்சாகம் நிறைந்து சைக்கிளை உழக்கினேன்.

## முதலாம் ஆண்டு நினைவலைகள்



கடமையின் உறைவிடமாய்
கண்ணியத்தின் இருப்பிடமாய்
பண்பின் பிறப்பிடமாய்
பாசத்தில் சிகரமாய்
அரிய பணி புரிந்து
அகலாத ஒளி விளக்காய்
ஒளிசிந்தும் தீபமாய்
உள்ளத்தில் நிலைத்துவிட்ட
உனக்காக நாம்
ஆத்ம சாந்தி வேண்டி
ஆண்டவனை வேண்டுகின்றோம்.


## சண்முகநாதன் செந்தில்நாதன்

| மண்ணில் | விண்ணில் |
| --- | --- |
| 1979-11-04 | 2003-09-28 |

தகவல்
நண்பன்...

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்






# உளவியல் நவீனம்...

**அத்தியாயம்- 03**

**பகுதி -14**

நான் டிப்ஸின் தாயாருடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு, எவ்வளவு விரைவில் முடியுமோ அவ்வளவு விரைவில் சந்தித்து பேச வேண்டும் என்று கேட்டுக் கொண்டேன். எனது அழைப்பை எதிர்பார்த்திருந்ததாக அவர் சொன்னார். அடுத்த நாள் மாலை 4 மணியளவில் தேனீர் அருந்த தங்கள் வீட்டுக்கு வந்தால், தான் மகிழ்ச்சியடைவேன் என்று அவர் கூறினார். அவருக்கு நன்றி கூறிவிட்டு அந்த அழைப்பை ஏற்றுக் கொண்டேன்.

நகரின் மேல் கிழக்கு பகுதியில் இருந்த பழைய மண்நிற கல் வீட்டில் அந்தக் குடும்பம் வாழ்ந்து கொண்டிருந்தது. வீட்டின் வெளிப்புறம் மிகவும் அவதானத்துடனும் நுணுக்க நயத்துடனும் பேணப்பட்டிருந்தது. கதவு மிகவும் நேர்த்தியாக மெருகிடப்பட்டிருந்தது.



அதனுடைய பித்தளை இணைப்புகள் பளபளத்துக் கொண்டிருந்தன. அழகான பழைய வீதியொன்றில் அமைந்திருந்த அந்த வீடு, அந்தவகையில் மனதுக்கு ரம்மியமான மாளிகைகள் அமைக்கப்பட்ட அந்த பழைய நாட்களின் உயிர்த் துடிப்பை அப்படியே பேணிக் கொண்டிருப்பதாக தோன்றியது. இரும்புக்கதவைத் திறந்த நான் படிகளில் ஏறிச் சென்று அழைப்பு மணியை அடித்தேன். கதவுக்கூடாக அடக்கமாக ஒலித்த அலறல்கள் எனக்கு கேட்டன. “ கதவைப்பூட்ட வேண்டாம்!...... கதவைப் பூட்டவேண்டாம்..... வேண்டாம்.... வேண்டாம்” என்று அலறிய குரல் மெது மெது வாக மௌனத்துள் அடங்கிப் போயிற்று. தேனீர் பருகியதில் எங்களுடன் டிப்ஸ் பங்குபற்றப் போவதில்லை என்பது வெளிப் படையாகவே தெரிந்தது.

சீருடை அணிந்த ஒரு பணிப்பெண் கதவைத் திறந்தாள். கவர்ச்சியான உடல்வாகுடன் இருந்த அவள் முகத்தில் ஒருவகை கிளர்ச்சியற்ற தோற்றம் தெரிந்தது. பலவருடங்களாக அங்கு இருக்கிறாள் என்று எண்ணத் தோன்றியது. அவளது செய்கைகள் அன்னியோன்ய மில்லாதவையாகவும், அளவுக்கு மீறிய நேர்த்தியானவையாகவும் சம்பிரதாயபூர்வமானவையாகவும் இருந்தன. அவள் எப்போதாவது சிரித்திருப்பாளா? அல்லது சிரிப்பதற்கான விடயங்கள் பல இருப்பதை அவள் அறிவாளா? என்ற எண்ணம் எனக்குள் எழுந்தது. அப்படியானால். அவள் மிகுந்த கட்டுப்பாட்டைக் கைக்கொள்பவளாகவும் தன்னுடைய தனிப்பட்ட அடையாளத்தையும் இயல்பான இயக்கத்தையும் மறைத்து கொண்டவளாகவும் இருக்க வேண்டும்.

டிப்ஸ்ஸின் தாயார் கனிவான முறையில் என்னை வரவேற்றாலும் அவரது முகமும் கிளர்ச்சியற்றதாகவே தெரிந்தது. வழக்கம் போலவே காலநிலை பற்றியும். ஒருவரை ஒருவர் சந்திக்க கிடைத்தது பற்றியுமான அறிமுக உரையாடலை நிகழ்த்தினோம். வீட்டினுள்ளே அழகான முறையிலும் நுணுக்கநய்த்துடனும் தளபாடங்கள் வைக்கப்பட்டிருந்தன. அந்த வரவேற்பறையில் எந்தக் குழந்தையாவது ஐந்து நிமிடங்களை செலவிட்டிருப்பதற்கான அடையாளங்கள் எதுவும் இருக்கவில்லை. உண்மையைச் சொல்லப் போனால் அந்த வீட்டில் உண்மையில் யாராவது வாழ்கிறார்கள் என்பதற்கான அடையாளங்கள் தானும் இருக்கவில்லை .

தேனீர் கொண்டு வரப்பட்டது. அழகான முறையில் பரிமாறினார்கள். எந்த சுற்றி வளைப்பும் இல்லாமல் டிப்ஸின் தாயார் நேரடியாக விடயத்துக்கு வந்தார்.

“ டிப்ஸ் பற்றி ஆராய்வதற்கென நிபுணத்துவ ஆலோசகராக நீங்கள் அழைக்கப்பட்டிருப்பதாக அறிந்தேன். இந்தப் பணியை ஏற்றுக் கொண்டதற்காக உங்களுக்கு நன்றி சொல்ல வேண்டும். நாங்கள் புதுமைகள் எதும் நிகழும் என்று எதிர்பார்க்கவில்லை என்பதை நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டும் என்று நான் விரும்புகிறேன். டிப்ஸ் ஒரு துன்பியலான நிகழ்வு என்பதை நாங்கள் மனதார ஏற்றுக்கொண்டு விட்டோம். தொழில்சார் ரீதியான உங்கள் நற்பெயர் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறேன். எந்தத் துறையில்... அதாவது மனித நடத்தைகள் பற்றிய அறிவியல் துறை உள்ளிட்ட எந்தத்துறையிலும் நடக்கும் ஆய்வுகள் தொடர்பாக நான் பெருமதிப்புக் கொண்டிருக்கிறேன். டிப்ஸில் ஏதாவது மாற்றம் ஏற்படும் என்று நாங்கள் எதிர்பார்க்க வில்லை.

(தொடரும்....)




மொழியாக்கம்:- வீ.பீ.யோசப்

## சாப்பாட்டு.....

(19 ஆம்பக்கத் தொடர்ச்சி)

ஆனால், கொழும்பில் சிங்கள உணவுவகைகளை, அதுவும் சிங்களகிராமிய உணவுவகைககளை விற்கும் பெரிய உணவகங்கள் பல வெற்றிகரமாக இயங்கிவருகின்றன. அங்கே கூட்டமும் நிறையவுண்டு. தவிர, அந்தவகை உணவுகளை ருசிப்பதில் தனி ஆர்வம் நமக்கு ஏற்படுகிறதல்லவா? இன்னொரு உணவு முறையை அறியும் வாய்ப்பும் நமக்கு அதில் கிடைக்கிறது.

வெளிநாடொன்றிலிருந்து இங்கே வந்திருந்த எங்களூர்க்காரர் ஒருவர், தன்னுடைய பிள்ளைகளுக்கு இங்குள்ள உணவுகளை வாங்கிக்கொடுப்பதற்கும் அறிமுகப்படுத்துவதற்குமாக பொருத்தமான உணவகங்களைத் தேடியிருக்கிறார். எப்படித்தேடியும் அவரால் ஒரு உணவகத்தைக்கூட கண்டுபிடிக்க முடியவில்லை. தனக்கேற்பட்ட அனுபவத்தை ஏமாற்றத்துடன் சொன்னார் அவர்; கவலைததும்ப.

பெரிய உணவகங்களின் கதை இதுவென்றால், சிறிய உணவகங்கள் வேறுவிதங்களில் போகின்றது. ஒரு இறாத்தல் பாணைவிட ஒரு ‘றோலின்’ விலை அதிகம். ஒரு ‘மிதிவெடி’யின் விலை கூடுதல். இதைவிட ஒவ்வொரு கடையிலும் ஒவ்வொரு விலைக்கு உணவுப் பண்டங்கள் விற்கப்படுகின்றன. ஒரு காலை உணவையோ மதிய உணவையோ ஒருவர் கடைகளில் சாப்பிடுவதற்கு பலவகையிலும் யோசிக்கவேண்டியுள்ளது. கடைக்கு கடை விலைவேறுபடுவதால் சாப்பிட்டபின் கடைக்காரருடன் பிரச்சினைப்படுவதா என்ற கேள்வியெழுகிறது. விவரம் கேட்டால் தங்களுடைய சாப்பாடு திறமானது. தாங்கள் வித்தியாசமாகச் சமைக்கிறோம். அதுதான் இப்படி விலையைக் கூட்டவேண்டியுள்ளது. என்கிறார்கள்.

ஆனால், சாப்பாட்டில் தரவேறுபாடுகளையோ உயர்வையோ காணமுடியாது. நகருக்கு பல தேவைகளுக்காகவும் வருவோர் எப்படியும் ஏதாவது ஒரு கடையில் எதையாவது தின்றுதான் ஆகவேணும். இது எல்லாச் சாப்பாட்டுக் கடைக்காரருக்கும் வசதியாகிவிட்டது. தவிர, நகரில் பல நிறுவனங்கள், அலுவலகங்கள், திணைக்களங்கள் எல்லாம் இயங்குவதால் இங்கெல்லாம் பணிசெய்வோரில் பாதிக்குமேல் கடையிலேயே சாப்பிடுகிறார்கள். ஒவ்வொரு கடையாக மாறிமாறிப்பார்த்தால் ‘இக்கரை மாட்டுக்கு அக்கரைப்பச்சை’ என்ற கதைதான். அவர்கள் அதிகம் மன்னிப்புக் கேட்பது அவர்களுடைய நாக்கைத்தான். எந்தக்கடையைப்புறக்கணித்தாலும் ஏதாவதொரு கடைக்குப்போயே தீரவேணும். ஆகையால் கடைக்காரரைக் கோபிக்கமுடியாது. நாக்கை அடக்குவதைத்தவிர வேறுவழியில்லை என்கிறார்கள் இந்த வாடிக்கையாளர்கள்.

இறைச்சியையும் மீனையும் பொரித்தபின் குழம்புவைக்கிறார்கள். பொரித்த இறைச்சி இரண்டு நாட்களுக்கு முந்தியதாக இருக்கும்; மீனும் அப்படித்தான். சிலவேளைகளில் ஓரளவுக்குப் பழுதடைந்த மீனைப்பொரித்து குழம்பு வைத்துச் சமாளித்துவிடுகிறார்கள்.

மிதிவெடி, றோலுக்குள்ளும் இந்த பொரித்த பழுதான சமாச்சாரங்கள்தான். இவ்வளவுக்கும் விலைகூட மிகவும் அதிகம்.

பொதுவாக நல்ல வடை, நல்ல வாய்ப்பன், நல்லதோசை, நல்ல அப்பம் போன்றவற்றை வாங்குவதற்கே ஒழுங்கான கடைகளில்லை. தரமான மரக்கறி உணவகங்கள் இல்லை. நல்லமதிய உணவை சாதாரண விலையில் சாப்பிடக்கூடிய கடைகள் இல்லை. சாப்பிடுவதற்கே வழியற்ற, நல்ல சாப்பாடற்ற ஒரு நகரச்சூழல், சிறு நகரச்சூழல் இப்போதே நமக்கு வந்ததென்றால், இதைவிடக் கொடுமை வேறென்ன?

தேனீர் பருகுவதற்கும்கூட ஒவ்வொரு கடைக்கும் ஒவ்வொரு விலை. முதியோர்கள், வறியவர்கள் அரைவயிற்றை நிரப்புவதற்கு படும்பாட்டை கடையோரங்களில் மிகச்சாதாரணமாகவே கவனிக்கலாம்.

உணவகங்களை தானமாக, தர்மமாக, இலவசமாக நடத்தும்படி யாரும் கேட்கவில்லை? ஆனால், கொஞ்சமாவது, பொறுப்புணர்வோடு, கொஞ்சமாவது கன்னியத்தோடு, ஒருவர் சாப்பிடக்கூடியமாதிரி நடத்துங்கள் என்றுதான் கேட்கிறோம். காசை எப்படி வேண்டுமானாலும் உழைக்கலாம் என்றால், வாழ்க்கையின் அமைப்பும் நாகரிகமற்றுத்தான் இருக்கும்.

சாப்பாடு என்பது மனித உயிருக்கும், வாழ்வுக்கும் நாகரிகத்துக்கும் அடியாதாரமானது. அதிலிருந்தே எல்லாவகையான பண்பாடும் மேற்கிளம்புகிறது. அது இல்லையென்றால் ஒன்றுமேயில்லை. ‘பசி வந்தால் பத்தும் பறந்து போகும்.’ என்பார்களே! அது முற்றிலும் உண்மை.

முன்பு வடைக்கென்று கடைகளிலிருந்தன, நல்ல தோசைக்கென்று சில கடைகள் இயங்கின. அப்பம் சுட்டுவிற்பதில் சிலர் பேரெடுத்திருந்தார்கள். வாய்ப்பன் போடுவது தனிக்கலையாக இருந்தது. சூசியம்,போண்டா, பகோடா, தொதல் என்று எல்லாவற்றிலும் தரமும் ருசியும் இருந்தன.

சைவச்சாப்பாட்டுக்கு தாமோதரா விலாஸ், மலாயன் கபே என்றெல்லாம் உணவகங்கள் ஒருகாலத்தில் புகழ்பெற்றிருந்தன. சாப்பிடுவதற்கு போடப்படும் இலையிலிருந்து பரிமாறப்பயன்படுத்தப்படும் பாத்திரங்கள்வரையில் எல்லாவற்றிலும் கவனமும் நேர்த்தியுமிருந்தன. சாப்பாட்டு வகையில்தான் எத்தனை வகை! எத்தனை ரகம்; எத்தனை ருஷிகள் எல்லாவற்றையும் பரிமாறுவதில்தான் எவ்வளவு அக்கறையும் ரசனையுமிருந்தன. ஆனால், இப்போது ‘ஹொட்டேல் மனேஜ்மென்ற்’ படித்தவர்கள் இருந்தும் பயனில்லாநிலைதான் யதார்த்தம்:

அட, எல்லாத்தொல்லைகளோடும் ஒருவாறு சாப்பிட்டுமுடித்து வெளியே வரும்போது காசு கொடுக்கப்போனால், அங்கே மிச்சப்பணத்துக்கு சில்லறை இல்லை என்பார்கள். சில்லறைக்குப்பதிலாக “ரொபி”தரப்படும்; அல்லது பீடா வழங்கப்படும். நீங்கள் விரும்பினால் என்ன விரும்பாவிட்டாலென்ன வாங்கித்தான் ஆக வேண்டும்.

இப்படியே ‘சாப்பாட்டுக்கடை அதிகாரத்தை’ காவியமாக எழுதிக்கொண்டே போகலாம். அந்தளவுக்கு ஆதாரபூர்வமான பல விடயங்கள் நிறையவுண்டு. அதையெல்லாம் வரிசைப்படுத்திக்காட்டுவதல்ல இங்குநோக்கம். பாவனையாளர்கள் தருகின்ற காசுக்கும் எதிர்பார்க்கின்ற தரத்துக்கும் உணவைத்தர உணவகங்கள் முயலவேண்டும் என்பதே இந்த விடயங்களை இங்கே எழுதக்காரணம். இவை ஒன்றிரண்டு உதாரணங்கள் மட்டுமே.

உணவகங்களை அவதானிக்கும் பொறுப்புடையோரும் இவற்றில் கவனம் கொள்க - தயவுசெய்து.

## சேவல்களின்...

(14 ஆம் பக்கத் தொடர்ச்சி)

உயிர் போனாள் போல, அம்மா கூப்பிட்ட போது ஓடி வந்து பார்த்தேன். இரண்டு சேவல்களும் மிகமூர்க்கமாக மோதிக்கொண்டிருந்தன. அது ஜீவமரணப் போராட்டம் போலிருந்தது. ஒரு பொழுதில் சின்னம்மாவின் சேவலின் கை ஓங்கும்; கணத்தில் நிலை மாறி, என் சேவலின் கை ஓங்கும். களநிலவரம் நிலையற்றிருந்தது.

வெகு நேரச் சண்டையின் பின் கள நிலவரம் என் சேவலிற்குச் சார்பாக மாறிக்கொண்டு வந்தது. சின்னம்மாவின்... சேவல் வெகுவாகக்களைப்படைந்திருந்தது. என் சேவல் பாய்ந்து இறக்கையாலும்... அலகாலும் சின்னம்மாவின் சேவலின் முகத்தில் கொத்தியது. அது பெரிதாகக் கத்திவிட்டு ஓடத் தொடங்கியது. என் சேவலின் அலகில் சின்னம்மாவின் சேவலின் இறக்கைகள். அப்படியே அதைத் துரத்தியபடி ஓடியது.

நான்தான் இடையில்த் தலையிட்டு, என் சேவலைக் கலைத்துவிட்டேன்.

அன்றைய சண்டை இத்தனை விபரீத்தை உண்டாக்குமென நான் நினைக்கவில்லை. என் சேவல் சின்னம்மாவின் சேவலை கடுமையாகக் கொத்திவிட்டது. இதனால் நோய்வாய்ப்பட்ட சேவலாகிவிட்டது.

இதனால் தீனிபொறுக்கமுடியாமல் போகவே அது வெகுவாக உருக்குலைந்து விட்டது. வளர்ந்து இரத்தச் சிவப்பு நிறத்தில் கம்பீரமாயிருந்த கொண்டை வெளிறி... வதங்கிப் போயிருந்தது. அதற்குப் பரிவாரங்களென்று எதுவுமிருக்கவில்லை. எல்லாப் பேடுகளும் என் சேவலுடன் இணைந்துவிட்டன.

முன்னர்போல அதன் நடையில் கம்பீரம்... ஆணவம் இருப்பதில்லை. இறக்கையடித்துப் பெரிதாகக் கூவியபடி எங்கள் வீட்டிற்கு வருவதில்லை. மெதுவாகப் பதுங்கியபடிவரும். ஏதாவது தீனியிருந்தால் சிரமப்பட்டுப் பொறுக்கிக்கொண்டு போய்விடும். அதனைப்பார்க்கவே பரிதாபமாயிருக்கும்.

அன்று எங்கள் வீட்டிற்கு சின்னம்மா வந்தா. சின்னம்மா வருவதைப் பார்க்கவே ஏதோ சொல்லத்தான் வருகின்றா என்பது புரிந்தது.

“எட தம்பி.. ரெண்டு சேவலும் இந்த மாதிரிச் சண்டை பிடிக்குதுகள்... ஏதேனும் செய்யவேணுமடா” என்றுவிட்டு என்னைப் பார்த்தா.


“என்ன செய்யலாம்...” எனக்கு இப்படி ஒரு வழி தெரிந்திருந்தால் ஏற்கனவே செய்திருப்பேனே!!

“எல்லை பிரிச்சு வேலி போட்டால் சேவல்கள் கடக்காதுதானே. இடையில ஒரு படலைபோடுவம்... என்ன செய்வமே...? கடைசியில சண்டை பிடிச்சே ரெண்டும் செத்துப்போயிடுங்கள்போல...” தன் சேவலின் தோல்வியை மறைத்துப்பேசினா. இது சரியான யோசனை மாதிரிப்படவே, நானும் சம்மதித்தேன். அன்றே எல்லை பிரித்து வேலியடைக்கும் வேலைகள் ஆரம்பமாகிவிட்டன.

# பாவலன் பதில்கள்

**பாவலன் பதில்கள்** என்ற வாசகர்களின் கேள்விகளுக்கான எங்களின் பதில்களை உங்களுக்குத்தரும் நோக்குடன் இந்தப்பகுதிஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதற்கான கேள்விகளை கீழ் காணும் முகவரிக்கு நீங்கள் அனுப்பி வைக்கலாம்.

*பாவலன் பதில்கள்,*
*வெள்ளிநாதம்,*
*யாழ்சாலை,கிளிநொச்சி.*



*பாவலா!*

*கைதிகள் ஏன்கூரை மீது ஏறி உண்ணாவிரதங்களையும், போராட்டங்களையும் நடத்துகிறார்கள்?*

மாலா,
கிளிநொச்சி.

சிறைக்குள்ளே இருந்து போராடினால் அது வெளியுலகிற்கு தெரியாது அடக்கப்பட்டு விடும் என்பது போலும்.

*பாவலரே வணக்கம்!*

*தங்களை இலங்கையின் சமாதான நடுநிலையாளராக நியமிக்க நினைத்துள்ளேன். தங்களுக்கு மறுப்பேதுமில்லையே?*

சிறிகுமரன்,
முல்லைத்தீவு.

என்னால் மிருதங்கமாக இருக்க முடியாது! சரி சரி என் மீது உங்களுக்கு என்ன கோபம்.

*பாவலரே!*

*வரட்சியின் கொடுமை எமது பகுதியில் தலைவிரித்தாடுகிறது. இதற்கு ஏதும் பரிகாரம் உண்டா?*

புவனா,
முழுங்காவில்.

இயற்கையை நாம் அழிக்கிறோம்- மாசுபடுத்துகிறோம்... தேவை நோக்கில் திறனற்ற வரண்ட சிந்தனையின் எதிராலிதான் வரட்சி.

*ஐயா பாவலரே!*

*பெண்கள் மீதான வன்முறைக்கு பெண்களே துணைபோகிறார்களே அவர்களுக்கு தங்களின் அறிவுரை என்ன?*

பிரியதர்சினி,
உருத்திரபுரம்.

வன்முறைக்கு துணை நிற்பவர் வன்முறையாலேயே அழிவார் என்பதைத்தான் கூறமுடியும்.

*பாவலா!*

*இந்திய-பாகிஸ்தான் சமாதான பேச்சு சரிவருமா?*

தட்சாயினி,
யாழ்ப்பாணம்.

உங்களுக்கு சுதேசிய பிரச்சினையை விடவும் விதேசிய நெருக்கடிகள் மீதே ஆர்வமதிகம் போலும்...! விடாக்கண்டனும் கொடாக்கண்டனும் சமாதானமாக பேசுதல் சாத்தியமில்லை... அதுவும் ஆட்சி, அதிகாரம், அரசியல் போன்ற விடயங்களில் சமாதானம் என்ற சொல் ஒரு ராஜதந்திர நகர்வை மட்டுமே குறிக்கும்.

*பாவலா!*

*தாங்கள் வெளிநாட்டுப் பயணம் ஒன்றை மேற்கொள்ள உள்ளதாக அறிந்தேன். சென்றவுடன் எம்மையும், எம் மண்ணையும் மறந்து விடுவீர்களா?*

கனகராசா,
புளியங்குளம்.

சொந்த மண்ணில் வேரூன்றி சொந்த மக்களோடு வாழ்தலே பாவலர்க்கு பெருமை... மண்ணையும் மக்களையும் மறத்தல் இறத்தலுக்கு சமன்.

*பாவலா!*

*நீர் செய்வது கொஞ்சமும் சரியல்ல ஏ-9 றோட்டில ஒருவடன் சமாந்தரமாக கதைத்து சென்றதை நான் பார்த்தேன். விபத்துக்கள் அதிகரிக்கும் நேரத்தில் இவ்வாறு நடந்து கொள்கிறீர்களே?*

பிரியங்கா,
வவுனியா.

தனியாகச் சென்றால் மோதிவிட்டு மறைந்து விடுவார் என்பதால் சாட்சிக்காக ஒருவருடன் சென்றால்,அதனைக் கடண்டு என்னைக் குற்றவாளியாக்கிவிடப்பாக்கிறீர்களே!

# தெருப்பேச்சு



*மனைவி:-* இஞ்சரப்பா அந்த ரீவியைப் போட்டுவிடுங்கோ.
*கணவன்:-* ஏனப்பா, காலங்காத்தால ரீவியைப் போடச் சொல்லுறாய்.
*மனைவி:-* புட்டுக்கு கறிவைக் கேலையப்பா, அதைப் போட்டு விட்டா அந்தப்பிராக்கில வெறும் புட்ட மகன் சாப்பிட்டுடுவான்.

* * *

*மகன்:-* அப்பா, அந்த மூண்டு கோழிகளையும் புடிச்சு அடைச்சு விடுங்கோ.
*தந்தை:-* ஏன் மகன்? இப்பத்தான திறந்து விட்டது.
*மகன்:-* அந்த மூண்டு கோழிகளின்ர நடமாட்டத் திலயும்- எனக்கு சந்தேக மாயிருக்கு.

* * *

*நபர்-01:-* அவர் என்ன படுக்கையிலை கிடந்து வேறை வேறையெண்டு புலம்பிக்கொண்டு கிடக்கிறார்.
*நபர்-02:-* ம்...அவர் சங்கக் கடையில மனேச்சர்.
*மகன்:-* அப்பா... அப்பா... எனக்கொரு நடந்து திரிற பொம்மை வாங்கித் தாங்கப்பா.
*தந்தை:-* அது பொம்மை இல்லை மகன்.
*மகன்:-* என்னப்பா நீங்கள் பிளாஸ் ரிக்கில வார்த்த மாதிரியல்லோ கிடக்குது.
*தந்தை-* ஐயோ! அப்பிடி இல்லை
*மகன்.* அவா மிகவும் "ரைற்"ரா உடுப்புப் போட்டிருக்கிறா அவ்வளவுதான்.

* * *

*மாணவன்:-* அண்ணை இந்தாங்கோ சயிக்கிலுக்கு காற்றடிச்ச காசு, எடுத் துக் கொண்டு மிச்சத்தை தாங்கோ.
கடைக்காறன்- அஞ்சு ரூபா மாத்த இல்லையப்பன்.
*மாணவன்:-* அப்ப என்னண்ணை செய்யிறது.
கடைக்காறன்- அஞ்சு ரூபாக்கும் காற்றையடிச்சுக் கொண்டு போ.

* * *

*ஒருவர்:-* அவருக்கு எந்தவிதமான குறையுமில்லையே பிறகேன் ஊனமுற்றோருக்கான ஆசனத்திலை அமர்ந்திருக்கிறார்.
*மற்றவர்:-* அவருக்கு "மனசு" ஊனம்.

* * *

"நல்லூர் தேராம் போகேல்லயே- ஓவிசில எல்லாரும் லீவு போட்டிட்டு போகினம்-"

ஓமோம் போனாத்தான் புதிசா எத்தினை வகை நகையள் வந்திருக்கு, எத்தினை வகை சாறிவந்திருக்கு, எண்டுபாக்கலாம்-


நல்லூர்க் கந்தனுக்குப் போட்டதை விட நான்தான்கூட நகைபோட்டிருக்கிறன். எல்லாரும் என்னத்தான் பாப்பினம்-

சும்மா விடு-பொன்னம்பலத்தார். பெண்சாதிதான் புதுவகை நகைபோட்டிருக்கிறாவாம்- மனிசி இந்தியாவில டிசைன் பண்ணி செய்விச்சதாம்.

அப்ப நான் கோவிலுக்குப் போகேல்ல- நாளைக்கு தீர்த்தத்துக்குப் போகோணும்- உடன அதுமாதிரி நகை வாங்குவம்.

* * *

## படத்திற்கு மெருகூட்டுங்கள்–86



நான்கு வரிகளுக்குள் உங்கள் உள்ளத்தில் தோன்றும் உணர்வுகளை கீழ் உள்ள வரிகளில் எழுதி அனுப்புங்கள். சிறந்த வரிகளுக்கு நினைவுப்பரிசு வழங்கப்படும்.

### படத்திற்கு மெருகூட்டுங்கள்–86

.................................................................
.................................................................
.................................................................
.................................................................

பெயர் : ......................................... **ஈழநாதம்**
முகவரி : ......................................... யாழ்சாலை,
......................................... கிளிநொச்சி.

## படத்திற்கு மெருகூட்டுங்கள் –85



**ஞா.றொபேட் பெலிக்ஸ்,**
**பாலிநகர்,**
**வவுனிக்குளம்.**

### பரிசுக்குரிய வரிகள்

*என்ன நினைத்தம்மா என் தலையின் பாற்செம்பு*
*வளர் பெண்ணான பின்னே நான் வளமுடனே வாழ்வதற்கா*
*பொன்னான உன் வேண்டல் பொய்க்காது பலித்திடுமே!*
*கண்ணான என்தாயே நீயே என் தெய்வம்.*

### பாராட்டுக்குரிய வரிகள்

*பால் மறவாப் பாலகியே! உன் தலையிலென்ன பால் குடமோ!*
*வேல் பிடித்த கந்தனிடம் நம் விடுதலைக்கான நேர்த்தியாமோ!*
*கால் நடவாக் குறுமகளே! உந்தனது உணர்வு கூட - பகை*
*வால் பிடிக்கும் வஞ்சகர்க்கின்னும் வரவில்லையே!*

எஸ்.என்.தனேஷ்,
கிளிநொச்சி.

*பட்டுத் தெளியாத பாலகன் - பாரில்*
*பட்ட துயர் போக்க பால் செம்புடன்*
*தொட்டு நிக்கும் தாயின் துயருக்கா?*
*தொலைந்து விட்டதந்தையின் நினைவிற்கா?*

மோ.யசோ,
விசுவமடு.

*இராணுவம் பிடித்துப் போன தந்தை*
*மீள் வர வேண்டுமானால், அது விந்தை.*
*மழலை தலையில் நேர்த்தி வைக்கும் பேதை.*
*இராணுவத்தை ஓட ஓடக் கலைப்பதே சரியான பாதை*

கா.ஓவியன்,
கிளிநொச்சி.

*நல்லூரான் வீதியிலே நாமழுது புலம்பியிருக்க*
*திலீபனவன் (தி)யாகமான நல்லூரான் கோவிலிலே*
*நீசர்கள் இல்லாத நிம்மதி வாழ்வுதனை*
*மழலையவன் பெறுவதற்காய் இப்பாற்செம்போ?*


கே.சுசி,
யாழ்ப்பாணம்.

*பாற்செம்பெடுக்கும் பச்சிளம் பாலகியே*
*பாரினில் நீசெய்த பாவம்தான் என்ன?*
*கோவில்கள் இருந்தும் எங்கள் குடியிருந்த*
*வீடுபோக- படைமுகாம் அகற்றவில்லை.*

வி.கண்ணன்,
மல்லாவி.

இந்தப் போட்டிக்கான நினைவுப்பரிசினை
**அருச்சுனா புகைப்படக் கலையகம்** வழங்குகின்றது.
புதுக்குடியிருப்பு கிளிநொச்சி.

# நீங்காத நினைவில்...



தோற்றம்
29 - 12 - 1979

மறைவு
28 - 09 - 2003

## தியாகர் சண்முகபாலன்

அம்பலவாணர் வீதி, அத்தியடி, யாழ்ப்பாணம்

நந்தவனத்தில் பூத்துக்குலுங்கிய
வாடா மல்லிகை-எங்கள்
சண்முகபாலன்...
கடமையில் கண்ணாயிருந்தவன்
எங்கள் கண்களில் நீர் சொரிய வைத்து
பிரிந்துவிட்டான்.
நண்பனே!
நீ நடந்ததும்
நாங்கள் நடப்பதும்
ஒரே நோக்கம்
ஒரே இலக்கு
அதுவரை பொறுத்திரு நண்பனே!

பணியாளர்கள்
ஈழநாதம்.


**FedEx** Express®

விரைவு · பாதுகாப்பு · நம்பகத்தன்மை



இப்பொழுது உலகின் எப்பாகத்திற்கும் விரைவாக பொதிகள், கடிதங்களை அனுப்பிட நீங்கள் நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்

E.mail:- thirumurugan @ lycosmall.com

**திருமுருகன் கொம் நெற்**

259, கே.கே.எஸ் ரோட், யாழ்ப்பாணம்.
(Opposite All Cylon Distributors)
Tel - 021 222 7835
Fax - 021 222 7836

46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
(பலநோக்கு கூ.ச.முன்பாக)
Tel - 021 222 7560
Fax - 021 2227310

(சி-10133)


**WESTERN UNION**®

பணப் பரிமாற்றம்
இப்பொழுது உலகின் எப்பாகத்திலிருந்தும் துரிதமாகப் பணத்தைப் பெற்றுக்கொள்வதற்கு



## குமரகுரு புடைவை அழகுப்பொருள் வாணிபத்தினரின்

## மாபெரும் பரிசுத்திட்டம் அறிமுகம்





வாடிக்கையாளர் அட்டை மூலம் பல பரிசுகளை வெல்லும் அரியவாய்ப்பு!

வணிக நிறுவனங்கள் எதிலும் இல்லாத இவ் அரிய வாய்ப்பை தவற விடாதீர்கள்!

இவ் அட்டை பெறப்பட்ட நாளிலிருந்து ஒரு வருடகாலத்திற்கு செல்லுபடியாகும்.

- ★இவ் அட்டை மூலம் 10000/= பெறுமதியான பொருள் கொள்வனவு செய்தவுடன் அப்பெறுமதியின் 5% கழிவை உடன் பெற்றுக்கொள்ளலாம்.
- ★குலுக்கல் பரிசாக 10000/= ரூபாய் கொள்வனவு (பகுதிபகுதியாகவோ, ஒரே தடவையிலோ) நிறைவு செய்யப்பட்ட அட்டையின் இலக்கங்கள் நான்கு மாதத்திற்கு ஒரு தடைவை குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்பட்டு முதலாவது பரிசாக ஒரு பவுண் தங்க நாணயம் வழங்கப்படும்.
- ★இவ்வட்டை ஒரு வருடம் பூர்த்தியாகும் வரைக்கும் குலுக்கல் எண்ணுடன் சேர்க்கப்படும்.
- ★பரிசில் வழங்கப்பட்ட எண் அட்டை மீண்டும் குலுக்கல் எண்களுள் சேர்க்கப்படமாட்டாது.
- ★இவ் வாடிக்கையாளர் அட்டை 30.09.2004 வரைக்கும் வழங்கப்படும்.
- ★இவ் அட்டை மொத்தவியாபாரத்திற்கு வழங்கப்படமாட்டாது.

எமது காட்சியறை முற்றிலும் குளிரூட்டப்பட்டது.

★ஆறுதல் பரிசுகளும் வழங்கப்படும்.

**குமரகுரு புடைவை அழகுப்பொருள் வாணிபம்**

யாழ்சாலை, கிளிநொச்சி.
T.P. 021-2285971
(சி-10150)

SM Graphics





## EXPOAIR
your friend in the skies

## எக்ஸ்போ எயார்
வான்வெளியில் உங்கள் நண்பன்

யாழ்-கொழும்பு பயணத்தின் போது ரோல்ஸ் ரோய்ஸ் இயந்திரத்தின் சொகுசுப் பயணத்தினை அனுபவியுங்கள்.

ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள்

021-2223891/6297, 0772348888/2349999,
0112372952/953, 0112360290/291.
e-mail- jaffna@expoavi.com
e-mail- reservations@expoavi.com

**இலங்கையில் முன்னணி வகிக்கும் நம்பத்தகுந்த உள்ளூர் விமான சேவை**

C-10120

Registered as a NewsPaper

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள் -IV

நாதம் 15 | திருவள்ளுவர் ஆண்டு 2035 | புரட்டாதி-01 | 17 -09-2004 | வெள்ளிக்கிழமை | ஓசை -212

படச்சுருள்கள் அனைத்தையும் கணினிதொழில் நுட்பத்தில் ஒருமணி நேரத்திற்குள் கழுவிப் பெற்றுக் கொள்ள
பொற்காலம் வண்ணக் கலையகம்
MILLENNIUM COLOUR LAB
Video, Audio & Studio
மேலும் வீடியோ புகைப்பட சேவைகள்,
கணினி முறை வீடியோ மிக்சிங்,
பாடல் பதிவுகள் படம் பிறேம்செய்தல்.
R.V
பந்தல் சேவை, தர்மபுரம்.
அனைத்திற்கும் பொற்காலம் வண்ணக்கலையகம், யாழ்சாலை, கிளிநொச்சி.
(சி-10335)

# சமாதானம் தொடர்பாக நழுவல் போக்கையே அரசும், அதன் பங்காளிகளும் கைக்கொள்கின்றனர்!

## - எரிக்குடனான சந்திப்பின் பின் சு.ப.தமிழ்ச்செல்வன்

(அலுவலக செய்தியாளர்)

**"அரசும் அதன் பங்காளிக் கட்சிகளும் சமாதானத்தை விரும்புவதாகக் கூறுகிறார்களே தவிர அதனை முன்னெடுப்பதற்கான தீர்மானகரமான முடிவுகள் எதனையும் எடுக்காது நழுவல்போக்கையே கடைப்பிடித்து வருகிறார்கள். அரசின் இத்தகைய நழுவல்போக்கே சமாதானத்தை முன்னெடுப்பதற்கான தாமதமாக இருக்கிறது" இவ்வாறு தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்கள் தெரிவித்துள்ளார்.**



விடுதலைப் புலிகளின் சமாதானச் செயலகத்தில் வைத்து நோர்வேயின் விசேட தூதுவர் எரிக் சூல்ஹெய்ம் அவர்களைச் சந்தித்து பேச்சு நடத்திய பின்னர் செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் கேள்விகளுக்குப் பதிலளிக்கையில்,

***இன்றைய சந்திப்பில் ஆராயப்பட்ட விடயங்கள் எவை?**

இன்றைய சந்திப்பில் எமது தரப்பு நிலைப்பாடுகளை மிகவும் தெளிவாக விளக்கிக் கூறியிருக்கின்றோம். தற்போது பேச்சுவார்த்தை நிலைமைகள் தடைப்பட்டிருப்பதற்கான காரணங்களும், பேச்சுக்களை முன்னெடுப்பதாயின் தமிழ் மக்களினதும்-தமிழீழ விடுதலைப் புலிகளின்

(ivஆம் பக்கம் பார்க்க)

# சமாதான முயற்சியில் புலிகளுக்கு ஆர்வமில்லை போர்நிறுத்த ஒப்பந்தத்தையும் மீறுகின்றனர்

## எரிக்குடனான சந்திப்பின் பின் சனாதிபதி செயலகம் அறிக்கை

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகள் சமாதானப் பேச்சில் நம்பிக்கையற்றவர்களாக போர்நிறுத்த ஒப்பந்தத்தை மீறி வருகின்றனர் எனச் சனாதிபதி சந்திரிகா குற்றம் சாட்டியுள்ளார்.

நேற்று கிளிநொச்சிச் சந்திப்பை முடித்துக் கொழும்பு சென்ற நோர்வேயின் சமாதானத் தூதுவர் எரிக்சூல்ஹெய்ம் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவைச் சந்தித்துக் கிளிநொச்சிச் சந்திப்புக் குறித்த தகவலைத் தெரிவித்தன் பின்னர் சனாதிபதி செயலகத்தால் வெளியிடப்பட்ட செய்திக் குறிப்பொன்றிலேயே சனாதிபதி இந்தக் குற்றச் சாட்டை முன்வைத்துள்ளார். ஏ-9பாதையைத் திறந்து வடபகுதி மக்களுக்கு வசதிகளை

(ivஆம் பக்கம் பார்க்க)

# உணர்வெழுச்சியுடன் நடைபெற்ற தியாகி திலீபனின் 2 ஆம் நாள் நிகழ்வு

தியாகி லெப்.கேணல் திலீபனின் பதினேழாம் ஆண்டு நிறைவு நிகழ்வின் இரண்டாம் நாள் நிகழ்வுகள் நேற்றைய தினம் தமிழீழப் பிரதேசமெங்கும் உணர்வெழுச்சியுடன் அனுஷ்டிக்கப்பட்டன.

இரண்டாம் நாளான நேற்றைய தினம் 9.55 மணிக்கு தியாகி லெப்.கேணல்.திலீபனின் திருவுருவப்படங்கள் வைக்கப்பட்டு, நினைவு நிகழ்வுகள் ஆரம்பிக்கப்பட்டன. அனைத்து மாவட்டங்கள் மற்றும் பிரதேசங்களில் மௌன அஞ்சலி செலுத்தி திருவுருவப் படங்களுக்குப் போராளிகள், பொதுமக்கள், பாடசாலை

(ivஆம் பக்கம் பார்க்க)

# அமெ.பிரஜைகளின் நலனை ஆராயக் குழு யாழ்.வரும்

இலங்கைக்கான அமெரிக்க தூதரக அதிகாரிகள் கொண்ட விசேட குழு ஒன்று எதிர்வரும் 20 ஆம் திகதி யாழ்.குடாநாட்டிற்கு விஜயம் செய்யவுள்ளது.

இடம்பெயர்ந்த மக்கள் மற்றும் அமெரிக்காவின் பிரஜா உரிமை பெற்ற யாழ். குடாநாட்டவர்கள், யாழ் குடாநாட்டில் பல்வேறு மனித நேயப் பணிகளுக்காகவும் தங்கியுள்ள அமெரிக்கப் பிரஜைகள் ஆகியோரின் நலன்கள் குறித்து

(ivஆம் பக்கம் பார்க்க)

# புலிகளின் இ.த.அ.சபையின் அடிப்படையில் சிறிலங்கா அரசு பேச்சை ஆரம்பிக்க வேண்டும்

## இம்முறை பயணத்திலும் பயனில்லை என்கிறார் எரிக்



(கொழும்பு)

மக்களின் கருத்துக்களுக்கு மதிப்பளித்து புலிக்ளால் முன்வைக்கப்பட்டுள்ள இடைக்கால தன்னாட்சி அதிகார சபையின் அடிப்படையில் பேச்சுவார்த்தையை சிறிலங்கா அரசு ஆரம்பிக்க வேண்டுமென நோர்வேயின் விசேட சமாதானத் தூதுவர் எரிக்சூல்ஹெய்ம் கேட்டுக் கொண்டுள்ளார். நேற்று கிளிநொச்சியில் தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளரைச் சந்தித்து சமாதானப் பேச்சுவார்த்தையை மீள ஆரம்பிப்பது பற்றி பேச்சுவார்த்தை நடத்திய பின்னர் ஊடகவியலாளர்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அத்துடன் போர்நிறுத்த உடன்படிக்கையைத் தீவிரமாகக் கடைப்பிடிப்பது கட்டாய நிபந்தனையாக மாறியுள்ளதாகவும், சமாதானப் பேச்சுவார்த்தைகளை மீண்டும் தொடங்க வேண்டுமானால் அரசும் - புலிகளும் நிலையான முடிவுகளை மேற்கொள்ள வேண்டுமெனவும் தெரிவித்த எரிக் இம்முறை தமது விஜயத்தின் போது பலரது கருத்துக்களை அறிந்த போதிலும் இது முன்னேற்ற மற்ற பலனையே தந்துள்ளது எனவும் கூறியுள்ளார்.

இலங்கையில் சமாதானத்தை ஏற்படுத்த தமது நாடு தொடர்ந்து முயற்சித்து வருகிறது. அத்துடன் நாட்டில் சமாதானப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட்டு அதன் மூலம் இனப்பிரச்சனைக்கு நிரந்தர தீர்வு காணப்பட்டால் அது சிங்கள, தமிழ் மக்களின் சுபீட்சத்துக்கு உதவும். ஏனைய நாடுகளுடன் ஒப்பிடுகையில் இலங்கையில் போர்நிறுத்த ஒப்பந்தம் ஓரளவிற்கு திருப்தியளிக்கிறது. போர்நிறுத்த உடன்பாட்டுக் காலத்தில் நாட்டில்

(ivஆம் பக்கம் பார்க்க)

# புலிகளுடன் பேசுவதற்கு முன்னர் அரசிற்குக் கொள்கை ஒன்று தேவை

## ஐக்கிய தேசியக்கட்சி தெரிவிப்பு

தமிழீழ விடுதலைப்புலிகளுடன் பேச்சு நடத்துவதற்கு முன்னர் அரசாங்கம் ஒரு கொள்கையைக் கடைபிடிக்கவேண்டியது அவசியம் என ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது. நேற்று கொழும்பில் நடைபெற்ற ஊடக மாநாட்டில் கருத்துரைத்த பாராளுமன்ற உறுப்பினர் ஜி.எல் பீரிஸ் தமிழீழ விடுதலைப்புலிகளின் இடைக்கால தன்னாட்சி தொடர்பில் பேச்சுவார்த்தையை ஆரம்பிப்பதற்கு தமது கட்சி ஆதரவை வழங்கும் என குறிப்பிட்டார்.

அதன் பின்னர் இறுதித் தீர்வுக்கான தடைகளைப் பற்றி ஆராயலாம் எனவும் அவர் குறிப்பிட்டார். அரசாங்கத்தில்

(ivஆம் பக்கம் பார்க்க)

*விடுதலைப் புலிகள் வாழவேண்டுமென்றோ, ஆளவேண்டுமென்றோ ஆசைகொள்ளவில்லை. எமது மக்களிற்கு நிரந்தரமான, சுபீட்சமான எதிர்காலம் கிடைக்குமானால், அனைவரும் மரணிக்கவும் தயாராக உள்ளோம்.*

**தியாகி லெப்.கேணல் திலீபன்**










யாழ்ப்பாணம்,வவுனியாவில் தியாகி லெப்.கேணல்.திலீபனின் 17 ஆம் ஆண்டு நினைவு நிகழ்வின்முதலாம்நாள் நிகழ்வுகள்

# மாவீரர்களின் பெற்றோர்களிடம் 10 வீடுகள் நேற்று முன்தினம் கையளிப்பு

(அலுவலக செய்தியாளர்)

தாயக விடுதலைப்போரில் வீரகாவியமான மாவீரர்களின் குடும்பத்தினருக்கு வழங்குவதற்கென மாவீரர் போராளிகள் குடும்ப நலன் காப்பகத்தால் அமைக்கப்பட்டு வரும் வீடுகளில் ஒரு தொகுதி வீடுகள் மாவீரா களின் பெற்றோர்களிடம் நேற்று முன்தினம் கையளிக்கப்பட்டுள ளன.



வவுனியா மாவட்டத்தில் கனகராயன் குளத்தில் 5 வீடுகளும் கிளிநொச்சி மாவட்டத்தில் 5 வீடுகளு மாக மொத்தம் 10 வீடுகள் நேற்று முன்தினம் கையளிக்கப்பட்டன. நேற்று முன்தினம் காலை 9.30 மணியளவில் கனகராயன் குளத்தில் வீடு கையளிப்பு நிகழ்வு இடம் பெற்றது. இந்நிகழ்வில் தமிழீழ தேசியக்கொடியை மட்டு அம்பாறை மாவட்ட துணைத்தளபதி பிரபா ஏற்றி வைத்தார். தியாகி திலீபன் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மட்டு அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன் சுடரேற்றி மலர்மாலை அணிவித்தார்.

தொடர்ந்து மாவீரர்களின் பெற்றோர்களிடம் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட வீடுகள் கையளிக்கப்பட்டன. இந் நிகழ்வில் தமிழீழ அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன், தமிழீழ மாவீரர் போராளி குடும்ப நலன் காப்பகப் பொறுப்பாளர் திருக்குமரன், அம்பாறை அரசியல் துறைப் பொறுப்பாளர் குயிலின்பன், மட்டு அம்பாறை தலைமைச் செயலகப் பொறுப்பாளர் மாசல், மட்டு மாவட்ட நிர்வாக சேவைப் பொறுப்பாளர் தயாமோகன், வவுனியா மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் ஞானவேல், அரசியல்துறை மகளிர் பொறுப்பாளர் அலை, வவுனியா மாவட்ட தாக்குதல் அணிப் பொறுப்பாளர் ஆனந்தன் உள்ளிட்டோர் கலந்து கொண்டு வீடுகளைக் கையளித்தனர்.

இதேபோல கிளி மாவட்டம் தேராவில், சுண்டிக்குளம், மயில் வாகனபுரம் ஆகிய பகுதிகளில் 5 வீடுகள் மாவீரர் குடும்பங்களிடம் நேற்று மாலை 3 மணியளவில் கையளிக்கப்பட்டன. இந் நிகழ்வில் மாவீரர், போராளி குடும்ப நலன் காப்பகப் பொறுப்பாளர் திருக்குமரன், கிளிநொச்சி மாவட்ட மாவீரர் போராளி குடும்ப நலன் காப்பகப் பொறுப்பாளர் முத்தன், கிளி மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் காண்டீபன், மாவீரர் போராளி குடும்பநலன் காப்பகத்தைச் சேர்ந்த ஐங்கரன் ஆகியோர் கலந்து வீடுகளை மாவீரர் குடும்பங்களிடம் கையளித்தனர். (லோ,தீ)

# தொழிற் பயிற்சிக் கல்லூரி அமைப்பது குறித்து ஆராய்வு

(புதுக்குடியிருப்பு)

போரினால் பாதிக்கப்பட்ட இளைஞர், யுவதிகளுக்கான தொழிற் பயிற்சிக் கல்லூரி ஒன்றை புதுக்குடியிருப்பில் ஆரம்பிப்பது தொடர்பான முக்கிய கலந்துரையாடல் அப் பகுதியிலுள்ள முல்லைத்தீவு மாவட்ட அரசியல்துறைச் செயலகத்தில் நேற்று மாலை 5.30 மணிக்கு முல்லை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் செ.முகுந்தன் அவர்களின் தலைமையில் இடம் பெற்றது.

இம் முக்கிய கலந்துரையாடலில் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ச.கனகரத்தினம், முல்லை வலயப் பிரதிக்கல்விப் பணிப்பாளர்களான ச.நாகரத்தினம், பொ.பேரின்பநாயகம், கரைத்துறைப் பற்று விசேட ஆணையாளர் கிருஸ்ணபிள்ளை உட்படப் பல முக்கியஸ்தர்கள் கலந்து கொண்டனர். (08)

# 3 கிலோ ஹெரோயின் மன்னாரில் கைப்பற்றப்பட்டது

மன்னாரில் இருந்து சிலாபத்துக்கு கொண்டு செல்லப்பட்ட ஹெரோயின் போதைப்பொருளை மன்னார் பொலிசார் கைப்பற்றியுள்ளனர். நேற்று முன்தினம் இரவு இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. முருங்கன் பகுதியில் அமைந்துள்ள சோதனைச் சாவடியில் வைத்து சிலாபத்திற்குச் சென்று கொண்டிருந்த பார ஊர்தியை சோதனை செய்த போதே இந்த போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது. 3 கிலோக் கிராம் எடையைக் கொண்ட இந்தப் போதைப் பொருளின் சந்தைப்பெறுமதி 60 இலட்சம் என மதிப்பிடப்பட்டுள்ளது.

# பாவனைப் பெருட்கள் வழங்கப்பட்டன

பச்சிலைப்பள்ளி எல்லைக்குட்பட்ட மீள்குடியமர்ந்த 150 குடும்பங்களுக்கு யு.என்.எச்.சி.ஆர் நிறுவனத்தின் நிதியுதவியுடன் பச்சிலைப்பள்ளி அபி.பு.க அனுசரணையுடன் பாவனைப்பொருட்கள் வழங்கப்பட்டன. அலவாங்கு, குடம்,கத்தி, தறப்பாள், பாய், அலுமினியச்சட்டி செற மொத்தமாக 3,000ரூபா பெறுமதியான பொருட்கள் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகத்திற்குட்பட்ட இயக்கச்சிக் கிராமத்திலும், வீடு எரிந்த இரண்டு குடும்பங்களுக்கு சோபா நிறுவனத்தின் நிதியுதவியுடன் பச்சிலைப்பள்ளி புனர்வாழ்வு அபிவிருத்தி நிறுவனத்தின் அல்லாத பாவனைப் பொருட்கள் வழங்கப்பட்டுள்ளன.(11)

# நெருப்புக் காய்ச்சல் நோயிலிருந்து பாதுகாக்க உணவு கையாளும் நிலையங்களுக்கான அறிவுறுத்தல்

தற்பொழுது எமது பகுதிகளில் குறிப்பாக புளியங்குளம் பகுதியில் நெருப்புக்காய்ச்சல் நோயின் தாக்கம் அதிகரித்துக் காணப்படுகின்றது. எனவே முக்கியமாக மக்கள் கூடும் புளியங்குளம் தடைமுகாம் பகுதி, திருமுறிகண்டி ஆலயப்பகுதி, கிளிநகர்ப்பகுதி, பளைநகர்ப் பகுதி, முகமாலை தடைமுகாம்பகுதி, மாங்குளம் நகர்ப்பகுதி ஆகிய இடங்களில் கூடுதலான சுகாதார நடைமுறைகளைப பின்பற்று மாறு உணவக, சுவையக உரிமை யாளர்களைத் தமிழீழ சுகாதார சேவையினர் கேட்டுக் கொள்கின்ற னர்.

* தூசிபடிந்த, இலையான் மொய்த்த, சமைத்த,சமைக்காமல் நேரில் உண்ணும் உணவுகளை விற்பனை செய்யாதீர்கள்.

*குடிப்பதற்குக் கொதித்தாறிய நீரை அல்லது பாதுகாப்பான நீரை மட்டும் வழங்குங்கள்.

*பழுதடைந்த, பதனிழந்த, சீரழிந்த, காலாவதியான உணவுகளை மக்களுக்கு வழங்குவதைத் தவிருங்கள்.

*சமைத்த உணவுவகைகளை எவ்வேளையும் மூடிப்பாதுகாத்துக் கொள்ளுங்கள்.

*(ஐஸ்கிறீம்)குளிர்களி,குளிர்பான வகைகளை மக்கள் நுகர்விற்கு வழங்கும்போது தொற்று ஏற்படாத வகையில் அவதானமாக இருங்கள்.

*நிலையத்தில் பணியாற்றும் பணியாளர்கள் மலம் கழித்தபின், உணவுபரிமாறமுன், உணவு சமைக்க முன்,உணவு உண்ணமுன் கைகளுக்கு சவர்க்காரமிட்டுக் கழுவுவதைப பழக்கத்தில் கொள்ளுங்கள்.

*வீதியோரங்களில் தொற்று ஏற்படக்கூடியவகையில் உணவுகளைத் திறந்துவைத்து விற்பனை செய்யாதீர்கள்.

*நிலையத்தில் உணவு கையாள்பவர்கள் பாவிப்பதற்கு நீரடைப்பு மலசல கூடத்தைப் பயன்படுத்த வேண்டும்.

*நிலையம் இலையான் பெருக்கமின்றி எவ்வேளையும் பேணப்பட வேண்டும்.

*நிலையப்பாவனைக்கு பாதுகாப்பான தூய நீரைப்பாவியுங்கள்.

# அனுமதி பெறவேண்டும்

பூநகரி எல்லைப் பகுதிகளில் அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள் கட்டடங்கள் அமைப்பின் பிரதேச சபையின் அனுமதியைப் பெற வேண்டும்.இதனை மீறுவோர் மீது பிரதேச சபைச்சட்டத்திற்கு அமைய நடவடிக்கை எடுக்கப்படும் எனப் பிரதேச சபைச் செயலாளர் அறிவித்துள்ளார். (34)


## கிளிநொச்சி பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்

எமது சங்கத்திற்குச் சொந்தமான கோணாவில் பகுதியில் அமைந்துள்ள

01) 10ஏக்கர் விஸ்தீரணமுள்ள வயற்காணி,இல,55, அக்கராயன்குளம், கோணாவில். (பயன்தரக் கூடிய 75 தென்னைமரங்கள் அடங்கலாக)

02) மேட்டுக்காணி,இல,87,அக்கராயன்குளம்,கோணாவில். (பயன்தரு தென்னை, மா,பலா,தோடை போன்றன அடங்கலாக)

இரண்டு காணிகளும் மூன்றுவருட ஒப்பந்த அடிப்படையில் எதிர்வரும் 25.09.2004ஆம் திகதி முற்பகல் 11.00 மணிக்கு இல.87, அக்கராயன்குளம், கோணாவில் என்னும் இடத்தில் பகிரங்க ஏலத்தில் குத்தகைக்கு விடப்படும்.

ஏலம் கோருபவர் மீளளிக்கப்படாத வைப்புப்பணமாக ரூபா 150 /= செலுத்த வேண்டும்.

மேலதிக தகவல் பெற விரும்புவோர் ஏ-09 வீதி ,கரடிப்போக்குச் சந்தியில் அமைந்துள்ள சங்கத் தலைமைக் காரியாலயத்தில் தொடர்பு கொள்ளவும் அல்லது குறித்த மேட்டுக்காணியில் 18.09.2004 ஆம் திகதி முற்பகல் 10.00 மணி தொடக்கம் பிற்பகல் 1.00 மணிவரை தொடர்புகொள்ளலாம்.

ப. இராமச்சந்திரன்,
தலைவர்,
கிளி/ப.தெ.வ.அ.கூ.சங்கம்.

[சீ.10223]

# சேது சமுத்திரத்திட்டத்தால் ஏற்படப்போகும் பாதிப்புக்குறித்து ஆராய அமைச்சர் குழு

(கொழும்பு)

**இலங்கை தொடர்பாகவும், அதன் பொருளாதாரம், சுற்றாடல் ஆகியன தொடர்பாகவும் சேதுசமுத்திர வேலைத்திட்டம் எவ்வாறு பாதிப்புக்களை ஏற்படுத்தும் என்பதை ஆராய அமைச்சர்களுக்கிடையிலான குழுவொன்று அமைக்கப்படவுள்ளது.**

இதற்கான அங்கீகாரத்தை அமைச்சரவை வழங்கியுள்ளது. வெளிநாட்டு அலுவல்களின் அமைச்சர்களின் ஆலோசனையின் அடிப்படையில் இக்குழு அமைக்கப்படவுள்ளது.

இவ் வேலைத்திட்டம் தொடர்பாக அரசாங்கம் அதிக கவனம் செலுத்தியுள்ளதென அமைச்சரவைப் பேச்சாளர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கும்-இந்தியாவிற்குமிடையில் 44.9 கடல்மைல் கால்வாய் ஒன்று இத்திட்டத்தின் ஊடாக அமைக்கப்படவுள்ளது. அனைத்துலக கடல்மார்க்க போக்குவரத்துக்கள் இவ்வேலைத்திட்டத்தினால் பாதிப்படையலாம் எனவும், அதில் இலங்கை மீனவரின் ஜீவனோபாயம், சுற்றாடல் என்பன பாதிக்கப்படலாம் எனவும் எனவே இலங்கையில் மேலும் இவ் வேலைத்திட்டம் எத்தகைய பாதிப்புக்களை ஏற்படுத்தும் என அறிவதற்கும் இந்திய அரசிற்கு இதுதொடர்பாக ஆலோசனைகளை வழங்கவும் லக்ஷ்மன் கதிர்காமர் தலைமையில் குழுவொன்றை அமைக்க அமைச்சரவை முடிவெடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

~அமைச்சு அலுவலகத்திற்குள்

# பலாத்காரமாக நுழைந்த பிக்குகள் பலாத்காரமாக வெளியேற்றப்பட்டனர்

(கொழும்பு)

பௌத்த மக்களையும் புத்தரையும் அவமதிக்கும் 'ஹொலிவூட் புத்தா' என்ற படத்தைத் தடைசெய்யுமாறு புத்தசாசன அமைச்சுக்கு அறிவித்து, இதுவரை அதற்குத் தகுந்த நடவடிக்கைகள் எடுக்கத் தவறியதால் புத்தசாசன அமைச்சின் செயலகத்திற்குள் பலாத்காரமாகப் பிரவேசித்த தேசிய பிக்குமார் சம்மேளனத்தைச் சேர்ந்த பிக்குகளை, புத்தசாசன அமைச்சின் செயலாளர் டி.டபிள்யு. அபேவிக்கிரம நேற்று பலாத்காரமாக வெளியேற்றியுள்ளார்.

கள்ளர்கள் போல் காரியாலயத்தில் புகுந்தபடியால் பொலிசாருக்கு அறிவிப்பதற்கு முன்னதாக வெளியேறும்படி அவர் கடும் கோபத்துடன் கூறியதையடுத்தே பிக்குகள் வெளியேறியுள்ளனர்.

நேற்று முன்தினம் பௌத்த சம்மேளனத்தின் பிக்குமார்கள் எனது காரியாலயத்தில் புகுந்து அநாகரிகமாக நடந்து கொண்டதுடன், பௌத்த பிக்குமாருக்குரிய தராதரத்துடன் இவர்கள் நடந்து கொள்ளவில்லை எனவும், காடையர்கள் செய்யும் அட்டகாசம் போல் இவர்களின் செய்கைகள் அமைந்திருந்தன எனவும், இதனால் எனது உயிருக்கு ஆபத்து ஏற்பட இடமிருந்ததாகவும் மிக மனவருத்தத்துடன் பத்திரிகை ஊடகவியலாளருக்கு புத்தசாசன அமைச்சின் செயலாளர் டி.டபிள்யு.அபேவிக்கிரம தெரிவித்தார்.

# மது வழங்க மறுத்த இராணுவக் கோப்ரல் இளைஞர் குழுவால் அடித்துக்கொலை

(கொழும்பு)

இளைஞர் குழுவொன்றினால் இராணுவக் கோப்ரல் ஒருவர் அடித்துக்கொல்லப்பட்டுள்ளார். இதுபற்றி மேலும் தெரிய வருவதாவது;

பாணந்துறை- கேனமுல்ல இராணுவ முகாமைச் சேர்ந்த பிரசன்னா தர்மசிங்க என்ற இந்த இராணுவக் கோப்ரல் சென்ற ஞாயிறு தனது மகனின் பிறந்த நாளுக்காக வீடு சென்று,இரவு 9.30மணியளவில் நண்பருடன் கடற்கரையில் மது அருந்திக் கொண்டிருந்த போது, அங்கு வந்த ஒன்பது இளைஞர்கள் தமக்கும் மது தருமாறு கேட்ட போது கோப்ரல் மறுக்கவே இளைஞர்கள் அவரை கடுமையாகத் தாக்கியதையடுத்து காயமடைந்த கோப்ரல் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு அங்கு உயிரிழந்தார்.

குறித்த இளைஞர்கள் பாணந்துறைப் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

# ஐ.நா.பொதுக்கூட்டத்திற்குச் செல்லும் சந்திரிகா பல நாட்டுத் தலைவர்களைச் சந்தித்துப் பேசுவார்

எதிர்வரும் 21ஆம் திகதி நடைபெறவுள்ள ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் 59ஆவது பொதுக்கூட்டத்தில் கலந்துகொள்வதற்காக நியூயோர்க் செல்கின்ற சனாதிபதி சந்திரிகா அங்கு பல அரசுத் தலைவர்களுடன் இருதரப்புப் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார் எனத் தெரியவருகிறது.

பாகிஸ்தான் சனாதிபதி முஷாரப், இந்தியப்பிரதமர் மன்மோகன்சிங் மற்றும் ஜப்பானியப் பிரதமர் யுனிசிரோ கொய்சுமி உட்படப் பல நாடுகளின் தலைவர்களைச் சந்திக்கவுள்ளார். இதன்போது சமாதான நடவடிக்கையின் தற்போதைய நிலைமைபற்றி கூடுதலாகக் கவனம் செலுத்தப்படுமென சனாதிபதி செயலகம் தெரிவித்துள்ளது.

இதேவேளை ஐக்கியநாடுகள் பொதுச்சபையின் 59ஆவது கூட்டத் தொடரின் ஆரம்ப தினத்தன்று உரையாற்றவுள்ள நாடுகளின் தலைவர்களில் சனாதிபதியும் அடங்குகின்றார். இவருடன் வெளியுறவு அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமார், அனுரா ஆகியோரும் செல்லவுள்ளனர்.

# புதிய பாராளுமன்றம் கூடி 4 மாதங்களாகியும் எந்தவித ஆக்க பூர்வமான நடவடிக்கையும் இல்லை

-பா.உறுப்பினர் ரவிராஜ் தெரிவிப்பு

(லண்டன்)

சிறிலங்காவில் புதிய பாராளுமன்றம் கூடி நான்கு மாதங்கள் கடந்த விட்டன. ஆனால் எந்த விதமான ஆக்கபூர்வமான நடவடிக்கைகளும் பாராளுமன்றத்தில் இடம்பெறவில்லையென தமிழ்த் தேசியக் கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர்கள் ரவிராஜ் கூறியுள்ளார்.

அண்மையில் லண்டன் சென்ற இவர் பி.பி.சி தமிழோசைக்கு வழங்கிய செவ்வியிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் கூறுகையில்: தமிழ் தேசிய கூட்டமைப்பினரான நாங்கள் இந்தக் காலப்பகுதியில் பல இராஜதந்திரிகளை சர்வதேச ரீதியாகவும் அதேபோன்று பாராளுமன்றத்திற்கு வெளியேயும் நாங்கள் சந்தித்து எமது கருத்துக்களையும், நியாயப்பாடுகளையும் எடுத்துக் கூறியுள்ளோம்.

இதேவேளை மக்களோடு இணைந்து போராடுகின்றோம். தமிழீழ விடுதலைப்புலிகளுடைய இராணுவப் பலத்திற்கு அரசியல் பலத்தைக் கொடுக்கின்ற ஒரு சக்தியாக எங்களை மாற்றி அதற்கான தெளிவான நிலைப்பாடுகளை மேற்கொண்டு வருகின்றோம் என்றார்.

# மீண்டும் டீசல் விலையை அதிகரிக்க மத்தியவங்கி ஆளுனர் சிபார்சு

(கொழும்பு)

டீசல் விலையை மீண்டும் அதிகரிக்காவிட்டால் நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் பெரும் பாதிப்பு ஏற்படும் என மத்திய வங்கி ஆளுனர் சுனில் மென்டிஸ் கூறியுள்ளார்.

டீசல் விநியோகத்தால் அரசுக்கு ஏற்படும் நட்டத்தைச் சமாளிப்பதில் மிகக் கஷ்ரம் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# கலாசாரத்தை சீர் குலைக்கும் நாடகம், விளம்பரத்திற்குத் தடை

நேற்று முதல் அமுல்

(கொழும்பு)

நமது நாட்டில் கலாசாரத்தை சீர்குலைக்கும் பள்ளிக்கூட சிறுவர் சிறுமியர்களைப் பாதிக்கும் சின்னத்திரை நாடகங்களும், வியாபார விளம்பரங்களும் இம்மாதம் 16ஆம் திகதியில் இருந்து தடை செய்யப்படுவதாக ஊடகத்துறை அமைச்சர் மங்கள சமரவீர அறிவித்துள்ளார்.

அதேபோல ரூபவாகினி கூட்டுத் ஸ்தாபனத்தில் தயாரிக்கப்படும் நாடகங்கள் ஏனைய நிகழ்ச்சிகள் யாவும் தமது தாய் மொழியில் வெளியிடப்பட வேண்டுமென மங்கள சமரவீர மேலும் தெரிவித்துள்ளார்.

## ஒத்திவைப்பு

(கொழும்பு)

சனாதிபதி மாளிகையில் இருந்த சரித்திரப் புகழ் பெற்ற தபெம பல்ஒப முலகிரிகல ஓவியத்தை மறைந்த சனாதிபதி ஆர்.பிரேமதாச வின் மருமகன் ரொகான் ஜயக்கொடி எடுத்துள்ளதாக குற்றம் சாட்டப்பட்ட வழக்கை எதிர்வரும் 2005 ஆம் ஆண்டு ஒத்திப் போடுவதாக கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி எரிக் பஸ்நாயக கூறியுள்ளார்.

## முஸ்லிம் பிரதேசங்களில் ஹர்த்தால்

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசின் ஸ்தாபகத் தலைவர் மறைந்த எம்.எச்.எம்.அஸ்ரப் நினைவாக நேற்று கிழக்கு மாகாண முஸ்லிம் பிரதேசங்களில் பூரண துக்கதினம் அனுஷ்டிக்கப்பட்டது. 2000 ஆம் ஆண்டு கொழும்பிலிருந்து அம்பாறைக்கு உலங்குவானூர்தியில் பயணம் செய்து கொண்டிருந்த சமயம் மாவனல்லையில் இடம்பெற்ற விபத்தில் அன்னார் உட்பட 8 பேர் அகால மரணமடைந்தனர். இத் துக்கதினம் காரணமாக அப் பிரதேசங்களின் வழமை நிலை பாதிக்கப்பட்டிருந்தது.

# டாக்காவில் வெள்ளப்பெருக்கு சகல அலுவலகங்களும் மூடப்பட்டன

(டாக்கா)

பங்களாதேஷ் தலைநகர் டாக்காவில் பலத்த மழை காரணமாக பல வீதிகள் நீரினால் மூடப்பட்டுள்ளன. இதனால் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

தலைநகரிலுள்ள அனைத்து அரச அலுவலகங்களும் மூடப்பட்டுள்ளன. நாட்டில் எற்பட்டுள்ள கடும் வெள்ளப் பெருக்கின் காரணமாகவே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.. என்று அரசு கூறியுள்ளது.

கடந்த ஜுலையில் பங்களாதேஷில் எற்பட்ட வெள்ளப் பெருக்கில் 700 பேர் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது.

# ஐந்து பலஸ்தீன தீவிரவாதிகள் பலி

(ஜெருசலேம்)


மேற்குக்கரை நகரமான நட்ஸலசில் இஸ்ரேலிய இராணுவத்தினர் நேற்று முன்தினம் காலை நடத்திய தாக்குதலில் 5பலஸ்தீனத் தீவிரவாதிகள் கொல்லப்பட்டுள்ளனர்.

இஸ்ரேலிய இராணுவ அதிகாரி ஒருவர் தகவல் தருகையில், பலஸ்தீனத் தீவிரவாதிகள் இஸ்ரேலிய வீரர்கள் மீது தாக்குதல் நடத்தியதன் காரணமாகவே அவர்கள் திருப்பித்தாக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டதாகத் தெரிவித்தார்.

இத்தாக்குதல் சம்பவத்தை நேரில் பார்த்தவர்கள் கருத்து வெளியிடுகையில், இறந்தவர்களில் 4பேர் "அல்அக்ஸாரா" தீவிரவாதக் குழுவைச் சேர்ந்தவர்கள் என்று தெரிவித்துள்ளார்கள்.

-ஐ.சி.சி. கிண்ணத்திற்கான போட்டி-

# அவுஸ்.அரையிறுதிக்கு, நியூசிலாந்து வெளியேற்றம்



(லண்டன்)

ஐ.சி.சி.கிண்ணத்திற்கான 'ஏ' பிரிவு ஆட்டம் ஒன்றில் அவுஸ்திரேலிய அணியிடம் நியூசிலாந்து அணி ஏழு விக்கெட்டுக்களால் தோல்விகண்டது. இதன்மூலம் இப்போட்டியில் இருந்து நியூசிலாந்து அணி வெளியேற அவுஸ்.அணி அரையிறுதிப் போட்டிக்குத் தெரிவாகியுள்ளது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற அவுஸ்திரேலியா நியூசிலாந்து அணியைத் துடுப்பெடுத்தாடுமாறு கேட்டுக் கொண்டது. இதனைத் தொடர்ந்து களமிறங்கிய நியூசிலாந்து அணித் தொடக்கவீரர்கள் ஆட்டத்தை விறுவிறுப்பாக ஆரம்பித்தனர். எனினும் முப்பதாவது ஓட்டத்தில் இவ்வணி தனது முதல் விக்கெட்டை இழந்தது. இதனைத் தொடர்ந்து அடுத்தடுத்து விக்கெட்டை இழ்ந்த நியூ சிலாந்து அணி ஒருஆட்டத்தில் ஏழு விக்கெட் இழப் பிற்கு 89என்ற நிலையில் இருந்தது. எட்டாவது, ஒன்பதாவது விக்கெட்டுக்களின் இணைப்பாட்டத்தினால் ஓட்ட எண்ணிக்கை 50 ஓவர்களில் ஒன்பது விக்கெட் இழப்பிற்கு 198 என்ற இலக்கை எட்டியது.

அவுஸ்.அணி தரப்பில் மைக்கிராத் மூன்று விக்கெட்டுக்களையும், கஸ்பிரோவச் மூன்று விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய அவுஸ்.அணி 37.4 ஓவர்களில் மூன்று விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. சைமன்ஸ் ஆட்டமிழக்காது. 71 ஓட்டங்களையும், மாட்டின் ஆட்டமிழக்காது 60ஓட்டங்களையும், ஸ்த்தியூஹைடன் 47 ஓட்டங்களையும் அணிக்காகப் பெற்றுக்கொடுத்தனர். சைமன்ஸ் ஆட்ட நாயகனாகத் தெரிவுசெய்யப்பட்டார்.

# மிருசுவில் பாடசாலைக்குள் புகுந்த பொலிசார்

# மாணவர், ஆசிரியை மீது மோசமாகத் தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சியில் மிருசுவில் வடக்குப் பகுதியிலுள்ள மாலை நேரக்கல்விக்கூடம் ஒன்றினுள் புகுந்த பொலிசார் அங்கு கல்வி கற்பித்துக் கொண்டிருந்த ஆசிரியை மீதும், மாணவர்கள் மீதும் மோசமான தாக்குதல்களை நடத்தியுள்ளதாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவில் யாழ்அலுவலகத்தில் நேற்று முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கடந்த செவ்வாய்க் கிழமை இச்சம்பவம் இடம் பெற்றுள்ளது. இதன்போது பாதிக்கப்பட்ட ஆசிரியையான த.இந்திராணி என்பவரே இம் முறைப்பாட்டைச் செய்துள்ளார். இதேவேளை பொலிசாரால் தாக்கப்பட்ட மாணவர்கள் அனைவரும் 15 வயதிற்குக் குறைவானவர்கள் ஆகும்.

கடந்த காலத்தில் யுத்த அனர்த்தங்களைத் தொடர்ந்து பாடசாலைக் கல்வியைக் கைவிட்ட மாணவர்களின் நலன் கருதி "இழந்த கல்வியை மீளப் பெறல்" எனும் திட்டம் ஒன்றை யுனிசெவ் அமுற்படுத்தியுள்ளது. கல்வித்திணைக்களத்துடன் இணைந்ததாக இம்மாலை நேர வகுப்புக்கள் குடாநாட்டின் பல பகுதிகளிலும் நடாத்தப்பட்டு வருகின்றனர். அதற்கமைய இங்கு நடத்தப்பட்டு வரும் கல்விக்கூடம் ஒன்றிலேயே இத்தாக்குதல் இடம் பெற்றுள்ளது.

ஜீப் வண்டிகளில் அங்கு வந்திருந்த 15 இற்கும் அதிகமான கொடிகாமப் பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த பொலிசாரே இத்தாக்குதலை நடாத்தியதாக அம்முறைப்பாட்டில் மேலும் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

அப்பகுதியில் இரு குழுக்களிடையே இடம் பெற்ற கைகலப்புச் சம்பவம் ஒன்றின் பின்னணியிலேயே இத்தாக்குதல் இடம் பெற்றதாக தெரிவிக்கப் படுகிறது. (27)

## புலிகளின்....

சுமார் 300 பேர்வரை கொல்லப் பட்டுள்ளனர். இல்லையென்றால் 20ஆயிரதத்திற்கும் அதிகமானோர் கொல்லப்பட்டிருப்பர்.மனிதப்படுகொலைகள் தவிர்க்கப்பட வேண்டும் என்றும் எரிக் தெரிவித்தார்.

சமாதான முன்னெடுப்புக்கள் நோர்வேத் தரப்பிற்கு திருப்தி அளிக்கிறதா? என வினாவிய வேளை அதனைத் தம்மால் நிச்சயமாகக் கூற முடியாது எனவும் நாம் ஒரு தரப்புக் கூறுவதை மறு தரப்பிற்குத் தெரிவிக்கும் பணியில் மட்டுமே ஈடுபட்டுள்ளோம் என்றார்.

கிளிநொச்சிக்கான விஜயம் அரசிற்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் தொடர்பைப் பேணுவதற்கான வழமை போன்ற ஒரு விஜயமாகவே உள்ளது. நான் யாழ்ப்பாணம் சென்று இராணுவத் தளபதி தென்னக்கோனையும் யாழ்.மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதியையும் யாழ்.மாவட்ட வெகுசன அமைப்புக்களின் பிரதிநிதிகளையும் சந்தித்துக் கதைத்தேன். பின் தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளரைச் சந்தித்தேன். இதன்பின் உடனடியாக சனாதிபதியையும், பிரதமரையும் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சரையும் மற்றும் பலரையும் சந்திக்கவுள்ளேன். சமாதானப் பேச்சுக்கள் மூலம் நிரந்தரத் தீர்வு ஏற்பட்டால் அது விடுதலைப்புலிகள், அரசாங்கம் முக்கியமாக இலங்கை மக்களின் அபிலாசைகளை உள்ளடக்கியதாக இருக்க வேண்டும். தமிழர், சிங்களவர், முஸ்லிம்கள் எல்லோரும் இப்பேச்சுக்கள் மீள ஆரம்பிப்பதில் தொடர்புபட்டிருப்பதை உணர்ந்துள்ளனர். போர் நிறுத்த உடன்படிக்கை முறிவடைந்தால் எப்பொழுதும் இவ் உடன்படிக்கையை எட்ட முடியாது. பேச்சுக்கள் உடனடியாக ஆரம்பிப்பதாகவில்லை. ஆனால் இரு தரப்பினரும் பேச்சுவார்த்தையை மீள ஆரம்பிப்பதற்கான நடவடிக்கையில் ஈடுபடல் வேண்டும்.இவ் விடயம் எமக்கு ஏமாற்றத்தைத் தருகிறது. எமது நிலைப்பாட்டை எடுத்துக் கூறியுள்ளோம். இப் பயணத்தின் பின் இது தொடர்பாக நோர்வேயிடமும் ஐரோப்பிய நாடுகளுக்கும் எடுத்துக் கூறுவேன் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## உணர்....

மாணவர்கள், வர்த்தக சமூகத்தினர் ஆகியோர் மலரஞ்சலி செலுத்தி நினைவு கூர்ந்தனர்.

இதேவேளை அரச அரச சார்பற்ற நிறுவனங்கள் பொது அமைப்புக்கள் என்பன தங்கள் தங்கள் பகுதியில் தியாகி லெப்.கேணல் திலீபனின் திருவுருவப் படங்களை வைத்துத் தமது அஞ்சலியைச் செலுத்தி வருகின்றனர்.

யாழ்.மாவட்டத்தில் தியாகி லெப்.கேணல்.திலீபன் உண்ணா நோன்பிருந்த யாழ்ப்பாணம் நல்லூர்ஆலய முன்றலில் அமைந்துள்ள நினைவுத் தூபிக்கு முன்பாக யாழ்.மாவட்டவெகுசன அமைப்புக்களின் ஒன்றியப் பிரமுகர் க.கனகலிங்கம் தலைமையில் இரண்டாம் நாள் நினைவு நிகழ்வுகள் உணர்வெழுச்சியுடன் நடைபெற்றுள்ளது.

இந்நிகழ்வில் பொதுச்சுடரினை மாவீரர் இரண்டாம் லெப்ரினன்ட் இனியவனின் தந்தையார் தியாகாராசா, மாவீரர் இரண்டாம் லெப்டினன்ட் இராசேஸ்வரனின் தந்தையார் மகாலிங்கம் மற்றும் நல்லூர் பலநோக்குக் கூட்டுறவுச் சங்க முகாமையாளர் செல்வி. தயாமலர் பேரம்பலம் ஆகியோர் ஏற்றினர்.

ஈகச்சுடரினை யாழ்.நல்லூர் கோட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் செழியன் ஏற்றினார்.

இதேவேளை தமிழீழத் தேசியக் கொடியினை புலிகளின் குரல் பொறுப்பாளர்தமிழ்அன்பன் ஏற்றிவைத்து நினைவுரை ஆற்றினார்.

இதேபோன்று கிளிநொச்சி, முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு, மல்லாவி, துணுக்காய், மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை பிரதேசங்களிலும் இரண்டாம் நாள் நிகழ்வுகள் உணர்வெழுச்சியுடன் அனுஷ்டிக்கப்பட்டது.

திருகோணமலை மாவட்டத்தில் மூதூர் கிழக்கு,பாட்டாளிபுரம் தியாகி திலீபன் மருத்துவமனை ஆகியவற்றிலும் தியாகி திலீபனின் திருவுருவப்படம் வைக்கப்பட்டு இரண்டாம் நாள் நிகழ்வுகள் மிகவும் உணர்வெழுச்சியுடன் அனுஷ்டிக்கப்பட்டுள்ளது

## அமெ...

ஆராய்வதற்காக இருநாள் விஜயம் ஒன்றை மேற்கொண்டு யாழ். வரும் அமெரிக்க தூதுவராலயத்தில் பிரஜாஉரிமை தொடர்பான அதிகாரி மார்க் எச் வில்லியம் தலைமையிலான குழுவினர் பலதரப்பட்டோரையும் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளனர். (33)

## புலிகளுடன்....

ஒருமித்த கருத்து இல்லாத நிலையில் ஏனைய கட்சிகளை சமாதான முயற்சிகளில் இணைத்துக்கொள்வது யதார்த்தமான செயலல்ல எனக் குறிப்பிட்ட அவர், ஒஸ்லோ பிரகடனத்தின் அடிப்படையில் இடைக்கால தன்னாட்சி அதிகார சபையை நடைமுறைப்படுத்த தமது கட்சி ஆதரவளிப்பதாகத் தெரிவித்தார். (32)

## சமாதான முயற்சியில்....

அரசாங்கம் செய்து கொடுத்துள்ளதோடு மனத்தூய்மையோடு சமாதானப் பேச்சிற்கான முயற்சிகளையெடுத்து வருகிறது. ஆனால் விடுதலைப் புலிகளோ சனாதிபதி மீதும் சமாதானத்தின் மீதும் நம்பிக்கையற்றவர்களாக செயற்பட்டு வருகின்றனர் என்று தெரிவித்துள்ள அச்செய்திக் குறிப்பில், அரசாங்கம் சமாதானத்தின்பால் தூய எண்ணத்தோடு தொடர்ந்து முயற்சிகளை மேற்கொள்ளும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளதுஎரிக்சூல் கெய்ம் குழுவினரின் சனாதிபதியுடனான சந்திப்பின் போது அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர், சமாதான செயலகத்தின் பணிப்பாளர் ஜெயந்ததனபால, வெளிநாட்ட மைச்சின் செயலர் ஆகியோர் உடனிருந்தனர். (32)

## சமாதானம்....

தலைமையினதும் நிலைப்பாடுகள் எப்படியிருக்கும் என்பது பற்றியும் அவர்களுக்கு இன்றைய சந்திப்பின்போது தெளிவு படுத்தியிருக்கின்றோம்.

***அரசிடமிருந்து ஏதாவது தகவல்களைக் கொண்டு வந்தார்களா?**

அரசாங்கத்திடமிருந்து ஆக்கபூர்வமான தகவல்கள் எதையும் கொண்டு வரவில்லை. அவர்கள் இன்றைய சந்திப்பில் எங்களது தரப்பு நிலைப்பாடுகளை அறிந்து செல்கின்றார்கள். இதன் அடுத்த படியாகத்தான் -சனாதிபதி தலைமையிலானவர்களைச் சந்தித்த பின்னர்தான் அரச தரப்பு நிலைப்பாடுகளை அறிய முடியும்.

***போர்நிறுத்த ஒப்பந்த செயற்பாட்டு நடவடிக்கைகள் மிகவும் மோசமான நிலைப்பாட்டில் இருக்கின்றன. அதனை மேம்படுத்துவதற்காக நோர்வேத்தரப்பினருடன் என்ன விடயம் பற்றிப் பேசப்பட்டது?**

இன்றைய சந்திப்பில் எங்களால் முன்வைக்கப்பட்ட விடயங்களை அவர்களும் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். அதாவது யுத்தநிறுத்த உடன்படிக்கையில் 1.8 சரத்திலே மிகத்தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிற விடயம் வட-கிழக்கில் இருந்து இராணுவத்துடன் சேர்ந்து இயங்குகின்ற ஆயுதக்குழுக்களைக் கட்டுப்படுத்தி அவர்களை வட-கிழக்கிலிருந்து வெளியேற்ற வேண்டுமென்பதாகும். ஆனால் இன்றைய சூழலில் மட்டக்களப்பில் படைத்தரப்புடன் இணைந்து பல ஆயுதக்குழுக்கள் செயற்பட்டு வருகின்றன.இந்த ஆயுதக் குழுக்களின் சில நடவடிக்கைகள் காரணமாகவே யுத்த நிறுத்த உடன்படிக்கைக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது என்பதை நாம் விளக்கமாக எடுத்துக் கூறியிருக்கிறோம்.

***பேச்சுவார்த்தைகளை மீண்டும் ஆரம்பிப்பதற்கான விடயங்கள் பற்றி இன்று ஏதாவது பேசப்பட்டதா? அப்படியானால் என்ன விடயங்கள் பற்றிப் பேசினீர்கள்?**

பேச்சுவார்த்தைகள் தொடங்கப்பட வேண்டும் என்பதன் அவசியத்தை நாங்களும் வலியுறுத்திக் கூறியிருக்கிறோம். தமிழ் மக்களுடைய எதிர்பார்ப்புக்கள் - ஆணையின் அடிப்படையில் ஏற்கனவே தமிழீழ விடுதலைப் புலிகளினுடைய தலைமைப் பீடத்தால் முன்வைக்கப்பட்ட இடைக்கால தன்னாட்சி அதிகார சபை யோசனையின் அடிப்படையில் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்பட வேண்டும் என்பதையும், மிக விரைவாக எமது தாயகத்தில் இடைக்கால தன்னாட்சி அதிகார சபை உருவாக்கப்பட வேண்டும் என்பதையும், இதனூடாகவே எமது மக்கள் சமாதானம் மீதான ஒரு நம்பிக்கையைப் பெறுவார்கள், அதனைக் கட்டியெழுப்பக் கூடியதாக இருக்கும் என்பதையும் நாம் இன்று தெளிவாக எடுத்துச் சொல்லியிருக்கிறோம். அவர்களும் அதனைத் தெளிவாக ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். அரசின் கவனத்திற்கு இதனைக் கொண்டு செல்வதாக எமக்கு உறுதியளித்திருக்கிறார்கள்.

***அரச தரப்பில் இருந்தும்சரி, விடுதலைப் புலிகள் தரப்பிலிருந்தும் சரி சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிக்க வேண்டும் என்ற அக்கறை வெளிப்படுத்தப்பட்டு வருகிறது. இதனை அனுசரணையாளர்களும் உறுதிப்படுத்தி வருகிறார்கள். இருந்தபோதிலும் இந்த மாதிரியான சந்திப்புக்கள் நடைபெற்ற பின்னும் எந்த முன்னேற்றமும் இதுவரையில் காணப்படவில்லை. இன்றைய சந்திப்பில் இத்தகைய முன்னேற்றம் ஏற்படுவதற்கான அறிகுறிகள் ஏதாவது தென்பட்டிருக்கிறதா?**

எம்மைப் பொறுத்தவரையில் ஒரு தரப்பின் முடிவுகளுக்கமைய பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பது கடினம். இரண்டு தரப்பும் உண்மையாகவும், நேர்மையாகவும் நடந்துகொள்ள வேண்டும். இந்த விடயத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமைப்பீடம் மிகத் தெளிவானதும், உறுதியானதுமான நிலைப்பாட்டுடன் ஒரே குரலில் இந்த மக்களின் ஆணையின் அடிப்படையிலும்,அபிலாசையின் அடிப்படையிலும் தமிழர்தரப்பில் இருந்து உறுதியான நிலைப்பாட்டை முன்னெடுத்து வருகிறது.. ஆனால் தெற்கிலே சனாதிபதி அவர்களும் அவரின் பங்காளிக்கட்சிகளும்நேரத்திற்கு நேரம் தமது நிலைப்பாடுகளை மாற்றிவருகிறார்கள். அவர்கள் சமாதானத்தை விரும்புவதாகக் கூறுகிறார்களே தவிர அதனை முன்னெடுப்பதற்கான தீர்மானகரமான முடிவை எடுக்காது ஒரு நழுவல்போக்கை கடைப்பிடித்து வருகிறார்கள். இதுதான் சமாதானத்தை முன்னெடுத்துச் செல்வதற்கான தாமதமாக இருக்கிறது என்பதை நாம் அவர்களுக்கு எடுத்து விளக்கியிருக்கிறோம்.

***பேச்சுக்கள் இவ்வாறு தொடர்ச்சியாக இழுத்தடிப்புச் செய்யப்பட்டு வருகின்ற இந்த நிலையில் படைத்தரப்பினர் யாழ். குடாநாடு உட்பட அனைத்து இடங்களிலும் தமது படை வலுச் சமநிலையை அதிகரித்து வருவதுடன் யுத்த ஒத்திகைகளிலும் ஈடுபட்டு வருகிறார்கள். இந்த நிலை படைவலுச்சமநிலையைப் பாதிக்காதா?**

அவர்களின் அண்மைக்கால நடவடிக்கைகள் படைவலுச் சமநிலையைக் குழப்பும் வகையில் அமைந்திருக்கிறது என்பதனை அனுசரணையாளர்கள் என்ற வகையில் நாம் நோர்வேத் தரப்பினருக்கு சுட்டிகாட்டியிருக்கிறோம். இது தவிர்க்கப்பட வேண்டும்.ஏனெனில் இந்த சமாதான முன்னெடுப்புக்களின் அடிப்படையே இரு தரப்புக்களினுடைய சமபல அடிப்படையில் தான் உருவானது.

ஆகவே இந்த சமாதானத்தைச் சீர்குலைக்கும் வகையில் அரசு படைவலுச் சமநிலையைச் சீர்குலைத்து வருகிறது. இதனை அரசு உடனடியாக நிறுத்த வேண்டும். இதில் நாம் குறிப்பிடுவது என்னவென்றால் பல நாடுகளில் இருந்து பலர் வந்து படையினரை யுத்தத்திற்கான தயார்ப்படுத்தலில் ஈடுபடுத்துவதும், அவர்களை உற்சாகப்படுத்துவதுமான நடவடிக்கைகள் சமாதான முன்னெடுப்புக்களைச் சீர்குலைத்து யுத்தத்திற்கான அல்லது இராணுவ வழிமுறையில் தீர்வுகாணுகின்ற ஊக்கத்தை படைத்தரப்பிற்குக் கொடுக்கும் என்கின்ற அச்சம் எமது மக்கள் மத்தியில் ஏற்பட்டிருக்கிறது. எனவே இதனை நிறுத்த வேண்டும் என்பதை நாம் இன்று அனுசரணையாளர்களுக்கும் தெரியப்படுத்தியிருக்கிறோம். அவர்கள் இதைச் சம்பந்தப்பட்டவர்களின் கவனத்திற்கு எடுத்துச் செல்வதாகத் தெரிவித்திருக்கிறார்கள்.

***விடுதலைப் புலிகளுடன் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கு முன்னால் சர்வகட்சிகள் அடங்கிய தேசிய சபையின் முன்னால் பேச்சுக்கள் நடத்தவேண்டும் என்ற அரச தரப்புக் கருத்துப் பற்றிய உங்கள் நிலைப்பாடு என்ன?**

எதிர்க்கட்சிகள் தமிழர் விடுதலைக் கூட்டமைப்பு, சமாதான விரும்பிகள், சமாதானத்தை விரும்புகின்ற அமைப்புக்கள் என்பன அரசின் இந்த நிலைப்பாட்டை வெகுவாகக் கண்டித்திருக்கிறார்கள். இது காலத்தை இழுத்தடிக்கும் உத்திகளாகவேதான் நாங்கள் பார்க்கின்றோம். தமிழ் மக்களுக்கு இவை பற்றி ஒரு நீண்ட அனுபவம் இருக்கிறது. சர்வகட்சி மாநாடுகள் பல குழுக்கள் அமைத்து எமது பிரச்சினைகளை இழுத்தடிப்புச்செய்து வந்த வரலாற்று அனுபவங்கள் எமக்கு நிறையவே உண்டு. ஆகவே இன்றிருக்கின்ற நிறைவேற்று அதிகாரம் கொண்ட சனாதிபதி, அரசு தனது பொறுப்பிலிருந்து இதைத் தட்டிக்கழிக்கும் நோக்கோடு இழுத்தடிப்புச் செய்கின்ற உத்தியாகத்தான் நாம் இதைப் பார்க்கின்றோம். எங்களுடைய நிலைப்பாடும் அதுவாகத்தான் இருக்கிறது.

***பேச்சுக்களை ஆரம்பிப்பதற்காக விடுதலைப் புலிகள் சமர்ப்பித்திருக்கின்ற இடைக்கால நிர்வாகசபை யோசனைகளை மீளாய்வு செய்கின்ற யோசனை விடுதலைப் புலிகளுக்கு இருக்கின்றதா?**

ஏற்கனவே நாம் எங்களது சட்ட வல்லுநர்கள், இது தொடர்பான சர்வதேச நிபுணர்களின் ஆலோசனையின்படியும்; யதார்த்தத்தின் அடிப்படையிலும் சர்வதேச யதார்த்தத்தினை உள்வாங்கியதன் அடிப்படையிலும் நாங்கள் ஒரு வரைபை முன்வைத்திருக்கிறோம். அதுபற்றிய பேச்சுக்களை ஆரம்பிக்காது இதனை மறுபரிசீலனைக்கு உட்படுத்துவது பொருத்தமற்ற ஒன்றாகும். அதே நேரம் சமாதானப் பேச்சுக்கள் இன்று முடக்கமடைந்திருக்கின்ற சூழ்நிலையில் எதிர்காலத்தில் எமது அரசியல் நகர்வுகளை முன்னெடுப்பது தொடர்பாகவும் மீண்டும் எமது சட்டவல்லுநர்கள், அரசியல் நிபுணர்கள் உட்பட்டவர்களுடன் நாம் கலந்துரையாடல் ஒன்றை மேற்கொள்ளவிருக்கிறோம். இந்தக் கலந்துரையாடல் ஐரோப்பிய நாடு ஒன்றில் நடைபெறவுள்ளது.

***எங்கே எப்போது நடத்துவதற்குத் தீர்மானித்திருக்கின்றீர்கள்?**

சுவிற்சர்லாந்தில் இம்மாத இறுதிப்பகுதியில் நடத்தத் தீர்மானித்திருக்கிறோம் என்றார்.

நேற்றுக்காலை பதினொரு மணிக்கு விடுதலைப் புலிகளின் சமாதானச் செயலகத்தில் நடைபெற்ற இச்சந்திப்பில் தமிழீழ விடுதலைப்புலிகள் சார்பாக தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன்,தமிழீழ காவல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன் சமாதானச் செயலகத்தைச் சேர்ந்த செல்வி,மற்றும் ஜோர்ஜ் ஆகியோரும், நோர்வேத்தரப்பினர் சார்பாக நோர்வேயின் விசேட தூதுவர் எரிக் சூல்ஹெய்ம், இலங்கைக்கான நோர்வேத் தூதுவர் கான்ஸ் பிரஸ்கர் உள்ளிட்டோரும் கலந்து கொண்டனர்.மேற்படி சந்திப்பு நண்பகல் ஒருமணிவரை இடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது. (லோ,தீ)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2004ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 17ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளது.